கவின் கலை அழகியற் கல்வி

# புது முறைச் சித்திரம்

# PUTHU MURAI CHITHIRAM



ஓவியக் கழக வெளியீடு.

நெல்லையூர்

கவின் கலை அழகியற் கல்வி

# புதுமுறைச் சித்திரம்

## PUTHU MURAI CHITHIRAM

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) வகுப்பு
புதிய பாடத் திட்டத்துக்கமைய ஆக்கப் பெற்றது.
6-ம் வகுப்புத்தொடக்கம் 10-ம் வகுப்புவரை உபநூலாக
உபயோகிக்கக்கூடியது.

*ஆக்கியோன்:*

**எஸ். தங்கராஜா, உதவி ஆசிரியர்**
**( நெல்லியடி, மத்திய மகாவித்தியாலயம் )**

கச்சாய் ரோட்
சாவகச்சேரி



ஓவியக் கழக வெளியீடு

**— 1977 —**

[redacted] சா. சிவரூபன்

வெளியீட்டு [redacted] - 8 - 1976

திருத்திய பதிப்பு : 9 - 8 - 1977

பதிப்புரிமை : திரு. த. அசோகன்

விலை: ரூபா 20-00

ஆசிரியரது வெளிவந்த நூல்கள்:

- ☐ தமிழ் சிங்கள அலங்கார வடிவங்கள்.
- ☐ தையல் வடிவங்கள்.
- ☐ புதுமுறைச் சித்திரம்

வெளிவரவிருப்பவை:

- ○ பாலர் சித்திரம் (1-ம் வகுப்புத் தொடக்கம் 5-ம் வகுப்புவரை)
- ○ வண்ண ஓவியம்
- ○ பற்றிக் (BATIK) வடிவங்கள்

இப்புத்தகம் நெல்லியடி, கரவெட்டியிலுள்ள திரு. நா. கதிர்காமத்தம்பி, ஓவியக் கழகத்தின் காரியதரிசி அவர்களால் யாழ்ப்பாணம், 10, பிரதான வீதியிலுள்ள கலைவாணி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

S.NANTH

சா.சிவரூபன்

## முன்னுரை

புதுமுறைச் சித்திரம் என்னும் இந்நூல் ஆறும் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள மாணவர் அனைவருக்கும் எளிதாய் விளங்கும் வண்ணம், கல்வி அமைச்சின் கவின்கலைப் பாடத்தில் அழகியற் கல்விக்கான புதிய பாடப் பொருளுக்கேற்ப எழுதப்பெற்றதாகும்.

இதனைப் படிக்கும் மாணவர், கலை உணர்ச்சியோடு கூடிய அழகுணர்வு நோக்குடன், சித்திரம் வரையவும், சித்திர ஆக்கவேலைகளைச் செய்யவும். வரைவதற்குத் தேவையான சித்திரக் கோட்பாடுகளும், விதிகளும், ஊக்குவிப்பும் ஆக்கவேலைகளுக்குத் தேவையான செய்முறைகளும், விளக்க வரைபடங்களுடனும், தெளிவுரையுடனும் கொடுக்கப்பட்டுள்ளன. எழுத்துப் பரீட்சையிற் சித்தியடைவதற்குதவியாக, மாதிரி வினு விடைப் பயிற்சிகளும், விளக்கவுரையுடன் கூடிய மாதிரி உருக்களும் சிற்ப வடிவங்களுடன் கூடிய விமர்சன வெளிப்பாடுகளும் தரப்பட்டுள்ளன.

சித்திரக்காரக் குழந்தைகளின் கலை ஆற்றல் வளரவும், கலையோடிணைந்த கைத்தொழில் சிறந்து வளரவும், நம் நாட்டுக் கலைவளம் மலியவும் வேண்டுமென்ற உளப்பாங்கோடு, இவற்றினுக்கு உதவியாக, கலையுடன் தொடர்புள்ள கைத்தொழில்களும் அவற்றின் செய்முறைகளும் தெரிந்து கொள்ளும் வண்ணம் வளம்பெற அமைக்கப்பெற்றுள்ளன.

சித்திரப் பாடத்தில் பிரயோகிக்கப்படும் கலைச்சொற்களுக்கான கருத்துக்களும், ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. இப்பாடத்தில் விசேட பயிற்சி பெறாத ஆசிரியர்கள், இப்பாடத்தைக் கற்பிப்பதற்கு, இதனை ஒரு கைநூலாக உபயோகிக்கக் கூடியதாயும், பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் நலனுக்காக கைத்தொழிற் செய்முறைகளும் தரப்பெற்றுள்ளன.

ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளில் இப்பாடத்துக்குரிய நூல்களிருப்பினும் தமிழில் இதுபோன்ற நூலின்மையால் இக்குறையை நீக்கும் பொருட்டு இஃது எழுதப்பெற்றதாகும். இந்நூலை எழுதுமாறு வேண்டுகோள் விடுத்த ஆசிரியர்கட்கும், மாணவர்களுக்கும் இதில் உதவிபுரிந்த உறவினர், நண்பர்களுக்கும், இந்நூலைப் பதிப்பித்து வெளியிட முன்வந்த எமது ஓவியக் கழகத்தார்க்கும் எமது முதற் பதிப்பு நூலை ஆதரித்து வாழ்த்துக்கள் அனுப்பிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

— நூலாசிரியர்

*K. Gunaratnam* B. Sc., Dip-in-Ep. (Cey)
Fellowship in Education (Bristol)
Principal

*J/Nelliady. M. M. V.*
*Karaveddi.*
24-7-1977

## மதிப்புரை

'கவின்கலை என்பது நாட்டியம், நாடகம், சங்கீதம், சித்திரம், ஓவியம் போன்ற கலைகளை உள்ளடக்குவதாகும். இக்கலைகளுக்குப் புதிய கல்வித்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு 6-ந் தரம் தொடக்கம் 9-ந் தரம் வரையும் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது. மாணவர்களிடம் காணப்படும் ஆக்கத்திறன்கள் பலவகைப்படும். இவற்றை வெளிக்கொணர்ந்து மாணவனுக்கும், சமுதாயத்திற்கும் பயன்பெறச் செய்வதே உண்மையான ஆசிரியனின் பணியாகும். இத்திறன்களை வெளிக்கொண்டு வர அளிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் மாணவனை ஒழுக்கமுடன் வாழ வழிகாட்டுகின்றது.

எனவே மாணவனையும் சமுதாயத்தையும் மையமாகக் கொண்டு நோக்குங்கால், கவின்கலைக் கல்வியின் இன்றியமையாமை உய்த்து உணரப்படுகின்றது. இத்துறையில், குறிப்பாகச் 'சித்திரத்தை' ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு இதுகாறும் ஒரு பொருத்தமான பாடநூல் எழுதப்படவில்லை. 6-ந் தரம் தொடக்கம் 9-ந் தரம் வரையும் கொண்ட கலைத்திட்ட உள்ளடக்கத்தினை ஒரே நூலில் மாணவரும் ஆசிரியரும் பயன்பெறும் வகையில் வடித்துத் தந்துள்ள திரு. எஸ். தங்கராஜாவின் முயற்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. காகிதத் தட்டுப்பாடும், விலையேற்றமும் கண்டுள்ள இவ்வேளையில் மிகத் துணிவுடன் அன்னர் மேற்கொண்டமை கல்வித் துறையினரின் பாராட்டுக்குரியதாகும்.

ஒப்பம்
**K. குணரட்ணம்**

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| (அ) | நூல் முகம் | |
| (ஆ) | முன்னுரை | |
| (இ) | மதிப்புரை | |
| (ஈ) | 6-ம் வகுப்புப் பாடத்திட்டம் (வழிகாட்டியிலுள்ளபடி) | |
| (உ) | 7-ம் ,, ,, ( ,, ,, ) | |
| (ஊ) | 8-ம் ,, ,, ( ,, ,, ) | |
| (எ) | 9-ம் ,, ,, ( ,, ,, ) | |
| (ஏ) | 10-ம் ,, ,, (பழைய கல்வித்திட்டப்படி) | |
| 1. | சித்திரத்தின் நவீன முறை | 1 |
| 2. | சித்திரக்கார மாணவன் | 3 |
| 3. | கோடுகள் | 4 |
| 4. | அளவீடுகள் | 7 |
| 5. | தூரதரிசனம் | 9 |
| 6 | சமச்சீர் சமநிலை. | 11 |
| 7. | துரித இரேகைச் சித்திரம். | 13 |
| 8. | கிறுக்கல் சித்திரம் | 15 |
| 9. | கரைச் சித்திரம் | 17 |
| 10. | பரவுரூவச் சித்திரம். | 19 |
| 11. | வண்ணங்கள் | 21 |
| 12. | எழுத்துருச் சித்திரம் | 24 |
| 13. | சித்திர மதிப்பீடு | 26 |
| 14. | அச்சுப் பதித்தல் | 28 |
| 15. | கலப்புச் சாதன ஆக்கச் சித்திரம் | 30 |
| 16. | மெழுகு வர்ணவேலைச் சித்திரம் | 31 |
| 17. | துணியில் பற்றிக் வேலை செய்தல் | 32 |
| 18. | எண்ணெய் வர்ணச் சித்திரம் | 36 |
| 19. | அலங்கார மாதிரி வடிவங்கள் | 37 |
| 20. | ஒட்டுவேலைச் சித்திரம் (கொலாஜ் வேக்) | 42 |
| 21. | புடவை அலங்கார அமைப்பு | 43 |
| 22. | துணியில் அலங்கார வடிவம் அமைப்பதற்கு ஸ்கிறீன் செய்தல் | 44 |
| 23. | துணியில் வடிவங்களைப் பதித்தல் | 44 |
| 24. | கதைகளுக்குச் சித்திரம் அமைத்தல் | 45 |
| 25. | வாழ்த்திதழ்ச் சித்திரம் | 45 |
| 26. | பொருட்கூட்ட வரைதல் | 45 |
| 27. | அசைவற்ற உருவம் அமைத்தல் | 46 |
| 28. | அசைவுறும் உருவம் அமைத்தல் | 46 |
| 29. | பாலரின் கலை | 47 |
| 30. | நிறத்துணிகளிலிருந்து வடிவங்களை வெட்டி எடுத்துத் தைத்தல் | 48 |
| 31. | மாதிரி வடிவச் சித்திரம் அமைத்தல் | 49 |
| 32. | கற்பனைச் சித்திரமும் கைத்தொழிலும் அவற்றின் பயனும் | 51 |
| 33. | கைத்தொழில், கற்பனைச் சித்திரம், பலவடிவச் சித்திரம் இவற்றின் தொடர்பு | 53 |
| 34. | வகுப்பறையும் சித்திர உபகரணங்களும் | 55 |
| 35. | தற்காலச் சித்திர பாடத்துக்குத் தேவையான சாதனங்கள் | 55 |

(மதிப்பீட்டுப் பாடங்கள் புத்த ஆலயங்கள்)


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 36. | புத்த தாதுகோப அமைப்பு முறை ... ... ... | 56 |
| 37. | புத்தரின் சமாதி நிலை — தொலுவில, அநுராதபுரம் ... ... | 58 |
| 38. | புத்தரின் சமாதி நிலை — அவுகன, அநுராதபுரம் ... ... | 59 |
| 39. | புத்தரின் நிலை உருவம் — கல்விகாரை, பொல்லநறுவை. ... | 60 |
| 40. | காவற்சிலை — இரத்தினபிரசாத, அநுராதபுரம் ... ... | 61 |
| 41. | புத்தரின் சிலை — இலங்காதிலக, கம்பளை ... ... | 62 |
| 42. | புத்தரின் துயில் நிலை — அநுராதபுரம் ... ... ... | 62 |
| 43. | தூபராம தாகப — அநுராதபுரம் ... ... ... | 63 |
| 44. | வட்டதாகே — மதிரிகிரிய, பொல்லநறுவை ... ... | 64 |
| 45. | செதுக்கிய மரச்சிலை — எம்பக்க தேவாலயம், கம்பளை ... ... | 64 |
| 46. | மிருந்தலை — கந்தக சைத்திய தாகபவின் சிகரம் ... ... | 65 |
| 47. | சந்திரவட்டக்கல் — அநுரதபுரம் ... ... ... | 66 |
| 48. | கலசம் — அநுரதபுரம் ... ... ... ... | 67 |
| 49. | றபானு அடித்தல் — எம்பக தேவாலயம், கம்பளை ... .. | 67 |
| 50. | காதலர் இசுருமுனிய — அநுராதபுரம் ... ... ... | 68 |
| 51. | சிவன் கோயில் — பொல்லநறுவை ... ... ... | 69 |
| 52. | சிகிரிச் சுவர் சித்திரங்கள் — அநுரதபுரம் ... ... | 70 |
| 53. | கூரைச் சித்திரம் — தம்புல்ல ... ... ... | 72 |
| 44. | சரித்திரச் சுவர் ஓவியம் — தெகல் தொறுவா, கண்டி ... | 73 |
| 55. | செதுக்கிய மரச் சிலை — நடன மாது — எம்பக்க, கம்பளை ... | 74 |
| 56. | ,, ,, ,, கின்னரப் பெண் ,, ,, ... | 75 |
| 57. | கண்டிய கால ஓவியங்கள்... ... ... ... | 76 |
| 58. | களனிப் புத்த விகாரை ... ... ... | 76 |
| 59. | கண்டிய நடனம் ... ... ... ... | 77 |


( இந்து ஆலயங்கள் )


| | | |
|---|---|---|
| 60. | திருக்கோயிலின் கர்ப்புக்கிருக அமைப்பும் அங்கபிரிவுகளும் ... | 78 |
| 61. | சிற்பியும் திருக்கோயில் அமைப்பும் ... ... ... | 79 |
| 62. | திருக்கேதீஸ்வரம் — மாதோடடம் ... ... ... | 81 |
| 63. | நல்லூர்க் கந்தசுவாமி கோவில் — யாழ்ப்பாணம் ... ... | 82 |
| 64. | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ... ... ... | 83 |
| 65. | பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் — கொழும்பு ... ... | 84 |
| 66. | திருக்கோணேஸ்வரம் — திருகோணமலை ... ... ... | 85 |
| 67. | நாகபூஷணி அம்மன் கோயில் — நயினுதீவு ... ... | 85 |
| 68. | செல்வச்சந்நிதி — தொண்டமாறு ... ... ... | 86 |
| 69. | மேலைத் தேசத்து சிறந்த ஓவியர்கள் ... ... ... | 86 |
| | வினுத்தாள் 6-ந் தரம் ... ... ... ... | 87 |
| | ,, 7-ந் தரம் ... ... ... ... | 89 |
| | ,, 8-ந் தரம் ... ... ... ... | 91 |
| | ,, தே. பொ.க. த, ப. பரீட்சை ... ... ... | 93 |
| | ,, கல்வித் திணைக்களம் அரையாண்டுப் பரீட்சை 1977 ... | 95 |
| | ,, 6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புகள் ... | 95—106 |
| | ,, தே. பொ. க. த. ப. பரீட்சை மாதிரிவினுத்தாள் ... | 107 |
| | மேற்படி வினுவொழுங்கில் விடைகள் ... | 109—114 |

6-ந் தரம் பாடம்: சித்திரம் 1-ம் பருவம்: **30 பாடங்கள்**

## பாடத்திட்டம்

| | |
|---|---|
| கருத்து வெளிப்பாட்டுப்பாடம் | 10 |
| இரேகைவரைதற்பாடம் | 8 |
| அலங்காரமாதிரிருபப் பாடம் | 8 |
| கடதாசி கிழித்தொட்டல் பாடம் | 3 |
| சிற்பம் அமைத்தற் பாடம் | 3 |
| அச்சுப்பதித்தல் பாடம் | 3 |

A. ஆடை அணிகள் என்ற தலைப்பில்:-

1. தேவாலயம் செல்லும் மக்கள் கூட்டம்
2. நடனக்குழு

B, காட்சி முன்நோக்கிப் பரவல் என்ற தலைப்பில்

3. கிராம வாழ்க்கை
4. பந்து விளையாடுவோர், (காற்பந்து)

C. ஒன்றேடொன்று இசைவுறும் உருத்தோற்றம் என்ற தலைப்பில்

5. சாளரத்தின் ஊடாக வெளிப்பார்க்கும் காட்சி
6. ஒரு தொழிற்சாலையின் உட்புறம்

D. பிள்ளை ஆத்மீகத் தொடர்புபற்றி ஈடுபடும் காட்சி என்ற தலைப்பில்

7. புயல்காற்றும் கடும் மழையும் வெள்ளப்பெருக்கும் அதன் நடுவேமக்களும்

E. சனக்கும்பல் சேர்ந்துள்ள ஒருகருத்து வெளிப்பாடு என்ற தலைப்பில்

8. தனது விளையாட்டு இல்லம் வெற்றிபெறல்
9. விளையாட்டுப் பூமி
10. கிராம வாழ்க்கை.

F. இரேகைச்சித்திரம் 3 பாடங்கள் விரைவு வரைதல்

11. சூழலிலுள்ள மரக்கூட்டம்
12. வகுப்பு மாணவ நண்பனின் சரஸ் அடங்கிய ரூபம்
13. ஆசனத்தின் மீது உயர் பூச்சாடி

G. அலங்கார ரூப மாதிரி அமைப்பு என்ற தலப்பில்

14. சதுரமரக்குற்றிகளில் அலங்காரம் வெட்டப்படுதல்
15. வாழை இலைக்காம்பில் அலங்காரம் வெட்டிப்பதித்தல்

H. கடதாசி உரு ஒட்டுதல் என்ற தலைப்பில்

16. இருவர்ணங்களில் குறுக்காகப்பரவும் கரைஅலங்காரம்
17. குறுக்கு வரிசையாக ஓடும் தொடர்பானவட்டங்களுடே அலங்காரம்
18. இருவர்ணக் குறுக்காகச் செல்லும் பரவு ரூபம்

I. இரேகை அலங்காரம் என்ற தலைப்பில்

19. மத்திய புள்ளியைச் சுற்றி சிலந்தி வலைபோன்ற ரேகை அலங்காரத்துள் அலங்கரிப்புச் செய்தல்

J. சுயதூரிகை அலங்கார ரூபமாதிரி அமைப்பு என்ற தலைப்பில்

20. வளைரேகை, வட்டம் பரவுரூபம் இரு வர்ணங்களில் வரைதல்
21. எதிர்முக ரேகைகளும் வட்டங்களும்

K. கடதாசி உருக்சிழித்தொட்டுதல் 3 பாடங்கள் மூவளவை வெளிப்பாடு என்ற தலைப்பில்

22. சமயகுருமார்
23. வீடுகள்பல
24. திவ்விய ஆலயபூமி

L. உருவம் அமைத்தலும் சிற்பமும், களிகொண்டு உருவம் செய்தல் என்றதலைப்பில்
25. கற்பனைப்பறவையொன்று
26. கற்பனை மிருகம்
27. எனது நண்பன்

M. அச்சுப்பிரதி செய்தல் மூன்று பாடங்கள். உருவத்தை கடதாசியின் கீழ் இட்டுப் பெற்றுக்கொள்ளும் பிரதி.
28. காய்ந்த இலை. புல்லினம்
29. வெசாக்விளக்கலங்காரம் (உருவெட்டிக்கடதாசியின் கீழ்வைத்துப் பிரதியெடுத்தல்)
30. சேவற்போர் ,, ,, ,,

6-ந் தரம் பாடம் : சித்திரம் 2-ம் பருவம் : 30 பாடங்கள்

## பாடத்திட்டம்

**கருத்து வெளிப்பாடு வர்ணச்சித்திரம் பாடம் 10**
**இரேகைச்சித்திரம் பாடம் 3**
**அலங்கார மாதிரியமைப்பு பாடம் 8**
**கடதாசி வெட்டி ஒட்டல் பாடம் 3**
**வனைதற் பாடங்கள் 3**
**அச்சுப்பதித்தற் பாடம் 3**

A. ஆடைஅணிகள் என்றதலைப்பில் பலவித ஆடைகள், உல்லாச உணர்வுகள் விசித்திர உடை உற்சவங்கள்
1. விநோத உடைப்போட்டி
2. திருமண இல்லம்

B. காட்சி வரைதல் என்ற தலைப்பில் அண்மை, சேய்மை, மரங்கள், தொழிற்படும் மனித உருவங்கள்
3. காட்டில் விறகு வெட்டும் பெண்கள்
4. நெல்விதைக்கும் கமக்காரன் (Bயிற்கூறியவற்றுடன் பூமியின் இயல்பும்)

C. ஒன்றையொன்று உள்ளடக்கும் உருவக்காட்சிகள் — ஒருவர் ஒருவரால் மறைக்கப்பட்ட மனித உருவங்கள், தொழிற்பாடுகள், சனநெருக்கச் சூழற்காட்சிகள்
5. புகையிரத நிலையத்துள் பிரயாணிகள்
6. ஞாயிறு சந்தை

D. ஒரு மாணவனின் தொழிற்பாடுகள் — கற்பனைச் செயல்கள். ஆக்கச் செயல்கள்
7. முதற்சிகிச்சை அளித்தல்
8. வெசாக் அலங்காரங்களில் ஈடுபடுதல்

E. காட்சிகளை வெளியிடும் குழுமுயற்சிகள் — மிருகங்களின் பலவித உருவநிலை, சுறுசுறுப்புள்ள சுற்றுடல்
9. மிருகக்காட்சிச்சாலை
10. ஒரு நகரின் காட்சி

F. இரேகைச் சித்திரம் — அச்சுக்களைப் பொருத்தல்,மனிதசெயல்கள், மரங்களின் அசைவு
11. வீடுகள்
12. தபாற்காரன்
13. காற்றிலசையும் மரங்கள்

G. அலங்கார மாதிரி அமைப்புகள், முத்திரை அச்சுப்த்திவு என்ற தலைப்பில்

14. இயற்கைக் காட்சி — இரு நிறங்களில் இலைகளில் நிறம்பூசி அச்சுப்பதித்தல்
15. மாதிரி உருக்களை பப்பாசி, கிழங்கு இவற்றில் வெட்டி நிறம்பூசிப்பதித்தல்

H. கடதாசி வெட்டி அழகு செய்தல் அலங்கார அமைப்பு

16. சதுரத்தின் மத்தியில் மூன்று நிறங்களில் அலங்காரம் அமைத்தல்
17. நீள் சதுரத்தின் மத்தியில் மூன்று நிறங்களில் அலங்காரம் அமையக் கடதாசி வெட்டி ஒட்டுதல்

I. இரேகை அலங்காரம்

18. இலை, பூ என்பவைகளால் சாதாரண அலங்காரம் அமைத்தல்
19. எழுத்துக்களை உபயோகித்து அலங்காரம் அமைத்தல்

J. தூரிகை அலங்காரம்

20. இலை பூ என்பவைகளால் சாதாரண அலங்காரம்
21. சுதந்திரமான அடித்தள அலங்காரம்

K. கடதாசிகளை வெட்டி ஒட்டுவதில் கருத்து வெளியீடுகள்

22. பஸ்வண்டி — வாகனங்களைச் சித்திரித்தல்
23. தேனீர்க்கடை கிராமியச்சூழல்
24. மீன்குளம் — சிறுவர் உல்லாசம்

L. வனைதற்பாடம், காட்சிகள் என்ற தலைப்பில்

25. பறக்கும் பட்சி — முகபாவனை வெளியீடு
26. துக்ககரமான முகம் ,,
27. சந்தோஷகரமானமுகம் ,,

M. கடதாசியிலிருந்து உருவங்களைப் பிரதிபண்ணல்

28. காய்ந்தஇலை, பச்சைஇலைகளில் வர்ணம்பூசி அச்சுப்பதித்தல்
29. இருநிறங்களில் அச்சுப்பதித்தல்
30. தனி அச்சுமுறை •

6-ந் தரம், பாடம்: சித்திரம் 3-ம் பருவப் பாடத் திட்டம்

வர்ணச்சித்திர மூலம் கருத்துவெளிப்பாடு பாடங்கள் 10
இரேகைச் சித்திரம் பாடங்கள் 3
அலங்கார மாதிரி வகைப் பாடங்கள் 8
உருவங்களை வெட்டி ஒட்டல் பாடங்கள் 3
வனைதற்பாடங்கள் 3
முப்பரிமானக் காட்சி வெளியிடும் பாடங்கள் 3

ஆடைகளும் பிரயாண இயல்புகளும் கூடிய அவதானம் கொண்டதாக

1. சிவனொளிபாத யார்த்திரிகர்
2. பாடசாலைக் காலைக்கூட்டம்—ஆடைகளும் மௌன இயல்பும் உடையவை
3. தேகப்பயிற்சி — அண்மை சேய்மை இயல்புடையதாய்
4. நீராடந்துறை
5. சீலைச்சாய்ப்பின் உட்புறம் — மறைபடும் காட்சிகள், விசித்திரமான சூழல்
6. கட்டிடம் கட்டுவோர்—பொறிவரைதலுடன் அமையும் இயல்புகள்
7. காற்றுடிவிடல் — மாணவனின் உணர்ச்சியோடு கூடிய ஈடுபாடுகள், உல்லாசமான இயல்புகள்
8. ஈமச்சடங்கு ,, ,, துக்கமான இயல்புகள்
9. பஸ்நிலையம் ,, ,, சுறுசுறுப்பான சூழல்
10. அறுவடை செய்தல் ,, ,, கிராமியச் சூழல்

### இரேகைச் சித்திரம் 3 பாடங்கள்

11. பாரவண்டி — அசைவுகள்
12. பூங்கொத்து — செடிகளின் அழகியதன்மை
13. கதிரையில் அமர்ந்திருக்கும் சிறுவன் — இயல்புத்தன்மை

### அலங்காரச் சித்திரம் 8 பாடங்கள்

14. இருநிறங்களைக் கொண்டு கோடிடாத கடதாசியில் — மாணவர் விரும்பும் அலங்கார முறைகளில் அலங்காரம் அமைத்தல்
15 இருநிறங்களைக் கொண்டு நடுவிலிருந்து வட்டமாகப் பரப்பும் அலங்காரம்
16. நட்சத்திர அலங்காரம் — மாணவர் விரும்பும் அலங்கார முறைகள்
17. வைடூரியவடிவிலமைந்த அலங்காரம்
18. காற்றுடி அலங்காரம்
19. இருகூறுகளிலமையும் இலை அலங்காரம்
20. மூன்று நிறங்களில் குருவி அலங்காரம்
21. ,, மீன் அலங்காரம்

### உருவங்களை வெட்டி ஒட்டல் பாடங்கள் 3 இருபரிமாணக் காட்சி வெளியீடு

22. தென்னை அல்லது பனையின் குறுக்குவெட்டுப்படம்குறுக்குவெட்டு முகஇயல்பு
23. புகையிரதநிலையம் — கட்டிட வாகனப்பொருத்தம்
24. மாட்டுத் தொழுவம் — மந்தையின் இயல்பு

### வனைதல் பாடங்கள் 3 — முப்பரிமாணக்காட்சி முறை

25. தூரத்தில் வரும் மாடு— இயல்பு வெளியீடு
26. இருசேவல் போரிடும் காட்சி ,,
27. பயங்கரமான ஒருமுகம் ,,

### அச்சுப்பதித்தல் பாடம் 3, மொனோ அச்சுக்களால் அச்சுப்பதித்தல்

28. எனது வீடு — தனி நிற அச்சுப்பதிவு
29. பூக்கூடை — ,, ,,
30. டிராக்டர் யந்திரம் ,, ,,

## ஏழாந்தரம் - மாதிரிபாடத்தொகுதி, 1-ந் தவணைப் பாடங்கள் - 30

அ. வண்ணப்பட ஆக்கம், பாடங்கள் 15:-

விடயம்:- கற்பனைச்செயலாக்கம்

1. அன்றாட வேலைமுடிந்து வீடுசெல்லும் உழவர்
2. காட்டு யானையால் துரத்தப்படும் வேட்டைக்காரர்
3. பொய்க்கால் மனிதர் சிலர்
4. ஸ்ரீலங்கா அரசாங்க ஆரம்போற்சவ தினப்பறைமுழக்கு
5. பாம்பாட்டும் குறவன்

விடயம்: பிரமாணம் பற்றிய அவதான ஈடுபாடு

6. ஏணியில் ஏறி வேலைசெய்யும் உழைப்பாளி
7. குதிரை அல்லது யானைமீது ஏறிச்செல்லல்
8. துவிச்சக்கரவண்டி ஒட்டல்
9. விகாரை அல்லது ஆலய வழிபாடு
10. பெருமரமொன்றின் கீழ் இளைப்பாறுதல்

விடயம்:- வர்ணவதானம்

11. மழைநாளன்று — இடைவெளிதங்குதல்
12. சூரியாஸ்தமனக் காட்சி
13. கதையொன்றினைத் தனிநிறங்கொண்டு வரைதல்
    ''உ—ம்'' நாயும் இறைச்சித்துண்டும்
14. ''வெசாக்'' ''இரவு வேல் விழா'' 'நத்தார்—கரோல்'
15. கதிரவன் ஒளி, மிகப்பிரகாசமான தினம்

ஆ. வரைதல் படங்கள் 5

1. உட்கார்ந்து புதினப்பத்திரிகை வாசிக்கும் சிறுன்
2. பாரம் சுமக்கும் பிள்ளை
3. முற்றம் கூட்டும் பெண்
4. கைவண்டி தள்ளிச்செல்லும் கூலியாள்
5. தேகப்பியாசம் அல்லது நடிப்பில் ஈடுபட்டுள்ள இரு பிள்ளைகள்

இ. விடயம்: அச்சுப்பிரதியெடுத்தல்

1. வெசாக் அல்லது நத்தார் வாழ்த்திதழ்
2. புத்தக அட்டை
3. சீத்தைச் சேலைக்கேற்ற பரவுரூபாலங்காரம்
4. மூங்கிற்புதர் அல்லது பனை, கமுகு மரங்கள்
5. பாடசாலை செல்லும் பிள்ளைகள்

ஈ. விடயம்:- அசைவுறும் அல்லது அசைவற்ற பொருட்கள்

1. பொம்மை ரூபம் அல்லது வெற்றிலை வியாபாரி
2. தொங்குகையில் காற்றால் அசையும் புறவுருவம்
3. ,, ,, ,, பறவையுரு
4. யானை மீது செல்லும்பாகன் – குழுவேலை
5. ஏழையின் வீடு குழுவேலை

## 2ந் தவணைப் பாடங்கள் 30

உ. விடயம்:- அலங்கார வரைதலும் அமைப்பும்

1. பிறந்ததின வாழ்த்திதழ்
2. பட அல்பம் ஒன்றிக்கேற்ற அட்டை
3. உருளைப்பேழை மீது கடதாசி ஒட்டி அலங்கரித்தல்
4. மேசைமீது வைத்தற்கான வட்டப்பலகை அலங்கரிப்பு
5. விசிறி ஒன்றை அலங்கரித்தல்
6. பரிசுப்பொருள் சுற்றுதற்கேற்ற பரவுரூபம்
7. கறுப்பு அல்லது வெள்ளைக்கடதாசியில் அலங்கார உருவங்கள்
8. வெட்டி கீழ்ப்புறமாக வர்ணத்தாளை ஒட்டுதல்
8. எழுத்துருக்கொண்ட புடவையலங்காரம் செய்தல்
9. பூ இலைகளால் புடவையலங்காரம் செய்தல்
10 பிராணியுருவங்களால் புடவை அலங்கரிப்பு

ஊ. உருவமைத்தலும் சிற்பமும்

1. நடிகன்
2. பசுவும் கன்றும்
3. பாடசாலை செல்லும் சிறுவன்
4. விகடமுகம் உடைய நடிகன் (சிரசு—முண்டம்)
5. பூசகர் ஒருவர்

## வர்ணப்பட ஆக்கம்

நோக்கம் — கற்பனைத் தொழிற்பாடு

1. குளத்தில் மீன்பிடிப்போர்
2. நாட்டிய தரிசனம் — நடிகர்
3. வள்ளம் ஓட்டுவோர்
4. தெருவில் வேலைசெய்யும் வேலையாட்கள்
5. மல்யுத்தம் புரிவோர்

நோக்கம்—பிரமாணம் பற்றிய அவதானம்

6. சாளரத்தினூடாகப் பார்க்கும் பிள்ளை
7. தேங்காய்பறிக்க மரமேறுதல்
8. கொக்கைத்தடியால் பழம் பறித்தல்
9. புகையிரத ஸ்தானம் அல்லது பஸ்நிலையம்
10. வீதிக்காட்சி

நோக்கம்:- வர்ண அவதானம்

11. சூரியோதயம்
12. குளிர்தினமொன்றில் எனது உணர்வு
13. வர்ணங்களை மாத்திரம் கொண்டு நிகழ்ச்சி ஒன்றினை அலங்கரித்தல்
14. வர்ண விளக்குகள் எரியும் காட்சி
15. அலங்கார (விநோத) உடைப்போட்டி

## 3-ந் தவணைப் பாடங்கள் 30

அ. வரைதல் — பாடங்கள்:-5

1. அமர்ந்து சிந்திக்கும் பெண்
2. பிச்சைக்காரன்
3. களைப்புற்ற ஓர் உழைப்பாளி
4. எருது ஓட்டும் பையன்
5. பிள்ளைகட்குக் கதைசொல்லும் பாட்டன்

இ. நோக்கம்: அச்சுப்பிரதியெடுத்தல் (கிறபிக்) பாடங்கள் - 5

1. தாயும் பிள்ளையும்
2. தீபாவளி அல்லது நத்தார் வாழ்த்திதழ்
3. சேவற்போர்
4. மனிதரூப அலங்காக்கரை
5. பாடசாலைக்கேற்ற முத்திரை ரூபம் அமைத்தல்

ஈ. நோக்கம்: அசைவுறுவனவும் அசைவற்றனவுமான உருவப் பாடங்கள் - 5

1. வண்டி ஓட்டுபவன்
2. மரக்கறி விற்கும் பெண்
3. தொங்கவிடும் காற்றால் அசையும் பறவை உருவங்கள்
4. ,, நமது பெயரின் எழுத்துக்கள்
5. மிருகக்காட்சிச்சாலை

உ. நோக்கம்:- அலங்காரமும் அலங்கார அமைப்பும் பாடங்கள் - 10

1. பறவை அல்லது மீன் உருவங்களை உபயோகித்து இரும்பு (கேற்) கதவுக்கேற்ற அலங்காரம் அமைத்தல்
2. கடதாசிப் பெட்டி ஒன்றின் வெளிப்புறங்களை அலங்கரித்தல்

3. இலே, பூ, பறவை என்பவற்றின் விகற்ப ரூபங்களுடன் ஒரு அறை மறைப்பு (ஸ்கிறீன்) சேலேக்குரிய அலங்காரம் அமைத்தல்
4. வர்ணக்கடதாசிகளே வெட்டி கம்பளமொன்றுக்கேற்ற அலங்காரம் ஒட்டுதல்
5. வட்டப்பாகங்களால் அலங்காரம் அமைத்தல்
6. பரவுரூபம் ஒன்றின் வழியாக பற்றிக்சீலே அலங்காரம் ஆக்குதல்
7. நவயுகத்திற்கேற்ற உடையலங்காரம் அமைத்தல்
8. தனது பெயர் எழுத்துக்களேக்கொண்டு பரவுரூப அலங்காரம் அமைத்தல்
9. விளக்கு மறைப்புக்கேற்ற அலங்காரரூபம் கறுப்புக்கடதாசியில் வெட்டி வர்ணமென் கடதாசிமீது ஒட்டுதல்
10. பாலேவனமொன்றைப்போல் அழகுதோன்றும் அலங்காரரூபம் பரவுரூப முறையில் புறவுருவர்ணம் கொண்டமைத்தல்

உருவம் அமைத்தலும் சிற்பமும் பாடங்கள் - 5

1. பூனேயும் அதன் குட்டியும்
2. மணமகள் அல்லது கூளி உருவம்
3. அமர்ந்து புத்தகம் வாசிக்கும் தன்மை
4. வேடர் வாழ்வு (இருவர்)
5. எருதுப்போர்

## எட்டாந்தரம், மாதிரி பாடக்கிரமம். (வழிகாட்டியினுள்ளவாறு)

பாடப்பகுதிகள்:- 1-ம் பருவம். 30 பாடங்கள்

வர்ணப்படவாக்கம் 9 பாடங்கள்

துரிதரேகை வரைதல் 5 பாடங்கள்

அலங்கார ரூபவரைதலும், அலங்காரம் அமைத்தலும் 7 பாடங்கள்

உருவம் அமைத்தல், சிற்பம் செதுக்குதல் அசைவுறும், அசைவுரு உருவங்கள் அமைத்தல் 3 பாடங்கள்

அச்சுப்பிரதி எடுத்தல் 3 பாடங்கள்

கலே மதிப்பீடு 3 பாடங்கள்

வர்ணப்படவாக்கம்: 9 பாடங்கள்:-

(அ) விடயவிரிவு, தான், வீடு, சமூகம்

1. தனிமையாக ஆலய வழிபாடு செய்தல்
2. நண்பன் ஏளனம் செய்ய — நான் கோபம் கொள்ளல்
3. நான் கடும் மழையில் நனேந்தவிதம்
4. நண்பருடன் ஊஞ்சலாடுதல்
5. புதுவருடத்தில் றபானு கொட்டுதல். அல்லது பூவாணம் விடுதல்
6. வீட்டாருடன் கோயிலுக்குப் போதல்
7. கிராமத்தில் அல்லது பாடசாலேயில் சிரமதானம் செய்வோர்
8. கிராமத்தில் துவிச்சக்கரவண்டிப் பந்தயம்
9. கிராமத்தில் "தொவில்" நடனம் அல்லது கூத்து

துரித இரேகை வரைதல்: 5 பாடங்கள்:-

(ஆ) விடயவிரிவு: ஆக்கவல்லப வெளிப்பாடு

1. கமுகு அல்லது தென்னைகளின் தொகுதி
2. வட்டவடிவப் பாத்திரத்தில் பூங்கிளை
3. நிலத்தில் கிடக்கும் பூஞ்செடியொன்று
4. கைக் கதிரையில் அமர்ந்திருக்கும்பிள்ளை
5. பூங்கிளையுடன் தையல் வேலைப்பாடுடைய குடை

அலங்கார ரூபவரைதலும், அலங்காரம் அமைத்தலும் 7 பாடங்கள்

இ) விடயவிரிவு: கடதாசி மீது செய்யப்படும் உருவங்களும் அலரங்காரமும்

1. கதவுத்திரைச் சீலைக்கேற்ற பரவுரூபம் (அலங்காரம்)
2. தள விரிபுக்கேற்ற பரவுரூபம் (அலங்காரம்)
3. இரேகை வரைதலை ஆதாரமாகக் கொண்ட சேலைக்கரை அலங்காரம்
4. வர்ணத்தை முக்கிய ஆதாராமாகக் கொண்ட சேலைக்கரை அலங்காரம்
5. பொதி சுற்றும் கடதாசிக்கேற்ற அலங்காரம்
6. தனிவர்ணக் கடதாசியில் அலங்காரம் வெட்டுதல்
7. மேற்கூறிய அப்பியாசம் வேறோர் வர்ணத்தாளில்

உருவம் அமைத்தல், சிற்பம் செதுக்குதல், அசைவுறும் அசைவுறு உருவங்கள் அமைத்தல்: 3 பாடங்கள்

(ஈ) விடயவிரிவு: முப்பரிமாணவேலை — அலங்கரிப்பு

1. அசைவுறும் பாவை உருவம் அமைத்து, ஏற்ற உடை தயாரித்தல்
2. மிருதுவான செங்கல், பலகைகொண்டு (சிற்பவழி) உருவம் செதுக்குதல்
3. மூங்கில் குச்சு, நூல், கடதாசி என்பவை கொண்டு பிராணி உருவம் அமைத்தல் (குழு முறையில்)

அச்சுப் பிரதியெடுத்தல்: 3 பாடங்கள்

விடய விரிவு: வினைத்தொடர்புடைய தனிவர்ணப்பிரதிகள்

1. கனதியான கடதாசியில் மரத்தொகுதி வெட்டுதல்
2. சற்றுக் கனமான கடதாசியில் விரும்பிய புற உருவம் வெட்டி அட்டைகளில் ஒட்டுதல்

தடித்த கடதாசியில் அழைப்பிதழ் ரூபம் வெட்டுதல்

கலைமதிப்பீடு: 3 பாடங்கள்

## 2-ம் பருவம்

வர்ணப்படவாக்கம்: 9 பாடங்களும்

விடய விரிவு: இயற்கை அமைதி

1. பனிமய அதிகாலை வேளை
2. குன்றின் மீதிருந்து நீர்காணும் இராக்கால "வெசாக் விழா"
3. மிருகக்காட்சிச்சாலை
4. குன்றின் மீதிருந்து நீர் காணும் சூரியஸ்தமனம்
5. அரிவிவெட்டும் விவசாயிகள்
6. வனவிலங்குக் காப்பகம் (பிராணிகளுடன்)
7. சிவனொளிபாதம் அல்லது மிகுந்தலை மலையேறும் யாத்திரீகர்
8. யானைகளுடன் பவனி — இராக்கால தரிசனம்
9. வெள்ளப்பெருக்கினுற் பாதிக்கப்பட்ட ஒரு கிராமம்

2-ம் பருவம் 8-ந் தரம்

**துரிதஇரேகை வரைதல்: 5 பாடங்கள்**

விடயவிரிவு: ஆக்கவல்லப வெளிப்பாடு

1. குடைவிரித்து நிற்கும் சிறுமி
2. தேகப்பியாசப் பண்பில் நிற்கும் சிறுவன்

விடயவிரிவு: கற்பனை வெளிப்பாடு

3. புகைவண்டி அல்லது பஸ்வண்டி
4. விறகு வெட்டும் மனிதன் அல்லது பெண்
5. "றபானு" கொட்டும் மாதர், அல்லது கும்பியடிக்கும் மாதர்

**அலங்காரரூப வரைதலும், அலங்காரம் அமைத்தலும் 7 பாடங்கள்**

விடயவிரிவு: கடதாசி மீது செய்யப்படும் உருவங்களும் அலங்காரமும்

1. வர்ணத்தாளை நீளப்பாடாக வெட்டி விரும்பிய திரை அலங்காரரூபம் அமைத்தல் (பின்னல் முறை ஏற்றது)
2. மீன் உருவம் அமைத்துச் சுய அலங்காரம் செய்தல்
3. குருவி ரூபம் அமைத்துச் சுய அலங்காரம் செய்தல்
4. விரும்பிய மிருக ரூபத்துடன் சுய அலங்காரம் செய்தல்
5. "ஓ" என்ற எழுத்தை அலங்கார அமைப்பாக அமைத்தல்

விடயவிரிவு: உண்மை உருவையொத்த அசைவுறும் அலங்கார அமைப்புக்கள்

6. ஓலைகொண்டு அலங்காரப் பின்னல்வேலை செய்தல்
7. பாடசாலை விளையாட்டுப் போட்டிக்காய சுவரொட்டி அமைத்தல்

**உருவம் அமைத்தல் சிற்பம் செதுக்குதல் அசைவுறும் அசைவுரு உருவங்கள் அமைத்தல்: 3 பாடங்கள்**

விடயவிரிவு: முப்பரிமாணவேலை அலங்கரிப்பு

1. மிருதுவான செங்கல் பலகை கொண்டு மனிதத்தலை உருவம் செதுக்குதல்
2. தொங்கவிடக் காற்றில் அசையும் மிருக உருவம் அமைத்தல்
3. தொங்கவிடக் காற்றில் அசையும் பறவை உருவம் அமைத்தல்

**அச்சுப்பிரதி எடுத்தல்: 3 பாடங்கள்**

விடயவிரிவு: வினைத் தொடர்புடைய தனிவர்ணப்பிரதிகள்

1. கிழங்கு வெட்டச்சுமுறையில் தனிவர்ணச் சேலை அலங்காரப் பரவுரூபம்
2. மிருதுவான பலகைமீது பரவுரூப அரங்காரம் செதுக்குதல்
3. தொடர் அலங்காரமுறையில் (இரேகை வரைதல் வழியாக) அச்சுருப்பிரதி அலங்காரம் அமைத்தல்

**கலைமதிப்பீடு: 3 பாடங்கள்**

தேசிய கலாசார கலையிலக்கணம்: புராதன சிங்கள அலங்கார அமைப்பு அலகுகளில், அரும்பு, கற்கட்டு, சங்கிலிரூபம், சீப்புரு, குந்திரிக்கம், பத்மம்' கொடிரூபம் இதழ் ரூபங்கள் "திரிங்கிதலை" ரூபம், "வகதெக" ரூபம் ஆதியன அடங்கியுள்ளன. இவற்றை மாதிரி அலங்கார வரைதல் வழியாக (பரும்படிவரைதலுடன்) அறிமுகம் செய்தல்.

## 8-ந் தரம் 3-ந் பருவம்

வர்ணப்படவாக்கம்: 9 பாடங்கள்

விடயவிரிவு: கைவினையும்—செயற்பாடும்

1. உடுப்புத்தைக்கும் தையலகத்துள்
2. நெசவுசாலையினுள்ளே
3. நகரத்தில் பெற்ரேல் அடிக்கும் நிலையம்
4. மோட்டார்வண்டி பழுதுபார்க்கும் இடம்
5. தெருவீதி பழுபார்க்கும் வேலையாளும் உருளையந்திரமும்
6. துவிச்சக்கர வண்டி பழுதுபார்க்கும் தலம்
7. தேயிலை அல்லது றப்பர் தொழிலகம்
8. சீலை தோய்க்கும் நீர் நிலையம்
9. சிகை அலங்கரிப்பாளர் நிலையத்தினுள்

துரிதஇரேகை வரைதல்: 5 பாடங்கள்

விடயவிரிவு: கற்பனை வெளிப்பாடு

1. எங்கள் வித்தியாலயம்
2. கிராமத்துப் பன்னசாலை, தேவாலயம், அல்லது கோயில்
3. பொருள் ஏற்றிச் செல்லும் இரணைமாட்டுவண்டி
4. சீலை நெய்யும் நங்கையர்
5. பாடசாலையில் காலைக்கூட்டம்

அலங்காரரூப வரைதலும், அலங்காரம் அமைத்தலும்: 7 பாடங்கள்

விடயவிரிவு: உண்மை உருவையொத்த அசைவுறும் அலங்கார அமைப்புகள்

1. "வெசாக்" அல்லது நத்தார் அல்லது தீபாவளி வாழ்த்திதழ் அலங்காரம் செய்தல்
2. அட்டைகள் கொண்டும் முகமூடி அலங்காரம் செய்தல்
3. புத்தக அட்டைக்கேற்ற அலங்காரம் செய்தல்
4. சவர்க்காரச்சுற்றுக் கேற்ற கடதாசி அலங்காரம் செய்தல்
5. கனதியான கடதாசியால் சிற்றுண்டித் தட்டத்துக்கேற்ற அலங்காாம் செய்தல்
6. வட்டவடிவக் கடதாசியில் அரசியல் முத்திரை வடிவத்திற்கு ஏற்றமாதிரி அலங்காரம் செய்தல்
7. மென்கடதாசிகொண்டு கைக்குட்டை அலங்காரம் செய்தல்

உருவம் அமைத்தல், சிற்பம் செதுக்கல், அசைவுறும் அசைவுறு உருவங்கள் அமைத்தல்: 3 பாடங்கள்

விடயவிரிவு: முப்பரிமாணவேலை — அலங்கரிப்பு

1. இலங்கையில் பல்வேறுபட்ட சமூகமக்களின் உடையலங்காரம் விளங்கும் முறையில் சிறுமனித உருவங்களை அமைத்தல் (குழுமுறையில்
2. நடிக்கும் பாவை (அசையக்கூடியதாக) உருவம் அமைத்தல்)
3. நவமுறையில் வேசாக் விளக்குத் தயாரித்தல்

அச்சுப்பிரதியெடுத்தல்: 3 பாடங்கள்

விடயவிரிவு: வினைத்தொடர்புடைய தனிவர்ணப்பிரதிகள்

1. மாதிரி வாக்கியமொன்றின் எழுத்துக்களை வெட்டி அச்சடிப்பு வேலைக்குரியதாக அழகுபடுத்தல்
2. பூச்செண்டுவடிவமொன்றை அச்சுப்பலகையில் அமைத்து பிரதி எடுத்தல்
3. பலவிதகேத்திர கணித உருவங்களை ஓர் அட்டைமீது ஒழுங்கு செய்து அச்சடித்துப் பூரணமாக்குதல்

3-ம் பருவம் 8-ந் தரம்

கலைமதிப்பீடு: 3 பாடங்கள்

கலாசாரக் கட்டடக்கலையும், சிற்பமும்

தாதுகோபங்கள்:- பல அமைப்புடைச் சமாதிகளும், அவற்றின் பொது அமைப்புக் கூம்பழகும், கர்ப்பம், சதுரகோட்டம், கூர்மதில் ஆதியனவின் பொது அமைப்புகள் மேலும் காவற்கல், மூலஸ்தானம், பன்னவில்லம் போன்றன பற்றியும். இலங்கையின் பிரதான தாதுகோபங்களைப் பற்றிய விசேட விபரங்கள் உட்பட ரூவன்வெலி சமாதி, தூபராம சமாதி, மிருசுவெற்றி, கந்தக சைத்திய கிரிவிகாரை, ஆதியன பற்றியறிதல்

## 9-ம் தரம் (வழிகாட்டியிலுள்ளவாறு)

**1-ம் பருவம்: சித்திரபாடப் பாடத்திட்டம் கற்பனை அமைப்பு வர்ணம் தீட்டல் ஒரு பாடம் 90 நிமிடங்கள் கொண்டவை**

நோக்கம்: மனிதரிடையே அன்றாட வாழ்க்கையில் எழும் பல்வேறு வகையான மனநிலைகளை ஆக்கபூர்வமான சித்திர வெளிப்பாட்டின் மூலம் கொண்டு வருதல், அவையாவன:- மகிழ்வு, துக்கம். பயம், சத்தம், தனிமை, உன்னதம். கம்பீரம், இரக்கம், அன்பு, பயங்கரம், வசீகரம்.

பாடப்பொருள் I நாளாந்த வாழ்க்கையின் அனுபவங்கள்

1. விவாகக் கொண்டாட்டம்
2. களியாட்டவிழா மைதானம்
3. மாலைக்காட்சி
4. வெள்ளப்பெருக்கு
5. குழந்தையின் விளையாட்டு மைதானம்
6. மிருகக்காட்சிச்சாலை
7. புகையிரத நிலையத்தின் உட்பகுதி
8. வைத்தியசாலையின் உட்பகுதி
9. தேயிலை, தென்னை, றப்பர் தோட்டத்தில் நடைபெறும் வேலை
10. சிரம்தான வைபவம்

பாடப்பொருள் II சம்பவங்களின் அகவயமான வெளிப்பாடு

11. சனச்செறிவுமிக்க நகர்மீது குண்டுவீச்சு
12. ஒருசரித்திர நாயகன் வாழ்வில் நடந்த தியாகக் காட்சி
13. கானகத்தில் கொடிய மிருகமொன்றை எதிர்ப்படும் காட்சி
14. புகையிரதமொன்று மோதியதினல் ஏற்பட்ட பயங்சரசேதம்
15. விளக்குகளால் நன்கு அலங்கரிக்கப்பட்ட நகரை இரவில் ஆகாயத்திலிருந்து காணுதல்

பாடப் பொருள் III புகழ்வாய்ந்த இலக்கியமொன்றிலிருந்து காட்சியொன்றினைச் சித்தரித்தல்

| | | |
|---|---|---|
| 16. | தொல் சீர்மை பொருந்திய இலக்கியமொன்றிலிருந்து | ஒரு செய்யுள் |
| 17. | ,, ,, ,, ,, ,, | ஒரு உரைச்சித்திரம் |
| 18. | ,, ,, ,, ,, ,, | ஒரு செய்யுள் |
| 19. | ,, ,, ,, ,, ,, | ஒரு செய்யுள் |
| 20. | தொல் சீர்மை பொருந்திய ,, ,, | |

பாடப்பொருள் IV. தொகுப்பான கதை கூறும் சுவரோவியம்

21. அரிசியின் கதை
22. மதகுருமாருக்கு அன்னம் அளித்தல்
23. மதகுருவின் வாழ்க்கைக் கதை
24. புராணக்கதை அல்லது கிராமியப்பாடல்
25. பாடசாலை விளையாட்டு விழா

## 9-ம் தரம் 2-ம் பருவம்

**சுயமாகக் கீறுதலும் உருவவிளக்கப்படம் வரைதலும், பாடப்பொருள் I**

ஒருவரைந்பார்த்து பல்வேறு நிலைகளில் வைத்துக்கீறுதல்.

1. குழந்தையொன்று நூல் வாசித்தல்
2. குழந்தையொன்று கொடியொன்றைத் தூக்கிப் பிடித்தல்
3. குழந்தையொன்று சங்கீதக் கருவியை மீட்டல்
4. மண்வெட்டியுடன் தொழில் செய்வதான ஒரு சுவரோவியம்
5. குழந்தையொன்று மேசையிலிருப்பதான ஒருபடம்
6. வலைப்பந்து அல்லது கைப்பந்தாட்டமொன்றின் உயரத்தாவி வந்த பந்தை ஒருவர் அடிக்க இருப்பதான சுவரோவியம்
7. குழந்தையொன்று தூணுடன் சாய்ந்திருப்பதான காட்சி
8. இரண்டு குழந்தைகள் தங்கள் கைகளிலே பாடப்புத்தகங்களை ஏந்திய வண்ணம் நடப்பதன் சித்திரம்.

பாடப்பொருள் II

9. ஒழுங்கற்ற மரக்கூட்டம்
10. கிளைகள் பரந்து வளரும் மரங்களான பலா, வாகை என்பன.
11. இலைத்தொகுதிகட் கூடாகவும் மரங்களுக்கூடாகவும் தெரியும் வீடுகள்
12. தூரத்திலிருந்து தெரியும் பாடசாலைக்காட்சி
13. பாடசாலையிலிருந்து ஒருகாட்சி
14. பாடசாலையைச் சுற்றியுள்ள மிருகங்கள் பறவைகள் ஆதியன
15. சிறு கிளையுடன் கூடிய மலர்கள்
16. சிறு கிளையுடன் கூடிய பழங்கள்

பாடப்பொருள் III ஒழுங்குசெய்யப்பட்ட விருப்பான பொருட்கூட்டம்

பொருட்கள்:- கோட்டுப்படத்துக்குப் பொருத்தமானவை பூக்கள், இலைகள் கிளைகள், பூங்கொம்பு, நூதனப் பொருள்கள், வாத்தியக்கருவிகள் வீட்டுப் பயன் பாட்டுப் பொருட்கள் பல்வேறுவகையான இழை அமைப்புகள். பின்னப்பட்ட பெட்டிகள், விரித்த அல்லது சுற்றிய புடவை, இப்பொருட்கள் கலைத்துவமுறைப்படி அடுக்கப்படவேண்டும் வழிகாட்டும் நோக்கமாக கீழே சில பொருட்கூட்டங்கள் தரப்பட்டுள்ளன.

17. ஒரு பூச் செடியினுள் பூக்களுடன் இலைகளுடன் கூடிய ஒரு மரக்கிளை இத்துடன் மேற்கூறிய சில பொருட்களையும் சேர்க்கலாம்
18. பின்னப்பட்டபெட்டி அல்லது திறந்த பாத்திரமொன்றிற் காணப்படும் வசீகர மான இழை அமைப்புகளாலானகோலம். இத்துடன் மேற்கூறிய பொருட்கள் சிலவும்
19. வயலினுடன் (Violin) கூடிய பொருட்கூட்டம்

20. ஒரு கதிரையில் பூச்சாடியொன்றினைவைத்து கதிரையின் பின்பக்கத்தைப் பின்னணியாக அமைத்தல்
21. சீலை விரிக்கப்பட்ட கதிரையின் மேல் புத்தக அடுக்கிளை வைத்து அதன்மேல் கூசா ஒன்றினை வைத்தல்
22. ஆழமில்லாத பிரப்பங்கூடையினுள் மடித்த சிறிய குடையொன்றினை வைத்து அதனை மேசையின் மேல்வைத்தல்
23. சுவருடன் சாத்தப்பட்ட துவிசக்கரவண்டி
24. உயர்ந்தும் ஒடுங்கியதுமான ஒருபூச் சாடியினை வானொலிப் பெட்டியின் பக்கமாக வைத்தல்
25. ஆழமில்லாத மரக்கறிக்கடையினுள் கொகிலைக்கிழங்குமுள்ளங்கி போன்றவற்றை கூடையினின்றும் வெளியே தெரியும்மாப்போல இருக்கக்கூடியதாக வைத்தல்

## 9-ம் தரம் 3- ம் பருவம்

### ஆக்க அலங்காரம் 25 பாடங்கள் பாடப்பொருளும் நோக்கமும்

பொருள்களை அலங்காரம் செய்யும்போது அவை பயன்தரக்கூடிய பிரயோசனத்தை அறிவதுடன் தொழில் தொழில்நுட்பச் சீர்மையும் கருத்திற்கொண்டு அவற்றை அழகுபடுத்தல் வேண்டும்.

### பாடப்பொருள் I

1. சில உணவுப்பண்டத்தின்மேல் சுற்றப்படும் சுற்றுத்தாளுக்கு எற்ற அலங்கார அமைப்பு
2. வெசாக் வெளிச்சக் கூடொன்றைத் திட்டமிட்டுப் பின்னல் வடிவத்திலமைத்து அதற்கேற்ப அலங்காரம் செய்தல்
3. புத்தக அட்டையொன்றினை (Book Jacket) வரைந்து அதனை அலங்காரம் செய்தல்.
4. விசிறியொன்றினை வரைந்து அலங்காரம் செய்தல்
5. அகலமான பூச்சாடியினை வரைந்து அதனுடைய தன்மைக்கேற்ப அலங்காரம் செய்தல்
6. விளையாட்டு வெற்றிக் கேடயம் ஒன்றினை வரைந்து அலங்கரித்தல்
7. தூங்கு விளக்கொன்றினை வரைந்து அதனை அலங்கரித்தல்

### பாடப்பொருள் II

#### அலங்காரவடிவ அமைப்பிற் கூடியகவனம்

8. வெசாக் கொடியொன்றினை வர்ணத்தில் வரைந்து அதனை அலங்கரித்தல்
9. சீத்தைத்துணியொன்றுக்கு பொருத்தமான அலங்கார வடிவ அமைப்பு
10. கம்பளத்திற்குப் பொருத்தமான அலங்கார வடிவ அமைப்பு (Desipn)
11. சதுரமான கைக்குட்டையொன்றுக்குப் பொருத்தமான அலங்கார வடிவ அமைப்பு
12. சுவர்க்கடதாசியொன்றுக்குப் பொருத்தமான அலங்காரவடிவமமைப்பு
13. புத்தகப் பொதிசுற்றும் கடதாசி யொன்றிற்கான அலகவடிவ அமைப்பு
14. கதவுத்திரைச்சீலையொன்றுக்குகந்த அலங்கார வடிவ அமைப்பு
15. கடதாசிப்பட்டமொன்றுக்கான அலங்கார வடிவஅமைப்பு
16. பிளாஸ்டிக் துணிக்கான அலங்கார வடிவ அமைம்பு
17. படுக்கை விரிப்புக்கான அலங்கார வடிவ அமைப்பு

## பாடப்பொருள் III

### பயன்பாட்டு மதிப்புக்கருதி உபயோகிக்கும் பொருள்கள் தொழில் நுட்பம் ஆகியவற்றை வழிப்படுத்துதலுக்கான கருத்துத் தெளிவு

18. பட்டிக்வேலைப்பாட்டுக்குரிய துணி அலங்கார அமைப்பு
19. மூவண்ண அச்சுக்குகந்த துணி அலங்காரவடிவ அமைப்பு
20. மர அடசுபலகையிற் செதுக்குகற்குகந்த அலங்காரவடிவமைப்பு
21. சாரத்தில் நெய்வதற்கு உகந்த அலங்காரவடிவ அமைப்பு
22. துணியின் கரையில் வெட்டித் தைப்பதற்கு (Appligue) உகந்த அலங்காரவடிவ அமைப்பு
23. துளையிட்டு ஆக்கப்படும் கம்பிவலைக்கு உகந்த அலங்கார வடிவ அமைப்பு
24. தலையணை உறையில் இடக்கூடிய சித்திரத் தையலுக்கான (Embroidery) அலங்காரவடிவ அமைப்பு
25. தகரத்தட்டில் புடைக்கச் செதுக்குதலுக்குகந்த அலங்காரவடிவ அமைப்பு

### சித்திர மதிப்பீடு: 15 பாடங்கள்

மாணுக்கரின் அனுபவத்தை முதன்மையாகக் கொண்டு அவர்களது விமரிசன உணர்வைத் தூண்டுதல்

குறிம்பு:- இப்பாட அலகுகளை மூன்றுதவணைக்குரிய செய்முறை வேலைகளை மாணவரிடம் கற்பிக்கும்போது சித்திரமதிப்பீட்டு விடயங்களையும் தொடர்பு படுத்திக் கற்பித்து முடிக்கலாம்.

1. வகுப்பிலுள்ள மாணுக்கர் சிலரினது விமரிசன வெளிப்பாடு
2. 5—8 வயது எல்லைக்குட்பட்ட பிள்ளைகளினது விமரிசன வெளிப்பாடு
3. 9—12 வயதெல்லைக்குட்பட்ட பிள்ளைகளது விமரிசன வெளிப்பாடு
4. கண்டியர்கால வர்ண ஓவியம், புராணக்கதைகளுக்கான வண்ண ஓவியம் தொகல் தொறுவ (Depal doruwa) வண்ண ஓவியம்
5. தாகபா, அதனைச்சூழ அமைந்துள்ள சித்திரவேலைப்பாடு, புங்கலாஸ்(Punkalas) வாசல் கடை (Vahal kada)
6. சிறிஸ்தவ தேவாலயம், பள்ளிவாசல், இந்துக்கோயில்
7. புத்தர் சிலைகள், துவாராபாலகர் சிலைகள், விளக்கேந்திய பாவைச்சிலைகள்
8. சந்திரவட்டக்கல், சிற்பத் தூண்கள்
9. எம்பக்கேயிலுள்ள மரச்செதுக்குவேலை, தேர்ச் செதுக்குவேலை இசுருமுணியாவிலுள்ள கற்செதுக்குவேலைகள். பொன்னம்பலவாணேசர் கோயிலின் அல்லது திருக்கேதீச்வரத்திலுள்ள கற்செதுக்குவேலைகள்
10. சிகிரியச் சுவர் ஓவியம், களனிச் சுவரோவியம்

# இலங்கை கல்விப்பொதுத்தராதாப் பத்திர (உயர்தர) பரீட்சை பிரமாணங்களும் பாடத்திட்டமும்

## பாடம்: சித்திரம்

(1967–ம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் நடைமுறையிலிருப்பவை)
(ஒவ்வொன்றும் மூன்று மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரங்கள்)

பரீட்சார்த்திகள் I ஆம் வினாப்பத்திரத்திலும் II ஆம் வினாப்பத்திரத்திலுமுள்ள பிரிவுகளுள் ஒன்றிலும் III ஆம் வினாப்பத்திரத்திலுமுள்ள பிரிவுகளுள் ஒன்றிலும் சித்தியெய்தும்படி கேட்கப்படுவர். க. பொ. த. ப (சாதாரணம்) பரீட்சைத் தரத்திலும் பார்க்க உயர்ந்த ஒரு தரம் எதிர்பார்க்கப்படும்.

### பத்திரம் I: சித்திரத்தின் வரலாறு (3 மணித்தியாலங்கள்)

பரீட்சார்த்திகள் I ஆம் பிரிவையும் II ஆம் அல்லது III ஆம் பிரிவையும் தெரிவு செய்யும் படி கேட்கப்படுகின்றனர்.

பிரிவு (I) — இலங்கை சித்திரத்தின் மூலாதார வரலாறு

(அ) அநுராதபுரக்காலம் (ஆ) பொல்லநறுவைக்காலம் (இ) தம்மதேனியா—கம்பளைக்காலம் (ஈ) கண்டியர் காலம்

பரீட்சார்த்திகள் வரைதற்படங்களின் ஒரு பெருந்தொகையான (வர்ணப்) பிரதிகளைப் படித்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

பிரிவு (II) — இந்திய சித்திரத்தின் மூலாதார வரலாறு

பிரிவு (III) — ஐரோப்பிய சித்திரத்தின் மூலாதார வரலாறு

### பத்திரம் II — (3 மணித்தியாலங்கள்)

பரீட்சார்த்திகள் (அ) பிரிவை அலலது (ஆ) பிரிவைத்தெரிவு செய்தல் வேண்டும்

பிரிவு (அ)—தாவரப்பொருள் சித்திரங்கள்

பரீட்சார்த்தியின் முன் வைக்கப்பட்ட ஒருமண் பாத்திரத்திலுள்ள ஒரு செடியை, செடிகொடிகளின் அல்லது பூக்களின் அல்லது பழங்களின் அல்லது இலைகளின் ஒருதொகுதியைப் பார்த்து வர்ணம் தீட்டுதல் அச்சித்திரம் பரீட்சார்த்தியினுடைய சொந்தச் சித்திர நடைக்குரிய முறையில் அச்செடியினுடைய இயல்பான தோற்றத்தையும், பண்பையும் ஒருமைப்பாட்டையும் இயன்றவரையில் எடுத்துக்காட்டக் கூடியதாக முடிக்கப்படல் வேண்டும். வர்ணங்களை உபயோகித்தல் வேண்டும்.

பிரிவு (ஆ) பொருள்களைப்பார்த்து வரைதல்

பரீட்சார்த்திகளின் முன்னிலையில் வைக்கப்பட்ட பொருட்களின் ஒரு கவர்ச்சிகர மான கூட்டத்தைப் பார்த்து வரைதலும், வர்ணம் தீட்டுதலும்; அல்லது பரீட்சார்த் திகள் காணக்கூடியதாக வைக்கப்பட்ட பொருள் தொகுதியொன்றிலிருந்து கற்பனை செய்த பொருட்களின் ஒரு கூட்டத்தை வரைதலும், வர்ணந் தீட்டுதலும் உருவத் தை அமைத்தலும்.

ஒரு பொருளுக்கும் மற்றயதற்குமுள்ள தொடர்பு, பின்னனி, பொருட்கள் எல்லாம் ஒன்ருக அமைந்த அமைப்புமுறை விசேஷ கவனம் செலுத்தப்படல் வேண் டும். வர்ணங்களை உபயோகித்தல் வேண்டும்.

பத்திரம் III: (3 மணித்தியாலங்கள்)

பரீட்சார்த்திகள் (அ) பிரிவை அல்லது (ஆ) பிரிவைத் தெரிவு செய்தல் வேண்டும்

பிரிவு (அ) — கருத்து வெளிப்பாட்டுசித்திரம்

வாலாறு அல்லது இலக்கியம் அல்லது சமயம் அல்லது நாளாந்த சீவி யம். இவற்றில் ஒன்றிலிருந்து கொடுக்கப்பட்ட ஒரு விஷயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒருபடத்தை ஆக்குதல் அல்லது வினுப்பத்திரத்தில் குறிப்பிட்ட ஒருசில பொருட்கள் அடிப்படையாகக் கொண்டு ஒரு படத்தை ஆக்குதல் அல்லது கொடுக் கப்பட்ட விஷயங்களில் ஒன்றினை அடிப்படையாகச் கொண்டு இரண்டு அளவைக ளிலுள்ள தட்டையான ஓர் அலங்காரவடிவில் அமைந்துள்ள ஒரு மூல வடிவத்துக்கு வர்ணந்தீட்டுதல் வர்ணங்களை உபயோகித்தல்.

பிரிவு (ஆ) ரூப சித்திரம்

தட்டுகள், விளக்கு ஒளித்தடுப்புகள் (Lamp shabes) மெத்தை உறைகள் ஏட்டுச்சுவடிஉறைகள். விசிறிகள், ஓடுகள், பீங்கான்கோப்பைகள், புத்தக உறை கள், அச்சடித்த துணிகள், கயிற்றுப்பாய்கள், பாய்கள் மேசையின் மத்தியபாகம் நகைப்பெட்டிகள் முதலிய பண்டங்களுக்கான அலங்கார ரூபங்களை வரைதல், குறிப்பிட்ட ஒருநோக்கம் சம்பந்தமாக எழுத்துக்களுடன் அல்லது எழுத்துக்கள் இன்றி ஒரு சுவரொட்டிக்கு அல்லது ஒரு புத்தக உறைக்கு அல்லது விஷயத்தோ டும் விளக்கத்தோடும் கூடிய ஒரு பக்கத்திற்கு அலங்காரரூபம் அமைத்தல். வர் ணங்களை உபயோகித்தல் தேண்டும். வேலைப்பாடுகள் எவ்வர்ணமுறையிலும் இருக் கலாம். ஆனல் சித்திரங்களும், வர்ணவேலைப்பாடுகளும் ஒன்ருேடொன்று ஒட்டிக் கொள்ளாமலும் கசங்கிச் சிதைவுருமலும் உறையிலிட்டு ஒட்டப்படவும், பரீட்சிக் கப்படவும் கூடியனவாயிருத்தல் வேண்டும். பரீட்சையின்போது விநியோகிக்கப் படும் தாள் (22″×15″) அல்லது. 15″×11″ அளவு கொண்ட வெள்ளைத்தாளாயிருக்கும்.

# 1. சித்திரத்தின் நவீன முறைகள்

ஆரம்பகாலத்தில் மிருகங்களைப் போல, காடுகளிலும் மலைக் குகைகளிலும் வாழ்ந்த மக்கள், உணவுக்காக வேட்டையாடி அலைந்து திரிந்தனர். அவர்கள் காட்டு மிருகங்களை வேட்டையாடி உண்டு வாழ்ந்தனர். மலைக்குகைகளில் மிருகங்களின் உருவங்களை கற்களினுல் கொத்தி சித்திரம் வரைந்தனர். பின்னர் காலம் செல்லச் செல்ல உணவுக்காக அலைந்து திரிவதை விட்டு; நிலையான இடங்களில் வசிக்கத் தொடங்கினர். இதற்காக ஆற்றங்கரைகளில் வாழத்தொடங்கினர். இவர்கள் மலைக்குகைகளில் வரைந்த சித்திரங்களைவிட; நிலையான இடங்களில் வசிக்கும்போது களிமண்ணில் உருவங்களை ஆக்கவும் தொடங்கினர். மக்களின் நாகரீகம் வளர்ந்த நதிக்கரைகளான சிந்து நதிக் கரை, மோகன்சோ தாரோ போன்ற இடங்களில்; கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் சான்று பகருகின்றன. இவ்வாறு மலைக்குகைகளில் சித்திரம் வரையத் தொடங்கிய ஆதிகால மக்கள், சித்திரத்தோடு மாத்திரம் நின்றுவிடாது ஆக்க வேலைகளிலும் ஈடுபட்டனர். எனவே சித்திரம் ஆக்கவேலைகளிற்றுன் முடிவடைகிறதென்ற உண்மையைப் பிற்காலத்தில் உணரத் தொடங்கினர்.

அன்றியும் இடைப்பட்டகாலத்தில் சித்திரம் ஒரு பகுதி மக்களால் மட்டும் செய்யும் தொழிலாகவுமிருந்து வந்தது. பின்னர் மக்கட் தொகையும் அதிகரிக்க; சித்திரம் கைத்தொழில்கள் யாவுக்கும் தேவையென்ற உண்மையையும் உணர்ந்தனர். இதன்பின்னர் கல்விமான்கள், சித்திரத்தின் தேவைகளையும், அவை மனித சமுதாயத்துக்கு பெரிதும் வேண்டப்படுவதையும் உணர்ந்தனர். இதனுல் 15-ம் நூற்றுண்டின்பின் மேலைத்தேசங்களில் சித்திரக்கலையைப் பள்ளிக்கூடங்களிற் போதிக்கத் தொடங்கினர். பள்ளிக்கூடங்களில் சித்திரம் ஆரம்பிக்கப்பட்டபின்னர் அதன் தேவைகள் விரிவடைந்ததையும், சித்திரம் மூலம் தான் ஆக்கவேலைகள் யாவையும் வளர்க்கலாமெனவும், கைத்தொழிலுக்கும் சித்திரத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டெனவும் உணர்ந்தனர்.

சித்திரம் குழந்தைகளை ஓவியர்கள் ஆக்குவதற்கல்ல என்ற உண்மையையும் தெரிந்தனர். சித்திரம் ஒரு கொடை என்பதும் சித்திரம் வரைபவர்கள் அனைவரும் கலைஞர்களல்ல என்ற உண்மையையும் உணர்ந்து, சித்திரத்தின் மூலம் குழந்தைகளிடத்தில் ஆக்கவேலைகளை வளர்க்க வேண்டும் என்றும் இதனுல் ஒவ்வொரு குழந்தையும் யாதாயினும் ஒரு கைத்தொழிலில் ஈடுபட்டு தம் வாழ்நாளை கஷ்டமின்றிக் கழிக்கமுடியுமென்பதையும் உணர்ந்தார்கள். இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளும் தீரவழியுண்டெனவும் உணர்ந்தனர்.

இதுபற்றியே புதுமுறைச் சித்திரத்தை வளர்ப்பதற்காக குழந்தைகளிடத்தில் இதனை எவ்விதம் வளர்க்கலாம் எனச் சிந்தித்த கலை வல்லுனர்களும் தற்காலத்து புதிய முறைகளைக் கையாளத் தொடங்கினர். ஓவியமும் சிற்பமும் பழைய கற்காலத்திலிருந்தே போற்றப்பட்டு வந்தன. இதேபோல நடனமும் இசையும் உடன்பிறப்புக் கலைகளாக விளங்கின. இவை நற்கலைகளென மதிக்கப்படும் கலைகளாகும். இக்கலை வாழ்க்கையில் நிகழ்கின்ற முயற்சிகள் அனைத்தையும் பயன் படுத்துபவை. எத்தனையோ சீரிய நன்னெறிப் பான்மையுடையவை. விளையாட்டு

இழந்த ஆற்றலை மீண்டும் பெறுபவை. விஞ்ஞானம் மானிட வாழ்க்கைக்குத் தரும் நலன்களை நோக்கி அது இன்றியமையாத தேவை என மதித்தனரேயன்றி இதனை நற்கலைகளோடு ஒப்ப மதித்திலர்.

உண்மை, அழகு, நன்மை என்னும் மூன்றும்; மானிட வாழ்க்கைக்கு மதிக்கத்தகுந்தவைகளாகக் கருதப்படுகின்றன. உண்மை அறிதல் பகுத்தறிவுக்கும் நியாயத்தெளிவுக்கும். தத்துவ ஞானத்துக்கும், விஞ்ஞானத்துக்கும் காரணமாக விருக்கின்றது, அழகுணர்ச்சி உள்ளத்திலிருந்து எழுகின்ற உணர்ச்சிகள் அனைத்திற்கும் காரணமாகி நற்கலையின் உயிரெனத் திகழ்கின்றது. நன்மை ஆய்தல், நன்னெறி தீநெறிகளை ஆய்கின்ற அறிவைப் பெருக்கி அறநெறியின் கண்ணே ஒழுகும் முயற்சிக்கு மனிதனது உள்ளத்தை ஏவிவிடுகின்றது, உண்மை அறிதல் பகுத்தறிவுக்கும் அழகுணர்ச்சி நற்கலைத்திறனுக்கும், நன்மை ஆய்தல் அறநெறி ஒழுக்கத்திற்கும் காரணங்களாக அமைந்து, ஒருவனது தன்மயம் முழுவதையும் ஆக்கி அமைக்கின்ற தத்துவங்களாக இருக்கின்றன என்ற உளநூல் வல்லாரின் கருத்திற்கிணங்க; பள்ளிக்கூடங்களில்; குழந்தைகளிடத்தில் சித்திரம் போதிக்க முனைந்தனர்.

இதற்காக தற்காலச் சித்திர வல்லுநர்கள் புதுமுறைச் சித்திரத்தை மாணவரிடம் வளர்க்க வழிதேடலாயினர். பலரும் பல நவீன முறைகளைக் கண்டனர். அவைதான்: கிறுக்கற் சித்திரம், ஒட்டுவேலைச் சித்திரம், வெட்டு வேலைச்சித்திரம், நூல் இழுத்தற் சித்திரம், மெழுகுவர்ணச் சித்திரம், தேங்காய்ப் பூச்சித்திரம், தூள்வர்ணச்சித்திரம், நீர்வர்ணச் சித்திரம், கலப்புச் சாதனச் சித்திரம், கரைச்சித்திரம். பரவுரூபச்சித்திரம், கற்பனைச் சித்திரம், பலவடிவச் சித்திரம், தையற் சித்திரம் எழுத்துவேலைச் சித்திரம், வடிவம் வெட்டித் தைத்தற் சித்திரம், கதைச் சித்திரம், கோலம் போடும் சித்திரம், நுண்கலைப் பொருளை ஆக்குதல், சிற்பம் அமைத்தல் முதலான பலவகைச் சித்திரங்களையும் கற்பிக்கத் தொடங்கினர். இவையாவும் புதுமுறைகளாகும்.

இவற்றில் கிறுக்கல் சித்திரத்தை வரைந்து உலகப்புகழ் ஈட்டியர் பிக்காசோ என்ற ஓவியராவர். ரவிவர்மா என்ற ஓவியர் தெய்வங்களின் படங்களை வரைவதில் புகழ் வாய்ந்தவர். மைக்கல் ஆஞ்சலொ சிறந்த மேல்நாட்டு ஓவியர். இப்படியே கடந்த காலங்களில் பல ஓவிய ஆசிரியர்களும் ஓவியர்களும் உளநூல் வல்லுனர்களும் ஆராய்ச்சியாளரும் எத்தனையோ பலவழிகளைக் கையாண்டு. இக்கலையைக் குழந்தைகளிடத்து வளர்ப்பதற்கு அரிய செயலாற்றி வந்துள்ளனர்.

பிரான்சு தேசத்தில் வாழ்ந்த சீயெக் என்ற ஆராய்ச்சியாளர் ஆசிரியரின் கட்டுப்பாட்டின் கீழ் குழந்தைகள் வரையும் சித்திரங்களிலும் பார்க்க, முற்றிலும் வேறுபட்ட, சுயவெளிப்பாடுகளிற் காணப்பட்ட மாற்றத்தையும், இத்தகைய சுய வெளிப்பாட்டின் போது, பாலர் அனுபவிக்கும் உண்மையான இன்பத்தையும் கண்ட இப்பெரியார், 1897ம் ஆண்டு தொடக்கம் 1938ம் ஆண்டுவரை வியட்நாமில் பாலர் சித்திரவகுப்புகளை நடாத்தினர். உலகத்திலேயே முதன் முதலாக நடாத்தப்பட்ட சுயாதீனப் பாலர் சித்திரப்பாடசாலை இதுவேயாகும். இவர் இரண்டு வயது தொடக்கம் பதின்நான்கு வயது வரையுள்ள பிள்ளைகளின், வேறுபட்ட சுதந்திர ஆக்கச் சித்திரங்களை நாற்பது வருடங்களாக ஆராய்ச்சி செய்து அவற்றின் மாண்பை உலகுக்கு உணர்த்தினர். உலகின் பல பாகங்களிலும் பாலர் சித்திரக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன. அக்காலத்தில் இயந்திர ரீதியிலான தொழிற் தலைவர்கள், பாலரின் சுயாதீன வெளிப்பாட்டுச் சித்திரங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும் குழந்தை உள்ளத்துக்கு மதிப்பளிக்கும் கல்வி விற்பன்னர்கள் பாலரின் சுயாதீன வெளிப்

பாட்டுச் சித்திரங்களை மதித்தனர். மிகப்புராதன மக்களின் குகைச்சித்திரங்களையும், சிற்பங்களையும் புதைபொருள் ஆராய்ச்சியாளரால் கண்டெடுக்கப்பட்ட பின்னரே பாலர் சித்திரங்களின் பெறுமதி போற்றப்பட்டு வந்தது. கலை ஆற்றல்களை வளர்க்கவும் கலைத்தொழில்களுக்குக் கைகொடுக்கவும் மனோதிருப்தியை ஏற்படுத்தவும், தன்னம்பிக்கையை உருவாக்கவும், சமூகத்தின் மனோபாவங்களை விருத்தி செய்யவும், புருடத்துவத்தை நிலைநிறுத்தவும் உதவுகின்ற சுயாதீனக்கலை வெளிப்பாடுகள் ஆக்கபூர்மான வல்லமையை வளர்த்தலுக்கு ஒரேவழியாக அமைந்துள்ளன. எனவே சித்திரத்தின் புதிய கண்டுபிடிப்புக்கள் நாள்தோறும் வளர்ச்சியடைந்து, அவையாவும் புதுமுறைச் சித்திரங்களாயின.

## 2 சித்திரக்கார மாணவன்

இம் மாணவன் தாம் வரைவதற்குமுன், அவன் சில கருத்துக்களை ஞாபகத்தில் கொள்ளுகிறன். தாம்வரையப்போகும் உருவை தம்கட்புலனுக்குத் தோற்றியவாறு அவ்வுருவின் தோற்றத்தையும், அத்தோற்றத்தில் தாம் அவதானித்த கோடுகளையும் நினைக்கிறன். அந்த நினைப்பு வடிவுக்குத் தேவையான இரேகைகளை, தான் மதித்த அளவுக்கு வேண்டியவரை, எளிதாகவும் ஒழுங்காகவும் வரைந்து மதித்த அளவில் வரையவும், நிறுத்தவும் பழகிக் கொள்ளுகிறன்.

வரையும்போது பென்சிலையோ (ஈயலேகினி) அல்லது கையில் வரைவதற்கெடுத்துக் கொள்ளும் பொருளையோ தளர்ச்சியாகப் பிடித்து, சுயமான கருத்துடன் சுதந்திரமாகத் தமக்குத் தேவையான அளவுக்கு, தட்டுத்தடையின்றி வரைகிறன். வரைவதில் கண்ணும், கருத்தும், கையும் ஒருமித்துத் தொழிற்படுகிறன்.

வரைவதன் முன் தாம் வரைவதற் கெடுத்துக்கொண்ட கடதாசியை உற்றுநோக்கி, அதன் மேற்பரப்பில் வரையப்போகும் வடிவம் அக் கடதாசியை உள்ளடக்கக் கூடியதாயும், அதன் நாலாபக்க ஓரங்களிலும் ஒரு அங்குல அகலமாவது இடம்விட்டு, நடுப்பெறப் பெரிதாக வரைகிறன். தான் வரையும் உருக்களை வேண்டிய அளவுக்குப் பெருப்பித்தும் சிறிப்பித்தும், தூரநோக்குக்குத் தக்கவாறு வரையும் திறமையும், தன்மதிப்பினுல் அளவிடும் ஆற்றலும் பழக்கமும் கொள்ளுகிறன். அளக்கும் கருவிகளின் மனதால் மதித்து அளந்தறியும் திறமையுடையவனக வழக்கப்படுத்தி வருகிறன்.

மாணவன் வரையும் பழக்கத்தை வழக்கப்படுத்தும்போது. தாம்வரைகின்ற ஒவ்வொரு இரேகையும், கருத்தின்றி வரைவதில்லையென உணருகிறன். இவ்வாறு வரையத் தொடங்கியதும், தான்வரையும் சித்திரங்களையும், பிறருடைய சித்திரங்களையும் உற்றுநோக்கி, இருதிறத்தாருடைய சித்திரங்களிலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளையும், கருத்துக்களையும் விளங்கிக் கொள்ளுகிறன். இந்த விளக்கந்தான் சித்திரத்தை மதித்து மகிழும் ஆற்றல். இதனுல் சித்திரங்களை மதிக்கவும், அதன் கருத்துக்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் பழகிக்கொள்ளுகிறன். இப்பழக்கம் அனுபவத்தில் வந்ததும். இச்சித்திரங்களுக்கான விமர்சனமும் தெரிந்து கொள்ளுகிறன்.

இதன் பின்னர், சித்திரம் கட்புலனுல் கண்டறியும் ஒரு தேசியமொழி எனவும், சுருக்கெழுத்தெனவும், கவிஞனும் ஓவியக்காரனும், சிற்பியும் ஒரேயுள்ளம் படைத்தவர்களெனவும், மூவருக்கும் கருத்துக்கள் ஒன்ருகவிருப்பி


னும் வெளிவிடும் முறையிற்பேதம் உண்டெனவும், உணர்ந்து தெரிந்துகொள்ளுகிறன்.

பிள்ளைகளே! நீங்களும் சித்திரக்கார மாணவராக வரவிரும்புகிறீர்களானல் இம்மாணவனைப் போல பழகிக்கொள்ளுங்கள். இவ்வாறு நீங்களும் பழகிக் கொண்டால் எதிர்காலத்தில் சித்திரக்காரனுகி விடுவீர்கள். சித்திரக்காரக் குழந்தைகளிடத்தில் பொறுமை, அழகுணர்ச்சி, ஒழுங்கு, கடமை, நேர்மை, நெறி, கடவுட்பக்தி, ரசஞான உணர்ச்சி, விடாமுயற்சி போன்ற பல நற்பழக்கங்கள் வளர்வதையும் நாம் காணலாம்.

## 3. கோடுகள்

இரேகை, கோடு என்பன ஒரு பொருள். சித்திரம் வரையப்போகும் பிள்ளைகளுக்குக் கோடுகளின் பயிற்சி மிக முக்கியமானதாகும். சிறு பராயம் தொடக்கம் நேர் இரேகைகளையும் சாய்வு இரேகைகளையும் வளைவு இரேகைகளையும் விளையாட்டுக்கள் மூலம் மணல் பரவிய தரையில் வரையச்செய்தல் வேண்டும். மணலில் குழந்தைகள் வரையும் இந்தப்பயிற்சிதான் சித்திரக்காரக் குழந்தையின் ஆரம்ப வேலையாக அமையலாம்.

பிள்ளை கோடுகளை வரைந்து வரைந்து பழகும்போது கோடுகளின் வித்தியாசங்களையும் கோடுவரையும் போது காணும் உண்மையையும் உணரமுடிகிறது. நேரான கோடு வரையும் போது அது நேரற்ற கோடாய் வந்துவிட்டால் அதிலிருந்து நேரான கோட்டை வரைந்து தாம் விட்டபிழையை உணருகிறது. ஒருஅற்ப பூச்சியினத்தைச் சேர்ந்த சிலந்தியைப் பாருங்கள். அது தன் வாயிலிருந்து வரும் ஒருவகைப் பதார்த்தத்திலிருந்து எத்தனை அழகிய கோடுகளை ஆக்கி அமைக்கிறது. ஆறறிவு உடைய குழந்தையைப் பழக்குவதிலும், குழந்தை பழகுவதிலும் வியப்பில்லை. ஆசிரியரிடம் எவ்வளவு ஆற்றலுண்டோ அதனை மாணவரிடம் கொடுக்கும் அளவிற்தான் குழந்தை வளருகிறது. குழந்தைக்குக் கொடுக்கும் ஊக்குவிப்பும் விளக்கமும்தான் குழந்தையின் நாட்டம், முனைப்பு, இயல்பூக்கம் ஆகியவற்றைத் தட்டி எழுப்புகிறது. கற்பிக்கத்தெரியாத ஆசிரியரின் பாடத்தில் விளையாட்டை நினைக்கிறன் மாணவன். சுவையற்ற சாப்பாட்டை உண்ணும் ஒருவன் சுவையுள்ள உணவை நினைக்கிறன். இலகுவான வழியைக் கண்ட ஒருவன் கடின வழிக்குப்போவதில்லை. எந்தப்பாடத்தைக் கற்பித்த போதிலும் கற்பிக்கும் பாடத்தை சுவையாகக்கற்பித்தால் பிள்ளையின் கருத்தில் தடையும் வெறுப்பும் தோன்றுவதில்லை. இதனுல் உளமகிழ்வுடன் பிள்ளையின் ஆற்றல்கள் வளர்ச்சியடைகின்றன. புதியவிடயத்தைக் கற்பித்த போதிலும் அது குழந்தைக்கு புதிராகத் தோன்றுவதில்லை. வகுப்பிலுள்ள பிள்ளைகளை நாம் அவதானிக்கும்போது நல்லாசிரியரிடம் பாடம் கேட்கும் குழந்தையிடத்து மகிழ்வோடு கூடிய பூரிப்பு, பயமற்ற உள்ளம், எதிலும் திறமை, முன்னுக்கு நிற்கும் ஆற்றல், கோபமற்ற சிந்தை, நல்ல குணம் இவை போன்ற சிறப்பியல்புகளைக் குழந்தைகளிடத்தில் அவதானிக்க முடிகிறது. எனவேதான் ஆசிரியர் எவ்வழி மாணவரும் அவ்வழி என்பதில் சந்தேகமில்லை.




இக்கோடுகளை (1) நிலைக்குத்துக் கோடு (2) சாய்வு கோடு (3) கிடைக் கோடு (4) வளை கோடு (5) வட்டக் கோடு (6) நீள்வட்டக் கோடு (7) முட்டை வடிவக்கோடு (8) சமாந்தரக் கோடு (9) அலைக்கோடு (10) சுருட்கோடு (11) கோணக் கோடு (12) மென்கோடு (13) தடித்த கோடு எனவும் அழைக்கலாம். இக்கோடுகளை மாணவன் மீண்டும் மீண்டும் வரைந்தும் இணைத்தும் தம் கையைப் பழக்குவதால் பல உருக்களின் வடிவங்களை மிக எளிதிற் கண்டு மனம் களிப்படைவான்.

ஆசிரியர் கொடுத்த ஊக்குவிப்பினுல் பிள்ளையின் வேலை இலகுவாய் அமைகிறது. பிள்ளை ஓர் நேர்கோட்டை வரையும் போது கையை நேராக அசைத்தால் நேரான கோடு அமையும், சாய்வாக அசைத்தால் சாய்வான கோடு அமையும்; வளைவாக அசைத்தால் வளைகோடு அமையும், வட்டமாய் அசைத்தால் வட்டக்கோடு அமையும், கோணமாய் அசைத்தால் கோணக்கோடு அமையும். அலைபோலசைத்தால் அலைக் கோடமையும். சுருளாய் அசைத்தால் சுருட் கோடமையும். எனவே அசைவுதான் வடிவமாய் அமைகிறது.

சித்திரம், சங்கீதம், நடனம் இம்மூன்றும் ஒருதாய் வயிற்றுக் குழந்தைகளாயின. இவை யொன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன. இவற்றின் நிகழ்வுகள், வெளிப்பாட்டுணர்வுகள் யாவும் ஒரே தன்மையின. சங்கீதத்தில் அசைவு இருப்பதுபோல நடனத்திலும் சித்திரத்திலும் அசைவுகளிருக்கின்றன. சித்திரத்தில் விருப்பு, வெறுப்பு, பயம், துக்கம், கோபம், மகிழ்வு, வீரம், இரக்கம், அன்பு, காதல், இளமை, முதுமை என்னும் உணர்வுகளைக் காட்டுவது போல சங்கீதத்திலும் நடனத்திலும் காண்கிரும். எனவேதான் இம்மூன்று கலைகளையும் கவின் கலையென அழைக்கப்பட்டது.

ஒருவன் எழுதும்போது தனது கையை எவ்விதம் அசைக்கிருனே அந்த அசைவின் வண்ணம் எழுத்துக்களின் வடிவம் அமைகின்றது. அழகான அசைப்பினுல் அழகிய எழுத்தைக் காணலாம். எமது கையையும் விரல்களையும் உற்றுப் பாருங்கள். கவின்கலையில் கையின் வேலைகளையும் எண்ணிப் பாருங்கள். எமது கையை ஒரு தடிபோல இறைவன் அமைக்கா து எத்தனை மடிப்புகள், எத்தனை பூட்டுக்கள் இவையெல்லாம் எத்தனை கருவிகள். இக் கருவிகள் இருப்பதினுல் கோடிடும் கருவி தேவையில்லை. வட்டம் வரைய வட்டமிடும் கருவி தேவையில்லை. நேர்கோடு, சாய்வு கோடு வளைகோடு, வட்டக் கோடு யாவும் கையினுலேயே வரையமுடிகின்றது. கையிருக்கக் கருவி எதற்கு? இந்த வகையில் வடிவங்கள் வரைந்து வளர வேண்டும்.

கோடுகளை வரையும் பிள்ளை எளிதாய் வடிவங்களை வரையும். நாம் காணும் பொருட்களின் வடிவங்களெல்லாம் கோடுகளின் இணைப்புக்களும் அடுக்குகளும் ஆகும். கோடுகள் இன்றேல் வடிவங்கள் இல்லை. இரேகை, ரூபம், வண்ணம் இம்மூன்றும் சித்திரமாயின. புனையா ஓவியம் இரேகைகளைக் கொண்டது. ஒவ்வொரு போக்கையும் காட்டுவது கோடு. அலையைக் காட்டுவது அலைக்கோடு, சுருளைக் காட்டுவது சுருட்கோடு. கோணத்தைக் காட்டுவது கோணக்கோடு, தெறிப்பைக் காட்டுவது தெறிப்புக்கோடு. வட்டத்தைக் காட்டுவது வட்டக்கோடு. நீள்வட்டத்தைக் காட்டுவது நீள்வட்டக்கோடு. முட்டையைக் காட்டுவது முட்டைவடிவக் கோடு, சமாந்தரத்தைக் காட்டுவது சமாந்தரக் கோடு, தூரத்தைக் காட்டுவது தூரக் கோடு, விரைவைக் காட்டுவது ஒளிமறைவுக்கோடு, மின்னலைக் காட்டுவது மின்னல் கோடு எனவே வடிவங்களை அமைப்பதற்குக் கோடு மிக மிக முக்கியமானது. கோடுகளைத் தட்டுத் தடையின்றிச் சுயமாக வரையும் மாணவன் சித்திரம் வரைவான் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

# 4. அளவீடுகள்

நாம் காணும் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் நீளம், அகலம், உயரம் போன்ற அளவுகள் இருப்பது போல, எம்மால் வரையப்படும் படங்களுக்கும் அளவுகள் இருக்கின்றன. படங்கள் அல்லது சித்திரங்களின் அளவீடுகளை,இரண்டு வகையாக சித்திரக்காரர்கள் வகுத்து வழங்கி வருகின்றார்கள். ஒன்று இருபரிமாணச்சித்திரம் மற்றையது முப்பரிமாணச்சித்திரம். பரிமாணம், அளவீடு என்பன ஒரு பொருள். வரையப்படும் சித்திரங்களில் இரண்டு அளவுகளும் மூன்று அளவுகளும் காணப்படுகின்றன. இரண்டளவுச் சித்திரங்களில் நீளம், அகலம் என்ற அளவீடுகளும் மூன்றளவுச்சித்திரங்களில் நீளம், அகலம், உயரம் என்ற அளவீடுகளும் காணப்படுகின்றன. சில சித்திரங்களில் நீளம், அகலம் என்ற அளவுகளுடன் திரட்சியென்ற அளவும் காணப்படுகின்றன. இவை முப்பரிமாணச்சித்திரங்களாகும்.

ஈரளவுப்படங்கள் நீளமும் அகலமும் கொண்டவையாயும் ஒளிநிழல் காட்டாது தட்டையான பூச்சுக்கள் கொண்டவையாயுமிருந்தால் அவையும் நீளம், அகலம் என்ற கோடுகளைக்கொண்ட புறவுருவச்சித்திரங்களும் ஈரளவீடுகளையுடைய படங்களாகும்.

மூவளவுப்படங்களில் நீளம், அகலம், உயரம் என்ற அளவுகளைக் கொண்ட படங்களும், நீளம், அகலம் என்ற அளவுகளுடன் திரட்சி என்ற அளவும் காணப்படும். திரட்சியைக் காட்டுவதற்கும், மேற்பரப்பின் தன்மையைக் காட்குவதற்கும், சித்திரக்காரர்கள் ஒளிநிழல் காட்டும் கோடுகளால் தீட்டிக்கொள்வதியல்பு. ஒளிநிழல் காணும் கோட்டுப்படங்களில் திரட்சியென்ற அளவு தோன்றுவதை நாம் எளிதிற் கண்டுகொள்ளலாம்.

உருண்டையான பொருட்களிலும் உருளை வடிவப்பொருட்களிலும் திரட்சித்தன்மையை நாம் காண்கிறோம். இத்தன்மையை வெளிக்காட்டுவதற்கு இவ் வடிவப் பொருட்களை வரையும் சித்திரங்களில் ஒளிநிழற்கோடுகளின் மூலம் திரட்சியைக் காணக்கூடியதாய் தீட்டிக்கொள்ளுகிறோம். திரட்சியான பொருட்களையும், நீளம், அகலம், உயரம், கொண்ட பொருட்களையும் நாம் வெளியுலகிற் காண்பதினாற்றான் சித்திரக்காரர்கள் மூவகை அளவுகளையும் காட்டுவதற்காக ஒளிநிழற்கோடுகளை உபயோகிக்கின்றனர். ஒளியும், நிழலும் கோடுகளால் காட்டாவிடில் திரட்சி என்ற அளவை நாம் சித்திரங்களிற் காணமுடியாது. எனவே மூன்றளவீடுகள் அல்லது முப்பரிமாணத்தன்மையை நாம் வரையும் படங்களில் காட்டுவதற்கு, ஒளிநிழற்கோடுகள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

மூவளவைச்சித்திரங்களைப் பூரணப்படுத்துவதற்கு ஒளிநிழற்கோடுகளை வரைகின்றோம். இதில் நிழலைக்காட்டுவதற்கு தடித்த கோடுகளும் மென்கோடுகளும் இடம்பெறுகின்றன. ஒளியைக்காட்டுவதற்கு இக்கோடுகளினூடே வெறும் வெளிகளை விட்டு வரைந்து கொள்வதால் இச்சித்திரம் முப்பரிமாண நிலையை அடைகிறது.




1. மேற்புற இருவரிசையில் அமைந்த படங்கள் இரண்டு அளவீடுகளைக் காட்டும் படங்களாகும்.

2. கீழ்ப்புற இருவரிசையில் அமைந்த படங்கள் மூன்று அளவீடுகளைக் காட்டும் படங்களாகும்.

# 5. தூரதரிசனம்

தூரப்பார்வை, தூரநோக்கு, பார்வையெறியம், தூரதரிசனம் என்பன ஒரேகருத்துடைய சொற்களாகும். சித்திரக்கார மாணவன் வெளிஉலகிற்காணும் பொருட்களையோ, காட்சிகளையோ உற்றுநோக்குகிறன். அவற்றை அவதானிக்கிறன். வெளியேயுள்ள நீளமான கட்டிடத்தின் உட்பகுதி, கடைவீதி. புகைவண்டித்தொடர், வீதிஓரங்களில் சமஅளவுக்கொன்றாக நாட்டப்பெற்ற விளக்குத் தூண்கள், புகைவண்டிப்பாதை, பனந்தோப்பு, கடற்பிரயாணக்கப்பல், நீளமான மனித ஊர்வலம், பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புக்கள் இவை போன்ற இன்னும்பல காட்சிகளைப் பார்க்கும்போது அவனுக்குத் தோற்றுவதென்ன?


அவன் நிற்குமிடத்திலிருந்து கண்ணுக்கெட்டாத அளவுக்குப் பார்க்கும்போது அவனுக்கண்மையில் தெரிவது பெரிதாகவும் தூரம் செல்லச்செல்ல அவை சிறுத்துக்கொண்டு போவதையும், சமஅளவுக்கொன்றாக நாட்டப்பட்ட தூண்களின் இடைவெளி ஒழுங்கின் அளவு குறைந்து குறைந்து போவதையும் ஒரே நேர்ப்பார்வையில் ஒன்றுக்கொன்று மறைந்து தெரிவதையும் காணுகிறன்.

இன்னும் தரைமட்டத்திலிருந்து பெரிது சிறிதாக வளர்ந்த மரக்காடுகளையோ கிராமத்து வீடுகள், மரங்கள் கொண்ட காட்சிகளையோ பார்க்கும்போது, அவை முன்பின்னாகவும் ஒன்றுக்கொன்று மறைந்தும் மறையாமலும் தெரிவதை அவன் கண்டு வியக்கிறன்.

பூமி உருண்டைவடிவினதாக இருத்தலாலும், வானம் வளைந்து தோற்றுவதாலும் பரந்தவெளியில் நின்று பார்க்கும்போது பூமியும், அடிவானமும் ஒன்றேடொன்று தொடுவது போலக் காட்சியளிப்பதும், வானத்தில் சஞ்சரிக்கும் சூரியன், சந்திரன் முதலான கோள்கள் வளைவடிப் பாதையிற் செல்வதையும் கடற்கரையில் நிற்கும் ஒருவன் தூரதரிசனமூலம் தூரத்தில் வந்து கொண்டிக்கும் கப்பலைப் பார்க்கும்போது அக்கப்பலின் பாய்மரநுனி முதலிற் தெரிவதையும் பின்னர் அது அவனை அண்மித்துவர, அக்கப்பலின் பாய்மரநுனி தொடங்கி அடித்தளம்வரை தெரிவதையும் கண்டு வியப்புடன் நினைந்து எண்ணுகிறன்.

பூமி கோளவடிவில் அமைந்திருப்பது போல எமது கண்ணும் கோளவடிவிலமைந்திருப்பதையும் சிந்தித்து அதனை உய்த்துணருகிறன். இவை மாத்திரமன்றி ஒருதட்டையான மேசைமீது ஒரே அளவான சிலபொருட்களை ஒன்றன்பின் ஒன்றாகவும் சமதூரத்திற் கொன்றாகவும் வைத்து சிறிது தூரத்திற்கப்பால் நின்று பார்க்கும்போது அப்பொருட்களும் ஒரேஅளவில் தெரியாது முன்னுக்கு உள்ளபொருள் பெரிதாகவும் ஏனையவை முதலிற் தெரிவதைவிட சிறிதுசிறிதாகத் தெரிவதையும் கண்டு உணர்ந்து கொள்கிறன்.

எனவே நாம் கற்றதையும் கேட்டதையும் கண்டதையும் ஒப்ப நோக்கியுணர்ந்து, இவையெல்லாம் தூரதரிசன அழகெனவும், கண்ணின் அமைப்பெனவும் கண்ணின் அமைப்புக் காரணமாய்த்தான் இவ்வாறு தோற்றுகின்றனவெனவும் அறிந்து கொள்ளுகிறன்.



தூரதரிசனம்

மேலிருந்து கீழாக:-

1. தூரப்பார்வையிலமைந்த நகர்ப்புறத் தோற்றம்.
2. தூரப்பார்வையிலமைந்த புகைவண்டித் தொடர்.
3. தூரப்பார்வையிலமைந்த கிராமத்துவீடுகள், வீதிகள், தந்தித்தூண்கள்.


# 6. சமச்சீர், சமநிலை

சமச்சீர், சமஅளவு என்பன ஒரு பொருள். சித்திரங்களை வரையும் போது சமச்சீர் சமநிலை உடையதாக நாம் வரைந்து கொள்ளுகிறோம். சமச்சீர் சமநிலை பொருந்திய வடிவங்களில் அழகுணர்ச்சியைக் காணமுடிகிறது. சில குழந்தைகளின் வரைதலில், அதிகமான உருவங்கள், சமச்சீர் அற்ற வடிவங் களாய் வரைவதை நாம் அவதானிக்கின்றோம். உதாரணமாக குடம், செம்பு, போத்தல், கூசா, பந்து போன்ற பொருட்களைச் குழந்தைகள் வரைவதில் சமச்சீர் அற்ற தன்மை காணப்படுமாயின் அவ்வடிவச் சித்திரங்கள், குழந்தை களிடத்தில் ஒரு வகையான வெறுப்பை இப்பாடத்தில் ஏற்படுத்திவிடுகிறது. எனவேதான் ஆறும் வகுப்பிலிருந்தே குழந்தைகள் வரையும் போது சமச்சீர். சமநிலை உடைய சித்திரங்களை வரைவதை எல்லோரும் விரும்புவர்.

சமச்சீர் என்பது நாம் வரையும் வடிவத்தை ஒரு இரேகையால் சம அளவாக நிலைப்படுத்தக் கூடியதாக அவ்வடிவம் அமையின் அது சமச்சீர் பொருந்திய வடிவமாகும். ஒரு சித்திரம் பூரணமாவதற்கு பல அம்சங்கள் வேண்டப்படுகின்றன. இவற்றுள் சமச்சீர் சமநிலை என்பனவும் முக்கிய அம்சங்க ளாகின்றன. எனவே குழந்தைகள் வரையும் படங்களில் இத்தன்மைகள் காணக் கூடிய சித்திரங்கள் விரும்பத்தக்கதாகும்.

சமநிலையென்பது தராசு போன்றது. தராசின் ஒரு தட்டில் ஒரு பொரு ளையோ அல்லது ஒரு பாரத்தையோ வைத்தவுடன் அத்தட்டு கீழிறங்குவதையும் மறுதட்டு மேல் நோக்கி ஏறுவதையும் தராசின் ஊசி ஒரு பக்கம் சாய்வதையும் காண்கிறோம். இவ்வாறு ஏறத்தாழ இருக்கும்போது, தராசு சமநிலையைக் காட் டாது. இதேபோல மாணவருட் சிலர் படம் வரையும் கடதாசியில், சமநிலைக்குத் தக்கவாறு படங்களை வரையாது, காட்சிப்படங்களை வரையும்போது கடதாசி யின் ஒரு மூலையிலோ அல்லது ஒருபக்க ஓரத்திலோ சிலகருத்துக்களைமட்டும் வரைந்து முடித்துவிட்டு, மிகுதியான இடத்தை வெற்றிடமாகவிடுவதால், அப் படம் வரைந்த கடதாசி பூரணமடையாத, சமநிலையற்றபடமாகக் காட்சியளிக் கின்றது. எனவே குழந்தைகளின் சித்திரங்களை மதிப்பீடு செய்வோர் இப்படங் களை மதிப்பற்றதாகத் தள்ளிவிடுகின்றனர்.

எனவேதான் சித்திரக்கார மாணவன் கடதாசியிற் படம் வரையும்போது சமச்சீர், சமநிலை உடையதாகச் சித்திரங்களை வரையத் தெரிந்து கொள்வது விரும்பத்தக்கதாகும். அன்றியும் தாம் வரைந்து கொள்ளும் படங்களில் கருத் துக்கள் நிறைந்துள்ளதாயும், இச்சித்திரங்களைப் பார்ப்போர் ஆழ்ந்து சிந்தனை செய்து உணரும் வகையில் அவை அமையவேண்டும். அன்றியும் அம்மாண வன் வரைவதோடுமட்டும் நின்று விடாது அப்படங்களுக்கு வண்ணங்களைத் தீட்டும்போது சமநிலைக்குத் தக்கவாறு வண்ணந்தீட்டத் தெரிந்திருக்கவேண்டும். ஒரு நிறத்தை ஒருபக்க ஓரத்தில் மட்டும் பூசிக்கொண்டால் அதன் எதிர்ப்பக்க ஓரம் ஏற்றத்தாழ்வாகத் தோற்றும். இவ்வாறு நிற உபயோகம் செய்வதாலும், அச்சித்திரம் பூரணமடையாது சமநிலையற்றபடமாகக் காட்சியளிக்கும். எனவே ஒரு நிறம் ஒருபக்க ஓரத்தில் பூசப்பட்டால், அதன் எதிர்ப்பக்க ஓரத்திலும் அந்நிறம் பூசப்படுமானல் அப்படம் ஏற்ற இறக்கமற்ற சமநிலைப் படமாக அமையும். ஆதலால் கருத்துக்களை வரைவதிலும், வண்ணங்களைத் தீட்டுவதி லும் சமச்சீரும் சமநிலையும் பொருந்த, சித்திரங்களை ஆக்குவோராய் மாணவர் பழகிவருதல் விரும்பத்தக்கதாகும்.




சமச்சீர், சமநிலை

இல. 1. சமச்சீர்த்தன்மையைக் காட்டும் படம்

,, 2. சமநிலைத்தன்மையைக் காட்டும் படம்

,, 3. சமச்சீர் அற்றதன்மையைக் காட்டும் படம்

,, 4. சமநிலை அற்றதன்மையைக் காட்டும் படம்

# 7. துரித இரேகைச் சித்திரம்

இச்சித்திரத்தை மாணவன் கடதாசியில் வரையப்போவதன்முன் தாம் வரையும் வடிவத்தை அல்லது அவ்வுருவை நினைக்கின்ருன். அவ்வளவில் நின்று விடாது அவன் எந்த நிலையில் வரையப்போகிருனே அந்த வடிவ நிலையைக் காட்டும், சுருக்கமான பெரிய இரேகை எதுவெனவும் அவ் இரேகையை எவ்வாறு விரைவாக வரையலாம் எனவும் சிந்தனை செய்த பின்புதான் அதன் நீண்ட இரேகையை வரைகிருன். இதனுல் வரையக் கருதிய வடிவம் அல்லது உரு, அவன் மனதிலும் கண்ணிலும் படமாய் அமைகிறது. இதன்பின்னர்தான் அவன் மிக எளிதில் சுதந்திரமாய்த் தான் நினைத்த வடிவத்தை வரைகிருன்.

மாணவன் தான் வரையப்போகும் வடிவத்தையும் அதன் கிடைநிலைத் தன்மையையும் அளவுகளையும் சிந்திக்காமல் வரையும் போதுதான் அதனைச் சரியாக வரையமுடியாது இடர்ப்படுகிருன், அழித்தழித்து வரைகிருன். அன்றியும் தான் வரைய எடுத்துக்கொண்ட உருவை அவதானித்ததிலிருந்து, ஞாபகத்திற் கொள்ளும் கருத்துக்களை மறந்து விட்டானேயாளுல் அவன் நினைத்த உரு சரியாக வரையவியலாது திண்டாடுகிருன். எனவே துரித வரைதலுக்கு வெளி நிலையிற் காணும் எல்லா வடிவங்களையும் தான் பார்த்த எல்லா நிலைகளிலும் அவதானித்து, அதனை ஞாபகத்தில் வைத்து, அவ்வடிவங்களைக் கண்ணுக்குத் தோற்றியவாறே வரையும் பயிற்சியை, கைக்குக்கொடுத்துக் கொடுத்துப் பழக்கி வருவாளுகில், நினைத்ததை, நினைத்தவாறே வரைந்து, நினைத்ததும், வரைந்ததும் சரியெனக்கண்டு மகிழ்வான். வரைவதில் நல்ல பயிற்சி கொடுத்துவரின் துரித இரேகைச்சித்திரம் எளிதில் வரைய வாய்ப்பளிக்கும். குழந்தைகள் வரையும் பயிற்சியோடு நின்றுவிடாது, தாம் காணும் ஒவ்வொரு பொருளையும் அவதானிக்கவும், அவதானத்தை அதனளவுக்கேற்ப மதிக்கவும் மதித்தவாறே சிறிப்பித்தும், பெருப்பித்தும் வரையவும் தெரிந்திருப்பதோடு, மதிப்பிற்கேற்ப வரையவும் பழகிக்கொள்ளவேண்டும்.

இந்த வரைதலில் மனிதநிலைத்தோற்றங்கள், பறவைநிலைத் தோற்றங்கள், மரஞ்செடிகளின் நிலைத்தோற்றங்கள், இலைகள், கிளைகள், பூக்களின் நிலைத் தோற்றங்கள், மக்களின் சில தொழிற்பாட்டு நிலைத்தோற்றங்கள், இயற்கைக் காட்சிகள், மிருகங்களின் பல்வேறுபட்ட நிலைத்தோற்றங்கள் முதலியன அடங்கும்.

துரிதவரைதற் சித்திரத்தைப் பூரணப்படுத்துவதற்கு குறைந்த அளவான ஒரு குறிப்பிட்ட நேரத்துள் குழந்தைகள் சுதந்திரமாய் வரையக்கூடியதான சாதனங்களால் குறைவான தொகை இரேகைகளைக் கொண்டு பூரணகருத்து வெளிப்பாடு தோன்றக்கூடியதாகவும், பல இன இரேகைகள் அமையவும் வரைந்து முடித்தல் வேண்டும். இதிற் சித்திரக்காரக் குழந்தைகள் சுதந்திர மாயும் விரைவாயும் வரையும் பயிற்சியைப் பெற்றிருக்கிருர்களா என்பதைச் சித்திரக்காரர் மனதிற் கொண்டுள்ளனர்.

6-ம் வகுப்புத் தொடக்கம் 9-ம் வகுப்புவரை இதனை மாணவர் வரைந்து பழகி வருகின்றனர். இதனை வரைந்து பழகுவதற்கு பழைய புதினக்கடதாசிகளையும் கரிக்கூரையும் உபயோகிக்கலாம். இன்னும் பேனவையும், ஈயலேகினியையும், வேறு எளிதாய் வரையக்கூடிய சாதனங்களையும் உபயோகிக்கலாம். இச்சித்திரத்தைப் புனையா ஓவியமென்றும் அழைப்பதுண்டு. தேசிய கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் இச்சித்திரம் பற்றி 1 மணி நேரத்துக்குரிய ஒரு வினப்பத்திரம் இடம் பெறுகின்றது.



துரித இரேகைச் சித்திர மாதிரி வடிவங்கள்

துரித இரேகை வரைதலுக்கான சில மாதிரி இரேகை உருக்களின் தனித்தனி வெவ்வேறு நிலைகளைக் காட்டும் படங்களாகும்.

# 8. கிறுக்கல் சித்திரம்

குழந்தைகள் கீறப்பழகுவதன் முன், ஆரம்பத்தில் நாம் கண்டு அவதானித்த; சிலவடிவங்களை வரைய வேண்டுமென்ற, அவாவினுல் தூண்டப்பெற்று அதனை வரைவதற்குப் பதிலாக கிறுக்கலினுற் கிறுக்குவதையும். தாம் நினைத்த வடிவத்தையும், வேறு புதுவடிவங்களையும், அக்கிறுக்கலிற் பார்க்கிறது. எனவே குழந்தைகள், ஒரு உருவத்தைவரையத் தொடங்குவதன் முன், கிறுக்கலிற்ருன் ஆரம்பிக்கின்றனர். அவ்வாறு கிறுக்கியபின், அதில் தாம் வெளியுலகிற் கண்ட வடிவங்களின் தோற்றங்களை கட்புலனுற்கண்டு களிப்படைகிறது.

கிறுக்கலின் நோக்கம் கிறுக்கி முடிந்ததும், அதில் காணும் வடிவங்களை குழந்தைகள் அவதானித்தல். இதனுல் அக்குழந்தை; வெளியுலகிற் கண்ட வடிவங்களை; அச்சித்திரத்தில் காணுதல் சித்திர நோக்குடைய குழந்தைகள், கிறுக்கலினுல் ஏற்பட்ட வடிவங்களுள் பல உருவங்களைக்கண்டு களிப்பும் நாட்டமும் கொள்ளுகிறது. கிறுக்கலை ஒரேபக்கமாகப் பார்க்காது, நாலாபக்கமும் திருப்பிப்பார்ப்பதால்; பல வடிவங்களை அவதானிக்கக் கூடியாதாக விருக்கும் கிறுக்கலினுல் சித்திரம் ஆக்கும் குழந்தைகள் காலம் செல்லச்செல்ல; துரித வரைதலிற் சிறந்தவர்களாக வருவதையும்; நாம் அவதானிக்கலாம். ஆசிரியர் கிறுக்கலினுல் ஏற்படும் வடிவங்களுக்கு, வர்ண உபயோகமுறையும்; மாணவரிடம் ஏற்படுத்திவிட்டால்; நல்ல அழகிய சித்திரங்களையும், படைப்புகளையும், மாணவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கிறுக்கற் சித்திரம்; பாலர் வகுப்புகள் தொடக்கம், மேல்வகுப்புகள் வரை செய்யப்படலாம். குழந்தை வளர, வளர எண்ணங்களும் கருத்துக்களும் வளர்வதால்; மேல் வகுப்பு மாணவர்களின் கிறுக்கற் சித்திரங்களில், நல்ல கருத்துக்களும், எண்ணங்களும் அழகுமுடைய, சித்திரங்களைக் காணமுடியும். கிறுக்கற்சித்திரம் வளர்ச்சியடைய; அலங்கார வடிவச்சித்திரம், கோலமிடும் சித்திரம், கற்பனைச்சித்திரம், விரைவாய் வளர்வதையும்; நாம் அவதானிக்கலாம். கிறுக்கல் ஓவியங்களை, பிக்காசோ என்ற ஓவியர் நவீன வடிவங்களாக வரைந்து உலகப் பெரும் புகழும் பெற்றுக்கொண்டார்.



கிறுக்கல் சித்திரம்

கிறுக்கலினால் அமைந்த வடிவங்களைக் காட்டும் படம்

இவ்விதமாக பல வடிவங்களைக் காணக் கூடியதாக, கிறுக்கலினால் சித்திரங்களை ஆக்கலாம்.


# 9. கரைச் சித்திரம் அமைத்தல்

கரைச் சித்திரம் என்பது ஒரு பொருளின் கரைகளில் மாத்திரம் செய்யப்படும் அலங்கார அமைப்பாகும். மக்கள் தமது தேவைகளுக்கான பொருட்களை அழகுற வைத்திருப்பதற்காக. அலங்கார வடிவங்களை அமைத்து அதனைப் பார்ப்போரும் தாமும் இன்பமடைகின்றனர். உதாரணமாக வேட்டி, சால்வை சேலை முதலானவைகளில் கரைச் சித்திரங்கள் அழகுற அமைக்கப்பட்டிருத்தலை நாமனைவரும் அவதானித்துள்ளோம். இதேபோல திரைச்சீலைகளின் கரைகளிலும். வீடுகளின் கூரை அந்தங்களிலும் அறிவித்தல் கடதாசிகளின் கரைகளிலும், வாழ்த்திதழ்களின் கரைகளிலும் இன்னும் பல பொருட்களிலும் கரைச்சித்திரம் அமைக்கப்பட்டிருத்தலை நாம் கண்டு களித்துள்ளோம்.

எனவே மக்கள் வாழ்க்கையில் கரைச் சித்திரத் தேவைகள் அதிகமிருக்கின்றன. இதனுல் மாணவர்கள் கரைச் சித்திரங்களை அமைக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இது ஒரு ஒழுங்கான கிரமமுறை அடுக்கினுல் உண்டாக்கக்கூடிய சித்திரமாகும். இதற்கு வேண்டிய உருக்களாவன இலைகள், பூக்கள், காய்கள், பழங்கள், பறவைகள், மிருகங்கள் இவற்றேடு தமிழ் அலங்கார வடிவ உருக்கள், சிங்கள அலங்காரவடிவ உருக்கள், மனித உருக்கள் இவற்றை மாணவர் வரையவும், அழகுற கிரமமுறை ஒழுங்கில் வரைந்து வண்ணம் தீட்டவும், தெரிந்திருத்தல் வேண்டும்.

கரைச் சித்திரங்களை உண்டாக்கும் போது ஆடைத்தாள் கொண்டு பிரதி முறையிற் செய்யலாம். அல்லது அச்சுப்பதித்தல் முறையிற் செய்யலாம். அல்லது விரும்பிய வடிவத்தை ஒரு அட்டைத்தாளில் வரைந்து வெட்டி அதனை வைத்து கரைமாதிரிகளை வரைந்து கொள்ளலாம். இவ்விதமாகப் பல முறைகளை உபயோகித்து இதனை வரையலாம். இச்சித்திரங்களை வரைவதில் மாணவர் விரும்பிய எல்லாக் கருவிகளையும் சாதனங்களையும் உபயோகித்து இச்சித்திரத்தை அமைத்துக்கொள்ளலாம். இதில் அனைவரும் விரும்புவது அழகுணர்ச்சியேயாகும்.

கரைச் சித்திரங்கள் பலவகையான மாதிரிகளில் நாம் வரைந்து கொள்ளலாம். வரைவோனின் கருத்தும், வரைவுத்திறனும், வண்ணங்களை தீட்டும் ஒழுங்குகளிலும் தான், இச் சித்திரத்தில் உயர்ந்த பண்பை எழுப்பமுடிகிறது. எனவே திட்டமான இரேகைகளும், ஒளிமயக்குள்ள வண்ணத்தீட்டலும், கருத்தமைந்தவடிவங்களும், கிரம முறை ஒழுங்கும் இச்சித்திர அமைப்பில் இடம் பெற வேண்டிய அம்சங்களாகும். இதன் மறுபக்கத்தில் கரைச்சித்திர வடிவங்கள் சில மாதிரிகளாகத் தரப்பட்டிருக்கின்றன. இவை போன்ற பல மாதிரிக் கரைச் சித்திரங்களையும் மாணவர் வரையப் பழகிவருதல் சிறந்ததாகும்.



கரைச்சித்திரம்

சிலை கரை மாதிரிகளைக் காட்டும் படங்கள்

# 10. பரவுருபச் சித்திரம் அமைத்தல்


இச்சித்திரமும் மக்களின் தேவைகளில் பலவகையான தேவைகளுக்குப் பயன்படுகின்றன. இதனுல் இதுவும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ரூபம், வடிவம் என்பன ஒரு பொருள். தேவைக்குரிய இடப்பரப்பு முழுவதும் ஒழுங்கான கிரமமுறையில் அமையும் அலங்கார வடிவச் சித்திரம் தான் பரவு ரூபச் சித்திரமென அழைக்கப்படுவது.

மக்கள் அணியும் சீத்தைத் துணிகள், சேலைகள், ஸ்கிறீன் துணிகள், யன்னற் துணிகள், உணவுப்பண்டங்களின் மேற்புறச் சுற்றுத்தாள்கள், விளையாட்டு மேசைகள், படுக்கை விரிப்புகள், தளவிரிப்புகள், மாபிட் தளப் பதிப்புக்கற்கள், விளையாட்டுச் சாமான்களின் மேலுறைகள், கொப்பி புத்தகங்களின் மேலுறைகள், மேசை விரிப்புகள், தோலினுல் செய்யப்பட்ட ஆசன உறைகள், சுவர்ச் சித்திரங்கள் இவ்வகையான பல தேவைகளை இப்பரவுரூபச்சித்திரம் உள்ளடக்கியுள்ளது. இதனுல் இச்சித்திரம் குழந்தைகளிடத்தில் கட்டாய மாகக் கற்பிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

இதற்கும் மாணவர்கள் வெளி உலகிற் காணும் வடிவங்களான இலைகள், பூக்கள், கொடிகள், பறவைகள், மிருகங்கள், மனித உருக்கள், கோடுகள், கேத்திரகணித உருக்கள், தமிழ், சிங்கள அலங்காரவடிவ உருக்கள், எழுத்துருக்கள், எண்ண உருக்கள் போன்ற பலதிறப்பட்ட காட்டுருக்களைக் கொண்டும் இச்சித்திரத்தை அமைத்துக் கொள்ளலாம். இச்சித்திரம் வரையும் போது எவ்வித கட்டுப்பாடற்ற முறையிலும் கருவிகளையும் பலவகை வண்ணங்களையும் உபயோகித்துக் கொள்ளலாம். எல்லா உபயோகங்களும் ஒரு ஒழுங்கான கிரம முறையில் அமைத்து இச்சித்திரம் அமைக்கப்படும் இடப்பரப்பு முழுமையும் பரவு ரூபச் சித்திரமாய் அமைய வேண்டும். பரவுரூபச் சித்திரம் வரையும்போது மாணவர் விரும்பிய இரண்டு அல்லது மூன்று உருக்களை ஆதாரவடிவங்களாகக் கொண்டு ஒரு சித்திரத்தை வரையலாம். ஆகக்கூடியது நாலு ஐந்து உருக்களுக்கு மேல் வரைய வேண்டியதில்லை.

இச் சித்திரத்தை வரையும் போது ஆடைத்தாள் கொண்டு பிரதி முறையில் வரைந்து முடிக்கலாம். அல்லது அச்சுப்பதித்தல் முறையிலும் செய்து முடிக்கலாம். அல்லது விரும்பிய உருக்களை அட்டைத்தாளில் வரைந்து அதனை வடிவ ஒழுங்கில் வரைந்து முடிக்கலாம். அல்லது மானச உருவாய் வரைந்து முடிக்கலாம். இவ்விதம் வரைந்து முடித்த பின்னர் வண்ண அழகு செய்து கொள்ளலாம்.

பரவுரூபச் சித்திரம் செய்யும் போது தனி வண்ணச்சாதனங்களையும் உபயோகிக்கலாம். நீர் வர்ணம், தூள் வர்ணம், போஸ்ரல் வர்ணம், போஸ்ரல் கிறேயன் வர்ணம் அல்லது எண்ணெய் வர்ணம் ஆகிய வர்ணங்களுள் யாதாயினும் ஒருவகை வர்ணங்களைப் பூசி சித்திரத்தைப் பூரணப்படுத்தலாம். அல்லது கலப்புச் சாதனமுறையில் நீர் வர்ணங்களையும், போஸ்ரல் கிறேயன் வர்ணங்களையும் உபயோகித்துச் சித்திரத்தைப் பூரணப்படுத்தி முடிக்கலாம். இச் சித்திரத்திலும் அலங்காரமும், அமைப்பும் உருக்களின் அழகும் வேண்டப்படுவதாகும்.



பரவுருபச்சித்திரம்

இப்படம் பரவுருபச்சித்திரங்கள் பலவினுள், ஒரு வகைப்பரவுருப அலங்காரவடிவ, மாதிரிச் சித்திர அமைப்பாகும்.

# 11. வண்ணங்கள்

சிறுவர்களை இழுத்துச் செல்வது வண்ணங்கள். வண்ணம்: வர்ணம் நிறம் என்பன ஒரு பொருள், குழந்தைகள் வண்ணத்தைக் கையாளும் பொழுது அவர்களிடம் மகிழ்ச்சியோடு கூடிய உணர்ச்சிகள் எழுகின்றன. வண்ணங்களைத் தீட்டும் போதுதான் கோடு, நிறம், வடிவங்களைக் கொண்டு நுகரும் சுவையான அறிவைப்பெற வாய்ப்புக்கிடைக்கின்றது. இப்பாடத்தில் உற்சாகமும் விருப்பும் தூண்டப்படுகின்றது. வண்ணங்களை கையாளுதற்கு முன் வண்ணங்களையும் நீர் வண்ணக் கலவைகளையும் ஓரளவு தெரிந்திருத்தல் நன்று. வண்ணங்களைத் தீட்டும் போதுதான் அவற்றினைக் கையாளும் பயிற்சி ஏற்பட வாய்ப்பாகும். இவை ஆறும் வகுப்புத் தொடக்கம் ஆரம்பிக்கலாம்.

பாலர் வகுப்புகள் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை குழந்தைகள் நிறச் சுண்ணக்கட்டிகளையும்- தூள்வர்ணங்களையும் உபயோகப் படுத்திச் சித்திரங்களைத் தீட்ட வாய்ப்பளிக்கப்படவேண்டும். தூள்வர்ணங்களை நீரிற் கரைக்கும் போது, அவற்றுடன் பிசினையும் சேர்த்துக் கரைக்க வேண்டும். இவ்விதம் கரைத்த கலவைகளை சிறுபாத்திரங்களில் இட்டு மாணவர்களிடம் கொடுத்துதவுதல் வேண்டும். குழந்தைகளிடம் நீண்ட வட்டமான தூரிகைகளை அல்லது நமது நாட்டில் கிடைக்கக் கூடியதான ஈச்சம் மட்டை, பிரம்பு போன்ற இவைகளினூற் செய்யப்பட்ட தூரிகைகளையும் கடதாசியையும் கொடுத்து வரையும்படி விடுவோமேயானால், குழந்தைகள் தங்கள் சூழ்நிலைக்கும் மன நிலைக்கும் தக்கவாறு சுயமான கருத்துகளைத் தெரிவிக்கும் சித்திரங்களைத் தீட்டுவதையும், பல குழந்தைகள் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் போன்ற அதிபிரகாசமான நிறங்களை உபயோகிப்பதையும் அதன் மூலம் தங்கள் மனக்கருத்துக்களை வெளியிடுவதையும், சில குழந்தைகள் இருண்ட நிறங்களான கறுப்பு, வெண்கறுப்பு, கருநீலம் போன்ற நிறங்களை உபயோகித்து தங்கள் கருத்துக்களைப் படங்கள் மூலம் காட்டுவதையும் நாம் காண்கிறோம்.

இருண்ட நிறங்களை உபயோகிக்கும் குழந்தைகளுடன் ஆசிரியர் கலந்துரையாடி அப்பிள்ளையின் சூழல், வாழ்க்கை, தந்தைதாய் விபரங்களை கேட்கும் போது அப்பிள்ளை பயம், துன்பமான சூழ்நிலையில் வளர்ந்துள்ளதென்ற உண்மை தெரியவரும்,

சில பிள்ளைகள் அழித்தழித்துக் தீட்டுவாராகில் அப்பிள்ளை குழப்ப நிலையுடைய பிள்ளைகளென்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். பிரகாசமான வண்ணங்களைத் தீட்டும் குழந்தைகளில் மகிழ்ச்சிகரமான உணர்ச்சிகளைக் காணலாம், ஆகவே குழந்தைகளின் தன்மைகளையறிந்து பயம் குழப்பம் உள்ள மாணவர்களை நல்ல வழியிற் திருப்புவதற்கு உதவுதல் ஆசிரியர் கடனாகும்.

கீழ்வகுப்புகளில் பாலரின் சித்திரத்தை வளர்ப்பதற்கு ஒளி புகா வர்ணங்களாகிய தூள்வர்ணங்களை உபயோகிப்பதே சிறந்த முறையாகும். குழந்தைகள் ஐந்தாம் வகுப்பு வரை தங்கள் மன எண்ணங்களைக் காட்டும் சித்திரங்களையும், இலகுவான அலங்கார வடிவச் சித்திரங்களையும் ஆக்கக் கூடியதான சூழலை, ஆசிரியர் அமைத்துக் கொடுக்க வேண்டும். ஆசிரியர் இதற்கேற்ற பாடத்திட்ட ஒழுங்கில் பாடநெறிகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்,

தூள் வண்ணங்களை மாணவர் உபயோகிப்பதால், பிள்ளை ஒரு நிறத்தைப் பூசி விட்டு தாம் அதை விரும்பாத விடத்து வேறொரு நிறத்தை அதன்

மேற் பூசிப் படத்தை ஆக்குவதற்குச் சிறந்த சாதனமாய் இத்தூள் வர்ணக் கலவைகள் பயன்படும்.

ஆறும் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் நிறங்களை உணர்ந்தவர்களாகின்றனர், இவர்கள் வண்ணங்களைத் தீட்டும்போது இவர்களின் சித்திரங்களில் நிறம், திணிவு, சாயல் என்பன கொண்டுள்ள சித்திரங்களைக் காணலாம்.

ஐந்தாம் வகுப்புக்குட்பட்ட மாணவர்களின் வண்ண அனுபவத்தை விருத்தி செய்வதற்கு தூயவண்ணங்களாகிய சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய வண்ணங்களே போதுமானது. இவற்றை ஒன்றுடன் ஒன்றுகலந்து விளையாடும் பொழுது உண்டாகின்ற ஊதா, பச்சை, செம்மஞ்கள் போன்ற நிறங்களைக் கண்டு குழந்தைகள் ஆச்சரியமடைவார்கள். அன்றியும் தங்கள் கண்டுபிடிப்பை மறு குழந்தைகளிடம் சொல்லி பூரிப்பும் அடைவார்கள். இவர்களுக்கு மூலவர்ணங்களுடன் கறுப்பு, வெள்ளை வர்ணங்களையும் கொடுத்தல் வேண்டும். இவைகளைத் தனித்தனி வெவ்வேறு வண்ணங்களுடன் சேர்ப்பதால் விதம் விதமான சாயல்களைக் கண்டின்புறுவர்.

இருண்டபச்சை மெல்லியபச்சை, சாதாரணபச்சை ஆகிய நிறங்கள் கொண்ட சூழலிலுள்ள பொருட்களைக்காட்டி வண்ணங்களின் திணிவுகளை விளங்க வைக்கலாம். இதேபோல மஞ்சள் நிறத்துக்கும் மண்ணிறத்துக்குமுள்ள ஒருமைப்பாட்டின் ஒத்திசைவையும் பொருட்கள் மூலம் விளங்க வைக்கலாம். இதற்கு நிறக்கட்டைகள், நிறமாபிள் உருண்டைகள் இவற்றை பாலரிடம் அறிமுகம் செய்து பிள்ளைகள் அவைகளை வண்ணத் திணிவுகளுக்கேற்ப அடுக்கி விளையாடுவதன் மூலம் இதன் குணங்களைக் கற்பிக்கலாம். இன்னும் நிறத்தளபாடப் பொருட்கள், நிற உடைகள் ஆகியவற்றில் காணப்படும் நிற ஒத்திசைவையும் விளங்க வைக்கலாம்.

மாணவர்கள் தூயவர்ணங்களையும் அவற்றைக் கலப்பதாலுண்டாகும் ஊதா, செம்மஞ்சள், பச்சை ஆகிய துணைவர்ணங்களின் தன்மையையும் தெரிந்திருத்தல் அவசியம். மாணவர் இவற்றை அலங்காரவடிவச் சித்திரங்களிற் தீட்டி வண்ண அமைவைப் பெறுவதன் மூலம் அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை உணரக்கூடியவராவர். பாலர்களுக்கு இவ்வகைப் பயிற்சிகள் அளிப்பதால் அவை நன்மை பயக்கும்.

ஐந்தாம் ஆறும் வகுப்புகளில் நீர்வர்ணங்களை ஆரம்பிக்கலாம். இவ்வாறு ஆரம்பிக்கும்போது முன்னர் பழகிக் கொண்ட தூள்வர்ணத்துக்கும் தற்போது ஆரம்பிக்கும் நீர்வர்ணத்துக்குமுள்ள வேறுபாடுகளை மாணவர் தெரிந்திருத்தல் அவசியம். நீர்வர்ணம் ஒளிபுகும் வர்ணமாகும். ஆகவே நீர்வர்ணம் தீட்டப்பட்ட ஒரு நிறத்தின்மேல் வேறொரு நிறத்தைப்பூசி அழிக்க முடியாதென்ற பண்பை ஆசிரியர் மாணவரிடம் உணர்த்தவேண்டும்.


இதனைச் செய்முறையிலும் மாணவர் கண்டறிதல் நன்று. நீர்வர்ணங்களில் நீரைக் கூட்டிக் குறைத்துக் கலப்பதால் பலவிதமான வண்ணத்திணிவுகளை ஆக்க முடியுமென்ற உண்மையையும் உணர்த்த வேண்டும். இத்திணிவுகளைக் கொண்டு ஒத்திசைவுள்ள அலங்கார வடிவச் சித்திரங்களைத் தீட்டமுடியும்.

தூயவண்ணங்களைக் கொண்டும் எதிர்த்தன்மையைக் கொண்ட நிரப்பு வர்ணங்களைக் கொண்டும் ஒத்திசைவுச் சித்திரங்களை ஆக்குவதில் முயற்சித்தல் வேண்டும்.

இவ்விதமான வண்ணங்களைக் கையாளுவதுடன் உயர்வகுப்பு மாணவர்களுக்கு வண்ணச்சுவையை ஏற்படுத்துவதற்கு வண்ணச்சக்கர முறையை உப

யோகித்துப் பயன்பெறச் செய்யலாம். வண்ணச் சக்கரத்தை முறையே சிவப்பு சிவத்தச் செம்மஞ்சள், செம்மஞ்சள், மஞ்சட் செம்மஞ்சள், மஞ்சள், மஞ்சட் பச்சை, பச்சை, நீலப் பச்சை, நீலம், நீலஊதா, ஊதா, சிவத்தஊதா எனவும் நீர்வர்ணங்களில் தண்ணீரைக் கூட்டிக் கலப்பதால் இலேசான ஒளிர்வர்ணங் களையும் பெறமுடியுமென்பதையும் விளக்கம் செய்யலாம். இன்னும் சிவப்பை யும் பச்சையையும் கலப்பதால் கபிலநிறத்தை ஆக்கலாமென்பதையும் கபில நிறத்துடன் நீல வர்ணத்தைக் கலப்பதால் கறுப்பு வர்ணத்தைக் பெறலாமென் பதையும் அறியச் செய்முறையில் செய்து காட்டலாம்.

## வர்ணச் சக்கரம்




சிவப்பு, மஞ்சள், நீலம் இம்மூன்று வர்ணங்களும் மூலவர்ணங்கள், தூய வர்ணங்கள், பிரதானவர்ணங்கள், ஆரம்பவர்ணங்கள் எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

மேலேயுள்ள வர்ணச்சக்கரத்தில் சிவப்புக்கு எதிரே அதன்நிரப்பு வர்ண மாகிய பச்சையும் மஞ்சளுக்கெதிரே அதன் நிரப்பு வர்ணமாகிய ஊதாவும் நீலத்திற்கு நேரே அதன் எதிர்த்தன்மையைக் கொடுக்கும் செம்மஞ்சள் நிற மும் அமைந்துள்ளது.

இச்சக்கரத்தில் சிவத்த ஊதா, சிவப்பு, சிவத்தச் செம்மஞ்சள்; செம் மஞ்சல், மஞ்சட் செம்மஞ்சள், மஞ்சள் ஆகிய நிறங்கள் பிரகாசமான வண் ணங்களாதலால் இவற்றை வெப்பு வண்ணங்களெனவும் மஞ்சட்பச்சை தொடக் கம் ஊதா வரையுள்ள நிறங்கள் குளிர்ந்த வண்ணங்களெனவும், இவற்றை செய் முறையில் விளங்கவைக்கலாம். குளிர் வண்ணங்களின் பக்கத்தில் வெப்பு வர்ணங் களைத் தீட்டும்போது வெப்பு வண்ணங்கள் உயர்ந்த ஒளியுடையதாகத் தோற்ற மளிக்கும், இதனை மாணவரிடத்து செய்முறையிற் காட்டி. வெப்பு வண்ணங்கள் முன்செல்லும் வண்ணங்களெனவும், குளிர்ந்த வண்ணங்கள் பின்செல்லும் வண் ணங்களெனவும் விளக்கம் செய்யலாம். இதே தன்மையினுற்றுன், படங்களில் பின்னணிகளுக்குப் பின்செல்லும் தன்மையுடைய வண்ணங்களை சித்திரக்காரர் உபயோகிக்கின்றனர். வண்ணச் சக்கரத்தில் அமைந்தவாறு அயல் வர்ணங் களை உபயோகிப்பதனுலும் வண்ண ஒத்திசைவு நிலையை ஏற்படுத்தலாம். இதற்கு உதாரணமாக மேல்நாட்டு ஓவியர்களதும், கீழ்நாட்டு ஓவியர்களதும் ஓவியங்களின் பிரதிகளை மாணவரிடம் காட்டி அவ்வோவியங்களில் காணப்படும் வண்ண ஒத்திசைவையும் விளங்கவைக்கலாம்: நம்நாட்டுச் சித்திரங்கள் தூய வண்ணங்களைக் கொண்டு அழகுற அமைக்கப்பட்டுள்ளன வென்பது நம்நாட் டுச் சித்திரங்களை அவதானிக்கும் போது தெரியவரும். மேல் நாட்டுச் சித்திரங் களின் வண்ண அமைப்பு அவ்வாறில்லை. எனவே நாமும் புதுப்புது முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

## 12. எழுத்துருச் சித்திரம்


இச்சித்திரம் அமைப்பதில் மாணவர் மிக விருப்பத்தோடும் சலிப்பின்றி யும் வேலை செய்வார்கள். இதனை மாணவர் வரைவதன்முன் ஆசிரியர் சில மாதிரிகளை வரைந்து மாணவரிடம் விளக்கம் செய்யலாம். குழந்தைகள் எழுத் துக்களை முன்னமே தெரிந்திருப்பதால், இதனை ஒரு விளையாட்டு வேலையாக வரைவார்கள். இதில் மாணவர் ஆர்வமும் நாட்டமும் உடையவர்களாய் மகிழ்ச் சியோடு வேலை செய்வர்.

தமிழ் ஆங்கிலம் சிங்களம் முதலான எந்த மொழி எழுத்தையும் உப யோகிக்கலாம். இதில் மாணவர்களுக்கு நன்கு தெரிந்த எழுத்தை, ஆசிரியர் யாதாயினும் ஒரு ஒழுங்கு முறையைப் பின்பற்றி. கிரமமுறையில் எழுதிக் காட்டலாம். இவ்வாறு எழுதப்பட்ட எழுத்துக்களின் இடைவெளிகளை அவதா னித்து, சில தொடுவைக் கோடுகளை எழுத்துக்களுடன் இணையக் கூடியதாய் போட்டுக் கொள்ள வேண்டும். இவ்விதம் போடப்பட்டதும் ஒரேமாதிரியான பல வடிவங்கள் கிரமமுறை ஒழுங்கில் அமைவதையும் நாம் காணலாம். இந்த வடிவங்களுக்கு வண்ண அழகும் செய்து காட்டலாம். இவ்விதம் செய்வதால் ஒரு உயர்ந்த புதுமுறையான ஆக்க அலங்காரங்களைக்கண்டு மாணவர் இன் புறுவர்.

இதனுல் நாமும் இவ்வகையான சித்திரங்களை வரைய வேண்டுமென்ற அவாவுடையவர்களாகவும் ஆசிரியரின் படைப்பினுல் புதிய எண்ணக் கருத் துக்களும் புதிய புதிய ஆக்க அலங்காரச் சித்திரங்களையும் செய்வதற்கு முற் படுவார்கள். மாணவர் இவ்விதம் சித்திரங்களைச் செய்யும் போது ஒவ்வொரு எழுத்துக்கும் வெவ்வேறு வகையான, ஒழுங்கான, பல வடிவங்கள் அமைவ தைக் கண்டு பெருவியப்பும் மகிழ்ச்சியும் அடைவார்கள். இவ்வடிவங்களுக்கு வண்ண உபயோகம் செய்துவிட்டால், இவ்வடிவத்தை ஆக்கிய முறையை, மற்றவர்கள் எளிதில் காண முடியாது. அவ்வெழுத்துக்கள் மறைந்து போவதை யும், புதுமையான தோற்றத்தையும் காண்பார்கள். இவ்வகைச் சித்திரங்களை மாணவர் பழகிக் கொள்வதால் சேலை, சீத்தை, திரைச்சீலை முதலான துணி

களுக்கும், அலங்காரச் சுற்றுத்தாள்களுக்கும். அச்சுருப்பதித்தல் முறையில் அச்சுப் போடுவதற்கும் இது மிகுந்த உதவியளிக்கும்.

மாணவர் இதனைக் கடதாசியில் வரைய ஆரம்பிக்கும்போது வரைவதற்கெடுத்துக்கொள்ளும் கடதாசியை சம அளவான சதுரங்களாக மடித்துக் கொள்ளுவதால் வரை தாளின் மேற்பரப்பு முழுவதும் ஒழுங்கான சதுரங்களமைந்துவிடும். பின்னர் அச் சதுரங்களில் எழுத்தை எழுதத் தொடங்குதல் வேண்டும். இது ஒரு சுலபமான முறையாகும்.



எழுத்துருச் சித்திரம்

எழுத்துருவினால் ஆக்கப்பட்ட அலங்கார வடிவச்சித்திரம். இதுவும் ஒரு பரவு ரூப முறையில் அமைக்கப்பட்ட சித்திரமாகும்.

இவ்விதம் ஏனைய எழுத்துக்களையும் கொண்டு பலவடிவச் சித்திரங்களையும் அமைக்கலாம்.

# 13. சித்திரமதிப்பீடு

இதனை மாணவரிடம் வளர்ப்பதற்கு அவர்களின் அனுபவத்தை முதன்மையாகக் கொண்டும். விமர்சனநோக்குடனும், அழகியல் நோக்குடனும் கூடிய திறனுய்வினை வளர்த்தல். இதற்குச் சிறுபராயம் தொடக்கம் குழந்தைகள் தமது ஓவியப்படைப்புகளுக்கு பொருள்கூறத் தெரிந்திருத்தல் வேண்டும். இதில் ஆசிரியரின் ஊக்குவித்தலும் இதற்கான விளக்க வினுக்களை மாணவரிடம் எழுப்பி விளக்கம் பெறுதலும் அவசியமாகும். ஒவ்வொரு பாடப்பரப்பின் அடிப்படையிலும் இது வளர்தல் வேண்டும். புத்தகத்தோடு நின்றுவிடாது உண்மைகளையும், அறிவுகளையும் சேகரித்து, அவற்றை விமர்சனநோக்குடன் விளக்கம் செய்தல் சிறந்தவழியாகும்.

சுருங்கக்கூறின் இதனை இருவகையில் வளர்க்கலாம். ஒன்று 2 வயது தொடக்கம் 14 வயது வரையுள்ள பிள்ளைகளின் வயதெல்லைச் சித்திரங்கள் மூலமாகவும், மற்றையது எமது சூழலிலும், எமது நாட்டிலும் காணப்படும் புராதன காலந்தொடக்கம் இற்றைவரையுள்ள கலைப்பொருட்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கட்டிடங்கள் இவற்றை மையமாகக்கொண்டு ஆய்வுணர்வோடு விளக்குதலாகும்.

உதாரணமாக ஒரு குழந்தையின் வயதெல்லைச் சித்திரத்தை அவதானிக்கும் போது அதில் குழந்தையின் கருத்து வெளிப்பாடு, அவதானம், ஞாபகம், மனநிலை, சூழல், நிகழ்ச்சித் தொடர்பு, இரேகை, வண்ணம், ரூபம் என்பன நாம் காணக் கூடியதாகவிருக்கும். இதேபோல ஒவ்வொரு குழந்தைகளின் சித்திரங்களையும் நாம் அவதானிக்கும்போது கருத்து வெளிப்பாடு, மனநிலை, நிகழ்ச்சி, சூழல் முதலியன வேறுபட்டிருப்பதையும், வயதுக்குத்தக்க கருத்து மாற்றங்களும், வண்ண உபயோகங்களும் காணமுடியும். இவற்றை ஒவ்வொரு மாணவரும் விளங்கிப்பொருள் கூறத் தெரிதல் வேண்டும். இந்த அடிப்படையில் பாடப்பரப்புக்கள் நாளும் வளரவேண்டும். சித்திரப் பொருளாவது அச்சித்திரத்தின் மூலம் வரைந்த குழந்தையின் வயது, எண்ணங்கள், கருத்து வெளிப்பாடுகள், மனநிலை, சூழல், இரேகை, வண்ணங்கள், வண்ண இயைபு போன்ற பல சித்திரக் கோட்பாடுகளையும் ஒப்பிட்டு மதித்தல்வேண்டும்.

புராதன காலந் தொடக்கம் இற்றைவரை காணக் கூடிய கலைப் பொருட்கள் சிற்பங்கள் ஓவியங்கள் இவற்றைப்பற்றிய கலைத்திறன், சிந்தனை வெளிப்பாடு. ஓவியச் சாதனம். தொழில் நுட்பம், சரித்திர முக்கியத்துவம், காலங்கள் சிற்பமுறைகள், கலாச்சாரம், வளர்ச்சி, காலமாற்றங்கள், பண்பாட்டுமுறை. முதலான விடயத்தலைப்புக்களை வைத்து மாணவருடன் கலந்துரையாடியும் கேள்விகளுக்கு வாய்மொழி மூலம் விடைபெறும் கல்விச் சுற்றுலாக்கள் மூலமாகவும், சரித்திரம் இலக்கியம் மூலமாகவும், இவை சம்பந்தமான நிழற் படங்கள், பொருட்கள், இவற்றின் சேகரிப்புக்கள் குறிப்புக்கள் இவைகளை ஆதாரமாகக் கொண்டும் விமர்சனம் எழுதவோ! சொல்லவோ! தெரிதல் வேண்டும்.

இவ்விதமான ஆய்வுகள் மூலந்தான் சித்திரமதிப்பீட்டுணர்வை வளர்த்து, சித்திரங்களுக்குப் பொருள் கூறவும், சிற்பங்கள் கலைப் பொருட்களுக்கு விமர்சனம் எழுதவும், கூடியவர்களாய் மாணவர்களிடம் இம்மதிப்பீட்டு மலர்ச்சி மலரவேண்டும்.

## சித்திரமதிப்பீடு பற்றிய சில கருத்துக்கள்

பின்வரும் பாடப் பகுதிகளுக்குரிய சித்திரங்களை மதிப்பீடு செய்வதை கீழ்க்காணும் முறையில் விளங்கிக்கொள்ளலாம்.

1. கற்பனை ஆக்கவெளிப்பாட்டுச் சித்திரம்:

இதில் மாணவர் தமது கற்பனைச் சக்தியைப் பிரயோகித்து ஆக்க பூர்வமான வெளிப்பாட்டைக் காட்டும்போது பின்வரும் வினுக்கள் மூலம் விடை பெறலாம்.

(அ) பல்வேறு பகுதிகளை ஒருங்கிணைப்பதினுல் வெளிப்பாட்டுப் பொருளை தனித்துப் பேணமுடியுமா?
(ஆ) இது எவ்வளவு தூரம் சுதந்திரமுடையது?
(இ) இது புதுமை வெளிக்காட்டுகிறதா?
(ஈ) வெளிப்பாடு எவ்வளவு தூரம் அகச்சார்பு சம்பந்தமுடையது?
(உ) கற்பனை வளத்தை எவ்வளவு தூரம் விருத்தி செய்துள்ளது?
(ஊ) கலைநுட்பம் எவ்வளவு தூரம் வெளிப்பாட்டுக்கு உதவியளித்துள்ளது?
(எ) எவ்விதமான படங்களில் நீவிர் விசேட விருப்பினைக் காட்டுகின்றீர்கள்?

2. பல்வேறு வகையான சுய அனுபவங்களைச் சித்திரிக்கும் சித்திரம்:

(அ) இவற்றில் இப் பகுதிக்குரிய பல படங்களைச் சேகரித்து மாணவரிடம் காட்டிக் கலந்துரையாடும் போது பின்வரும் முறையில் வினுக்களை எழுப்பலாம்.

1. கோட்டின் தெளிவு, 2. சிக்கனம், 3. கருத்துச் செறிவு, 4. தடிப்பம் 5. அழுத்தம், 6. மென்மை, 7. சீரானதன்மை, 8. கேத்திரத்தன்மை, 9. நிலைகுத்து, 10. ஒழுங்கு. இவ்வகையான குணுதிசயங்கள் மூலம் மாணவரது அழகியல் உணர்வுகளை வளர்த்தல்.

3. கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம்:

(அ) கருத்து வெளிப்பாட்டில் தொழில் நுட்ப விளைவுகளோடு தொடர்புறும் தன்மை· அலங்கார மூலகங்கள், சமநிலை, இயைவு, சீரமைவு, இணைப்பாக்கம். ஆகிய அமைவுகளை மாணுக்கர் தமது படைப்புகளில் சுயமாகவும், இயல்பாகவும் கருத்துக்களையும் எண்ணங்களையும் சுதந்திரமாக வெளியிடுதல் பற்றிக் கலந்துரையாடல்.

4. அலங்காரவடிவச் சித்திரம்:

இதில் மூலகங்களை (உருக்களை) மதிப்பீடு செய்யும் போது பின்வரும் விளக்க வினுக்களை எழுப்பலாம்,

உதாரணமாக:

(அ) அரும்புவ என்பது என்ன?
(ஆ) இதனமைப்பு என்ன?
(இ) இது எதற்கு உபயோகிக்கப்படுகிறது?
(ஈ) இச் சித்திர வரைகள் எங்கு தீட்டப்படுகின்றன?
(உ) இதில் எந்த நிறங்கள் உபயோகிக்கப்படுகின்றன?
(ஊ) எவ்வகைத் தொழில் நுட்பம் இதிற் கையாளப்படுகின்றது?

இவ்விதமாக சிங்கள, தமிழ் அலங்கார மூலகங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனி வினுவி, விடைகள் மூலம் விளக்கம் கொடுக்கலாம்.

## 14. அச்சுப்பதித்தல்

இது குழந்தைகளிடத்தில் மிக விருப்பும் உற்சாகமும் கொடுக்கக்கூடிய பாடமாகும். இதில் வண்ண உபயோகங்களை கொண்டு பல அலங்கார வடிவங்களை அமைக்கலாம். இவ்வடிவங்கள் காய்களிலிருந்தும் கிழங்குகளிலிருந்தும் வெட்டி எடுத்துக்கொள்ளலாம். இதில் குழந்தைகளுக்கு விருப்பத்தையும் பிரதி பலிப்பையும் கொடுக்கக் கூடியதான தூயவர்ணங்களை உபயோகிப்பது நன்று. இப்பதிப்புச் சித்திரங்களுக்குத் தூள்வர்ணங்களை நீரில் கரைக்கும் போது, பிசினையும் சேர்த்து வண்ணக் கலவைகளைத் தயார் செய்து, சிறுபாத்திரங்களிலிட்டு மாணவரிடம் கொடுத்துதவுதல் வேண்டும். இதோடு குழந்தைகள் பாவிக்கக் கூடியதான நீண்ட வட்ட வடிவமான தூரிகைகளையும் கொடுத்துதவுதல் வேண்டும். எமது சூழலில் கிடைக்கக் கூடியதான ஈச்சம் மட்டை, பிரம்பு போன்றவற்றிலும் தூரிகைகளை ஆக்கிக்கொள்ளலாம். குழந்தைகள் இத்தூரிகைகளை உபயோகித்து தாம் விரும்பிய நிறங்களை வடிவங்கள் அமைந்த இயற்கையான காய்களைவெட்டி எடுக்கப்பட்ட வடிவப்பரப்புகளில் பூசி ஒரு ஒழுங்கு முறையைப் பின்பற்றிப் பிரதி செய்வதால், பரவுரூபச் சித்திரங்களையும், அலங்காரவடிவச் சித்திரங்களையும் கரைச்சித்திரங்களையும் மாணவர் மிக எளிதில் ஆக்கிக் கொள்வர். இதற்குச் சில மாதிரிகளை ஆசிரியர் மாணவர் முன்னிலையில் ஆக்கிக் காட்டி, மாணவரைச் செய்யுமாறு தூண்டலாம். இவ்விதம் செய்வதால் ஒவ்வொரு மாணவனும் பலவடிவச் சித்திரங்களை ஆக்குவதில் ஆர்வமும் விருப்பும் காட்டுவர். இவ்விதமான பிரதிசெய்தற் சித்திரங்கள் மூலம் குழந்தைகள் பிரதி செய்யும் கிரமமுறை ஒழுங்குக்குத் தக்கவாறு பலவடிவச் சித்திரங்களைக் கண்டு இன்புறுவர். இதற்கு வெண்டிக்காய், பப்பாசிக்காய், பாகற்காய் போன்ற காய் வகைகளையும், அழகான கருக்குகளையுடையதும், நரம்பும் போக்குடையதுமான இலைகளையும் உபயோகிக்கலாம். ஒருவடிவத்தை யாதாயினும் ஒரு ஒழுங்கில் மீண்டும் மீண்டும் பிரதிசெய்வதால், அழகான பரவுரூப வண்ணச்சித்திரப் படைப்புக்களை ஆக்கிக்கொள்ளலாம்.

லினோ அட்டைகளைப் பிள்ளைகள் அச்சுப்பதிப்பதற்குத் தற்காலத்தில் உபயோகிக்கின்றனர்கள். இதில் மிகவும் இலகுவாய் வெட்டலாம். இதனை மரத்திற்குப் பதிலாகப் பாவிக்கின்றனர்கள். அச்சுப்போடுதலிற் பலவகை முறைகளுண்டு. சிலர் உருவங்களை மரத்திற் செதுக்கியும், சிலர் உலோகங்களிற் செதுக்கியும், சிலர் இறப்பரில் செதுக்கியும் உபயோகிக்கிறார்கள். உலோகத்தில் அச்சுப்படாத இடங்களை நன்கு பதித்து அதற்கு மைபூசி பின்பு அதைக் கடதாசியின் மேல் வைத்து நன்கு அழுத்தினல், மை பட்ட இடங்கள் கடதாசியில் நன்கு பதிந்துவிடும். உருவங்களுக்கு மையைப்பூசிக் கடதாசியிற் பதிப்பார்கள். இதை ஐரோப்பாவில் 15-ம் நூற்றாண்டில் கையினுலேயே இயக்கினர்கள். 18-ம் நூற்றாண்டில் உருவங்களை மரத்திற் செதுக்கவும் தொடங்கிவிட்டார்கள். மரத்தில் வேலை செய்யும் சிற்பிகளே உருவங்களை வெட்டிக் கொடுத்தார்கள். இந்த மரத்திற் செய்யும் அச்சுகள் எவற்றை ஒத்திருக்குமென்றால், வெண்கட்டியினுல் மரத்திற் கீறுவதை யொத்திருந்தது. படமெடுத்தலைப் போல உருவங்களை மரத்திற் செதுக்கினர்கள்.

குழந்தைகள் எவ்வாறு கடதாசியில் நிறங்களைப் பூசுகின்றார்களோ அதே போல இதிலும் வேலை செய்தார்கள். இந்த அச்சை உண்டாக்குவதற்குப் பேனைக் கத்திகளையும், கம்பிகளையும் பாவித்தார்கள். இந்த ஆயுதங்கள் பேனு அலகு களின் கூர் போன்ற வடிவங்களில் அமைந்திருந்தன. இவற்றிற்கு மிக அழகான மரப்பிடிகளும் போட்டுப் பாவித்தார்கள். இவை பல வடிவங்களிலும் இருந்தன. இவற்றின் பிடிகளை உள்ளங்கையில் நன்றாக இறுகப்பிடித்து வேலைசெய்தல் வேண்டும். உருவங்களை வெட்டுமுன் இந்தியன் மையினால் மேற்பரப்பிற் பூசி



உருப்பதிப்பு முறையிற் சில மாதிரிவடிவங்கள், இவை போன்ற மாதிரி வடிவங்களை, மரம், இறப்பர், உலோகத்தகடு, லினோ அட்டை இவைகளில் வெட்டியும் செதுக்கியும் அச்சுக்களாய் உபயோகிக்கலாம்.

விட வேண்டும். பின்பு உருவத்தை வெண்கட்டியால் வரைந்து அவ்வுருவத்தை இயந்திரங்களால் வெட்டவேண்டும். கத்தியினுல் உருவங்களை வெட்டினுல் அது நன்ருய்த் தெரியும். ஆனுற் குழந்தைகள் தங்கள் அளவிற்கு இதில் வரையலாம். சிலர் மெல்லிய கடதாசியில் உருவங்களை வெட்டி அமைப்பார்கள். இவற்றுக்கு வேண்டிய மைகளைக் கடைகளில் வாங்கலாம். இதற்கு ஒரு சிறு கண்ணுடித் துண்டு, ஒரு சிறிய ஓடு, சிறு உருளை, ஒரு அடிமட்டம், கரண்டி முதலியன பாவிக்கலாம். தூசி பிடியாமல் அச்சுப்போடுதல் வேண்டும். கடதாசியின் மேல் சிறிதளவான மையை ஊற்றி உருளையால் உருட்டிவிடவேண்டும். இவற்றின் மேல் கடதாசிகளை வைத்து ஒத்தி உருவங்களை எடுக்கலாம். வேண்டுமானுல் உரத்த மட்டைகளைக் கடதாசியின் மேல் வைத்து அதன்மேல் உருவங்களை எடுக்கலாம். பின்பு மையைப் பழைய துணியாற் துடைத்து விடுதல் வேண்டும். இவ்விதம் பல வழிகளில் அச்சுப்பதிவு வடிவங்களை அமைக்கலாம்.

## 15. கலப்புச் சாதன ஆக்கச் சித்திரம்

கலப்புச் சாதனம் என்பது ஒரு படத்தை வரைந்து வண்ணந்தீட்டும் போது, கையாளும் பலவகை வண்ணங்களை, ஒரே சித்திரத்தில் அழகுணர்வு பிரதிபலிக்கக் கூடியதான ஒரு வியப்பு வண்ணத் தீட்டலாகும். இதனை கலப்புச் சாதன ஆக்கச் சித்திரமென சித்திரக்காரர் அழைப்பதுண்டு.

மாணவர் சித்திரங்களை வரைந்த பின்னர் அச்சித்திரங்களுக்கு வண்ணந் தீட்டி அழகுபடுத்துவர். இவ்விதம் அழகுபடுத்துவதற்கு நீர்வர்ணம், போஸ்ரல் வர்ணம், போஸ்ரல் கிறேயன் வர்ணம், பென்சில் கிறேயன் வர்ணம், தாள்வர்ணம் ஆகிய வர்ணங்களை தனித்தனியே தாம் வரைந்த படங்களில் தீட்டிவரும் வழக்கமிருந்து வந்தது. எல்லா மாணவர்களும் மேற்குறித்த வர்ணங்கள் யாவையும் விலைகொடுத்து வாங்குவதில்லை. இதனுல் வண்ணங்களின் தன்மையை உணர்வதில்லை. வசதிபடைத்த மாணவர்கள் சிலர் எல்லா வகையான வண்ணங்களையும் விலை கொடுத்து வாங்கிக் கொள்வார்கள். இவர்கள் தாம் வரைந்த படங்களுக்கு நிறம் தீட்டும் போது, நீர்வர்ணத்துடன் போஸ்ரல் வர்ணம் பென்சில் கிறேயன் வர்ணம் போஸ்ரல் கிறேயன் வர்ணம் அல்லது பரவின் மெழுகு இவைகளை ஒரே சித்திரத்தில் தீட்டிக்கொள்வதால் இதன் தன்மைகளை உணர்கின்றனர். இவ்வாறு உணர்ந்த மாணவர்கள் கலப்பு வர்ணங்களில் ஒற்றுமையையும், வண்ண இயைபையும் கண்டு களிக்கும் முறையில் ஒன்றுக்கொன்று பொருத்தமாய் சில கலப்புச் சாதன வண்ணங்களை ஒரே சித்திரத்தில் தீட்டுவதால் ஒரு சிறப்பான அழகுணர்வை அங்கு காணுகின்றனர்.

சித்திரங்களுக்கு உபயோகிக்கும் பல வகையான வண்ணங்களையும் சாதனங்கள் என்று வழங்கிவருவது தற்காலச் சித்திரக்காரரின் மரபாகும். ஒரு படத்தில் ஒருவகை வண்ணத்தை மாத்திரம் தீட்டிக் கொண்டால், அதனைத்தனி வண்ணச் சித்திரம் என்றும், பொருத்தமான சில வகை வண்ணங்களை ஒரு படத்தில் தீட்டி அச்சித்திரத்தை முடிக்கப் பெற்ருல், அதனைக் கலப்புச்சாதனச் சித்திரம் என்றும் அழைப்பது, சித்திரக்காரரின் வழக்கமாகும்.

இவ்விதம் ஆக்கப்படும் சித்திரங்களுள் நீர்வர்ணத்துடன், மெழுகு கலந்து செய்யப்பெற்ற சுண்ண வர்ணங்களைத் (போஸ்ரல் கிறேயன்) தீட்டிச் செய்யப்படும் சித்திரங்களில், தனி வண்ண உபயோகத்திஞற் காணும் சித்திரத்

திலும் பார்க்க, கலப்புச்சாதனச் சித்திரத்தில் வேருெருவகையான அழகுணர்வை நாம் காண முடியும். இது பற்றியே தற்கால மாணவர்கள் தாம் வரையும் படங்களில் ஒரு சாதனத்தை மட்டும் உபயோகிக்காது, கலப்புச்சாதன முறையிலும் படங்களுக்கு வண்ணந்தீட்டத் தெரிந்திருத்தல் வேண்டும். இம்முயற்சியினுல் வண்ணந் தீட்டுதலில் மாணவரின் தொழிற்பாடு ஒரு படி உயர்ந்து கொள்வதுமல்லாமல், அவர்களின் வண்ணந் தீட்டும் பயிற்சியும் விரிவடைகிறது. அன்றியும் மாணவரின் புதிய புதிய கண்டு பிடிப்புக்களும் இவ்வகையான முயற்சிகளினுல், இவர்களின் எண்ணங்களும் தொழிற்பாடும் வளர்ச்சி அடைகின்றன.

## 16. மெழுகுவர்ண வேலைச்சித்திரம்

கடதாசியில் நீர் வர்ணங்களால் சித்திரங்களைத் தீட்டும்போது, நல்ல வண்ண அமைப்பைப் பெறுவதற்காக உலர்ந்து கொள்ளாத பரவின் மெழுகையும் சித்திரத் தேவைக்குத் தக்கவாறு உபயோகிக்கலாம். நீர் வர்ணம் தீட்டும்போது மெழுகையுபயோகிப்பதால்; மெழுகு பூசப்பட்ட இடத்தில் நீர்வர்ணம் ஒட்டிக்கொள்வதில்லை. இத்தன்மையினுல் ஒருநிறத்தைக் கடதாசியிற் பூசிவிட்டு அதன் பிரகாசமான சுயதன்மையை வேறு நிறம் மறைத்துவிடாது வைத்துக் கொள்வதற்கும் அச்சுய தன்மையைப் பாதுகாப்பதற்கும், அவ்விடத்தை மெழுகினுல் பூசிக்கொள்ள வேண்டும். பின்னர் அதனருகில் ஒத்திசைவுள்ள மறு வர்ணத்தைத் தீட்டிக்கொள்ளலாம். இந்நிறத்தின் சுயதன்மையும் பாதுகாக்கப்பட வேண்டுமாஞல்; சித்திர அமைப்புக்குத் தக்கவாறு, வேண்டிய இடங்களில் மெழுகைப் பூசிக்கொள்ளலாம். இவற்ருேடு, இந்நிறங்களை எடுத்துக் காட்டக்கூடியதான, மூன்ரும் நிறத்தைப் பூச முன்னர்; வண்ண அமைப்புத் தேவைக்குத் தக்கவாறும், வடிவ அமைப்புக்குத் தக்கவாறும் மெழுகையும் வண்ணங்களையும் தீட்டுவதால்; ஒரு அழகிய புதிய வண்ண அமைப்பில் நீர்வர்ணச் சித்திரங்களை ஆக்கமுடியும்.

இவ்விதமாக ஒரு பரவுரூப அமைப்பை, நீர்வர்ணத்தில் தீட்டும்போது ஒரு வர்ணத்தைத் தட்டையாகப் பூசிக்கொள்ளலாம். அது உலர்ந்தபின் அக் கடதாசியில், ஒழுங்கான கிரமமுறை அலங்கார அமைப்பை மெழுகினுல் பூசிக்கொள்ளலாம். அதனருகே அமைந்திருக்கும் மறுவடிவத்தை ஒத்திசைவுள்ள வேறுவர்ணத்தால் தீட்டிக்கொள்ளலாம். இவ்வடிவங்களிற் பூசப்பட்ட நீர்வர்ணம் உலர்ந்ததும் இதனருகே வரவேண்டிய மூன்ரும் நிறத்தைப் பூசமுன்னர்; சித்திர வண்ண அமைப்புக்குத்தக்கவாறும், மெழுகை வேண்டிய வடிவங்களுக்குத் தக்கதாயும்; நிறத்திணிவுக்குத் தக்கதாயும் பூசிக்கொள்ளலாம். பின்னர் இவ் வண்ணங்களை எடுத்துக்காட்டக் கூடியதான பின்னணி வண்ணப் பூச்சை அமைக்கலாம். இவ்விதமாக நீர்வர்ணங்களையும், மெழுகையும் மாறி மாறி உபயோகித்து, பல அழகான சித்திரங்களை ஆக்கலாம். இவை மாணவர்களின் சித்திரங்களில்; வண்ண அமைப்பு ஆற்றலுக்கும், எண்ணங்களுக்கும் தக்கவாறு நல்ல அழகான நுண்கலைப் படைப்புகளை ஆக்க உதவியளிக்கும்.

இச்சித்திரத்தை மாணவர் பழகிக்கொள்வதால், துணிகளில் செய்யப்படும் 'பற்றிக்' வேலை அலங்காரங்களை, கடதாசியிற் செய்து பழகிக் கொள்ள வாய்ப்புண்டு. ஆரம்பத்தில் பற்றிக் வேலையை, கடதாசியில் நீர்வர்ணங்களையும் மெழுகையும் உபயோகித்து; செய்து பழகி வருவார்களேயாஞல்; ஈற்றில் துணிகளிற் செய்யும் பற்றிக் வேலையை; திறம்படச் செய்து கொள்வார்கள். துணி

யில் பழகுவதற்கு முன், கடதாசியிற் பழகிக் கொள்வதால் செலவும் குறைவடையும். நல்ல பயிற்சியும் பெறமுடியும். இச்சித்திரத்தை மாணவரிடம் கற்பித்து விடுவதால், நம் நாட்டில் அழகான, பற்றிக் ஆடை அலங்காரங்களை, எதிர் காலத்தில் கண்டு இன்புறலாம்.

## 17. துணியில் பற்றிக் (Batik) செய்தல்

இதனை மாணவர் ஆரம்பத்தில் கடதாசியில் வரைந்து பழகிக்கொள்ளலாம். துணியில் செய்வதற்கு முன் கடதாசியில் பற்றிக் வடிவங்களை நன்கு வரையப் பழகிக்கொள்ள வேண்டும். விரும்பிய வடிவங்களை வரையத் தெரிந்ததும் அவ்வடிவங்களில் அழகுணர்ச்சியைத் தூண்டக்கூடியதாயும் சமுதாயத்திற்கு உகந்ததாயும் யாவரும் விரும்பக்கூடியதுமான மாதிரி வடிவங்களை ஆக்கவும் அவ்வலங்கார வடிவங்களுக்கு வண்ண அழகு செய்யவுந் தெரிந்துகொள்ள வேண்டும்.

கடதாசியில் வரைந்த வடிவங்களுக்கு பரவின் மெழுகை உபயோகித்து நீர்வண்ணந் தீட்டும்போது மெழுகு பூசப்பட்ட இடங்களில் நீர் வண்ணக் கலவைகள் ஒட்டிக்கொள்வதில்லை, இதேபோலத் தான் துணியில் பற்றிக் செய்யும் போது மெழுகு பூசப்பட்ட இடங்களில் சாயம் ஏறுவதில்லை. இதனால் துணியில் வண்ண இயைபு உண்டாக்குவதற்கு ஒரே துணியில் இரண்டு மூன்று தடவைகள் சாயமூட்டப்படுகின்றன. இவ்விதம் சாயமூட்டும்போது வண்ணத் தடிப்பையும் அழகையும் மேற்படுத்துவதற்காக ஊட்டப்படும் தனி வண்ணங்களின் தனிமை அழகையும் ஒன்று சேர்த்துப் பார்ப்பதற்காகத் தேவையான இடங்களில் மெழுகைப் பூசி மறைத்து மறைத்துச் சாயமூட்டிக் கொள்ள வேண்டும். பின்னர் அத்துணியிலிருந்து வடிவ அழகும் வண்ண அழகும் தோற்றுவதற்கு மெழுகை அகற்றிக் கொள்ளவேண்டும்.

மாணவர்கள் கடதாசியில் நீர் வர்ணங்களையும் மெழுகையும் உபயோகித்து வண்ணங்களைத் தீட்டுவதால் தனிவண்ணத்தின் பிரதிபலிப்பையும் அதனருகே சேர்க்கை வண்ணத்தின் பிரதிபலிப்பையும் ஒருங்கே பார்க்கக்கூடியதான ஒரு வாய்ப்பை உண்டாக்க முடியும். கடதாசியில் இதைச் செய்து இதன் அழகைத் தெரிந்த பின்னர் துணியில் பற்றிக் சித்திரம் அமைப்பதால் நல்ல பயிற்சியைப் பெறமுடியும். அன்றியும் கடதாசியிற் பழகுவதால் செலவும் குறைவுபடும்.

1. துணி தெரிதல்

பற்றிக் செய்வதற்கு உகந்த துணியைத் தெரிந்தெடுத்தல் வேண்டும் பற்றிக் செய்வதற்கு லதாப் பப்லீன், டெற்றேன், கொற்றின் ஆகிய துணிகள் சிறந்தனவாகும். ஏனைய துணிகளில் சாயமூட்டல் செய்துகொள்ளலாம். பற்றிக் செய்வதற்கு உகந்தனவல்ல.

2. துணியிலுள்ள பசையை அகற்றுதல்

பற்றிக் செய்வதற்கு முன்னர் பற்றிக் செய்ய எடுத்துக்கொள்ளும் துணியிலுள்ள பசையை அகற்றுதல் வேண்டும். துணியிலிருந்து பசையை

அகற்ருவிடின் அத்துணியில் மெழுகு (wax) பிடிக்காது. துணியிலிருந்து பசையை அகற்றுவதற்கு ஒரு கலன் தண்ணீரில் மூன்று அவுன்ஸ் அல்ருவண் யூவை (AlravanJU) இருபது நிமிடங்கள் வரை, அதனுள் துணியை வைத்து அவித்து நன்ருய்க் கழுவிக் காயவிடவேண்டும். இவ்விதம் செய்வதால் துணியிலுள்ள பசை நீங்கிவிடும்.

3. மெழுகு (wax) தயார்செய்யும் முறையும் பாவனையும்

ஐந்து யார் துணி சுமார் ஒரு இருத்தல் எடையுடையதாயிருக்கும். இதற்கு தேவையான அளவு பின்வருமாறு.—நாலு அவுன்ஸ் தேன்மெழுகையும் எட்டு அவுன்ஸ் பரவின் மெழுகையும் ஒரு சிறிய துண்டு ரேசினையும் (Rosin) சேர்த்து உருக்கவேண்டும். இவற்றை உருக்குவதற்கு இம் மூன்று பொருட்களையும் ஒரு (ரின்) தகரப்பேணியுள் போட்டுக்கொள்ள வேண்டும். பின்னர் ஒரு சோஸ்பாண்டருள் அரைவாசிக்கு தண்ணீரைவிட்டு அதன் நடுவே மெழுகு போடப்பட்ட தகரப்பேணியை வைக்கவேண்டும். தகரப்பேணியுள் தண்ணீர் செல்லாதவாறு, சோஸ்பாண்டரைக் குக்கரில் வைத்து அளவான சூட்டில் எரிக்கும்போது மெழுகு அளவான உருகுநிலையிலிருக்கும். உருக்கும்பொழுது வெப்பம் கூடிஞல் மெழுகு துணியில் வழிந்தோடும் தன்மை அடைந்துவிடும். வெப்பம் குறைவதனுல் துணியில் ஒட்டிக்கொள்ளாது. ஆதலால் மெழுகு அளவான வெப்ப உருகு நிலையிலிருக்கும் போது துணியில் பற்றிக் வடிவங்களுக்கு மெழுகை உபயோகிக்கவேண்டும். மெழுகைப் பூசிக்கொள்வதற்கு தூரிகை உபயோகிப்பதிலும் பார்க்க மெழுகு பேனுவை உபயோகிப்பதே நல்ல முறையாகும். துணியில் மெழுகு பூசும்போது துணியின் இருபுறங்களிலும் பூசிக்கொள்ளவேண்டும். ஒருபக்கம் மட்டும் பூசுதல் தவருகும்.

தூரிகைகளை உபயோகிப்பதால் அத்தூரிகைகளின் மயிர்கள் தகரவெப்பத் தாக்கத்திஞல் பொரிந்து கருகிவிடும். இவ்வாறு கருகுவதால் தூரிகைகள் விரைவில் பழுதடைந்து விடுகின்றன. மெழுகு பேனுவின் புனல் வடிவமுனை செப்பு உலோகத்தகட்டிஞல் செய்யப்படுவதால் இது பழுதடைவதில்லை, மெழுகு பேனுவின் கைபிடி மரத்திஞற் செய்யப்படுவதால் அதனை உபயோகிக்கும் கையில் சூடு கடத்தப்படுவதில்லை. இலகுவாய்வேலைசெய்து கொள்ளலாம். எனவே மெழுகு பேனுவை உபயோகத்தில் கொள்வதே நல்ல முறையாகும். இது நீண்ட நாட்கள் பாவிக்கக் கூடியது. சில சிறியதேவைகளுக்கு மாத்திரம் தூரிகைகளை உபயோகிக்க வேண்டும்.

துணியில் பற்றிக் வடிவங்களை வரைவதற்கும், இவ்வடிவங்களுக்கு மெழுகு பூசுவதற்குமுதவியாக, அத்துணியை சப்பு நீப்பையிஞல் செய்யப்பெற்ற பிறேமில் துணியை இழுத்துச் சுருக்கின்றி வைத்துக் கொள்ளக் கூடிய தாய் (Drawing Pin) சித்திரப் பலகைக் குடை ஊசிகளால் அமர்த்திவிடுதல் வேண்டும். சப்புப்பலகையிஞற் செய்யப்பட்ட பிறேம் சட்டங்களில் குடை ஊசிகள் இலகுவில் ஏறிக் கொள்ளும்.

4. பற்றிக் தொழிலுக்குத் தேவையான பொருட்கள் :

1. நப்தோல் (Napthol)
2. சாய உப்பு (Dizo Art. Salt)
3. கறி உப்பு
4. கோஸ்றிக் சோடா
5. ஸ்பிறீட் (Spirit)
6. டைப்பவுடர்

7. பிறண்டொறண் (Brandoran)
8. ரேக்கி ரெட் ஒயில் (Turkey Red Oil)
9. பரவின் மெழுகு
10. தேன் மெழுகு
11. ரேசின் (Rosin)
12. அல்ருவண் யூ (Ultravan Ju)
13. பப்ளீன், டெற்ரேண் கொற்றின், துணிகள்

உபகரணங்கள்

1. குக்கர்
2. சோஸ்பாண்ட்
3. சிறிய, பெரிய தூரிகைகள்
4. ரியங்ரிங் (Tijanting)
5. மெழுகிடும் பேனு
6. சப்புப் பலகையினுற் செய்யப்பட்ட பிறேம்
7. குடை ஊசிகள் (Drawing Pins)
8. ஆசனங்கள் (தளபாடம்) முதலியன.

## டை கரைக்கும் முறை

A. முதலாம் தடவை:

முதன் முறையாகச் செய்யவேண்டியது:-

ஐந்து யார் துணிக்குரிய அளவு விகிதம் பின்வருமாறு; ஒரு அவுன்ஸ் நப்தோல், 3 அவுன்ஸ் ஸ்பிறீற், $\frac{1}{3}$ அவுன்ஸ் கோஸ்ரிக் சோடா, சிறிதளவு சுடு தண்ணீர் ஒரு அளவான எனுமற் பாத்திரத்துள் மேற்சொல்லிய அளவு நப் தோலே ஸ்பிறீற்றில் கரைத்து சிறிதளவு சுடுதண்ணீரையும் அதனுள் விட்டு நன்ருகக் கரைத்து 10 நிமிடங்கள் வரை வைத்துக்கொள்ள வேண்டும்.

B. இரண்டாம் தடவை:

இரண்டாம் முறை கரைக்க உபயோகிக்கும் பொருட்களாவன:-

ஒரு கலன் குளிர்நீர், 2 அவுன்ஸ் ரேக்கி ரெட் ஒயில், 2 அவுன்ஸ் கோஸ் ரிக் சோடா, ஒரு அளவான எனுமற் பேசினுள் ஒருகலன் நீரைவிட்டு அதனுள் மேற்குறித்த ரேக்கிரெட் ஒயிலேயும் கோஸ்ரிக் சோடாவையும் ஊற்ற வேண்டும். பின்னர் கையுறை அணிந்த கையினுல் நன்கு கலக்கிக் கொள்ளவேண்டும். இதனுள் முன்னர் ஸ்பிறீற்றில் கரைத்த கரைசலேயும் ஊற்றி நன்கு கலக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு நன்ருய்க்கலக்கிய பின்னர், மெழுகு பூசி பற்றிக் செய்வதற்குத் தயார் செய்த துணியை கலவைப் பேசினுள் இட்டுக் கையுறை அணிந்த கையினுல் 30 நிமிடங்கள் வரை கலக்கிய வண்ணம் ஊறவிடவேண்டும். பின்னர் அத்துணியை நன்கு பிழிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். வேண்டு மாஞல் குளிர்நீரில் அலம்பியும் கொள்ளலாம்.

C. மூன்ரும் தடவை:-

மூன்ரும் முறை கரைப்பதற்குத் தேவையான பொருட்கள்:-

ஒரு கலன் குளிர் நீர், இரண்டு அவுன்ஸ் சாய உப்பு, எட்டு அவுன்ஸ் கறியுப்பு, எட்டு அவுன்ஸ் பிறண்டோறன் (Brandoran) மூன்ரும் முறை

வேறொரு பேசினுள் குறித்த ஒரு கலன் குளிர்நீரைவிட்டு அதனுள் மேற் சொல்லிய அளவுடைய சாய உப்பையும், கறிஉப்பையும், பிறண்டோறனையும் விட்டு கை உறை அணிந்த கையினால் நன்கு கலக்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு கலக்கியபின், இரண்டாம் தடவை சாயமூட்டப்பட்டு உலர்ந்த துணி யில் வேண்டுமானால் மெழுகிட்டுப் பற்றிக் செய்யலாம். இவ்விதம் பற்றிக் செய்யப் பட்ட துணியை மூன்றுந் தடவையாகக் கரைக்கப்பெற்ற கலவைப் பேசினுள் இட்டு, உறையணிந்த கையினால் 30 நிமிடங்கள் வரை கலக்கியவண்ணம் ஊற விட்டுக்கொள்ள வேண்டும். பின்னர் இத்துணியை வெளியான இடத்தில் காய விட்டு எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

D. பற்றிக் செய்யப்பட்ட துணியிலிருந்து மெழுகை அகற்றுதல்:

மெழுகை இட்டுப் பற்றிக் செய்து உலரவைத்தெடுக்கப்பட்ட துணியி லிருந்து, மெழுகை அகற்றுவதற்கு, ஒரு வாயகன்ற பாத்திரத்தில் நீரைக் கொதிக்கவைத்து அக்கொதி நீரில் மெழுகிடப்பட்டுச் சாயமூட்டிய துணியைப் போட்டு ஒரு தடியினால் கலக்கிக்கொள்ளும் போது, அதிலுள்ள மெழுகு துணியை விட்டுக் கொதி நீரில் சேர்ந்துகொள்ளும், பின்னர் அத்துணியைக் குளிர் நீரில் கழுவிக் காயவைத்து எடுத்துக்கொள்ளலாம். இவ்விதம் எடுக்கப்பட்ட துணியை பெட்டிபோட்டு மடித்துவைத்துச் சந்தைப்படுத்தலாம். கொதிநீரில் கழற்றப் பட்ட மெழுகை பின்னரும் உபயோகிக்கலாம். இவ்விதம் உபயோகிப்பதற்கு கொதி நீர்ப் பாத்திரத்தை அடுப்பிலிருந்து இறக்கி ஆறவிடவேண்டும். இவ் விதம் கொதிநீர் ஆறியதும் மெழுகு பாத்திரத்தில் நீர்மட்டத்தின் மேல் படிந் திருக்கும். அப்பொழுது மெழுகை வேறாக எடுத்துக்கொள்ளலாம்.

## பற்றிக் வண்ணங்களின் கலவைகள்

(Napthol) நப்தோலும் அதற்குரிய டைப் பவுடரும்

| நப்தோல் | சாய உப்பு | உண்டாகும் வர்ணம் |
|---|---|---|
| Napthol C G | ஒறேஞ் உப்பு G C | மஞ்சள் |
| ,, A S | ,, ,, G C | ஒறேஞ் |
| ,, A S | ஸ்காலட் R | சிவப்பு |
| ,, A S | நீலம் B B | நீலம் |
| ,, A S | வைலட் B | பேப்பிள் |
| ,, S G | சிவப்பு B | கறுப்பு |
| ,, G A | நீலம் B | பச்சை |

டை கரைக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டியது:-

மெழுகு இட்டு பற்றிக் செய்ய எடுத்துக்கொண்ட துணியில் எவ்வகை யான நிறங்களை நிறமூட்ட எண்ணுகிறீர்களோ அதற்குத் தக்கவாறு நப்தோல் குறியீட்டெழுத்துக்களையும், சாய உப்பின் குறியீட்டெழுத்துக்களையும், அவ தானித்து, வேண்டிய நிறங்களை உண்டாக்கக் கூடியதாக மூன்று தடவைகளிலும் நப்தோலையும் சாய உப்பையும் கவனித்து வண்ணக் கரைசல்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும். முதலாந்தடவை சாய உப்பைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது. மூன்றும் தடவைதான் சாய உப்பைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

# 18. எண்ணெய் வர்ணச் சித்திரம்

எண்ணெயில் கலந்துள்ள வர்ணங்கள்யாவும் எண்ணெய் வர்ணங்களாகும். இவ்வர்ணங்கள் லின்சீட் ஒயில், ரேபன்ரையின், தின்னர், ஸ்பிறீற் இவைகளிற் கரைத்து வேலைசெய்யலாம். தின்னரும் ஸ்பிறீற்றும் எண்ணெய் வர்ணங்களை விரைவில் உலரச் செய்யக்கூடியது. லின்சீட் ஒயிலும், ரேபன்ரையினும் எண்ணை வர்ணங்களைக் கரைக்கும் தன்மையுடையன. நீர்வர்ணச்சித்திரங்களில் தூரிகையைக் கழுவுதற்கு தண்ணீரை உபயோகிப்பது போல எண்ணெய் வர்ணச் சித்திரங்கள் தீட்டும்போது தூரிகையை மண்ணெயில் கழுவிக்கொள்ளவேண்டும்.

மாணவர் தூள்வண்ணம், நீர்வண்ணம், போஸ்ரல் வண்ணம் ஆகிய இவைகளில் சித்திரங்களை ஆக்குவதில் நல்ல பயிற்சி பெற்றபின்புதான் எண்ணெய் வர்ணங்களிற் சித்திரம் தீட்டத் தொடங்கலாம். நீர்வர்ணச்சித்திரத்தைக் கடதாசியில் ஆக்கும்போது தொடர்ந்து வேலைசெய்து அச்சித்திரத்தைப் பூரணப்படுத்தி முடிக்கலாம். எண்ணெய் வர்ணச்சித்திரம் தொடர்ந்து வரைந்து முடித்தல் இயலாது. எண்ணெய் வர்ணங்கள் உலர்வதற்கு கூடின நேரம் எடுக்கும். இதனல் எண்ணெய் வர்ணப் படங்கள் பூரணமாக முடிப்பதற்கு குறைந்தது இரண்டு அல்லது மூன்று நாட்களாவது தேவையாகும். எண்ணேய் வர்ணத்தை உலரவிடாது மேலே தீட்டும் போது இரண்டும் ஒன்ருேடொன்று கலந்து ஊர்ந்து கொள்ளும். இதனல் இரு நிறங்களினதும் நிறம், திணிவு, சாயல் என்பன காணமுடியாது. எண்ணெய் வர்ணங்களில் வேலை செய்யும்பேரது ஒரு நிறத்தைப் பூசி அது நன்கு உலர்ந்தபின்பே மறுநிறம் பூசப்படவேண்டும். இவ்விதம் தீட்டும் போது தான் பூசப்பட்ட நிறத்தின் சுயதன்மை பிரகாசமாகவும் நிறம் திணிவு, சாயல் என்பனவும் காணமுடியும்.

நீர்வர்ணச்சித்திரங்களைத் தீட்டி நல்ல அனுபவம் வந்த பின்னர், நிறச், சேர்க்கையைப்பற்றிய தெளிவும் நிரம்பிவிடும். இதன்பின்னர் எண்ணெய் வண்ணச் சித்திரங்களைத் தீட்டுவதில் மிகத்துரிதமாய்த் தொழிற்படமுடியும். எண்ணெய் வண்ணச் சித்திரங்கள் தீட்டுவதன் முன். தீட்டுவதற்கு எடுத்துக் கொள்ளும் துணியையோ அல்லது வேறு வரைய எடுத்த பொருட்களில் பின்னணிக்கு ஏற்ற நிறத்தை, முன்னரே பூசி உலரவிடுதல் நன்று. காலம் கூட எடுத்தாலும் ஒவ்வொரு வண்ணமும் நன்கு காய்ந்த பின் தீட்டிக் கொள்ளும் சித்திரம் சிறந்ததாயமையும்.

இச் சித்திரத்தைத் தீட்டும் போது துணி, மரப்பலகை, அஸ்பற்றஸ் பலகை, சுவர், தடித்த கடதாசி அட்டை, உலோகத்தகடுகள், இவைகளை உபயோகிக்கலாம். இவை ஒவ்வொன்றிலும் தீட்டலினுல் அழகிய படங்களை உருவாக்கலாம். ஆனுல் ஒன்றில் உபயோகித்த முறையை, மற்றதில் உபயோகித்தல் சிறந்ததன்று. எனவே ஒவ்வொன்றின் தன்மையையும் செய்முறையிற் கண்டறிந்து தீட்டிக்கொள்ளுதல் சிறந்த வழியாகும். செய்முறை அனுபவத்தில் வந்ததும், அழகிய சித்திரப் படைப்புக்களை ஆக்கமுடியும். இது ஏனைய ஊடகங்களை விடச் சிறந்தது. அதன் அழகுகெடாது நீண்ட நாட்கள் பாவிக்கக்கூடியது, மிகப் பிரகாசமான ஒளிச் சித்திரங்களாக அமைத்துக் கொள்ளலாம்.

# 19. அலங்கார மாதிரி வடிவங்கள்

இவ்வடிவங்கள் யாவும் புராதன பௌத்த விகாரை வேலைப்பாடுகள், அரசமாளிகை வேலைப்பாடுகள். இந்து ஆலய சிற்ப ஓவிய வேலைப்பாடுகள், மரச் செதுக்கு வேலைப்பாடுகள், உலோக வேலைப்பாடுகள், கைவினை வேலைப் பாடுகள், இவற்றிலிருந்து பெறப்பட்ட வடிவங்களாகும். இவ்வடிவங்களை ஆதார மூலகங்களாகக் கொண்டு அலங்கார வேலைப்பாடுகளைச் செய்வோர் தாம் செய்யும் வேலைகளில் இவ் அலகுகளை உபயோகித்து வருகின்றனர். சிற்பிகள் மாத்திரமன்றி, கட்டிடங்களை அமைப்போரும் மரவேலைப்பாடு செய்வோரும், உலோக வேலைப்பாடு செய்வோரும், துணியில் அலங்காரம் அமைப்போரும், பற்றிக் வேலைப்பாடு செய்வோரும், தையல் அலங்காரம் அமைப்போரும், பாய் இழைப்போரும், தும்புத் தொழில் செய்வோரும், தோல் வேலை செய்வோரும், இன்னும் பல வகையான கைத்தொழில்களைச் செய்வோரும், இவ் அலங்கார உருக்களை தமது வேலைப்பாடுகளில் அழகுபடுத்துவதற்காக, எடுத்துக்காட்டும் வடிவங்களாக வேண்டிய இடங்களில் அமைத்து தமது கைத்திறனால் அழகு படுத்துகின்றனர்.

இந்து ஆலயங்களின் வேலைப்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தமிழ் அலங் கார வடிவங்கள் பின்வருமாறு :-

1. கூடுதலை 2. நாகபந்தம் 3. தாமரை இதழ் வடிவங்கள் 4. கமலரூபம் 5. பத்மதாரை 6. இலவங்கப்பூ 7. சங்கிலிப்பின்னல் 8. சடைப்பின்னல் 9. முத்துக்கரை 10. பூந்தாரை 11. இலைத்தாரை 12. செடித்தாரை 13. நீரலை 14. மின்னலை 15. நாகமோடி 16. இலைக்கருக்கு 17. கொடிக்கருக்கு 18. சுடர்கருக்கு 19. மணிப்பாந்து 20. இறக்கப்பத்ம தாரை 21. ஏற்றப் பத்ம தாரை 22. கமலச்சுடர் 23. வேல்வடிவம் 24. மயிற்கண்வடிவம் 25. இத்தல் தாரை 26. பௌதிகை 27. பூசந்தரம் 28. வன்னிமலை முதலிய பல வடிவங்களாகும்.

பௌத்த ஆலயங்கள், அரண்மனைகள், கைவினைப் பொருட்கள் இவற் றின் வேலைப்பாடுகளில் இருந்து பெறப்பட்ட சிங்கள அலங்கார வடிவங்கள் பின்வருமாறு வழக்கிலிருந்து வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | பலாபெத்தி : | தாமரை இதழ் போன்றமாதிரிகள் |
| 2. | பணுவ : | சீப்புரு மாதிரிகள் |
| 3. | அரும்புவ : | கண்ணறைகளாலான கரை மாதிரிகள் |
| 4. | லியவெல : | இலை பூவை அடிப்படையாகக் கொண்ட தொடர் வடிவம் |
| 5. | லியபத : | ஏதேனும் ஒரு வடிவத்தை உடைய இலையின் நுனியில் அதே வடிவத்தையுடைய சிறிய இலை பொருந்திய வடிவம். |
| 6. | லியப்பத்த : | இலையின் இருபக்கங்களும் ஒரே தன்மையில் வளைந்திருக் கும் வடிவம் |

7. லியப்பொத்த: இவ்வடிவத்தையுடைய இலையின் நுனியில் காணப்படும் இவ்விலையின் வடிவம் இலையினிரு பக்கங்களிலும் சிறிய வடிவங்களாய் ஓர் ஒழுங்கில் அமைந்திருத்தல்

8. கல்பிந்து: கற்கட்டு முத்துக்கரை மாதிரி வடிவங்கள்

9. கதிரிமல: கைவினைஞனின் ஆக்க வடிவம்

10. லணுவ: கயிற்றுப் பின்னல் மாதிரி வடிவம்

11. பதுறுவ: பாய் இழைப்பு மாதிரி வடிவங்கள்

12. தனியிழை: பாய் இழைப்பு மாதிரி வடிவம்

13. ஈரிழை: பாய் இழைப்பு மாதிரி வடிவம்

14. சவடியா: சங்கிலி மாதிரி வடிவங்கள்

15. தனிவளைவு: வளைகோட்டு வடிவம்

16. மாற்றுவளைவு: வளைகோடு மேல் கீழாக மாறி வளையும் வடிவம்

17. பத்மபேதி: தாமரையும் அதை அடிப்படையாகக் கொண்ட வடிவங்களும்

18: அன்ஞசிமாலா: அன்ஞசிப்பழ மாதிரி வடிவங்கள்

19. வெல்பொத்த: வேல் உருவத்தை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வடிவங்கள்

20. திச்சுடர்: தீ கொழுந்து விட்டெரியும்போது தோற்றுகின்ற சுடர் வடிவம்

21. லியவெல: வள்ளிக் கொடியின் மாதிரி வடிவம்.

22. அரசிலை: அரசிலையை அடிப்படையாகக் கொண்ட வடிவம்.

23. பூவும் மொட்டும்: பூவும், மொட்டும் மாறி, மாறி அமைந்து வளைகோட்டு அந்தங்களுடன் இணைந்த தொடர் வடிவம்.

24. தனிச்சுழி: சமாந்தரமான இரு கோடுகளுக் கிடையே ஒற்றைக் கொம்பு சரிந்த நிலையில் தலைமேலாகவும், கீழாகவும் இருசரிவான கோடுகளுடன் சரிந்து செல்லும் வடிவம்.

25. இரட்டைச்சுழி: சமதூரங்களிலமைந்த ஒற்றைக் கொம்புகளின் கால்கள் இணைந்தும் தலைமாறியும் செல்லுதல்.

26. கேது: ஒரே அளவான மாங்காய் வடிவம் எதிர்முகமாய் வரையப் பெற்றுதட்டையான வண்ணப்பூச்சுடன்தொடர்ச்சியான வளைகோடுகளின் கீழ் சிறிய வட்டங்களுடன் அமைந் திருத்தல்.

27. வகதெக: புராதன சிங்களச் சித்திர ஆசிரியன் தனது சீடருக்கு முதன் முதலாகக் கற்பித்த சித்திர அப்பியாசமாகும். இது அகத்திப்பூ வடிவமாகும்.

28. குந்திரிக்கம்: இருசமாந்தரகோடுகளுக்கிடையேசமஅளவுக்கொன்றுக அமைந்த சமாந்தர சதுர்ப்புயங்களினுள் சமஅளவான சிறிய நான்கு சமாந்தர சதுர்ப்புயங்களமைய இணைந்து செல்லுதல்.

29. காதணி: இது தோட்டலங்காரமாகும். ஒரு வட்டத்தின் உள் அமைந்த வட்டம் சிறிய சமாந்தர சதுர்ப்புயங்களாக வகுக்கப்பட்டு சதுர்ப்புயத்தின் கீழ்ப்புறக் கோணங்கள் ஒவ்வொன்றும் வளைகோட்டினுல் இணைந்து தோற்றும் தோற்றமுடையது.

30. மல்லிகைப்பூ: காட்டு மல்லிகைப்பூ ஒரு தண்டிலிருந்து பல பூக்கள் முக்கால் வட்டவடிவில் பரந்து பூத்திருக்கும் தோற்ற மாதிரி வடிவம்.

31. செங்கழுநீர்மலர்: வேல்போன்ற கூரான இதழ்களைக் கொண்ட வடிவம்.

32. மல்லிகைமொட்டு: மல்லிகை மொட்டு அமைந்த கரைமாதிரி அலங்கார அடுக்குவடிவம்.

33. கத்தரிப்பு: இதன் இலைபோன்ற மாதிரிப்பூ இதழ்கள் கத்திரி வடிவில் அமைந்திருத்தல்.

34. தாழம்பூ: தாழம்பூவின் மாதிரி வடிவம்.


35. கடுப்புமலர்: இது ஒரு அரசனின் முடி போன்ற அமைப்புடையது.

36. சீனமலர்: பனையின் பாளைபோன்ற வடிவமுடையது. மலரின் இதழ்கள் சிலந்தியின் கால் அடுக்குகள் போன்றது.

37. சப்புமலர்: இது சிறிய நீள்வட்ட அரைவாசியின் மேல் பெரிய நீள் வட்ட அமைப்பில் கூரிய நீள்வட்ட வடிவினதாக இதழ்களால் அமைந்தது.

38. மகரம்: இதன் வாய்ப்பக்கம் யாழியின் முகம் போலவும் பின் பக்கம் அன்னப் பட்சியின் வால் அழகும் கொண்ட வடிவமாகும்.

இவ் வடிவங்களை மாணவர் வரையத் தெரிவதோடு இவற்றை ஆதார மாகக் கொண்டு ஒவ்வொரு கைக்தொழிலுக்கும் ஏற்றதாய் அலங்கார மாதிரிச் சித்திரங்களை ஆக்கவும் தெரிந்திருத்தல் வேண்டும். இவற்றேடு இவ்வடிவங்கள் பற்றிய விமர்சன வெளிப்பாட்டைச் சொல்லவும், எழுதவும் தெரிந்து கொள் வதால் சித்திர மதிப்பீட்டு வன்மையை வளர்த்துக் கொள்வர்.




அலங்கார மூலவடிவங்கள் (உருக்கள்)

1. அரும்பு 2–3 பலாபெத்தி (பூவிதழ் வடிவம்) 4—5 சவடி (சங்கிலி வடிவம்) 6. குந்திரிக்கம் 7. சீப்புரு 8. கல்பிந்து 9. தனியிழை 10. ஈரிழை 11. தனிச்சுழி 12. இரட்டைச்சுழி 13. கேதுவடிவம் 14. பூவும் மொட்டும்




அலங்கார மூலவடிவங்கள்

1. அரசிலை 2A. லியபத (LIYA PATA) 2B. லியப்பொத்த (LIYA POTHA)
3. வகதெக (WEKA DEKA) 4. தாழம்பூ 5. சப்புமலர் 6A,B,C தீச்சுடர்
7. செங்கழுநீர் 8. சீனமலர் 9. வள்ளிக்கொடி (லியவெல)
10. கத்திரிப்பூ 11. காதணி (தோட்டலங்காரம்) 12. மல்லிகைப்பூ
13. வேல்பொத்த

# 20. ஒட்டுவேலைச் சித்திரம்

(கொலாஜ் வேக்)

இதிற் பலவகையான சித்திரங்களை மாணவர் ஆக்கிக்கொள்ளலாம். நிறக்கடதாசிகள், பழைய வண்ணந் தீட்டப்பெற்ற சஞ்சிகைகள், நிறத்துணிகள், பறவைகளின் அழகான இறகுகள், மிருகங்களின் மிருதுவான ரோமங்கள், பஞ்சு, அழகிய இலைகள், பூக்கள், விதைகள், புல், வைக்கோல், நிறமூட்டப்பட்ட மணல், தேங்காய்ப்பூ, தானியங்கள், ஊர்ந்து செல்லும் பிராணிகளின் வடிவங்களமைந்த தோல், சிப்பிகள், ஊரிகள், கடற் பஞ்சு, சாதாளை இவைகளை மூலப்பொருட்களாக உபயோகித்து இவ்வொட்டுவேலைச் சித்திரத்தை ஆக்கத் தொடங்கலாம். இதற்கான நல்ல சூழலை ஆசிரியர் மாணவருடன் கலந்து ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும். ஒட்டுவதற்கு நல்ல பிசின், ஊகு, கோதுமைப்பசை போன்றவற்றைப் பாவிக்காலம். இதற்குதவியாக நல்ல சாயங்களையும் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகள் தாம் வெளியுலகிற் கண்ட உருவங்களையும் காட்சிகளையும் இச்சித்திரம் மூலம் வெளிவிடுவார்கள். வரையும் வடிவங்களை மாணவர் கிழித்தொட்டுவதனுல் உருவங்களின் நிலை, தோற்றம் இவைகளை நன்குணர்ந்து கொள்ளுகிறுர்கள். அதற்குத் தக்கவாறு கடதாசியைக் கிழித்து ஒட்டிக் கொள்வதால் அவர்களின் எண்ணங்கள், ஞாபகசக்தி, ஆக்கத்திறன் இவைகள் வளர்ச்சியடைகின்றன. இவ்விதம் ஆக்கத்திறன் வளருமிடத்து, தன்னம்பிக்கையும் துணிவும் வளர்ச்சியடைந்து, வரையுமாற்றலும் விரைந்து முயற்சியடைவதை நாம் அவதானிக்கலாம்.

இந்த வேலைகளால் அழகுணர்வும், நாட்டமும் முனைந்து நல்ல மதிப்புள்ள சித்திரங்களை, ஆக்கத்தொடங்கி விடுவார்கள். இவ்வகைச் சித்திரங்கள் மக்களின் கவனத்தை இழுக்கச் செய்வதால் அதிக விலை கொடுத்தும் வாங்குவார்கள். ஒருநாட்டின் ஆக்கவேலைச் சித்திரங்கள், வேறு வேறு நாடுகளிலும் வீடுகளிலும், தொங்கவிடப்பட்டு மிளிர்வதை நாம் காண்கிறேம். எனவே குழந்தைகளிடத்து இதனை வளர்த்து விடுவதால், குழந்தைகள் முதிர்ச்சியடைய, அடைய நல்ல ஆக்கவேலை அழகுச்சித்திரங்களை, ஆக்குவதை நாம் காணமுடியும். தற்காலத்தில் இவ்வகைச் சித்திரங்களை சீன, யப்பான், மலாயாக் குழந்தைகள் அழகுற ஆக்குவதை அவர்களின் ஆக்கவேலைச் சித்திரங்கள் மூலம் நாம் காண்கிறேம்.

# 21. புடைவை அலங்கார அமைப்பு

புடைவை அலங்காரம் செய்வதில் பல முறைகள் உண்டு. அவையாவன, நெய்தல்வடிவம், சாயமூட்டல், கட்டுமுறையில் சாயமூட்டல், பற்றிச் செய்து சாயமூட்டல், ஸ்கிறீன் செய்து அச்சுருப்பதித்தல் முதலியன.

கொதிநீரில் சாயமூட்டுதல் அட்மீரல்டை பெப்ரிக்குகள், ரெயோண், பருத்திநூல் போன்றவற்றுக்கு இம்முறை ஏற்றதாகும்.

### பயன்படுத்தும் முறை

1. டை செய்யப்படும் நூல் அல்லது துணி, சாயமூட்டமுன்னர் தூய்மையாகவும் ஈரமாகவும் இருக்கவேண்டும். துணியில் பசை அகற்றப்படாவிடின் சாயம் ஏறுவது கடினமாயிருக்கும், 5 ருத்தல் துணிக்குரிய அளவு பின்வருமாறு.

2. சிறிதளவு கொதிநீரை எனுமல் பூசப்பட்ட கோப்பையில் விட்டு 1 அவுன்ஸ் சாயப்பவுடரை அதனுட் போட்டு நன்கு கரண்டியால் கலக்கவும்,

3. சாயமூட்டப்பட்ட துணியை இட்டு நீரினுள் அமிழ்த்தக் கூடியதான ஒரு எனுமற் பேசினுள் கொதிநீரை நிறைத்துக் கொள்ளவும். இதனுள் கலக்கப்பீட்ட சாயத்தை ஒரு துணியில் வடித்து விட்டுக் கொள்க. பின்னர் அக் கலவையை ஒரு தடியினுல் நன்கு கலக்கவும். 4 அவுன்ஸ் கறியுப்பையும் அதில் சேர்த்துக் கலக்கவும். இதோடு 1 அவுன்ஸ் கடுக்காய்ப்பவுடரை ஒரு துணியில் பொட்டளமாகக் கட்டி அக்கலவையுட் போட்டு ஊறவிடவும். இதில் சிறிதளவு எரிசோடாவைச் சேர்த்துக் கொள்ளவும்.

4. சாயக் கலவைப் பேசினுள். 5 இருத்தல் துணியையும் சாயநீரில் அமிழ்த்தி 30 முதல் 45 நிமிடங்கள் வரை குக்கரில் கொதிக்க வைத்து சூடேற்றும் போது ஒரு தடியினுல் கலக்கிக் கொள்ள வேண்டும்.

5. பின்னர் வெளியே எடுத்து குளிர் நீரில் போட்டு கசக்கிப் பிழிந்து நிழலான இடத்தில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

6. சாயமூட்டுமுன் துணியை வேண்டிய வடிவ அமைப்புக்குத் தக்கதாய் சணல் இழையினுல் கட்டிச் சாயமூட்டுவதால் ஒருவகை அலங்கார அமைப்பைத் துணியில் காணலாம். இவ்விதம் ஒரு முறைசெய்து வண்ணத்துடிப்பைப் பெற முடியும்.

## 22. துணியில் அலங்காரவடிவம் அமைப்பதற்கு ஸ்கிறீன் [Screen] செய்தல்

துணிகளில் நாம் விரும்பும் அலங்கார வடிவங்களை அமைப்பதற்கு பின் வரும் முறையை உபயோகிக்கலாம். வடிவமிடும் துணியின் அகலத்துக்குத் தக்கதாக சுமார் 49"×22" நீள அகலத்தில் 2"×1" சமண்டலை மரச் சட்டங்களினுல் பிறேம் செய்து அதன் பரப்பு முழுவதற்கும் நைலோன் ஒகன்ரித் துணியை நன்கு இழுத்துச் சுருங்காமல் ஆணிவைக்க வேண்டும். பின்னர் அத்துணிக்கு லாய்க்கர் பெயின்ற் (Lacquer Paint) பூசி உலர்ந்தபின், நாம் விரும்பும் அலங்கார வடிவத்தை வரைதலுக்குரிய கடதாசியில் இந்தியன் மையினுல் (Drawing Indian) Ink) வரைந்து வரையப்பட்ட கடதாசியின் கீழ்ப்புறத்தில் 250 வாற்ஸீ (Voltage) மின்குமிழை கடதாசியில் முட்டிக் கொள்ளாது வைத்து, அக்கடதாசியின் மேல் பொருந்துமாறு பிறேமை (Frame) வைத்து ஒரு இருட்டறையில் சிலமணி நேரங்களுக்கு அம்மின்குமிழை வெளிச்சம் கொடுக்க வைத்தால். கடதாசியில் மையினுல் வரைந்த வடிவமுள்ள பகுதிகளுக்கு எதிரே ஸ்கிறீனில், பூசப்பட்ட பெயின்ற் எரிந்து சாம்பராகி விடும், பின்னர் அதனை எடுத்து இலேசாகத் தட்டினுல் சாம்பலான இடங்களில் துணி எரியாது பெயின்ற் மட்டும் எரிந்து கடதாசியில் வரைந்த வடிவம் அப்படியே ஸ்கிறீனில் அமைந்து காணப்படும். இவ்விதமாக பல வடிவங்களையும் ஸ்கிறீனில் அமைத்துக் கொள்ளலாம். இதற்குச் சித்திரக்காரரின் தொழிற்பாடு வேண்டப்படும். இவ்விதம் செய்யப்பட்ட ஸ்கிறீனின், தொட்டி போலமைந்திருக்கும். வண்ணம் எரிந்த பாகத்தில் துணியின் வலைகள் காணப்படும். இந்த வலைக்கண்களின் வழியே அச்சடிக்கும் சாயமை உட்சென்று அவ்வடிவத்தை, துணியில் பதித்துக்கொள்ளும்.

## 23. துணியில் வடிவங்களைப் பதித்தல்

நெசவு செய்யப்பட்ட துணிகள் சுமார் 20, 40 யார் நீளமுடையன. இதற்கு அலங்காரம் செய்வதற்கு நீண்டு அகண்ட கட்டிட உட்பகுதியினுள், துணியின் நீள அகலத்துக்குத் தக்கதான மேசைகளின்மேல், துணியைச் சுருக்கின்றி இழுத்து ஆணி அமத்திக் கொள்ள வேண்டும். அத்துணியின் மேல் அகலப்பக்கமாக வடிவம் அமைந்த ஸ்கிறீனை வைத்து, ஸ்கிறீன் தொட்டிக்குள் வண்ண மையை ஊற்றி, அதன் மேல் உருளையினுல் இலேசாக உருட்டும் போது ஸ்கிறீனினுள்ள வடிவம் துணியிற் பதிந்துவிடும். இப்படியே துணியின் முழுப் பாகத்தையும், வடிவப் பதிப்புச் செய்து முடிக்கலாம். இவ்விதமாக வேண்டிய அலங்காரங்களை, துணியில் பதிப்பின், அதனைத் தோய்த்து, பெட்டிபோட்டு மடித்துச் சந்தைப் படுத்தலாம். இவ்விதமான தொழிற்பாட்டினுல் நம் நாட்டுக் கலை வளம் சிறக்கும். மக்களுக்கும் வேலைவாய்ப்பும் ஊதியமும் பெருகும், இவைகளை மாணவர் செய்வதற்குப் பழகிக்கொள்ள வேண்டும்.

## 24. கதைகளுக்குச் சித்திரம் அமைத்தல்

எட்டாம் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் கதைகளுக்கான சித்திரங்களை வரைய ஆரம்பிக்கலாம். இதில் கதையின் தொடர்பைக் காட்டக் கூடியதாக, ஒவ்வொரு காட்சியும் (கட்டமும்) அமையவேண்டும். கற்பனைச் சித்திரம் வரையும் பிள்ளைகள் கதைச் சித்திரத்தை இலகுவாய் வரைந்து கொள்வார்கள். கற்பனையுடன் கூடிய படங்கள், கதைப் படங்களில் கருத்துக்களை வெளிக்காட்டும் வடிவங்களாக அமைய வேண்டும். கதையின் முக்கியமான கட்டங்கள் படங்களாக அமைவதால் அக்கதைப்படம் சிறந்ததாகக் காணப்படும். கதைப் படங்களை வரையும்போது அதோடு காட்சிகளும் சேர்ந்திருத்தல் சிறப்பாகும். மாணவர் இவற்றை வரைவது மாத்திரமன்றி நல்ல பாணி அமைப்பில் வண்ணம் தீட்டவும் தெரிதல் வேண்டும், வண்ணந் தீட்டும் போது, தூள் வர்ணம் அல்லது நீர்வர்ணங்களை உபயோகிக்கலாம். இதில் புராணக்கதைகள், கிராமியப் பாடற் பொருட்கதைகள், அரிசியின் கதை, ஒரு பெரியாரின் கதை, பாடசாலை விளையாட்டுவிழா, இலக்கியக் கதைகள் என்பனவற்றுக்கு காட்சிகளைச் சித்தரித்துக் காட்டலாம். இதில் வளர்ச்சியடையும் மாணவர் சுவர் ஓவியங்களையும் திரைப் படங்களையும் தீட்டுவதில் வல்லவர்களாக விளங்குவர்.

## 25. வாழ்த்திதழ்ச் சித்திரம்

இதனையும் மாணவர் தெரிந்திருத்தல் அவசியம். இதுவும் எமது வாழ்க்கையில் பல வழிகளில் எமக்குத் தேவையாகின்றது. இவை: பிறந்ததின வாழ்த்து திருமணவாழ்த்து, சேவைநலம் பாராட்டும் வாழ்த்து, பிரிவுபசார வாழ்த்து முதலான பலவுமாகும்.

இதனை ஆக்குவதில் பலமுறைகளைக் கையாண்டு இவற்றை அமைக்கலாம். அச்சுருப்பதித்தல்முறை, வரைந்து வண்ணந்தீட்டும்முறை, வடிவங்களை ஒட்டியும் வண்ணந்தீட்டியும் செய்யும் முறை, ஒட்டிச் செய்யும் முறை எனப் பலமாதிரிகள் உள. இவற்றையும் ஆறும் வகுப்பிலிருந்தே கற்பிக்கலாம். வயது செல்லச் செல்ல வகுப்பும் வளர, நல்ல சித்திரங்களை அமைக்கத் தொடங்கி விடுவார்கள்.

இதற்குத் தேவையற்றதாகத் தள்ளிவிடும் சிகரட் மேலுறைப் பூக்கள், தீன்பண்டச்சுற்றுத்தாளிலுள்ள பூக்கள், வேறு பொருட்களில் வருகின்ற இலை, பூ, குழந்தை வடிவங்கள், துணியில் வரும் வடிவங்கள் இவைகளைச் சேகரித்து இவற்றில் தேவையான வடிவங்களை வெட்டி ஒட்டி வண்ண அமைப்பும் செய்து அழகு படுத்துவதால் வாழ்த்திதழ் அட்டைகளை அழகுற அமைத்துக் கொள்ளலாம். இதுவும் மாணவர் பாடப்பரப்பில் ஒரு அங்கமாயமைந்துள்ளது.

## 26. பொருட் கூட்ட வரைதல்

இதனை எட்டாம் வகுப்பிலிருந்து ஆரம்பிக்கலாம். இதில் அசைவற்ற பொருட்களை ஒழுங்கு செய்யும்போது, ஒரு பொருட்தொகுதி கலைப்பொருட்களாக அமைந்து, பட அமைப்பை ஏற்படுத்தக் கூடியதான பொருட்களைத் தெரிவு செய்தல் வேண்டும். அமைப்பிலும் வர்ணத்திலும் கண்கவர்ச்சிக்குரிய இலகுவான பொருட்களை ஆரம்பத்தில் பிள்ளைகளிடம் காண்பித்து, பின்னர் அவற்றை அப்புறப்படுத்தி வரையுமாறு பணிக்கப்படலாம். இந்த வரைதலில்

பிள்ளைகள் சூழலில் நன்கு பார்த்து அவதானித்த பொருட்களைக் கொண்டு அவை அழகிய ஒரு பொருட் தொகுதியாக அமையக்கூடிய விடயத்தை ஆரம் பிக்கலாம்.

இதில் வீடுகளிற் காணப்படும் புத்தகம், பெட்டி கனவடிவங்கள், பல வடிவப் பொருட்கள், போத்தல்கள். பீங்கான் சாமான்கள், கேற்றில், ஜக், இசைக்கருவிகள், பழங்கள், பூக்கிளைகள், இலைத் தொகுதிகொண்ட கிளைகள், பின்னற் கூடைகள், மேசைவிளக்குகள், குடிகோப்பைகள், பேசின்கள் போன்ற முதலிய பல பொருட்களையும் இப்பாடத்தில் உபயோகப்படுத்தலாம்.

ஒரு பொருட்கூட்ட வரைதலில் மூன்று பொருள்கள் தொடக்கம் ஐந்து அல்லது ஏழு பொருட்களுக்குமேல், அப்பொருட் தொகுதி அமைதல் ஏற்ற தன்று. இவற்றைப் பட அமைவுக்கேற்ப ஆசிரியர் ஒழுங்கு செய்யலாம். இதில் இரண்டு முறையாக இப்பாடத்தைக் கற்பிக்கலாம். ஒன்று பார்த்து வரைதல், மற்றையது பொருட்களை பிள்ளைகளிடம் காட்டியபின் அவற்றை மறைத்துவிட்டு பிள்ளைகள் பார்த்த பொருட்களிலிருந்து ஒரு கற்பனை ஆக்கப் பொருட்கூட்டச் சித்திரத்தை வரைதல். இது மேல் வகுப்புகளிலும் கற்பிக்கலாம். மேல்வகுப்பு மாணவர் இதில் அழகிய படைப்புக்களை ஆக்குவார்கள். இதற்கு வண்ண அமைப்பும், பின்னணி அமைப்பும் செய்யப்பட்டுவிட்டால் மிக உயர்ந்த சித்திரங் களாக அமைந்துவிடும்.

## 27. அசைவற்ற உருவம் அமைத்தல்

சித்திரக்காரக் குழந்தைகள் இதில் மிகவிருப்ப முடையவர்களாகத் தொழிற்படுவதை நாம் காணலாம். இந்த உருவமைப்பதற்கு, நன்குபதப்படுத் தப்பட்ட மென்களி சிறந்த சாதனமாகும். இதில் பறவைகளின் உருவங்கள், மிருகங்களின் உருவங்கள், மனித வடிவங்கள் யாவையும் முப்பரிமாண முறை யில் செய்து கொள்ளலாம். குழந்தைகள் வெளியிற் கண்ட பலவடிவங்களையும் செய்ய முயலுவர். இந்த முறையைச் சித்திர பாடத்தோடு தொடர்புறச் செய்து வந்தால் குழந்தைகள் எதிர் காலத்தில் சிற்பிகளாக அமைந்துவிடுவார்கள். இந்த வேலையில் நாட்டமுள்ள குழந்தைகள், களி மண்ணில் வேலை செய்வதோடு நின்று விடாது, மரம், விதைகள், ஊரி, கல், சவர்க்காரம் போன்ற இவற்றிலும் அழகிய கற்பனை உருக்களை வெளி விட்டுக் கொண்டிருப்பார்கள். இவையெல் லாம் நம் நாட்டு நுண்கலைப் பொருட்களாகக் காட்சியளிக்கும்.

## 28. அசைவுறும் உருவம் அமைத்தல்

இதனை அமைப்பதில் மாணவர் அதிக விருப்பமும், அவாவும், காட்டு வர். இதற்குச் சில கழிவுப் பொருட்களை உபயோகித்து இதைச் செய்யலாம். கடதாசி ஒட்டுவேலையாகவும் செய்யலாம். மென் காட் போட்டில் மனிதவடி வத்தை தலை, கைகள், கால்கள், உடம்பு வேறுவேறாக வெட்டி நூலினாற் கட்டி இரு சிறிய மரச்சட்டங்களின் நடுவில் சிறு சட்டத்தை ஆணியினால் பொருத்தி, மேலந்தத்தில் மனித உருவை நூலிற் தொங்கவிட்டு சட்டங்களினடியில் கையி னால் அமத்தும்போது அந்த மிண்டி அமைப்பினால், அவ் மனித வடிவம் விளை யாட்டுப்புரிவதை அந்த அசைவுறும் அழகிலிருந்து பார்த்து மகிழலாம். இதே போல, மெற்ரூஸ் நடனப் பொம்மை, சமநிலை அசைவுருக்களை உடைய பறவை கள், கழுத்தசைக்கும் நாய்க்குட்டி போன்ற பல உருக்களையும், அவற்றின் அசைவில் அழகு காணக்கூடியதாக அமைக்கலாம். பிள்ளைகள் தங்கள் விவே கத்தையும் புத்திக்கூர்மையையும் பயன்படுத்தி மிக அழகான அசைவில் காணும் உருக்களைச் செய்வதை நாம் காணலாம்.

# 29. பாலரின் கலை

கலையைப்பற்றி எழுதும் வல்லுனர்கள், கலைஞனின் வேலையை விளங்க வைக்கும்போது, மற்றவர்களுக்கு விளங்காத சில சொற்றொடர்களை உபயோகிக்கின்றனர். அதனாலே கலையைப் புகட்டும் ஆசிரியர்கட்கு, கலைஞன் எப்படி வேலைசெய்கின்றான் என்று திட்டவட்டமாக எடுத்துரைக்கமுடிவதில்லை. இதனால் இவர்கள் பிழைபாடான வழிகளிற்பாடங்களைப் போதிக்கின்றனர். கலைஞனின் எண்ணங்களைச் சரியாக மற்றவர்கள் விளங்குவதுமில்லை. கலைஞனின் உள்ளக் கிடக்கைகளை நாம் சரியாக அறிவதுமில்லை, பின்பு என்ன நடக்கின்றதோ வெனில், ஒரு பொருளை எப்படிப் படம் பிடிக்கின்றோமோ, அஃதேபோல கலைஞன் வரைந்த சில உருவங்களை நம் கண்கள் எப்படிக் கட்புலனாற் காண்கின்றதோ, அதே எண்ணங்களை மற்றவர்களுக்கு எடுத்துரைக்கின்றோம். அவ்வெண்ணங்களோவெனில், அது உண்மைக் கலைஞனின் நோக்கங்களாக அமையா. ஒரு கலைஞன் ஒரு உருவத்தினை வரையும்பொழுது தன்மனக்கண்ணால், தான் கண்ட ஒரு இயற்கைக் காட்சியினையோ, அன்று தமக்கு முன்னுள்ள பொருளினையோ; குறித்து அதன் தோற்றம் எவ்வாறு தோன்றுகின்றதோ, அவற்றிற் தன்னுடைய மன எண்ணங்களையும் அப்படியே அமைத்துக்கொள்ளுகிறான், அவன் அந்த நேரத்தில் எவ்வாறான சூழ்நிலையில். எப்படியான மனநிலையில் அதை வரைகின்றானோ; அதுதான் அவனுடைய சொந்தமான சுதந்திரமான தனிப்பட்ட கருத்தாக அமையும்; இதற்கும் புகைப்படம் பிடித்தற்கும் அதிக வித்தியாசமுண்டு, கலைஞன் ஒரு படத்தை வரையும் பொழுது, தனது கண்களையும் விவேகத்தையும் கூர்மையாகப் பாவிக்கின்றான். ஆனால் மேற்பார்வையாகப் பொருள்களைப் பாராமல், சில கருத்துக்களை மற்றவர்களுக்கு நல்ல முறையிற் புகட்டுவதற்கு, கலையை ஒரு கருவியாக உபயோகிக்கின்றான்.

படம் பிடிப்பவனோ வெளித் தோற்றத்தை மட்டும் இயந்திரக் கருவிகள் மூலம் படம் பிடித்து விடுகிறான். கலைஞனோ சிலவற்றைமட்டும் தெரிந்தெடுத்து அவற்றைக் கொண்டு புதுப்புது உருவங்களைத் தோற்றுவிக்கின்றான். அதில் மிகவும் நுட்பமான வேலைகளையும் செய்து விடுகிறான். இதனை நாம் நன்கு உணர்ந்தால் பண்டைய கல்வி முறை பாலருக்கு மிகவும் முரண்பாடென்பது நன்கு விளங்கும். பாலர்களைக் கைத்தொழில்களிற் திறமையுடன் பயிற்சி செய்வது நம் குறிக்கோளானால், பொருள்களின் தோற்றங்களை அமைக்கவும் கைத்தொழிற்றிறமை பெறவும் நாம் செய்தல் வேண்டும்.

குழந்தை சிறுபராயம் தொட்டே, தன் எண்ணங்களை வெளியிட முயற்சிக்கின்றது. ஒவ்வொரு பிள்ளையும் தனித்திருக்கும்பொழுது பென்சிலாற் கடதாசிகளிற் பல குறிகளை, மணித்தியாலக்கணக்காக வரைவதை நாம் காணலாம். ஆனால் இதனைப் பெரியோர்கள் விளங்கிக் கொள்ளுதல் அரிது. குழந்தையோ வளர வளர அதன் எண்ணங்களும் நாளடைவில் வளருகின்றன. அக்குழந்தையின் உள்ளத்திற் புதுக் கருத்துக்களும் தோற்றுகின்றன. அதன் கற்பனைக்கு உணவு அளிக்கப்படுகிறது. தினசரி வாழ்க்கையின் சில விடயங்கள் சீலை துவைத்தல், மக்களின் சந்தைக்கூட்டங்கள், வள்ளங்கள் நீரில் நீந்துதல், குழந்தையின் கவனத்தை இழுக்கின்றது. இதனால் ஒவ்வொரு குழந்தைகளும் ஆக்க வேலைகளை ஆக்கக்கூடிய சக்தி பெற்றிருக்கின்றனர்.

குழந்தை தன் புத்திக்கூர்மையைச் செலுத்தி. பொருட்களை தானே திட்டவட்டமாகப் பார்க்கிறது. ஆனால் கலைஞனோ தன் எண்ணங்க

ளுக்கு வேண்டிய உருவங்களைப் பொறுக்கி எடுத்து. அதற்குத் தேவையான நிறங்களைக்கொண்டு தன், உள்ளக் கருத்தை அப்படியே வரைந்து விடுகிறான். குழந்தையோ இயற்கையால் தூண்டப்பட்டு, அதிக வேகத்தில் மனதிலுள்ள எண்ணங்களை உருவங்களாக அமைக்கின்றது. அதனால் இயற்கையிலே தூண்டப்பட்ட ஒரு குழந்தை ஒரு கலைஞனைப்போல் வேலை செய்ய ஏன் முடிவதில்லை? இங்குதான் ஆசிரியரின் உதவி வேண்டப்படுகிறது. ஆசிரியர் சுதந்திரமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, ஆக்கவேலைகளைச் செய்யத் தூண்டுதல் வேண்டும். குழந்தைக்குச் சட்டங்களையோ அல்லது முறைகளையோ சுமத்துதல் கூடாது.

சில எண்ணங்களைக் குறிப்பாகச் சொல்லி, குழந்தையை ஊக்கப்படுத்தி வேலையைச் செய்வித்தல் வேண்டும். குழந்தையை இப்படிவரை என்று சொல்லாது, ஆசிரியரின் உதவியுடன் பொருளை நன்கு அவதானித்து தானேவரையும் பழக்கத்தையுண்டாக்க வேண்டும். தனித்த முறையில் குழந்தையை விட்டுவிட்டால், கூர்மையான புத்தியைக் கொண்டு குழந்தை நல்ல வேலைகளைச் செய்யும். அதற்குத் தேவையான சூழ்நிலையை ஆசிரியர் உண்டாக்க வேண்டும். குழந்தையும் ஆசிரியரும் ஒருவரையொருவர் நன்கறிந்து கொண்டால் முன்னேற்றத்திற்கு வழியுண்டு, வேலையில் மகிழ்ச்சியிருந்தாற்றான் ஆர்வமும் ஆக்கமும் உண்டாகும். பிள்ளையின் பல பருவங்களிலும் இதனை நன்கனுசரித்து, அதனுடைய சுயவெண்ணங்களைத் தடைசெய்யாது விட்டுவிட்டால். அது தன் எண்ணங்களை வெளியிட்டுக் கொண்டேயிருக்கும்:

## 30. நிறத்துணிகளிலிருந்து வடிவங்களை வெட்டி எடுத்துத் தைத்தல்

இவ்வேலைக்குக் குழந்தைகளின் கற்பனைச் சித்திரங்கள் பொருத்தமாக அமையும். இதன் நிறமும் வடிவச் சித்திரமும், தையல் வேலைக்கு மிகுந்த அழகினைக் கொடுக்கும். இதிலுள்ள அலங்கார ரூபங்களைக் கொண்டு சாளரத்துணிகள், கதவுத்துணிகள் தலையணையுறைகள் முதலியனவற்றிற்கு கரைச் சித்திரங்களும் பூவேலைகளும் செய்யலாம். இப்படியே குழந்தைகளின் கற்பனைச் சித்திரங்களை நாம் நன்கு உபயோகிக்கலாம்.

தையல்வேலை. பூப்போடல் முதலியவற்றில் துணிகளைத் தக்க வடிவங்களாக வெட்டி, அவைகளை வைத்துத் தைப்பார்கள். இதிற் தங்கள் எண்ணப்படி வடிவங்களை அமைத்துக் கொள்வார்கள். இது மிகவும் மெல்லிய வேலையாகவிருக்க வேண்டும். இந்த வேலையிற் குழந்தைகள் வடிவங்களையும் நிறங்களையும் முக்கியமாகக் கொள்ளுகின்றார்களேயன்றி. உருவங்களின் முகங்கள் முதலான சிறு குறிப்புக்களைக் கவனிப்பதில்லை. ஒரு படத்தை வரையமுன் முதலில் அதற்குத் தேவையான உருவங்கள், சூழ்நிலைகள் முதலியவற்றை ஆரம்பித்து, அதன்பின்பே படத்திற்குத் தேவையான உருவங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்குத் தேவையான முறைகள், திட்டங்கள் இவற்றினைப் பிள்ளைகளுடன் நன்கு ஆலோசித்து. அதனைத் திட்டமாகத் தொடங்கவேண்டும். பிள்ளைகளின் தனித்திட்டங்களையேனும் அல்லது ஒரு குழுவினருடைய திட்டங்களையேனும், கையாளுதல் மிகவும் நல்லது. இவ் வேலைகள் சரித்திரம். இலக்கியம் முதலானவற்றுடன் ஒன்று சேர்த்துப் பாடசாலையின் நிலையையும் நன்கறிந்து.

நடத்துதல் வேண்டும். இது ஆக்கவேலைக்குப் பயனளிக்குமேயானல் நல்ல ஊக்கம் கொடுக்க வேண்டும். சில துணிகளிற் சித்திரம் சம்பந்தமான காட்சிகளை பொறித்துவிடலாம். தேவையான விடயத்தை எடுத்துக்கொண்ட பின் நல்ல அலங்கார அமைப்புடன் தேவையான அளவுக்கு மை பூசவேண்டும். ஆனல் வடிவங்களும், வர்ணங்களும் மெல்லிய வேலையாக அமைக்கவேண்டும். இதற்குத் தேவையான அலங்கார ரூபத்தினை முதலிற் சுண்ணக் கட்டியினல் வரைந்து விட்டு குழந்தை தன் எண்ணத்திற்கேற்ப நிறங்களைத் தீட்டவிடவேண்டும். கதவு சாளரம் முதலியவற்றிற்குப் போடப்படும் சித்திரங்களில் ஒரு ஒழுங்கு முறை இருக்க வேண்டும். நிறம் தீட்டுதலிலும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும். 18" × 8" அளவுள்ள ஒரு (கன்வேஸ்) துணியிலோ, அல்லது வேறு கதவுதுணியிலோ கரைச் சித்திர வேலைசெய்வது நல்லது, தையலுக்குப் பலவகையான துணிகளையும் வைத்துத் தைக்கலாம். தையல் வேலை தெரியாத பிள்ளைகளுக்கு, ஆசிரியர் தேவையான பொருட்களைத் தெரிந்தெடுத்து சிலமாதிரி வடிவங்களை ஆடைத்தாளில் (ரிசுக் கடதாசியில்) வரைந்து காட்டிக் கொடுக்கலாம். சித்திர வேலைகளைக் கம்பளித் துணிகளிலும், முதல் ஆரம்பித்து நன்கு பழகிய பின்பு பட்டுத் துணிகளிற் செய்வது மிகவும் இலகுவாயிருக்கும். வரையவேண்டிய சித்திரத்தைக் கடதாசியில் வரைந்து, பின் தனித்தனி உருவங்களாக வெட்டி எடுத்தவற்றினைக் கொண்டு துணிகளில் வேலை செய்யத் தொடங்கலாம். இதேபோல துணிகளிலும் உருவங்களை வெட்டி அந்த உருவங்களை வேறு துணியில் வைத்துத் தைக்க வேண்டும்

ஒவ்வொரு பிள்ளையும் தமக்குத் தேவையான நிறத்துணிகளைந் தாமே தெரிந்தெடுத்தல் வேண்டும். அந்த சித்திரத்தின் கரைகளைத் தெரியாவண்ணம் மறைத்துத் தைத்தல் வேண்டும். வடிவங்களைச் சீலையில் வெட்டமுன், அவ்வடிவங்களைக் கடதாசியில் வெட்டி, நிறத்துணி வடிவங்களைத் தைப்பதற்குரிய துணியின் பின்பக்கத்தில், துணி சுருங்காதவாறு, நூலோடி வைத்துக்கொள்ள வேண்டும. பின்னர் கடதாசி உருவில் வெட்டப்பட்ட நிறத்துணி வடிவங்களை மறுபக்கத்தில் வைத்துத் தைத்தல் வேண்டும். சங்கிலிப் பின்னல்கள் முடிச்சுகள் குத்தல்கள் இவற்றை அவ்வுருவத்தின் மேற் பாகத்திலும் கரை ஓரங்களிலும் பாவிக்கலாம். தையல் முடிந்தவுடன் கரைச் சித்திரம் தைத்த துணியின் பிற்பக்கத்தில் ஈரத்துணியினல் அழுத்தி பெட்டியும் போடவேண்டும். இம்மாதிரி செய்வதினல் கரைச் சித்திரம் அழகு பெறுகின்றது.

## 31. மாதிரி வடிவச் சித்திரம் அமைத்தல்

ஒவ்வொரு குழந்தைகளுக்கும் இதில் நல்ல ஆர்வமுண்டு. இதிலுள்ள முறைகளை விரைவில் பிடித்து அதை விருத்தி செய்யவும் ஓர் நல்ல வடிவச் சித்திரமாகும். இது மனதிற்கு அமைதியும் கொடுக்கும். இது சில கோடுகளையும் வடிவங்களையும் தக்க ஒழுங்கில் அமைத்துக் கொள்ளுவதால் உண்டாகிறது. நேரிய கோடுகளும் வட்டங்களும் வடிவச் சித்திரத்துக்கு உதவியாகவிருக்கின்றன. இயற்கையைக் கொண்டு சில வடிவச் சித்திரங்களை ஆக்கிக் கொள்ளலாம். வெட்டிய உருளைக் கிழங்கின் உதவியால் வடிவச்சித்திரம் வரையலாம்.

உருளைக் கிழங்கை இரண்டு துண்டாக வெட்டி அதில் வெட்டிய பாகத்தை நிறம் பூசி வைத்த கடதாசியின் மேல் வைத்து எடுத்து அதனை மெல்லிய கடதாசியில் அச்சடிக்கலாம். உருளைக் கிழங்கை எடுத்தவுடனே நிற அடையாளம்

உருளைக்கிழங்கின் வடிவமாக விழுகிறது. இவ்வாறே வரிசையாக அச்சடித்தால் அதே உருளைக் கிழங்கின் வடிவத்தை உண்டாக்கலாம். இதுபோல வேறு கிழங்கிலும் வடிவத்தை வெட்டி அதற்கும் வர்ணங்களைப் பூசி, அதன்பின் கடதாசியிற் பதிக்கலாம். இப்படி நாம் செய்வதால் இது பிள்ளைகளுக்கு வரிசைக் கிரமமாக உருவங்களை அமைத்தலினுல் உண்டாகும் நன்மைகளை விளங்க வைக்கும்.

குழந்தைகள் தங்கள் அனுபவத்தால் மற்றவர்கள் செய்வதைப் பார்த்தும் உருவங்களை இலேசாக பதிக்கப் பழகிக் கொள்ளுகிறுர்கள். பல வகையான வடிவங்களையும் கிழங்குகளில் வெட்டி பல நிறங்களினுலும் பதித்தால் மிகுந்த அழகும் வேடிக்கையுமாக விருக்கும். கிழங்குகளில் உருவங்களை வெட்டுதலில் மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும். இப்படியான உருவங்களை வெட்டுவதால் வடிவச் சித்திரங்களை உண்டாக்குவதற்கான முக்கிய அம்சங்களை நன்கு தெரிந்து கொள்வர்.

கருவிகளைப் பாவிக்கவும் பழகிக்கொள்வர். உருளைக் கிழங்கில் கத்தியால் உருவங்களை வெட்டுதல் மிக இலேசாகவிருக்கும் நல்ல உருவங்களை ஒரு முறை வெட்டி விட்டால் அதனைக் கொண்டு பலவடிவச் சித்திரங்கள் உண்டாக்கலாம், இதற்குத் தேவையான மாதிரிகளை ஆசிரியரின் உதவி கொண்டு குழந்தைகள் செய்யலாம்.

ஒரு முறை ஒரு நிறத்தாற் பதித்த உருவத்தின் மேல் வேருேர் நிறத்தைக் கொண்டு பதித்தால் பிள்ளைகளுக்கு ஆர்வத்தைக் கூட்டும் நிறங்களின் தொடர்பை இது எடுத்துக் காட்டும், இப்படி இரண்டு மூன்று நிறங்களைப் பதித்தால் எந்த நிறங்களைப் பாவிக்க வேண்டுமென்பது விளங்கும். உருளைக்கிழங்கில் உண்டாக்கபடும் அச்சுகள் பல நாட்களுக்கு வைத்திருக்க முடியாது. இறப்பரில் இப்படியான அச்சுக்களைத் தயாரிக்கலாம். கிழங்கு அச்சுகளைக் கொண்டு சீலைகளுக்கு அச்சுப் போடலாம். இப்படி அச்சிட்ட சீலைகளை தோய்க்கலாம். தூரிகையினுல் மெதுவாகவும், கையின் போக்கிற்கு கனைந்து கொள்ளும் படியாகவும் அழுத்தலாம். இதைச் சொகுசாகவும், திட்டமாகவும் பிடித்துப் பாவிக்க வேண்டும். குழந்தைகள் இதை நன்கு அறிய முடியும். பல வர்ணங்களையும் ஒன்றுய்க் கலந்து வர்ணங்களைத் தீட்ட வேண்டும்.

தூரிகை பாவிக்கும் முறை பழக்கத்தின் மூலம்தான் அறியலாம். குழந்தைகள் பழகிவிட்டால் வடிவங்களை மனதில் வைத்துக் கொண்டே வரையத் தொடங்கி விடுவார்கள். முதலில் வெள்ளைக் கடதாசியில் உருவங்களைப் பூசப்பழக வேண்டும். ஒவ்வொரு நிறங்களின் முக்கியத்தையும் அறிந்து அவற்றைக் கலந்து வேறு வேறு நிறங்களை உண்டாக்கத்தெரிந்து கொள்ள வேண்டும். முதலிற் சதுரங்களில் நிறங்களைத் தீட்டப் பழக வேண்டும். பின்பு வடிவங்களை கெதியாய் அமைக்கவும் பழகுதல் வேண்டும், வர்ணங்களைத் தீட்டும் பொழுது ஏகமும் வர்ணங்களைத் தூரிகையினுற் தீட்டுவதால் தேவையான முற்போக்கை அறியாமலே பெற்றுக் கொள்ளுகின்றனர்.

நிறங்களுக்கும், அலங்கார ரூபத்திற்கும் உள்ள தொடர்பினை குழந்தையும் நன்கு அறிகின்றது சிலவடிவங்களை உரத்த கடதாசியில் வெட்டி அதற்கு வெள்ளை மைபூசி அட்டைகளுக்கு ஒட்டலாம். இதைக் கொண்டு கரை அலங்கார மாதிரிகளும் போடலாம். கத்தரிக்கோல், சிறுஉளி இவற்றினுல் சிறு உருவங்களை வெட்டி திருப்பித் திருப்பி அதைப் பாவிக்கலாம். இந்தக் கடதாசியை வேறு கடதாசியில் வைத்து வெட்டிய உருவத்திற்கு மை பூசலாம். இவ்வாறே பல பல வடிவங்களையும் கரைச் சித்திரங்களையும் உண்டாக்கிக் கொள்ளலாம். கடதாசியில் இவற்றை வெட்டுவதில் கவனமாயிருத்தல் வேண்டும். இப்படியே "ஸ்ரென்சில்" கடதாசிகளிலும் உருவங்களை வெட்டிப் பாவிக்கலாம்.

# 32. கற்பனைச் சித்திரமும் கைத்தொழிலும் அவற்றின் பயனும்

குழந்தைகளின் கற்பனைச் சித்திரத்தின் உண்மை அமைவாக அவர்கள் எவ்வளவு நுண்ணிய முறையிலும், இலகுவாயும் தங்கள் எண்ணங்களை வெளி விடுவதற்கு, அக்குழந்தைகள் வரையும் படங்களே எடுத்துக்காட்டாகும். இவ் விதமான அறிவினைக் குழந்தை எவ்வாறு பெறுகின்றதோவெனில் தான் வரையப்போகும் வடிவங்களை ஏற்ற மாதிரி எடுத்து முறைப்படி அமைத்தலிற் தங்கியுள்ளது. சிறுபராயத்தில் உணர்ச்சி உண்டாக்கக்கூடிய வடிவங்களிலும், கவர்ச்சியான நிறங்களிலும் அவர்களின் மனம் சென்று கொண்டிருக்கும். ஏழு எட்டு வயதுப் பிள்ளைகளுடைய வரைதலை அல்லது பூச்சு வேலைகளை நாம் கவனிப்போமானல் எல்லாருடைய வேலைகளும் ஒரே முறையைத் தழுவினதாகத் தோன்றும்.

ஆசிரியர் இவற்றை நன்கு அறிந்து, பிள்ளைகளுடைய கற்பனு சக்தியைத் தடுக்காது விருத்தி செய்தல் வேண்டும். பிள்ளைகளுடைய எண்ணங்களைத் தழுவியே ஆசிரியர் நடந்து வருதல் வேண்டுமேயன்றி, தமது எண்ணத்தைச் சுமத்துதல் கூடாது. சிறு குழந்தையின் கையில் ஒரு ஈயலேகினியை அல்லது ஒரு சுண்ணக்கட்டியினையும், ஒரு கடதாசியையும் கொடுத்து நாம் கவனிப்போமானல் அக்குழந்தை கடதாசியில் நேரற்ற கோடுகளை வரைந்து மகிழ்ச்சியடைவதை நாம் காணலாம். இது வட்டங்களையோ அல்லது வடிவங்களையோ வரைவதற்கு ஆரம்பமாக விருக்கின்றது. இயற்கையாகவே குழந்தை தன் எண்ணங்களை வெளிவிட நாம் அதற்குச் சுதந்திரம் கொடுத்தும் தேவையான பொருட்களை உதவியும் உற்சாக மூட்டவேண்டும்.

இப்படியே குழந்தை மனித உருவங்களை வட்டங்கள் மூலம் வரைய ஆரம்பிக்கின்றது. முதலிற் குழந்தை தாம் வரைந்த அந்த வட்டத்திற்கு கண், மூக்கு, கால், காது முதலியவற்றைக் கோடுகளாக வரைந்து, உடம்பற்ற உருவங்களாகத் தொடங்குகின்றது. கைகள் தலையின் பக்கத்திலிருக்கவும் காணலாம். இதனல் குழந்தை தாம் நினைத்ததை வரைகிறதேயன்றித் தாம் பார்த்ததை வரைவதில்லை என்பது புலப்படுகிறது. ஆகையினலே ஆசிரியர் ஒரு மேசையை வரையும்படி கட்டளை இட்டாராகில் குழந்தை தான் விளங்கியதை வரையுமேயன்றி தாம் கண்டு கொண்டபடி வரைவதில்லை. ஒரு நீள் சதுரத்தையோ அல்லது ஒரு சற்சதுரத்தையோ வரைந்து. முற்பக்கத்திலிரண்டு கால்களும் பிற்பக்கத்தில் இரண்டு கால்களுமாக வைக்கும். இதுதான் குழந்தையின் மனக்கண்ணிற் கண்ட உருவம். அதிக தூரத்திலுள்ள உருவம் குறுகிய தோற்றமுடையது என்பதைக் குழந்தைகள் அறிவதில்லை. ஆண்டுகள் செல்லச் செல்ல எண்ணங்களும் முதிர்ந்து கொண்டேவரும். ஆகையால் முதலிற் குழந்தையின் எண்ணம் சரியோ என்பதை ஆசிரியர் நன்கு அவதானித்து வருதல் வேண்டும்.

ஒரு குழந்தை வரைந்த வரைதல் அக்குழந்தைக்கு உண்மையையும் பூரணதிருப்தியையும் கொடுத்துக் கொண்டிருக்கும், குழந்தை கதைப்பது போலவே வரைதலையும் வரையும். இதனலே அதனுடைய வரைதலும் தொடர்பற்றதாகக் காணப்படும். ஆனல் குழந்தை தான் வரைந்ததை விருப்பத்தோடு விளக்கிக் காட்டும் குழந்தைக்கு ஆசிரியர் படத்தைப்பற்றிய விளக்கம் செய்ய இடம் கொடுத்தல் வேண்டும். இவற்றையெல்லாம் ஆசிரியர் தன்மனதிற் கொண்டு, குழந்தைக்கு வேண்டியளவு உதவி கொடுத்தல் வேண்டும். சில வடிவங்களை அளவுக்கு மிஞ்சிப் பெரிய உருவங்களாக வரைந்து விடுகிறது. உதா

ரணமாக, ஒரு குழந்தை ஒரு மனித உருவம் வரையும் பொழுது, உடம்பிலும் பார்க்க இருமடங்கான தலையையும் மற்றுமுறுப்புக்களையும் அளவின்றி வரைந்து விடுகின்றது. அன்றியும் ஒரு வீட்டின் படத்தை வரையும்போது வீட்டிலும் பார்க்கச் செடிகளை உயரமாக வரைவதையும், நாம் அவதானிக்கலாம். குழந்தைகள் முகப்பார்வையைக் கொண்டே உருவங்களை அமைக்கின்றார்கள். மூளை அபிவிருத்தியுடன் குழந்தைகளின் கற்பனைசக்தி வளர்கின்றது. ஆகையினாலே வயது வந்த பிள்ளைகளுக்கு ஆசிரியரின் வேலை மிகவும் எளிதாகின்றது. கற்பனை வரைதலுக்கு மறதியே பெருந் தடையாக விருக்கின்றது. ஆதலால் ஆசிரியர் தினசரி வாழ்க்கையின் சில சம்பவங்களை வரையச் செய்வதால் மறதி அற்றுப்போக வழியுண்டு. நூல்களில் பார்த்து வரைவதிலும் பார்க்க மேற்கூறிய படி பிள்ளைகள் வரைந்துவருவார்களேயானால் இது குழந்தைகளுக்கு மிகுந்த சந்தோஷத்தையும், ஆர்வத்தையும் ஊட்டும். ஆதலினால் இது விடயத்தில் ஆசிரியரின் சிறந்த உதவி குழந்தைகளுக்குக்கிடைத்தல் வேண்டும்.

இயற்கைக் காட்சிகளைக் கீறும்போது, அவற்றைப்பற்றிய சிறு குறிப்புரைகளை அவர்களுடைய வாழ்க்கையோடு தொடர்பு படுத்திக் காட்டல் வேண்டும். இந்தச் சித்திரங்களிற் பிள்ளைகளுடைய நிலைமையை நாம் நன்கு அவதானிக்கலாம். முதலில் வர்ணச் சுண்ணங்களைக் கொண்டு உருவங்களை நன்கு அமைக்கப் பழகுதல் வேண்டும். பின்புதான் வர்ணம் தீட்டுதலைத் தொடங்கவேண்டும். கடதாசியில் கைபடாமல், தூரிகையின் நாலங்குலத்துக்கப்பால் கையாற்பிடித்து தாராளமாய் அசைத்துத் தீட்டப்பழகவேண்டும். குழந்தைகளுக்குப் பொருட்களை நன்கு பார்த்து, அவதானித்து வரையப்பழக்க வேண்டும். கலைஞன் எப்படிப் பல வழிகளிலும் வேலை செய்கின்றானோ, அதே போலத் தான் குழந்தைகளும் வேலைசெய்வார்கள். குழந்தை தனக்குத்தானே உதவியாகப் பழகிக் கொள்ளவேண்டும். இயற்கையை அப்படியே அவதானித்து அதற்குத் தகுந்தவாறு வரைந்துகொள்ளவேண்டும். பால்விற்போன், மாலைவிற்கும் பெண்கள், கோதுமை ரொட்டிக்காரன் இவ்வாறான சிறு தலையங்களுடன் ஆரம்பிக்கவேண்டும். இவற்றைப் பற்றி ஆசிரியன் பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தனது வீட்டுச் சம்பவங்களை, தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். குழந்தை தானாகச் சித்திரம் வரைந்தால் வடிவச்சித்திரம் தானாகவே அமைந்து வரும். வடிவச்சித்திரம் வரையும் பொழுது உருவங்களையும் பொருட்களையும் மெல்லிய முறையில் அமைத்தல் வேண்டும். ஒன்றுக்கொன்று பொருத்தமாயிருந்தாற்றான் வடிவச் சித்திரம் நன்கு அமையும். ஆசிரியர் குழந்தைகளின் உருவச்சித்திரங்களைப் பார்க்கும் பொழுது இயற்கைக்கு மாறாகவிருந்தாலும் பார்வைக்கழகாகவுள்ளதோவெனக் கவனித்தல் வேண்டும். அவர்கள் வளர வளர நிறங்களை அளவோடு பாவிக்கத்தொடங்குவார்கள். பிள்ளைகளைத் தங்கள் எண்ணப்படி விட்டால், நிறங்களைக் கலத்தலில் அளவை அறிந்து கொள்வார்கள். இயற்கையறிவினால் தாங்கள் வரையப்போவதைப் பற்றிப் பலவிடயங்களைக் கற்றுக் கொள்வார்கள். ஆசிரியர் அவர்களின் விருப்பத்தின்படி விட்டு விட வேண்டும். பிள்ளைகளை விளங்கவைத்து வடிவங்களை அமைத்தால், ஏன் பிழையாகின்றதென்பதை நன்கு உணர்த்துதல் வேண்டும். படங்களின் வீத அளவுகள் பிள்ளைகளுக்கு ஆச்சரியத்தை ஊட்டும் கற்பனைச் சித்திரங்களில் இதை நன்கு உணரவைக்கலாம். படங்களை அமைத்தலிற் பிள்ளைகளுக்கு ஆர்வத்தை ஊட்ட வேண்டும். உருவத்தை வரையும்பொழுது பகுதிகளின் அமைப்பு வீதங்கள், அவற்றின் தொடர்புகள் ஆகியனவற்றை நன்கு விளங்க வைக்க வேண்டும். வாழ்க்கையைக் குறிக்கும் படங்களை அமைத்துப்பழகி, ஆசிரியருடன் அவற்றினைப் பற்றிய விளக்கங்களை நன்கு பெற்றுக்கொண்ட பின்புதான் வரையத் தொடங்கவேண்டும்.

பிள்ளைகள் வரையும்பொழுது ஆசிரியர் பிள்ளைகளின் வரைதலிற் தொடவும் கூடாது. இவ்வாறாய் விடுவதினாற் பிள்ளைகளின் எண்ணம் விரிய வழியுண்டு. இதனை அவர்களின் தொழில்கள் மூலம் நன்கறியலாம். தொழில் என்றாற் சில ஆயுதங்களைப் பாவிக்கும் முறையையும் அதைக் கொண்டு பயிற்சி செய்யும் முறையையும் தான் குறிக்கும். ஆனால் இப்படிப்பட்ட கொள்கை மிகவும் பயங்கரமானது. பிள்ளைகள் தொழிலைச் செய்யும் பொழுது, பயங்கரமற்ற நிலையில் சுதந்திரமாகச் செய்தல் வேண்டும். தொழிலைத் தொழிலிற்காக வேண்டிச் செய்தல் வேண்டும். இதிலிருந்துதான் புதிய புதிய ஆக்கங்களை நாம் காணலாம். ஒவ்வொருவரின் விவேகமும் புதப்புது முறைகளைக் கண்டு பிடிக்கும் ஒரு தொழிலைக் குழந்தை செய்யும் பொழுது, அதற்குத் தேவையான பொருட்களையும் ஆயுதங்களையும் கொடுத்து விட்டு, அத்தொழிலினைச் செய்யும்படி விடுதல் வேண்டும்.

## 33. கைத்தொழில், கற்பனைச் சித்திரம், பலவடிவச் சித்திரம் இவற்றின் தொடர்பு

பலவகைக் கைத்தொழில்களுக்கும், வர்ணச் சித்திரங்களுக்கும் வடிவச் சித்திரங்களுக்கும், உள்ள தொடர்பினை இங்கு சிந்திப்போம். படங்களை ஆக்குதல் வடிவச் சித்திரத்தின் ஒரு பகுதியாக அமைகின்றது. ஆசிரியர்கள் இதனை நன்கு உணரவேண்டும். ஒரு குழந்தை சில நிறங்களைக் கொண்டு ஒழுங்காக அமைக்கும் பொழுது அந்த வடிவங்கள் திரும்பித்திரும்பி வரிசைக் கிரமம் தவறாது அமையும் போது, ஒரு சமமான வடிவச் சித்திரம் தோன்றுகிறது. அக் குழந்தையின் மனநிலை சமாதானமாகவோ, பயங்கரமாகவோ சஞ்சலமாகவோ இருக்குமானால் இந்த எண்ணங்களை இக் குழந்தை வரையும் சித்திரத்தில் காணமுடியும். குழந்தையின் எண்ணங்களை வடிவச் சித்திரத்தில் நன்கு பிரதிபலிப்பதைக் காணலாம். குழந்தை தனது எண்ணங்களை வடிவச் சித்திரத்திலும் பார்க்கப் படங்கள் அமைத்தலில் நன்கு வெளியிடுவதை நாம் அவதானிக்கலாம். இவ்வாறான குழந்தைகள் இப்படிப்பட்ட படங்களை வரையும் போது, கூரிய புத்தியுடனும், களங்கமற்ற மனதுடனும் தாம் எண்ணிய எண்ணங்களைச் சரியான வேலைகளாகச் செய்வதை நாம் காணலாம்.

சில காலங்களில் குழந்தை தான் நினைத்தபடி சித்திரம் அமையாது போகின்றதே என்று எண்ணுகின்றது. ஆனாற் சித்திரத்தை வரையத் தொடங்கும் பொழுது எவ்வித எண்ணங்களும் மனதிற் தோன்றுவதில்லை. கால நியதியிற் படங்கள் வரைந்தபின் நினையாப் பிரகாரமாக அழகிய சித்திரங்கள் வரைய முடிகின்றது. ஒவ்வொரு குழந்தையிடமும் இயற்கை வடிவங்களைக் கொண்டு சித்திரங்களை அமைக்க ஆற்றல் இருக்கிறது. ஆனால் அதை வெளியிடும் முறையையும் விருத்தி செய்யும் முறையினையும் ஆக்கிக் கொள்ளவேண்டும். சில குழந்தைகள் அழகிய வடிவச் சித்திரங்கள் அமைக்கத் தெரிந்தும் கற்பனைச் சித்திரம் வரையாது போய் விடுகிறார்கள். இப்படிப்பட்ட குழந்தைகளின் கற்பனைச் சக்தியை நன்கு விருத்தி செய்யாமையே காரணமாகும். படம் அமைத்தல் வடிவம் அமைத்தலின் இன்னொரு விதம். ஆகையால் வடிவங்களமைத்தல் குழந்தைகளுக்கு மிகவும் இலேசாக இருக்கின்றது. ஆசிரியர்கள் இவை இரண்டினையும் ஒன்று போலக்கருதி குழந்தைகளுக்கு இவ் இரண்டிலும் ஆர்வத்தை ஊட்டி இவ் விரண்டினையும் விருத்தி செய்தல் வேண்டும். சில குழந்தைகளுக்கு கற்பனைச் சக்தி அதிகமிருந்தும் தங்களுடைய எண்ணங்களைப் படங்கள் மூலம் வெளியிட

முடியாது வருத்தப் படுகின்றனர். இவர்களுக்கு வடிவங்களைப் பற்றிய அறிவு. நன்கு வளர்ச்சி பெருது இருக்கின்றது. இப்படியான குழந்தைகளுக்கு, ஆசிரியர் வடிவங்களை அமைத்தலில் வேண்டிய துணைபுரிதல் வேண்டும்.

இவ்வாருகச் சில காலங்களுக்கு குழந்தைகள் பல வகையான வர்ணங் களுடனும். தூரிகையுடனும் காலக்கிரமமாய்ப் பழகிவர, கற்பனைச் சித்தி ரங்களை வரைவதை, தாமாகவே தொடங்கி விடுவார்கள். கைத்தொழில்களுக்கு வடிவச் சித்திரமும், கற்பனைச் சித்திரமும் இன்றியமையாதன. கரைச் சித்திரங் களைக் காணும் பொழுது. அதனுடைய மதிப்பையும் உயர்வையும் நன்கு அறிந்து கொள்ள இயலும், இதனை நாம் பலபடங்களைக் கடதாசியில் வரைந்து விளங்க வைக்க முடியாது. குழந்தைகள் கைத்தொழில்களைச் செய்வதினுல், தன்னம்பிக்கையும் தொழிலை நன்கு இரசிக்கக் கூடிய தன்மையையும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். எனவே குழந்தைகள் கைத்தொழில்களிலும் தன் எண்ணங் களை வெளியிட உதவியளிக்க வேண்டும்.

உண்மையான கைத்தொழில்களைக் கடுதாசியில் வரைந்து காட்டுதல் இயலாது. சில பிள்ளைகள் தொடக்கத்தில் தனித்தனி சித்திரங்களை வரைந்து, ஆசிரியரின் உதவியைக் கொண்டும் தனது சொந்த அனுபவத்தைக் கொண்டும் நல்ல சித்திரங்களை வரையத் தொடங்குகின்ருர்கள். தன்னம்பிக்கையும் தானே வரைய முடியுமென்ற எண்ணமும், மனத்தில் வளர வளர, பலவிதமான கரைச் சித்திரங்களை ஆக்கத் தொடங்கி விடுகின்ருர்கள். தொழிலை ஆக்கி நடத்தும் முறையினுற்ருன் வகுப்பின் போக்குத் தங்கியுள்ளது. ஒரு வகுப்பிலுள்ள பிள்ளை களில் பல வகையான ஆற்றல் வாய்ந்தவர்களை நாம் காணலாம். ஒவ்வொரு வரின் விவேகத்துக்குத் தக்கவாறு அவர்களின் ஆக்கும் தன்மை இருக்கும். குழந்தைகள் ஏகதத்துவம் பெற்றுவிட்டால் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்கள் எண்ணங்களைத் தாமாகவே வெளியிடத் தொடங்கி விடுவார்கள் அந்த நேரத்தில் பிள்ளையின் விருப்பத்திற்கேற்ப இடமளிக்க வேண்டும். வகுப் பினைப் பிள்ளைகளின் ஆற்றலுக்குத் தகுந்தவாறு பிரித்து பகுதி பகுதியாக வேலை செய்ய விடவேண்டும், இவ்விதம் செய்வதால் கைத்தொழில் வகுப்புகளில் பல நன்மைகளைக் காணலாம். ஆதலால் ஒவ்வொரு பகுதியாக ஒவ்வொரு தொழிலையும் செய்ய இடம் அதிகம் வேண்டியதில்லை. அதிகமான ஆயுதங்களும் வேண்டியதில்லை. பிள்ளைகளும் ஆசிரியரும் சந்தோஷமாய் நடமாடவும் கூடும், இம்மாதிரிப் பழகிவிட்டால் ஆசிரியரின் உதவியை நாடாமலே பிள்ளைகள் வேலைகளைச் சரியாகச் செய்ய முடியும். பிள்ளைகள் செய்யும் தொழில்கள் ஏதாவ தொன்றின் தேவைக்கேற்றதாய் அமைய வேண்டும். வரைகின்ற சித்திரங்களை சீலைகளிற் பூப்போடக் கூடிய மாதிரிகளாக அமைக்கலாம். வீடுகளை அலங்க ரித்தற்கு கடதாசி வேலைகளை உபயோகிக்கலாம். வீட்டுக்கு வேண்டிய தள பாடங்களைச் செய்யலாம், சுவர்களிற் சித்திரங்களை வரையவும், சுவர்களை அலங் கரிக்கவும் குழந்தைகளுக்கு ஆர்வமூட்டலாம். இதனுற் குழந்தைகளுக்கு ஆர் வமும் போட்டியும் உண்டாகி, கலையும் கைத்தொழிலும் ஒருங்கே வளர்கின்றன.

இப்படிப் பழகிக் கொண்டால் சித்திரச் சாலைகளுக்கும், நூதனசாலை களுக்கும் சென்று பார்வையிடும் நாட்களில் அவற்றை நன்கு இரசித்து நன்கு மகிழ்ச்சி அடைவார்கள்.

## 34 வகுப்பறையும் சித்திர உபகரணங்களும்

குழந்தை தனது எண்ணங்களை; நல்ல முறையில் வெளியிட; ஆசிரியர் தக்க சூழ்நிலையும் தேவையான பொருள்களையும், கொடுத்து உதவி செய்தல் வேண்டும். தேவையான பொருட்களைத் தெரிந்தெடுப்பதே; முதற்காரியமாகும். வகுப்பறையிற் தொங்கவிடப்படும் படங்கள்; பிள்ளைகளுக்கு உற்சாகத்தை ஊட்டி, அவர்களின் கவனத்தை இழுக்கக்கூடியனவாய்; அமைதல் வேண்டும்.

ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகள், ஒரு பூவை வரைகிறார்களென வைத்துக் கொள்வோம். வகுப்பின் மத்தியில் பூ இருக்கிறது. ஒவ்வொருவரிடத்திலும்; நன்கு உலர்ந்த கலர்ப் பெட்டிகளும், மெல்லிய தூரிகை (பிறஸ்) களும் ஈயலே கினி (பென்சில்) களும் அழிறப்பர் கடதாசிகளும் இருக்கின்றன. குறிக்கப் பட்ட கால எல்லைக்குள்; படம் வரைந்து முடிய வேண்டும். முதற்பத்து நிமி டங்களிலும், ஆசிரியர் கரும்பலகையில் வரைவதைக் கவனிக்கிறார்கள். பின்பு கையில் இறுகப்பிடித்த பென்சிலுடன் தலையைக் கடதாசியின் மேற் சரித்துக் கொண்டு வரையத்தொடங்குகின்றார்கள். அப்படியே பூவின் வெளித்தோற்றத்தை; ஒருவாறு வரைந்து முடிப்பதற்குப் பெருமுயற்சியடைவார்கள். பின்பு ஒரு வாறு வரைந்ததும்; நிறமூட்டத் தொடங்குவார்கள்.


சில மாணவர்களுக்கு; இது மிகவும் விளையாட்டு வேலையாக முடிகின் றது. இது, எதனைக் குறிக்கின்றது என்றால், போதியளவு உபகரணங்களின் மையே. இந்த நிலையில் கவிஞனும் திண்டாடுவான். இவ்வாறான நிலை பிள்ளை களின் முனைப்பை; நன்கு குன்றச் செய்துவிடும். அகலமான கடதாசிகளும்; நீண்ட சுண்ணக்கட்டிகளும்; குழந்தைகள் கீறுவதற்கு மிகவும் இலகுவானது. ஆரம்பத்திலேயே தூரிகை பாவிக்கப்பட வேண்டும். நீளமும் வட்டமுமான (பிறஸ்) தூரிகைகளே சிறந்தன. தூளாகவிருக்கும் வர்ணங்களையே பாவிப்பது நன்று. குழந்தைகளுக்கு வர்ணங்களைத் தக்கவாறு கலந்து கொடுப்பது; ஆசிரி யரின் கடமையாகும். வரைவதற்குத் தேவையான நீண்ட மரப்பலகைகளும்; வெளிச்சமான வகுப்பறையுமே; சித்திரவகுப்புக்குரிய இடமாக அமைதல் வேண்டும். அப்பொழுதுதான் பிள்ளைகள் நன்றாகவும்; சந்தோஷமாகவும், இலே சாகவும், தம்வேலைகளைச் சரிவரச் செய்து முடித்தற்கு ஏற்றதாகும்.

## 35. தற்காலச் சித்திரப் பாடத்துக்குத் தேவையான சாதனங்கள்

குழந்தைகளின் சித்திரங்களுக்கு தற்காலத்தில் பலவகையான சாதனங் களும் வேண்டப்படுகின்றன. அவையாவன:- போஸ்ரல் வர்ணம், போஸ்ரல் கிறேயன் வர்ணம், தூள் வர்ணம், நீர் வர்ணம் இவற்றோடு வரைதலுக்கும் வடிவம மைத்தலுக்கும் தேவையான கடதாசிகள், புதினத்தாள்கள், சஞ்சிகைகள், ஒட்டு வதற்கான பசை, ஈயலேகினி (பென்சில்) ஆடைத்தாள், கோடிடும் கருவிகள், கத்திரிக்கோல், அச்சுருப்பதித்தலுக்கு தேவையானமை, அட்டைத்தாள், நூல் இவற்றோடு உருவமைத்தலுக்குத் தேவையான களிமண், அசைவுறும் சித்திரங் களுக்குத் தேவையான பொருட்கள், உருளை வடிவிலமைந்த மை பூசும் உருளைகள், கண்ணாடித் தட்டு, பூக்கண்ணாடித் துண்டுகள், வாழை மடல், பலவகை வடிவி லமைந்த இலைகள், புற்கள், வைக்கோல் முதலான இவை யாவும் இருந்தாற்றான் இப்புதுமுறைச் சித்திரம் கற்பிக்க இலகுவாயிருக்கும். இவையெல்லாம் சித்திரப் பாடத்துக்கான சாதனங்களும் கருவிகளுமாகும்.

# மதிப்பீட்டுப் பாடங்கள்

## 36. தாதுகோப அமைப்புமுறை (பௌத்தமதக் கலை)




தாதுகோப அங்கங்கள்

தாதுகோபம் மூன்று அங்கங்களைக் கொண்டுள்ளது. அவையாவன (1) அடித்தளம் (2) அண்டம் (3) தூபி என்பன. அடித்தளத்தில் முதலாம் சுற்றுப்பிரகாரம் (உள்வீதி) அமைந்திருக்கும். இச் சுற்றுப் பிரகாரத்தைச் சுற்றிக்கட்டப்பட்ட சுவர் வேதிகை எனப்படும் வேதிகைக்கு வெளியேயுள்ள வெளியை இரண்டாம் சுற்றுப்பிரகாரம் (வெளிவீதி) என அழைப்பர். இரண்டாம் சுற்றுப் பிரகாரத்தைச் சுற்றியும் வேதிகை அமைப்பது வழக்கம். அடித்தளத்தில் மூன்று அலங்கார வரிசைகள் ஒன்றின்மேல் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும். கீழ்வரிசை பிரதட்சண பாதையாகவும் மேலிரண்டும் புஷ்ப பீடமாகவும் உபயோகிக்கப்படுவன. அடித்தளத்தைச் சுற்றி சுவர் (வேதிகை) இருந்தமையால் கீழ் அடித்தளம் சுற்று வீதியாக உபயோகித்தனர். மேலிரு வரிசைகளிலும் புஷ்பங்கள் வைக்கப்பட்டமையால் அவை புஷ்பதானங்கள் என்று வழங்கிவந்தனர். அடித்தளத்தின் மேல் அண்டம் அமைக்கப்படும். இவ்வண்டம் மணிவடிவம் அல்லது "ஹந்தகார" நெற்குவியல் வடிவம் அல்லது தானியக்கார, குடவடிவம் அல்லது ஹெந்தகார, நீர்க்குமிழிவடிவம் அல்லது புலகார, தாமரை வடிவம் அல்லது பத்மகார. நெல்லிவடிவம் அல்லது ஆமலகம் ஆகிய வடிவங்கள் அமைக்கப்பட்டு வந்தன. இலங்கையில் நெல்லிக்கனி வடிவத்திலும், தாமரை வடிவத்திலும் இவ் அண்டம் அமைக்கப்படவில்லை. ஏனைய நான்கு வடிவங்களிலும் தாது கோபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அண்டத்தின் முற்பகுதி முழுவதும் செங்கற்களால் கட்டப்பெற்றுச் சுண்ணம்பால் பூசப்பட்டுள்ளது. இவ்வண்டத்தின் மேல் தூபி அமைக்கப்படும். தூபி ஐந்து அங்கங்களைக் கொண்டது. அண்டத்தின் மேலுள்ள பகுதி "ஹதரஸ் கொட்டுவ" அல்லது சதுர கோட்டம் எனப்படும். அப்பீடத்தின் மேலுள்ள பகுதி "தேவதா கொட்டுவ" எனப்படும். அதன் மேலுள்ள பகுதி "கோட்ட" எனப்படும் கோட்டத்தின் மேல் "சத்த," அல்லது குடை அமைக்கப்படும். அதன் மேல் சிகரம் அமைக்கப்படும் இச் சிகரத்தை "கறல்ல" என அழைப்பர்.

ரூவான்வெலி சாயதாது கோபத்தில் ஆதிகாலத்தில் இரண்டு வேதிகை கள் (சிற்பவேலைப்பாடுடைய சுவர்கள்) இருந்தனவாக மகாவம்சம் என்னும் நூல் கூறுகின்றது. ஹதரஸ் கொட்டுவவைச் சுற்றி அமைக்கப்படும் வேதி கையை முத்தவேதியென்றும் அடித்தளத்தைச் சுற்றியுள்ள வேதிகையை குச்ச வேதியென்றும் வழங்கிவந்தனர்.

தாது கோபத்தின் அடிப்பாகத்திலுள்ள சுற்று வீதியின் நான்கு வாசல் களிலும் மரத்தினுற் செய்யப்பட்ட அலங்காரத் தோரணங்களிருந்ததாகக் கரு தப்படுகின்றது. இவை மிக்க கலைவனப்புவாய்ந்தவை. நான்கு திக்குகளிலும் நான்கு வாகல்கடங்கள் அமைக்கப்பட்டுவந்தன. அநுரதபுரத்திலுள்ள மிரிச வெதி தாது கோபத்திலும் கந்தக சைத்திய தாது கோபத்திலும் மிகப் பழைய வாகல் கடங்கள் காணப்படுகின்றன: வாகல் கடங்களின் கீழ்ப்பகுதி கற்களா லும் மேற்பகுதியாகிய விமானம் செங்கற்களாலும் அமைக்கப்பட்டன. இன்று காணப்படும் மேற்பகுதியாகிய விமானங்கள் அழிந்துவிட்டன. சித்திர வேலைப்பாடமைந்த நீள் சதுரமான உயர்ந்த கற்கள் வாகல் கடங்களினிருபக் கங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் நாகராஜ வடிவங்கள், பூக்களமைந்த கொடி கள், தாமரை மலர்கள் பூரண கும்பங்கள் முதலியன இக் கற்களிற் செதுக் கப்பட்டுள்ளன. விமானத்தின் கீழுள்ள முற்பகுதியில் சிற்பவரிசையில் சித்தி ரங்கள் காணப்படுகின்றன. முதலாம் சுற்று வீதிக்குப் போவதற்கு படிகள் வாகல் கடங்களுக்குப்பின்னுல் அமைக்கப்பட்டிருக்கும்.

வாகல் கடங்களின் முன்னுள்ள இரண்டாம் சுற்றுவீதி மேடைக்கு ஏறி வருவதற்கு படிக்கட்டுக்களையுடைய வாயில்களுண்டு. அவ்வாயில்கள் நான்கு அங்கங்களையுடையன. (1) சந்திரவட்டப் படிக்கல்லு (2) சித்திரங்கள் அமைந்த படிகள் (3) இரு துவார பாலகர்கள் (4) இரு மருங்கிலும் கைப்பிடி வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கீழ்ப் படிக்கு முன் தாமரைப்பூவை நடுவிலும் அதனைச் சுற்றிப் பூக் கொடி வரிசையும், அன்னவரிசையும், யானை, யாளி, எருது, சிங்கம் ஆகிய மிருக வரிசையும் சித்திரங்களாக அமைந்த சந்திரவட்டக்கல் வைக்கப்படுதலும் வழக்கமாயிருந்தன. இச் சந்திரவட்டக்கல் பௌத்த சமய நிலையங்கள் யாவி லும் வைக்கப்படும் வழக்கம் இலங்கையிற் காணப்படும் விசேட அம்சங்களுள் ஒன்ருகும்.


தளத்தின் உயரத்துக்குத் தக்கவாறு படிகளமைந்துள்ளன. ஒவ்வொரு படியிலும் குட்டையான நகைச்சுவை பொருந்திய மனித வடிவங்கள் அல்லது மிருகங்கள் செதுக்கப்பட்டிருக்கும். சந்திர வட்டக்கல்லினிரு பக்கங்களிலும் கை பிடி வரிசைக்கு முன்பாக இரு துவார பாலகர்கள் அல்லது பூரண கும்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும், சில கற்களில் குட்டையான மனித வடிவங்கள் காணப் படும். பெரும்பாலான கற்களில் நாகராஜ துவார பாலக வடிவங்களே அமைக் கப் பட்டிருக்கும். படிகளினிரு மருங்கிலும் கைபிடித் தேறுவதற்காக யாளி, யானை முதலிய மிருகங்களின் தலைகளையுடைய சித்திரக் கைப்பிடி வரிசைகள் அமைக்கப்படும்.

தாதுகோப வீதியில் அல்லது அதற்கண்மையில் புத்தரதும், அவரின் சீடர்களதும் திருவடிவங்கள் வைக்கப்பட்ட விகாரைகளுண்டு. அவை "பிலி மகே" என அழைக்கப்படும். தாது கோபத்தைச் சுற்றியுள்ள கோட்டங்களில் பௌத்த குருமார் வசிப்பதற்கு சங்கிரமம் அமைந்திருக்கும். ஒரு சங்கிரமத்

தில் தாது கோபம், பிலிமகே, தர்மசால (பிரசங்கமண்டபம்), உபதேசமண்டபம் (விரதஇல்லம்), முறகே (காவல் இல்லம்) போதி கோட்டம் (வெள்ளரசு நிலையம்), பொக்குண (குளம்), முதலிய நிலையங்கள் அமைந்திருக்கும். அநுரதபுரத்திலுள்ள பித்தளை மாளிகை (விரத இல்லம்) ஒன்பது மாடங்களையுடையதாகவும் ஆயிரம் அறைகளை உடையதாகவும் பித்தளைத் தகட்டினுல் வேயப்பெற்றதாயுமிருந்து, தற்போது அவை அழிந்தொழிந்தன.

## 37. புத்தரின் சமாதிநிலை. தொலுவில - அநுராதபுரம்

(விமரிசன வெளிப்பாடு)



புத்தரின் சமாதி நிலை — தொலுவில, அநுராதபுரம்

புத்தரின் இருந்த திருவடிவங்கள் பல அநுரதபுரத்திலும் பொல்லநறுவையிலும் காணப்படுகின்றன. அநுரதபுரம் தொலுவிலவிலுள்ள புத்த வடிவம் இலங்கையிலுள்ள புத்த வடிவங்களுட் சிறந்ததாகும். தியான நிலை பொருந்தியதான இவ்வடிவத்தில், பிறநாட்டிற் காணப்படும் புத்தவடிவங்களிற் காணப்பெருத பல சிறந்த அம்சங்கள் காணப்படுகின்றன. அங்க அமைப்புதகவுப் பொருத்தமுடையது, யோக நிலைக்குரிய முகபாவம் நிறைந்தது. அங்கி அமைப்பு நெருங்கிய வரிகளாலமைந்துள்ளது. சாந்தமும் கருணையும் நிறைந்து காணப்படுகிறது. கேச அமைப்பு சுருள் வடிவிலமைந்துள்ளது. சாந்தசொரூபியான புத்தர் தியானத்திலமர்ந்த வடிவுடையது. கண்கள் மூக்கு நுனியைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளது. இப்புத்த வடிவங்கள் 1.ம் 2-ம் நூற்றுண்டில் ஏற்படுத்தப்பட்ட வடிவங்களாகும்.

## 38. புத்தரின் சமாதி நிலே. அவுகன - அநுராதபுரம்

(விம - வெளி)



புத்தரின் சமாதிநிலே — அவுகன அநுராதபுரம்

இது நின்ற திருவடிவ சமாதி நிலேப்புத்த வடிவமாகும். இவ் வடிவத்தின் உயரம் 46அடி உயரமுடையது. நின்ற திருவடிவப் புத்த வடிவங்கள் அநுரதபுரத்திலும், பொல்லநறுவாவிலும் அவுகனவிலும் காணப்படுகின்றன. இது தியாக நிலே பொருந்தியது. வலதுகரம் அபய நிலேயில் அமைந்துள்ளது. அங்கிவரிகள் நெருங்கிய வரியமைப்புடையது. இடதுகரம், ஒருபகுதி அங்கியைத் தாங்கிய வண்ணம் அமைந்துள்ளது. விரிந்த தாமரையின்மேல் நிற்கும் சமாதி நிலேயில் இப் புத்தவடிவம் அமைந்துள்ளது. கேசச் சுருள்களின் மேல் உச்சிக் குடும்பி அமைந்து காணப்படுகிறது. இவ்வடிவத்தின் பின்புறத்தில் உயர்ந்த பாறை அமைந்திருக்கிறது. இதுவும் அநுரதபுரக்காலச் சிற்பமாகும்.

## 39. புத்தரின் நிலை உருவம். கல்விகாரை,- பொல்லநறுவை

(விமர்- வெளி)



புத்தரின் நிலை உருவம் — கல்விகாரை பொல்லநறுவை

இதுவும் நின்ற நிலைப்புத்த திருவடிவங்களுள் ஒன்று. இதனை ஆனந்தா என்றும் வழங்கி வருகின்றனர். நின்ற திருவடிவங்களுள் இதன் முகபாவம் சிறப்பு வாய்ந்ததாகும். இதன் கேசச் சுருள்கள் அழகுவாய்ந்த அமைப்புடையது. அங்கி மடிப்புகள் இரண்டு மூன்று வரி வடிவ ஒழுங்கிலமைந்துள்ளன. இதன் அங்க அமைப்பு தகவு நிலைப் புத்தரைப் போன்றில்லாததினால் இதனை ஆனந்தா என்றழைக்கின்றனர். இச் சிற்பம் கலைவனப்பு வாய்ந்தது. இதுவும் கருங்கல்லிற் செதுக்கி எடுக்கப்பட்ட சிற்பமாகும் இவ்வடிவம் அநுக்கிரகம் அளிக்கும் பாவனையிலமைந்துள்ளது. கைகள் கட்டி நிற்கும் நிலையிலமைந்திருக்கிறது இதுவும் விரிந்த தாமரைமலரின் மேல் நிற்கும் நிலைப் புத்த திருவடிவமாகும். இது12-ம் நூற்றாண்டு காலச் சிற்பமாகும்.

# 40. காவற்சிலை. ரத்தின பிரசாத - அநுரதபுரம

(விமரி - வெளி)




காவற்சிலை இரத்தின பிரசாத — அநுராதபுரம்

அநுரதபுரத்திலும் பொல்லநறுவாவிலும் காணப்படும் காவற்சிலைகள் சிறந்த சிற்பம்சம் பொருந்தியவைகள் ஆனால் அநுரதபுரம் ரத்தினபிரசாத காவற்சிலை, காலத்தால் முற்பட்டது. இச் சிற்பத்தையும் அமைப்பதற்குக் கருங்கல்லை ஊடகமாகக் கொண்டுள்ளனர். அதிகமான காவற்சிலைகள் தாழ்புடைப்புச் சிற்பங்களாக அமைந்துள்ளன.

அநுரதபுரம் காவற்சிலையின் நாகராஜ வடிவம் மிகவுயர்ந்த கலை அம்சத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வடிவிற் காணப்படும் உடை. கிரூடம், ஆபரணங்கள் அழகும் கவர்ச்சியுமுடையதாய் அமைந்து காணப்படுகிறது. இடது கரம் கலசத்தையும் வலது கரம் தென்னம்பூவையும் தாங்கிய வண்ணமமைந்துள்ளது. நாகராஜனின் முகம் கிரூடம் இவற்றை அழகுபடுத்தக் கூடியதாய் ஏழு தலைகளையுடைய நாகத்தின் படங்கள் காவல்புரிகின்றன. காவற்சிலையென்ற கருத்து வெளிப்பாடு மிகுதியாயுடையது காவலுக்குப் பொருத்தமான ஏழு தலை நாகமும் குள்ள மனிதனும் இடம் பெற்றுள்ளன. காவற்கல்லின் நாற்புறச் சட்டங்களும் சிற்ப வேலைப்பாடுகளை மிகுதியும் கொண்டவை. இக்கல் லயவெளிப் பாட்டுச் சிறப்பு வாய்ந்தது.

## 41. இலங்காதிலக விகாரை - கம்பளை




இவ்வடிவம் இலங்காதிலக விகாரையுள் மூலஸ்தானத்தில் உள்ள வடிவமாகும். இது உலோகத்தில் வார்ப்பு முறையிலமைக்கப்பட்ட சிற்பமாகும். இதுவும் இருந்த திருவடிவிலமைந்திருக்கிறது. புத்தபெருமானின் அங்க லட்சணங்கள் பொருந்தியது. புத்தரின் சமாதி நிலை (யோக நிலை) யைக் குறிக்கிறது. கண்டிய காலச் சிற்பமாகும் இடது கால் கீழும், வலது கால் மேலுமாக அமைந்துள்ளது. அங்கியின்

புத்தரின்சிலை இலங்காதிலக விகாரை கம்பளை
(வி - வெ)

வரிகள் அலைரேகை அமைப்புடையன. ஒளிச்சுடர் பொருந்தியது. இவ் வடிவத்தின் பின்புறத்தில் திருவாசி அமைந்துள்ளது. திருவாசியின் மேல் மகரதோரணங்கள் அழகிய சிற்பங்களாக அமைந்து காணப்படுகின்றன.

## 42. புத்தரின் துயில் நிலை — கல்விகாரை பொலன்னறுவை
(வி — வெ)




இவ்வடிவம் பொலன்னறுவை கல்விகாரையிலமைக்கப்பட்ட வடிவமாகும். முதலாம் பரக்கிரமபாகுவினுல் அமைக்கப்பட்டதாகும். இத் துயில் நிலைப்புத்த வடிவத்தைப் பரிநிர்மாணப் புத்த வடிவம் என்றும் அழைப்பர் இவ்வடிவம் 46 அடி நீளம் உடையது. இவ்வடிவம் மிகுந்த கவர்ச்சியுடையது. இலங்கையிற் காணப்படும் சிறந்த சிற்பவடிவங்களுள் இதுவும் ஒன்று. இவ் வடிவத்தின் முகத்தில் இக்கவர்ச்சி தென்படுகிறது. வலது பாகத்திலுள்ள கை, கால், பாதம் என்

புத்தரின் துயில்நிலை கல்விகாரை — பொல்லநறுவை

பன விறைப்பான மரத்த தன்மையுடையன. பரிநிர்மாண நிலைக்குரிய அம்மண வடிவம் பொருந்தியது. அங்கி வரிகளினமைப்பு இரண்டு, மூன்று வரியொழுங்கில் அமைந்துள்ளது. இந்த நிலைக்கேற்ற சிறப்பான சிற்பம்சங்கள் யாவும் ஒருங்கே நிறைந்த சிற்பமாகும்.

## 43. தூபாராம தாகப - அநுராதபுரம்




தூபராமதாது கோபம் — அநுரதபுரம்

இதுவே இலங்கையிற் கட்டப்பெற்ற தூபிகள் எல்லாவற்றுள்ளும் முதன் முதற் கட்டப்பட்டதாகும். இது அசோகன் காலத்தது. அடிவட்டம் 59 அடி விட்டம் கொண்டது. தேவநம்பியதீசனால் முதன்முதற்கட்டப்பட்டது. பின்னர் 1842 க்குப் பின் மணிவடிவில் திருத்தி அமைக்கப்பட்டது. இதில் கருங்கல், செங்கட்டிகள், சுண்ணும்பு முதலான ஊடகங்கள் பாவிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிற்பங்கள். மௌரிய சிற்பமுறையைச் சார்ந்தன. தாகபாக்கள் அடித்தளம், அண்டம், தூபி என்ற முப்பிரிவுகளையுடையது. இத்தாகபாவைச் சுற்றி நான்கு வாகல் கடங்கள் அமைந்துள்ளன. இதன் சுற்றுப்பிரகாரத்தில் சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தூபராமையின் மிகச்சிறந்த உறுப்பு தூபியைச் சுற்றி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள, நான்கு ஒருமைய எழில்பெறு கற்றூண் வட்டங்கள்.இவ்வட்டங்களிலமைந்த கற்றூண் தண்டுகள் ஒற்றைக் கற்களாலானவை. இத்தூண்களுக்குரிய போதிகைகள் புறம்பாகச் செதுக்கப்பட்டு கழுத்துகள் பொளிகளால் தண்டுகளுடன் பொருத்தப்பட்டுள்ளன. இச்சிற்பத் தூண்கள் நான்கு வட்ட அமைப்புகளை உடையன. முறையே 1-ம் வட்டத்தில் 22அடி 10அங். உயரம் கொண்ட 52 தூண்களும், 2-ம் வட்டத்தில் 21 அடி 3 அங். உயரம் கொண்ட

36 தூண்களும், 3-ம் வட்டத்தில் 19 அடி 9 அங் உயரம் கொண்ட 40 தூண்களும், 4-ம் வட்டத்தில் 14 அடி உயரம் கொண்ட 48 தூண்களும் அமைந்துள்ளன. இத்தூண்கள் யாவும் கருங்கற்களாலானவை. இத்தூண்களின் போதிகைகள் யாவும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டவையாகும்.

## 44. வட்டதாகே - மதிரிகிரிய - பொலன்னறுவ

(விம - வெளி)



வட்டதாகே — மதிரிகிரிய — பொலநறுவை

முதலாம் பராக்கிரம பாகுவினால் முன்னர் அமைக்கப்பெற்று பின்னர் நிசங்கமல்லனால் பல சிறப்புக்களுடன் புதுபிக்கப்பட்டது. இலங்கையில் சிற்ப அலங்காரங்கள் பொருந்திய பௌத்த தாகபாக்கள் யாவற்றிலும் முதன்மையானது. இதுவேயாகும். சிற்ப அலங்காரங்கள் அமையப்பெற்றது. இது பொலன்னறுவை சிற்பகாலத்தைச் சேர்ந்தது. இங்குள்ள வாயிற் படிக்கட்டுக்களுள் ஒன்று முறையான சிற்ப அம்சமுடையது. சந்திரவட்டப் படிக்கல், துவாரபாலகர்கள், சித்திரப்படிகள், கைப்பிடி வரிசைகள் ஆகியயாவும் யாவராலும் மதித்துப் போற்றக்கூடிய சிறந்த சிற்பங்களாக அமைந்துள்ளன. இதன் சுற்றுப் பிரகார ஓரங்கள் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட பிரஸ்தளங்களாலமைந்துள்ளன. பிரதட்சண பாதையைச் சுற்றி சிற்பத்தூண்களும் குறுகிய மதில் வரிசையும் அமைந்துள்ளன. இங்குள்ள வாகல் கடம் அதிசிறந்த சிற்ப அமைவுடையது.

## 45. செதுக்கியமரச்சிலை, எம்பக்க - கம்பளை


இத்தேவாலயம் இலங்கையில் மரவேலைப்பாடுகளில் சிறந்த சிற்பங்களுக்கு முதன்மை பெற்ற இடமாகும். இவ்வாலயம் மூன்றும் பராக்கிரமபாகு அரசனால் கட்டுவிக்கப்பெற்றது. இங்குள்ள மரச்செதுக்குவேலைச் சிற்பங்கள் யாவும் அலங்காரச்சிறப்பு மிகுதியும் உடையன. பல்வேறுபட்ட கருத்து வெளிப்பாடுடையன. இங்குள்ள தூண்களிற் காணப்படும் சதுரங்களில் தாழ்புடைப்புச் சிற்பங்கள் மிகுதியும் காணப்படுகின்றன.

இங்குள்ள சிற்பங்களுள் நடனமாதர், மல்யுத்தவீரர், யோகி, இருதலைப் பட்சி, அன்னபந்தம், றபானு அடித்தல், சிங்கம், தேவகன்னியரென அழைக்கப்படும் கின்னரப் பெண் போன்ற சிற்பங்களனைத்தும் மிகச்சிறந்த சிற்பங்களாக காட்சிதருகின்றன. இச்சிற்பங்கள்யாவும் சதுரவடிவினுள் தாழ்புடைப்புச் சிற்

பங்களாகவும் இவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில், அலங்காரக்கரை ஓவியங்களாக, அரும்புவ குந்திரிக்கம், லியவெல்ல, வடிவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிற்பச் சிறப்பைக் காட்டுவதற்காக, கின்னரப்பெண் நடன மாது ஆகிய இரு படங்களும் இங்கு தரப்பட்டுள்ளன.

## 46. மிகுந்தலை, கந்தக சைத்திய தாகபாவின் சிகரம்

### அநுராதபுரம்




கந்தக தாகப வின் சிகரம் (வாகல்கடம்) மிகுந்தலை—அநுராதபுரம்

(விம · வெளி)

இத்தாகபாவைக் கட்டிய அரசன் பெயர் அறியக்கூடியதாயில்லை. கி. மு. 59—50 இருந்த வஞ்சதீசன் சில திருத்தங்கள் செய்தானென்று கூறப்படுகிறது. இங்குள்ள வாகல் கடங்கள் சிறந்த சிற்ப அமைப்புக்கள் உடையன. இதன் நான்கு பக்கங்களிலும் நான்கு வாகல் கடங்களிருக்கின்றன. சாஞ்சித் தாதுகோபங்களைப் பின்பற்றி இலங்கையிலும் தாதுகோபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவும் அநுராதபுரக்காலத்து அமைந்த சிற்பமாகும். வாகல்கடங்கள் யாவும் கருங்கற்றிருப்பணிகளாக அமைக்கப்பட்டுள்ளன. தாகபாவின் விமானம் செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சிற்பங்கள் ஆந்திர பல்லவ குப்த சிற்பமுறையைப் பின்பற்றிச் செய்யப்பட்டவைகளாகும். இன்று இத்தாகபாவின் விமானம் உடைந்த நிலையிற் காணப்படுகிறது.


# 47. சந்திர வட்டக்கல் - அநுராதபுரம்



சந்திரவட்டக்கல் — அநுராதபுரம்

இது பௌத்த கோயிலின் வாகல் கடங்களின் முன்னும், அநுராதபுரம் இராணிமாளிகையின் வாசற்புறத்தும் அமைந்து காணப்படுகிறது. இச்சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாயமைந்துள்ளன. இவை கருங்கல்லிற் செதுக்கியும் வெட்டியும் செய்யப்பட்டனவாகும். இச்சிற்பமும் அநுராதபுரக்காலத்துச் சிற்பமாகும். விரிந்த தாமரை வடிவமும், கொடி, அன்னம், மிருகவரிசை, அக்கினிச்சுடர் என்பன இச்சிற்பத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இது ஒரு உயிர்த் துடிப்புள்ள சிற்பமாகி அமைந்துள்ளது. மிருகவருசையில் கருத்து வெளிப்பாடு சிற்பமாயமைந்து காணப்படுகிறது. யானை, குதிரை, யாளி, சிங்கம், எருது என்பன இம்மிருக வரிசையில் இடம் பெற்றுள்ளன. இக்கல் அரைவட்ட வடிவிலமைந்துள்ளது. இச்சிற்பம் தேவநம்பிய தீசன் காலத்திலேயே இடம் பெற்றுள்ளதாகும்.

## 48. கலசம் — அநுராதபுரம்
(விம - வெளி)



கலசம் — அநுராதபுரம்

இதனைக் கலசம், கடம், புங்கலசம் என்றும் அழைப்பர். இதுவும் கருங் கல்லிற் செதுக்கியும் கொத்தியும் அமைக்கப்பட்டதாகும் விரிந்த தாமரை மலரின் மேல் கலசம் அமைக்கப்பட்டுளது. இது கடவடிவிற் செதுக்கப்பட்டுள்ளது. பலிபீடத்தின் முன் இக்கலசம் வைக்கப்பட்டிருக்கிறது. கலசத்தின் அடியில் பலிபீட அமைப்புடைய கருங்கற் சிற்பமைந்துளது. கலசத்தின் மேல்மூடி சிற்ப வேலைப்பாட்டுடன் அமைந்து காணப்படுகிறது. இதனைப்பூரண கும்பமென்றும் கடம் என்றும் வழங்குகின்றனர்.

## 49. றபாஞ அடித்தல், எம்பக்க - கம்பளை

இதுவும் எம்பக்க தேவாலயத்தில் காணப்படும் செதுக்குவேலைப்பாடுடைய சிற்பங்களுள் ஒன்றாகும். இச்சிற்பம் அக்கால மக்களின் மரபு வழியை காட்டுவதாயமைந்துள்ளது. றபாஞ அடிப்பதில் கருத்துவெளிப்பாட்டுச் சிறப்பு மிகவுயர்ந்த கருத்தாய் எடுத்தாளப்பட்டுள்ளது. இதுவும் சதுரவடிவினுள் அமைந்து காணப்படுகிறது. இச்சிற்பமும் தாழ்புடைப்புச் சிற்பமாகவே செதுக்கப்பட்டிருக்கிறது. றபாஞ அடித்து ரசிக்கும் தன்மையை, மிகுதியும் வெளிக்காட்டுமுணர்வு தென்பட அமைந்துள்ளது. இதன் புறச்சட்டங்களில் கொடி அலங்காரங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. றபாஞவின் உருவமும், அடிப்பவரின் உருவமும், ஒரு சதுரத்தின் பரப்பை நிறைக்கும் வகையில் சிற்பியின் எண்ணம் கையாளப்பட்டுளது. அடிப்பதாலுண்டாகும் தொழிற்பாடும், அடியாலெழுப்பும் ஓசையை ரசிக்கும் முகபாவமும், ஆடை அணிகளும், கேசத்தின் போக்கும், கருத்திஞலுண்டாகும் கைவிரல்களின் ஓசைக்குரிய அசைவழகும், ஐம்புலன்களும் மூழ்கி ரசிக்கின்ற வகையில்; சிற்பியின் தலைசிறந்த கைத்திறனைக் காணு

வதாய், இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இதுவும் கண்டிய காலச்சிற்மாகும். இச்சிற்ப முறைகள் தென்னிந்திய, நாயக்க, சிற்பமுறையைச் சார்ந்த சிற்பங்களாகும். இவ்வேலைப்பாடுகள் 14 - 18ம் நூற்றுண்டினுள் அமைந்தவையாகும். இதுவும் மரபுவழிச் சிற்பம் என்பதற்கறிகுறியாக, இன்றும் இவ்வழக்கம் பௌத்தர்களிடையே நிலவிவருகிறது..

## 50. காதலர் - இசுருமுனிய - அநுராதபுரம்

( விம — வெளி )




காதலர் — இசுருமுனிய அநுராதபுரம்

இச்சிற்பம் குப்த சிற்ப முறையைத் தழுவி அமைந்ததாகும். இது உயிரோவியத் தொனிப்பு நிரம்பிய கருத்து வெளிப்பாடுடைய சிற்பமாகும். கருங்கல்லிற் செதுக்கி உருவாக்கப்பட்டதாகும். காதலர்களின் சிறப்பம்சங்கள் நிறைந்து காணப்படுகிறது. இதனையமைத்த சிற்பியின் கருத்துக்கள் நிரம்பவும் காணப்படுகின்றன. இதுவும் தேவநம்பியதீசன் காலந் தொடக்கம் ஒன்பதாம் நூற்றுண்டினுள் நிறைவுபடுத்தப்பட்டதாகும். இச்சிற்பம் இசுருமுனியச் சுவரின் வெளிப்புறத்தில் காணப்படுகிறது. இலங்கையின் சிறந்த சிற்பங்களுள் இதுவும் ஒன்ருகும். இது நாலாம் நூற்றுண்டிற் செய்யப்பட்ட சிற்பமாயிருக்கலாமென திரு. ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் கருத்து வழங்கியுள்ளார்கள். இது கற்பனை வெளிப்பாட்டு அழகுச் சிற்பமாயமைந்து காணப்படுகிறது.

# 51. சிவன்கோயில் - பொலன்நறுவை

### (விம - வெளி)



சிவன்கோயில் — பொல்லநறுவை

இதனை இரண்டாம் சிவாலயம் என்றும் அழைக்கின்றனர். இவ்வாலயம் 1-ம் இராஜ ராஜ சோழனால் கட்டுவிக்கப்பட்டதாகும். இதன் பெயர் வானவன் மாதேவி ஈசுரமுடையார் எனவும் அழைப்பர். இங்குள்ள சிற்பங்கள் யாவும் சோழ சிற்ப முறையைப் பின் பற்றியமைக்கப்பட்டதாகும். இவை முழுவதும் கருங்கற்களால் கட்டப்பட்டுளது. மிகப்பழைய சோழர் கட்டிடம் இதுவேயாகும். இது 11-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் கட்டப்பட்டதாகும். இவ்வாலயம் இராச ராசனின் மகன் 1-ம் இராசேந்திரனால் முற்றுவிக்கப்பட்டது. இங்கு இராசேந்திரனதும் ஆதி இராசேந்திரனதும் வரலாற்றுச் சாதனம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் 1020 – 1042 வரையார்கும் இதை இந்துமத கோவிலமைப்பு முறையில் அமைத்துள்ளனர்.

## 52. சிகிரிச் சுவர்ச் சித்திரங்கள் - அநுராதபுரம்

(விம - வெளி)




சிகிரிச்சுவர்ச்சித்திரங்கள் — அநுராதபுரம்

இவை 5ம் நூற்றுண்டில் காசியப்பனின் காலம் (479—497) ஈரச்சுதை யோவியமாகும், ஆங்கிலத்தில் பிரஸ்கோ என அழைப்பர். இவ்ஓவியங்கள் சமயசம்பந்தமானவை யென்றும்,காசியப்பனின் மனைவிமார் என்றும், அரசகன்னியரும் பாங்கியருமென்றம், தேவகன்னியர்களென்றும் கருதுகின்றனர். இதில் இருபத்தொருபெண்களின் உருவம் தனித்தும் சோடியாகவும் தீட்டப்பெற்றுள்ளன. பெரும்பாலும் அசந்தா ஓவியத்தைச் சார்ந்தவை. இங்குமலர் கொண்டு செல்லும் மாதுவின் ஓவியம் அசந்தாவின் பதினேராவது குகை ஓவியத்தை ஒத்ததெனக் கூறுகின்றனர். இங்குள்ள மலரேந்திய மாதுவின் ஓவியம் சிறந்த ஓவியமாகும். இவ் ஓவியங்கள் இரேகைகள் மூலம் தீட்டப்பெற்றவை குறிப்பிடத்தக்கது. இதற்கு உபயோகிக்கப்பட்ட வண்ணங்கள் இலங்கையிற் தயாரிக்கப்பட்டதென்றே கருதுகின்றனர்.

இலங்கைப் பாறைகள் கட்டிட அமைப்புகள் நிறுவுவதற்கு அதிகளவு பயன்படவில்லை. பொலன்னறுவைக்கல்விகாரை இம்முயற்சியில் பயனளித்துள்ளது. இந்தியாவின். ஓவியங்கள் குடவரைக் கோயில்களின் சுவர்களிலும் சித்திரிக்கப்பட்டுள்ளன இலங்கையில் சிங்கள ஓவியங்கள் பாறைப்பரப்புகளிலேயே உள்ளன. ஓவியங்கள் சமயத்தைப் போற்றுவதற்காகவும், கோயில்கள் தாகபைகள், விகாரைகள் இவைகளை அணி செய்யும் வழக்கோடு இயைந்தன.

சிகிரியில் ஓவங்கள், (பறவைகள்) நிலமட்டத்திலிருந்து 500 அடி உயரத்திலுள்ளன. இங்கு குறைந்ததொகை ஓவியங்களேயுண்டு. அசந்தாவில் எண்ணற்ற ஓவியங்களுண்டு. இங்குள்ள ஓவியங்கள் பொதுவான பண்புடையன. ஓவியக்கலை முறையொன்றினைக் கையாண்டவர்களின் ஒப்பற்ற உழைப்பு, திறன், சிந்தனை ஆகியவற்றின் பயனால் உதித்தவை இங்குள்ள சுதை ஓவிய முறை அசந்தாவைப் பின்பற்றிச் செய்யப்பட்டிருப்பினும் இச்சுதை ஓவிய அம்சங்கள் சிறந்தனவென்றே கூறுகின்றனர். மற்றக் கலைமுறைகள் அசந்தா. பாக்கு, சிற்றண்ணவாயில், எல்லோரா ஆகிய இடங்களிலுள்ளவாறே இங்குமுள்ளன.

வண்ணங்கள் தொனியில் இலேசானவை. சிகிரியில் வண்ணங்களுக்கு கேசின் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றனர். இவ் ஓவியங்களில் மேனிவண்ணம் தெள்ளிய பொன்மஞ்சளிலும் ஒளிப்பச்சையிலும் தீட்டப்பெற்றுள்ளது. பொன்மஞ்சளும் சிவப்பும் அசந்தாவைப் போன்றது. சிங்கள ஓவியங்கள் யாவிலும் இதுதொடர்ந்து வந்துள்ளது. சிகிரியவண்ணங்கள் ஒருபுறம்பான கரட்டுத்தன்மை காணப்படுகிறது. இங்கு ஒத்த நிறமயக்கும் சாந்தமும் காணமுடிகிறது. இங்குள்ள உருவமைவிளைவு செவ்வயில் புலப்படநிற்கிறது. இருள்வண்ணத்தையும் மென்வண்ணத்தையும் அடுத்தடுத்தமைத்து முகவழகை உயர்த்திக்காட்டுவதற்காய, இந்திய மரபிலுள்ள ஒர்கலைநுணுக்கு உபாயமாகும். இங்குள்ள பின்னணி (பிற்களம்) இலங்கையில் வேறெங்கும் கையாளப்படவில்லை.

ஈனகளைத் தூரிகையின் திட்டமான தீட்டலினால், உறுதியாக்கியமை இச்சுதை ஓவியங்களிற் காணப்படும் பொதுவாயமைந்த பண்பாகும். இது உருவங்களுக்கு ஒருவரையறை அளித்தது. இவ்வுறுதியான இரேகைகள் உருக்களின் மேல்வரைகளையும் அழுத்திக்காட்டின. இந்த உபாயத்தினாற்தான் சிங்களஓவியம் அசந்தாவிலும் பாக்கிலுமுள்ளவற்றைவிட நிகரற்றதென்ற உண்மை காணப்படுகிறது. ஆனால் இப்பண்பு பொதுவான ஒரு மரபிற்குரியதாகும். இங்குள்ள கோட்டு வரைவியல் உச்சநிலைஎய்தியது. தூரிகையின் திட்டமான தீட்டல்கள், ஆழ்கருத்தினை உணர்த்துவனவாயிருந்தன.

ஓர் உருவத்தின் முக்கியகூறுகளை உணர்ந்து, திறனுடைச்சில வரைகளாக்கி, அதைஉடனே படைக்குமளவில் வண்ணமயக்கமும், இயல்பும் நன்முறையில் கருத்திற் கொள்ளப்பெற்றன உருவாக்கும் பண்பிலும், புடைப்பவிளைவிலும் வண்ணங்கள் பல்வகைப் பட்டவாறே, கோடுகள் உணர்த்தும் கருத்துக்களும், உணர்த்து திறனிலும் பல்நயம் கொண்டுவிளங்கின.

உருவங்கள் பல்வகைப் பருமன்களில் வரையப்பெற்றிருந்தன. ஆனால் உயிர்ப் பருமனுள்ளவையும், அவற்றிலும் சிறிதுபெரியவையுமே சிறந்த ஓவியங்களாகும். சிறந்த உருவங்களில் வட்டவடிவினையுணர்த்தும் எழிலுடை மேல்வரைகள், ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் நுண்தீட்டல்கள், மானத நோக்கினைத் தெரிவிக்கும் வரையறையான கோடுகள் நன்முறையில் இணைக்கப் பெற்றுள்ளன.

சிகிரிச்சுதை ஓவியங்களின் முகத்தில் புருவங்கள் ஒரு அலைவரையிலோ இருவேறுவளை கோடுகளிலோ வரையப்பட்டிருந்தன. அசந்தா ஓவியங்களில் இவ்வாறில்லை. சிகிரியா ஓவியங்களில் கண்கள், நாசிகள், இதழ்கள் முலைகள் ஒத்தமுறையில் வரையப் பெற்றிருந்தன. விரல்களின் கணுக்கள், நீண்டமூக்குகள், எல்லோராவிலுள்ளதைப் போல ஒத்திருந்தன. இதனால் இப்பண்பு இரண்டிற்கும் ஒரு பொதுவான பண்டை மரபிலிருந்து பெறப்பட்டிருக்கலா மெனக்

கூறுகின்றனர். யாண்டு முகத்தில் முக்காற்பாகத்தைக் காட்டுவதில் ஒருபற்றிருக்கிறது. அழகிய முகப்பார்வைகளுமிருந்தன. இங்குள்ள ஒவ்வொரு உருவின் நிலையும் கைகளும், அசைந்தாடும் உடல்களும் இவ் ஊருடி முறையில் அமைந்தன. விரல்கள் பாக்கிலுள்ளவற்றைப் போலமைந்தன. கைகள் மலரேந்திய வண்ணம் அமைக்கப்பெற்றன. இவ்ஓவியங்களில் துடியிடையும், உருண்டு மிகைப்படுத்திய முலைகளும், அகன்றுகனத்தஇடுப்பும், தடித்து நொய்த்த இதழ்களும், காதளவோடிக் கூர்ந்த இமைகளும், புருவங்களுமமைந்த நூல்மரபு இலட்சியமே இக்கலை முறையாகும்.

எல்லாச்சுதை ஓவியங்களிலுமுள்ள மரபுக்கலை உருவங்களில் உயர் குடிப்பிறப்பும், உடலெடுப்பின் பெருமையுமுள்ளன. எனவே இக்கலை அக்கால அரசவைக்குரியதென்றே கூறவேண்டும். தலைஅணிகள் கூம்பி உயர்ந்தவடிவம் உண்மையான விபரங்கள் செழித்த மலர்ச் சேர்ப்புக்கள் ஒரு பொது மரபிற்குரிய அம்சங்களைக் கொண்டிருந்தன. இதைவிட உடலணிகள் பொதுவான ஒரு கலாச்சாரத்திற் குரியனவாய் அட்டியல்கள், பாரிவட்டத் தோடுகள் காப்புகள், தொடிகள் கணையாழிகள் ஒருபொது மரபிற்குரியவை. தொடிகளும் காப்புகளும் சிகிரியிலில்லை. இங்குள்ள மார்புக்கச்சு ஓர் உள்ளூர் வகையினது. அழகுற அமைந்த வண்ணக்கோலங்கள் கொண்ட இடுப்பாடையும் இறுகப்பிடித்த சட்டைகளும் சிகிரிமகளிரின் இயற்கை உருவங்களை அழகுபடுத்தின.


## 53. கூரைச்சித்திரம் - தம்புல்ல

இங்கு காணப்படும் ஓவியங்கள் சமய சம்பந்தமானவை. இச் சித்திரங்கள் இரு பரிமாணம் கொண்டு தீட்டப் பெற்றவையாகும். இவற்றிலுள்ள நிற உபயோகம் தட்டையாகத் தீட்டப்பெற்றவை இவை கீழைத்தேயப்பாணி அமைப்பைச் சார்ந்த சித்திரங்களாகும். இச்சித்திரங்கள் தொடர் சித்திரங்களாக அமைந்துள்ளன. இங்கு பாவிக்கப்பட்ட வர்ணங்கள் உலர் சுதை வர்ணங்களாகும். இவை தூரநோக்கு முறையற்ற சித்திரங்களாகும். இச்சித்திரங்களும் கண்டிய காலச் சிற்பங்களாகவே கருதப்படுகின்றன. இவ்வகையான கூரைச் சித்திரம் இலங்கையில் இங்குதான் காணப்படுகிறது. இவை பழைய ஓவியங்களாகும். கி. மு. முதலாம் நூற்றாண்டிலிருந்த வத்தகாமினி அபயன் என்னும் அரசன் இக்குகைக்கோயிலை அமைப்பித்தான் பின்னர் இங்குள்ள ஓவியங்கள் நிசங்கமல்லனாற் புதிப்பிக்கப்பட்டன.



## 54. சரித்திரச் சுவர் ஓவியம் - தொகல் தொடுவா கண்டி

(விம - வெளி)



கண்டி புத்த — தந்த ஆலயம்

இங்கு தீட்டப்பெற்ற ஓவியங்கள் சமய சம்பந்தமானவை. இவ் ஓவியங்கள் இருபரிமாணம் கொண்டவையாயும், அலங்காரச் சிறப்பு வாய்ந்தவையாயும் நிறங்கள் தட்டையாகவும் தீட்டப்பெற்றவை. இரேகைகள் மூலம் கருத்து வெளிப்பாட்டுச்சிறப்புடையன. இவ்ஓவியங்களில் கதையின் போக்குக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் பின்னணி வண்ணங்களாக சிவப்பு, கரும்சிவப்பு நிறங்கள் உபயோகித்துள்ளனர். இச்சித்திரங்கள் அநேகமாகத் தொடர் ஓவியங்களாயமையப் பெற்றன. இவற்றுக்கான வண்ணங்கள் உலர் சுதை ஓவிய முறையில் தீட்டப்பட்டுள்ளன. வண்ணங்கள் கலப்பு நிறங்களாயினும் தூய நிறங்களாகவே காட்சியளிக்கின்றன. இங்கு நான்கு வரிசைகளில் நாலு ஜாதகக் கதைகள் தீட்டப்பட்டுள்ளன. நாலாவது வரியில் (வசந்தரம்) வெள்ளை யானையைப் பரிசளித்தல் தீட்டப்பெற்றுள்ளது. இங்குள்ள ஓவியங்களை நோக்குமிடத்து, அக்காலமக்களின் பண்பாடு, பாரம்பரியம். வாழ்க்கை முறை இவற்றை நாம் அறியக்கூடியதாகவிருக்கிறது. அக்காலத்துக் குரு, சீஷமுறை, தானம் வழங்குதல், முதலியனவும் தீட்டப்பெற்றுள்ளன. இங்குதீட்டப் பெற்ற சித்திரங்களெல்லாம் இரேகைச் சித்திர முறையை வெளிக்காட்டுகின்றன. வெற்றிடங்களை நிரப்புவதற்கு தாமரை அலங்காரங்களை வரைந்து அழகுபடுத்தியுள்ளனர். இங்கு சுவர்ச்சித்திரங்களாகவே தீட்டியுள்ளனர். இதனை வரைந்த சிங்கள ஓவியரின் பெயர் தேவறகம்பொல சில்வறட்ண உஞன்சே இவர் ஒரு புத்த பிக்கு ஆவர்.

## 55. நடனமாது, எம்பக்க - கம்பளை
(விம - வெளி)



செதுக்கியமரச்சிலை நடனமாது — எம்பக்க. கம்பளை

இச்சிற்பமும் கம்பளையிலுள்ள எம்பக்க தேவாலயத்துள் செதுக்கப்பட்ட சிற்பங்களுள் ஒன்ருகும். இச்சிற்பத்தில் இன்னும் மரபுவழிக் காணக்கூடிய கண்டிய நடனத் தொனிப்புநிலை, அமைந்து காணப்படுகிறது. நடனமாதின் ஆட்டத்தினுல் ஏற்படுகின்ற நிகழ்வுகளை, அலங்காரப் பின்னணியுடன் காணும் வண்ணம் இச்சிற்பம் அமைந்துள்ளது. ஆட்டத்தின் தொழிற்பாட்டை, அழகுறக் காட்டுதற்காயும் வளியின் வேகத்தையும், வேகத்தாலசைந்தாடும் கேசச் சுருள்களும் அசைவினிலே அசைந்தாடும் முன்தானை நிலையழகும், நடனத்திற்காய் அழகுற உடுத்திருந்த ஆடைவரியழகும், ஆடைக்குகந்த கரையழகும், ஓசைக்குகந்த நடனமாதின் நிலையழகும், காதோடிணைந்து முகத்தையும் கேசத்தையும் அணி செய்யும் காதணியும், மேனிக்கும் முகத்துக்கும் அழகு செய்யும் ஆபரணங்களும் இவையெல்லாம் ஒருங்கிணைந்த நடனமாதின் ஆட்டத்தை ஒருசதுரத்துள் அமைத்துத்தந்த சிற்பியின் கருத்துக்கும் கைவன்மைக்கும், கண்ணின் கூர்மைக்கும், தவறற்ற நிதானச் செதுக்கலுக்கும், இச்சிற்பம் எடுத்துக்காட்டாயமைந்துள்ளது. சிற்பியின் நிதானமான கருத்தும் திட்டமான செதுக்கலும் கூரான ஆயுதத்தின் தன்மையுமே இங்கு காட்சிதரும் ஓவியமாகும்.

# 56. கின்னரப்பெண், எம்பக்க - கம்பளை

(விமரிசன வெளிப்பாடு)



செதுக்கிய மரச்சிலை — கின்னரப்பெண்

இத்தேவாலயத்தில் செதுக்கப்பெற்ற இச்சிற்பம் மேற்புறம் பெண்ணின் உருவமாகவும் கீழ்ப்புறம் பறவை உருவமாகவும் அமைந்து காணப்படுகிறது. இதுமிக அழகுவாய்ந்த சிற்பமாகும். தாழ்புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப் பெற்றது. இதுவும் ஒருசதுரத்துள் அமையப்பெற்றது. இதன் நாற்புறச் சட்டங்களும் சிறந்த செதுக்கு வேலைப்பாட்டுச் சிற்பங்களாய் அமைந்துள்ளன. பெண்ணின் உருவம் அமைந்த ஏனைய இடைவெளிகளில், அழகிய லியவெல (வள்ளிக்கொடி) வடிவங்கள் கண்ணைப்பறிக்கும் வகையில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கருத்து வெளிப்பாடும், செதுக்கப்பெற்ற ஓவியத்தின் இணையற்ற அழகும், மிகுதியும் வெளிக்காட்டுகிறது. இப்பெண்ணின் காதில் வட்டமாயமைந்து காதளவோடு மூடிநிற்கும் அலங்காரக் காதணியும், கழுத்தில் மார்பளவே டிணைந்து, அழகிற்கு அழகு செய்யும் ஆபரணங்களும், உடம்போடு இறுகப் பிடித்த ஆடையும், கையோடு ஒட்டிய தெடையல்களும், சிற்பியின் கருத்தில், எண்ணற எழுந்த திட்டமான கை தவறாத, கைவண்ணச் செதுக்கினால் உருவாக்கப் பெற்ற ஓவியமாகும். மேற்புறமைந்த பெண்ணுக்கும், கீழ்ப்புறமமைந்த பறவைக்குமுள்ள வேறுபாட்டைக் காண்போர், எளிதிலுணராதவாறு இருபகுதிக்குமுள்ள கருத்து வெளிப்பாட்டு இணைப்பு மிகமிகச் சிறந்த வேலைப்பாடாகும், இத்தேவகன்னியரின் கைவிரல்களின் லளிதப்போக்கும் சிறப்பாயமையைப் பெற்றது. சிற்பி தனது கருத்தாழத்தையும், கைத்திறனையும், கட்புலனையும் ஒருங்கமைந்த உறுதியான செதுக்கலினால் காண்போர் மயக்குண்டுணரும் வகையில் இச்சிற்பம் காட்சி தருகிறது.

## 57. கண்டிய கால ஓவியங்கள்

தொகல், தொறுவாவிலும், தம்புல்லாவிலும், றிதிவிகாரையிலும், களனிப் புத்தவிகாரையின் பழைய ஓவியங்களிலும் காணப்படும் ஓவியங்கள் கண்டிய காலத்து ஓவியங்களாகும். இங்குள்ள ஓவியங்கள், ஓர் புத்த பிக்குவும் ஓவியருமாகிய, தேவறகம் பொல சில்வரட்ண உஞ்ஞன்சே என்பவரால் வரைப்பட்ட ஓவியங்களாகும். இதில் தொகல் தொறுவாவில் வரையப்பட்டவை சுவர்ச் சித்திரங்களாகவும்; டம்புல்லாவில் குகைக் கூரைச்சித்திரங்களாகவும் வரையப்பட்டுள்ளன. தொகல் தொறுவா சுவர் ஓவியங்களில் நான்கு வரிசைகளில் நாலு ஜதாகக் கதைகள் தீட்டப்பட்டுள்ளன. நாலாவது கதையில் வதசந்தரம் என்னும் வெள்ளை யானையைப் பரிசளித்தல் சிறப்பு வாய்ந்த ஓவியமாக அமைந்து காணப்படுகிறது. இவை அலங்காரச் சிறப்பு வாய்ந்தவைகளாகவும், அக்கால மக்களின் பாரம்பரிய பழக்க வழக்கங்களை அறியக்கூடியதாயும், குருசீஷய முறையையும் தானம் வழங்கும் பாரம்பரிய பழக்கத்தையும் வெளிக்காட்டுகின்றன. தொகல் தொறுவாவின் சரித்திரச்சுவர் ஓவியம் பற்றிய கூற்றுக்கள் இங்கும் பொருத்தமுடையதாகும்.

## 58. களனிப்புத்த விகாரை




களனிப் புத்த விகாரை

இருபதாம் நூற்றாண்டில், தென்னிந்திய சிற்ப முறையையும், கண்டி நகர்க் காலச் சிற்பமுறையையும் பின்பற்றிக் கட்டப்பட்ட ஆலயமாகும். இவ்வாலயத்தில் கண்டி நகர்க் கால ஓவியங்களும், இருபதாம் நூற்றாண்டில் தீட்டப்பெற்ற ஓவியங்களும் முறையே பழைய புதிய கட்டிடங்களில் அமைத்திருக்கின்றன. சிற்ப சித்திர அலங்காரவேலைப்பாடுகளுக்கு இவ்வாலயம் பிரசித்தி பெற்ற தலமாக அமைந்துள்ளது.

## 59. கண்டிய நடனம்

(விம - வெளி)




கண்டிய நடனம்

இவ் நடனம் பௌத்தக் கலைகளுள் ஒன்றாய் பண்டுதொட்டே வளர்ந்து வருகிறது. இக்கலையில் பௌத்த மக்கள் இன்றும் மிகுந்த நாட்டமுடையவர்களாய் இக்கலையை வளர்த்து வருகிறார்கள். இந்துக்களிடையேயும் பல திறப்பட்ட கிராமிய நடனங்கள் வளர்ச்சியடைவதுபோலக் கண்டிய நடனமும் ஒரு வகைப்பட்ட பாணி அமைப்புடையதாகும். இக்கலையை மேல்நாட்டவரும் விரும்புவதை நாம் காணக்கூடியதாகும்.

# இந்து மத ஆலயங்கள்

## 60. திருக்கோயிலின் கர்ப்பக் கிருக அமைப்பும் அங்கபிரிவுகளும்



இந்துமத திருக்கோயிலின் கருப்பக்கிருக அமைப்பு முறை

இந்து மத கருப்பக்கிருக, கட்டடங்களை மூன்று வகையாக அமைக்கின்றனர். அவையாவன:-

(1) உத்திரமட்டவேலை
(2) இரட்டைப் பஞ்சாங்க வேலை
(3) முகபத்திர வேலை என்பன

மேலே காட்டிய படம் உத்திரமட்ட வேலைப்பாடுடைய கட்டடமாகும். பொதுவாக மேற்கூறிய மூன்றுவகை அமைப்பினையுமுடைய கர்ப்பக்கிருக கட்டங்களையும் கீழ்வரும் ஆறுபெரும் பிரிவுகளுள் அடக்கலாம். அவையாவன:

(1) உபபீடம் (2) அதிர்ஷ்டானம் (3) பாதவர்க்கம் (4) பிரஸ்தளம் (5) சிகரம் (6) தூபி என்பன

படத்திற்காட்டியவாறு உபபீடம்:- இது (1) பிரதமவரி (2) உபானவரி (3) கண்டவரி (4) பண்டிகை வரி என்னும் பிரிவுகளையுடையதாகும்.

(2) அதிர்ட்டானம்:- இது (5) கனதிவரி (6) அதிர்ஷ்டானவரி என்னும் பிரிவுகளையுடையது.

(3) பாதவர்க்கம்:- இது (7) வேதிகைவரி (8) கால்வரி (9) போதிகைவரி (10) தேவகோட்டம் முதலிய பிரிவுகளையுடையது

(4) பிரஸ்தளம்;- இது (11) உத்திரவரி (12) கம்புவரி (12) எழுதகவரி (14) கபோதவரி (15) யாளவரி (16) கூண்டு ஆகிய பகுதிகளையுடையது.

(5) சிகரம்:- இதனை விமானம் என்றும் அழைப்பர். இது (17) கண்டவரி (18) இடைக்கட்டு நாகபந்தவரி (19) பண்டிகை அல்லது யாளிவரிமானம் (20) மாலைக்கட்டு (21) கண்ணுடிக்கட்டம் (22) மகாபத்மம் என்னும் பகுதிகளையுடையது.

(6) தூபி;- இது (23) கண்டம் (24) அரடா (25) குடம் (26) அலர் (27) கதலிப்பூ, ஆகியபகுதிகளைக் கொண்டது,

விமான அமைப்பை மூல மூர்த்திகளுக்குத்தக்கவாறு மூன்று வடிவங்களில் அமைக்கின்றனர். அவையாவன:-

(1) நாகரம் (சதுரம்) (2) திராவிடம் (எண்கோணம்) (3) வேஸரம் (வட்டம்) என்பன,

சிற்பிகள் கருப்பக்கிருக அமைப்பின்போது கருங்கல், சுண்ணும்புக்கல், செங்கல், சாந்து, சீமேத்து. மணல், உலோகம் இவற்றை ஊடகங்களாக உபயோகிக்கின்றனர்.

## 61. சிற்பியும் திருக்கோயில் அமைப்பும்

சிற்பி அழகையும், கலையுணர்வையும் கருதுவதுடன், தலைமுறை தலைமுறையாக தனக்குவரும் சிற்பஞானத்தை கைப்பொருளாகக் கொண்டு, சாத்திரத்தேர்விலும், சமயக்கோட்பாடுகளிலும் சிறந்த அறிவைப் பெற்று; அவ்வறிவுக்கமைய ஆகமங்களிலும்; கணக்கற்ற மந்திரங்களிலும் மேம்பட்டவனுய்; சிற்பநூல்களிற் சொல்லிய விதிகளின் படியே திருக்கோயில்களை அமைத்து வந்தான். சிற்பி அறிவாற்றலும் கடவுட் பக்தியுமுடையவன. இன்று சிற்பிகளால் கோவில் அமைப்பதற்குப் பிரமாணமாகக் கொள்ளப்படும் நூல்களாவன, காசிபரால் எழுதப்பட்ட "காசியபகம்" மயனுல் எழுதப்பட்ட "மயமதம்" மானசரரால் எழுதப்பட்ட "மானசாரம்" என்னும் சிற்ப நூல்களாகும்.

மனித உடலென்னும் கோட்பாட்டைக் குறித்தே திருக்கோயில் அமைக்கப்பட்டதாகும். கோயில்களின் திருச்சுற்றுமதிலும்; கோபுரமும். வாயிலும கொடித்தம்பமும், பலிபீடமும், நந்தியும். கருப்பக்கிருகமும் அதன்மேல் விமானமும் உடையனவாகும்: திருக்கோயிலின் சுற்றுபிரகாரங்களில் விஞயகர், சோமஸ்கந்தர், சுப்பிரமணியர், வைரவர்தட்சணுமூர்த்தி, நடேசர்; சூரியன், சந்திரன் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி. சண்டேஸ்வரர் முதலிய மூர்த்திகளும் இவறுடன் சமயகுரவர் நால்வரும் இடம்பெறுவர். மூலமூர்த்தியாகிய சிவலிங்கத்தின் சந்நிதியில் மண்டபத்தின் இடப்பக்கமாக உமாதேவியாருக்குரிய கோயிலிருக்

கும். அதனை அக்கிர மண்டபம் அல்லது கௌரிமண்டபமென அழைப்பர். இவ் வாறின்றித் தேவி கோயில் உள்ள ஆலயங்களும் அமைப்பர்.

கோயிலினுள்ளே திருமஞ்சக்கிணறு, மடைப்பள்ளி, களஞ்சியஅறை, வாகனசாலை, நீராடுதற்குரிய தீர்த்தத் திருக்குளம், வசந்த மண்டபம், யாகசாலை உற்சவ மூர்த்திகளாகிய பஞ்சஉலோக விக்கிரக மூர்த்திகள் எழுந்தருளியிருக் கும் சபா மண்டபம் அல்லது கலியான மண்டபம் விழாக்கள் நடைபெறுதற் கான கண்டாமணி மண்டபம் முதலியனவும் அமைந்திருக்கின்றன. சில ஆல யங்களில் நந்தவனவும், தலவிருட்சமும் அமைந்திருக்கும்,

திருக்கோயிலின் பிரதான மூர்த்தியிருக்குமிடம் கற்பக்கிருகம், அல்லது மூலஸ்தான மண்டபம் எனப்படும். இதனைக் கருவறையெனவுமழைப்பர். இதைத் தொடரந்து இராசகோபுரம் வரையில் இடைஇடையே ஒன்றன் பின் ஒன் ருக பல மண்டபங்களுள; அவையாவன;- (1) அர்த்த மண்டபம் (2) அந்த ரான மண்டபம் (மணிமண்டபம்) (3) மகா மண்டபம் (4) நிருத்தமண்டபம் (சோபன மண்டபம்) (5) ஸ்தம்பமண்டபம் (உருத்திர கோபுரமண்டபம்). (6) அனுமணி மண்டபம் என்பனவாகும். ஆலயச் சூழலையும் செல்வநிலையை யும் பொறுத்தே ஆலயம் பெரிதாகவும் சிறிதாகவும் மண்டபங்கள் கூடவும் குறையவும் அமைக்கப்படுகின்றன.

## திருக்கோயில் மண்டபங்கள்

கருவறை அல்லது மூலஸ்தானத்துக் முன் அர்த்த மண்டபம் அமையும் இதில் தீபக்கால், தூபக்கால் முதலான பூசைச் சமான்கள் வைப்பார்கள். இம் மண்டபத்தின் நடுவே, அபிடேக, நைவேத்திய காலங்களில் சுவாமியைத் தரி சிக்கலாகாதவாறு திரைச்சீலை தொங்கவிடப்படும். பூஜகர் இத்திரையின் உட் பக்கமாக நின்று காலப்பூசை ஆராதனைகளைச் செய்வர்.

அர்த்தமண்டபத்தின் முன் மகாமண்டபம் அமைப்பர். இதில் மூலமூர்த் திக்கெதிரில், நித்தியாக்கினிஓமகுண்டமும், தாமிரமாகிய நந்தி பலிபீடங்களும் தர்ப்பணம் என்னும் தரிசனக் கண்ணுடி அமைக்கப்படும். மகா மண்டபத் தின் முன் ஸ்தம்பமண்டபம் அமையும். இதில் நந்தி, பலிபீடம், கொடிமரம், ஆகியவை அமைக்கப்படும். ஆராதனைக்காலங்களில் சனங்கள் இம்மண்டபத் தில் நின்று தரிசனம் செய்வதால் இதனைத் தரிசனமண்டபமெனவும் அழைப்பர்,

## கோவில் சுற்றுமதில் அமைத்தல்

இதனை ஆவரணங்கள். திருச்சிற்றுமதில்கள் எனவும் அழைப்பர். இந்த மறைப்பு இறைவனின் ஐந்தொழில்களிலொன்ருய மறைத்தலைக் குறிப்பதாகும். திருக்கோவில்களில் ஒன்றுதொடக்கம் ஐந்துவரை மதில்கள் ஒற்றைப்படையில் அமைப்பர். மூலமூர்த்தியை மாத்திரம் கொண்டுள்ள சிறுபிள்ளையார் கோவில் களில் ஒரு சுற்றுப் பிரகாரம் மட்டுமே அமைப்பர். இது தூல சரீரத்துள் அமைந்த உயிர்போல, ஒருபிரகாரம் மாத்திரம் அமைப்பர். நமது தூல சரீரம் சூக்ம சரீரம், காரண சரீரம் ஆகிய மூன்றையும் ஒப்ப அமைக்கப்படுவது, மூன்று பிரகாரம் அமைந்த கோயில்களிலாகும். நமது உடலின் ஐந்து பகுதிகளையும் காட்டுவதாய், அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம். விஞ் ஞான மயகோசம், ஆனந்தமயகோசம் என்ற ஐந்து பிரகாரமும் அமைப்பர்.


சிற்பிகள் திருக்கோயிலை நமது உடம்பாக ஒப்பிட்டு விமானம் அல்லது தூபியை தலை உச்சியாகவும், சிவலிங்கத்தை முகமாகவும் அர்த்தமண்டபம் கழுத்தாகவும், துவாரபாலகர் நிற்குமிடங்கள் இரு தோளாகவும், கொடிமரம் வரையுள்ள பகுதியை மூண்டமாகவும். நந்தி கொப்புளாகவும், பலிபீடம் குய்ய

மா்கவும், கொடிமரத்தானம் மூலாதாரமாகவும், கொடிமரம் முதுகுத் தண்டாக வும், உயர்ந்து நிற்கும் வாயிற்கோபுரம் திருஅடிகளாகவும் இவற்ருேடு நடராசர் இதயமாகவும், அம்பிகை மணிபூரலாகவும், ஆகம முறைகொண்டு அமைத்த னர். பிரதான மூர்த்திகளின் இருப்பிடங்கள் நாம் திருநீறுதரிக்குமிடங்க ளாகும்.

### கோபுரம் அமைத்தல்

கோபுரம் ஆண்டவன் உறையும் கோயிலின் திருப்பாதங்களாக அமைக் கப்படுதலால் கோபுர வணக்கம் பெருமானின் திருவடிகளை வணங்குவதை ஒப் பதாகும். கோபுரவணக்கத்தின் பயன் ஆன்மா மலநீக்கம் பெற்று சிவத்தன்மை பெறுதலாகும். இதனாலன்ருே சிற்பி நெடுந்தொலைவில் தெரியக்கூடியதாய் கோபுரம் அமைக்கின்றனர். இதனால் இறைவனின் நினைவு எந்தநேரமுமிருக்கும். அருட்பொலிவுடன் காட்சி தரும். இதனைத் தூலலிங்கம் எனவும் அரசகோபுர மெனவும் அழைப்பர். இதில் ஆதாரம், நிராதாரம், மீதானம் முதலிய நிலைகளை யும் அண்டங்களின் அடுக்குகளையும், அண்டங்களின் புவனங்களையும். அண்ட புவன நாயக நாயகிகளையும், அமைத்துகாட்டுவதாய் அமைத்துள்ளனர். வாயில் கள் ஒன்றன் மேல் ஒன்ருக ஒற்லறைப்படையாகவுமிருக்கின்றன. வாயில்கள் மூன் ருகவும், ஐந்தாகவும், ஏழாகவும் அமைத்தனர். எத்தனைவாயில்களிருந்தாலும், ஆண்டவனிடம் செல்வது கோபுரவாயில் வழியாகும். பொறி புலன்கள் வழிச் செல்லாது ஒன்றித்த மனம் வேண்டும் என்பதைக் காட்டுவதற்காய். சிற்பியினு லமைக்கப்பட்டதாகும்;

## 62. திருக்கேதீஸ்வர ஆலயம் - மாதோட்டம்




திருக்கேதீஸ்வரம் மாதோட்டம்.

இவ்வாலயம் முதலாம் இராசராசன் காலத்தில் அழகு பெறக்கட்டப் பட்டது. இது தேவாரப்பாடல் பெற்ற சிறந்ததலமாகும். அக்காலத்தில் இங்

குள்ள சிற்பங்கள் யாவும் பலவிதமான. சிற்பச் சிறப்புக்களுடன் விளங்கின இதற்கு அங்கு கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் சான்றுபகருகின்றன. இதன் சிறப்புக்கள் பற்றிச் சரித்திரங்கள் கூறுகின்றன. இடைக்காலத்தில் இவை சிதைந்த நிலையிலிருந்தன. தற்போது அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் புதுப் பித்தமமைக்கப்பட்டதாகும். இத்திருப்பணிச் சிற்பங்கள் யாவும் கருங்கற்களிற் செதுக்கப்பட்டவைகளாகும். மிகப்பழைய காலத்தில் சிற்பத்தில் வல்ல ஸ்தபதிகளுக்கு இத்தேவாலயகோட்டம் உறைவிடமாயிருந்திருக்கின்றதென்றும், 12-ம் நூற்றுண்டில் பாண்டிய சிற்பமுறையில் இவ்வாலயம் கட்டப்பட்டதென்றும் அறியக்கிடக்கின்றது.

## 63. நல்லூர்க் கந்தசுவாமி கோவில்



நல்லூர் கந்தசுவாமி கோயில்

இவ்வாலயம் நல்லூர்ப்பதியில், ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு என்னும் பெயருடன் செண்பகப் பெருமாள் என்பான், யாழ்ப்பாணத்தை கி. பி. 1461க்குப் பின் 17 வருடங்கள் ஆட்சி செய்தான். அக்காலத்தில் இவனே இவ்வாலயத்தைக் கட்டுவித்தான். இதன் பின்னர் 1478 ல் சிங்கைப்பரராசசேகரன் என்பான் அரசனுனன் இவன் நல்லூர்த்திருப்பதியை சைவ ஆலயங்களும், மாடமாளிகைகளும் நிறைந்த நகரமாக்கினுன். இவன் இந்நகரின் வடபாலில் சட்டநாதர் திருத்தளியையும், கிழக்கில் வெயிலு கந்தப்பிள்ளையார் ஆலயத்தையும், தென்பால் கைலாசநாதர் கோயிலையும், மேற்கில் வீரமாகாளியம்மன் திருப்பதியையும் அழகுறக் கட்டுவித்தான். கந்தசாமி கோவிலுக்கருகில் ஒரு திருக்குளம் அமைத்து அதற்கு யமுனுரி என்னும் பெயரிட்டான்.

இவ்வாலயங்கள் யாவும் போர்த்துக்கேயரால் தகர்க்கப்பட்டதால் இவ்வாலயங்களின் சிற்பச் சிறப்புக்கள் பற்றி நாம் அறியக் கூடியதாயில்லை. தற்போதுள்ள சிற்பங்கள் யாவும் பிற்காலத்திற் செய்யப்பட்டவையாகும். அக்காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்பெய்தியிருந்த சிற்பமுறை, விஜய நகரச் சிற்ப முறையாகும். எனவே சட்டநாதர் கோவிலின் திருவடிவங்கள் யாவும் இம் முறையைச் சார்ந்தன என்று கருதுகின்றனர். நல்லைநகர்ச் சிற்பங்களும் சட்டநாதர் கோவில் வடிவங்களை ஒத்தவையாகும்.

வல்லிபுரத்திலும், கந்தரோடையிலும், நாகர்கோவிலிலும், நல்லூரின் ஏனைய பகுதிகளிலுமுள்ள சிற்பங்கள் இக்காலத்தவையாக இருக்கலாமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். தற்போது இவ்வாலயத்தில் காணப்படும். மஞ்சம், கைலாயவாகனம் சிறந்த அழகிய மரவேலைப்பாடுகளையுடையவை. பழைய சிற்பங்கள் கருங்கற் சிற்பங்களாகும். பிற்காலத்தில் உலோகம், மரம் சீமேந்து, சாந்து இவைகளால் அழகிய வேலைப்பாடுகள் நிகழ்ந்துள்ளன. முருகனின் திருவடிவம் உலோக வேலைப்பாடுடைய அழகியவார்ப்பு முறைச் சிற்பமாகும். இதனால் இத்தலம் பக்தகோடிகள் நிறைந்த அழகிய தலமாகக் காட்சி தருகின்றது,


## 64. கந்தசாமி கோயில் – மாவிட்டபுரம்



மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்.

எட்டாம் நூற்றாண்டில் கலிங்க தேசத்து அரசனாகிய உக்கிரசிங்கன் என்பவன், நாகதீபத்திற்கு அரசனானான். இவன் சோழஇராச குமாரியை மணந்திருந்தான் இவனின் மனைவியான மாருதப் புரவீகவல்லியின் விருப்பத்திற்கிணங்க இக் கோயிலைக் கட்டுவித்தான். இது கீரிமலைத்தீர்த்த நன்னீர் ஊற்றுக்கு அணித்தாயுள்ள மாவிட்டபுரத்தில் கட்டப்பட்ட ஆலயமாகும். இவ்வாலயத்தின் வாயிற்கோபுரம் மிகவுயர்ந்த அழகிய திருப்பணியாகக் காட்சிதருகின்றது.

## 65. பொன்னம்பல வாணேஸ்வரம் — கொழும்பு




பொன்னம்பல வாணேஸ்வரம் கொழும்பு.

இவ்வாலயம் சிறந்த கருங்கற் திருப்பணிகளாக அமைந்த சிற்பவேலைப் பாடுகளையுடையது. இது இருபதாம் நூற்றுண்டில் தென்னிந்தியாவில் வழங்கி வந்த சிற்பமுறையில் அமைந்தசிற்பமாகும். இதன் சுற்றுப்பிரகாம் முழுவதும் கருங்கல்லினுல் வேயப்பட்ட மண்டபமாக அமைந்துள்ளது. இச்சைவ ஆலயத்தின் தரிசனமண்டபம் சிறந்தசிற்ப வேலைப்பாடுகளுடன் அழகுற அமைந்துள்ளது. அநேகமான இந்துமக்கள் வணங்கும் தலமாயமைந்துள்ளது.

## 66. திருக்கோணேசர் ஆலயம் — திருகோணமலை

இவ்வாலயம் கருங்கற்களால் குளக்கோட்டன் என்னும் அரசனுல் கட்டுவிக்கப்பட்டது. இக் கோவிலுக்குரிய தான திருகோணமலையிற் கண்டெடுத்த வடிவங்களின் சிற்ப அமைப்பிலிருந்து, இவ்வாலயம் பாண்டியர் காலத்துச் சிற்பமுறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். கோணேசர் ஆலயத்திற்கு இராவணனுடன் தொடர்புள்ள கதைகள் கூறப்படுகின்றன. இவ்வாலயம் பற்றிய தேவாரப் பாடல்களைக்கொண்டு 7ம் நூற்றுண்டுக்கு முன்னரே இவ்வாலயம் சிறப்புச்சிறப்புடன் விளங்கியமை தெரியவருகிறது. இதுவும் ஒரு சைவ ஆலயமாகும். இன்றும் இவ்வாலயம் பிரசித்தி பெற்ற தலமாக விளங்குகின்றது. ஜடவர்மன் வீரபாண்டியன் காலத்தில் கோணேசர் ஆலயம் மிகச் சிறப்புடன் விளங்கியது. பின்னர் இக்கோவிலை இடித்து எடுத்த கற்களாலேயே திருகோணமலைக் கோட்டை கட்டப்பட்டது. கோட்டை வாசலின் இருமருங்கிலுமுள்ள கற்களில் இச்சித்திரங்கள் இன்றும் காணப்படுகின்றன.

# 67. நாகபூசணியம்மன் கோவில் – நயினுதீவு




நயினுதீவு நாகபூஷணி அம்மன் கோவில்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தென்மேற்கிலுள்ள "சப்த" தீவுகளுள் நயினுதீவும் ஒன்ருகும். இத்தீவுகளுடன் ஆதியில் தமிழ் நாட்டவர் வாணிபம் செய்துவந்தனர். இங்குள்ள தீவுகளுள் வரலாற்றுச் சிறப்புமிக்கது நயினுதீவு ஆகும். இங்கு ஆதியில்வாழ்ந்த நாகர் என்னும் இனத்தவரால் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டதெனக் கருதுகின்றனர். ஈழத்தலங்களுள் இதுவும் சிறப்புடன் விளங்கிய தென்பதற்கு பலசான்றுகளுள. தமிழ்நாட்டவர் யாத்திரை மேற்கொண்டதலங்களுள் இதுவும் ஒன்ருகும். இவ்வாலயம் பறங்கியரால் அழிக்கப்பட்டு மீண்டும் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

தற்பொழுது இவ்வாலயம் பாண்டிநாட்டுச் சிற்பமுறையைப் பின்பற்றி கர்ப்பக்கிரகமும், விமானமும், மண்டபங்களும், வாயிற்கோபுரமும், சிற்பதூண்களும், அமைக்கப் பெற்றுள்ளன. இவையாவும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடனமைந்துளது. இக்கட்டட சிற்பங்கள்யாவும் காரைக்குடி சிற்பவல்லுனர் திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியாரால் அமைக்கப் பெற்றதாகும்.

ஈழத்துச் சிறந்த சிற்பலங்கார வேலைப்பாடுடைய மரச்செதுக்கு வேலைத் தேர்களுள்' இங்குள்ளதேரும் ஒன்ருகும். இத்தேர் சிறந்த சிற்பம்சம்பொருந்தியது. இது தமிழ்நாட்டு நாகர் கோயிலைச் சேர்ந்த சிற்பவல்லுனர் திரு. எஸ் குமாரசாமி ஆசாரியார் அவர்களால் அமைக்கப் பெற்றதாகும் இத்தேரில் நாகம் பூவுடன்வந்து நாகேஸ்வரியைப் பூஷித்த கதையை இச்சிற்பி வியத்தகு முறையிற் திறம்படச் செதுக்கியமைத்துள்ளார். இங்கு சைவத் தமிழர்களும், பௌத்த சிங்களர்களும் பெருமளவில் வழிபட்டுச் செல்லுகின்றனர்.

## செல்வச்சந்நிதி – தொண்டமானாறு



செல்வச்சந்நிதி கோவில் தொண்டமனாறு

---

### மேலைத்தேசத்து சிறந்த ஓவியர்கள்
### (The World of Rembrandt)

1. மைக்கல் ஆஞ்சலோ — Michel Angelo
2. லியனார்டோ டாவின்சி — Leonardo Davinci
3. கோயா — Coya
4. வான்கொக் — Vangogh
5. பிக்காசோ — Picasso
6. வெலாஸ்க்குவெஸ் — Velazquez
7. மனெற் — Manet
8. புறுக்கெல் — Brueghel
9. சிசான் — Cezanne
10. திலாக்குறேயிக்ஸ் — Delacroix
11. கெயின்ஸ்பாரோயுகா — Gainsborough
12. டியூறெர் — Durer
13. றூபென்ஸ் — Rubens
14. ரிற்ரியன் — Titian
15. ரேணர் — Turner
16. டியூகார்ப் — Duchamb
17. ஜியோற்ரோ— Giotto
18. மற்ரிசி — Matisse
19. வெமியர் — Vermeer
20. றேடின் — Rodin
21. பேனினி — Bernini

இவர்கள் இருபதாம் நூற்றாண்டின்முன் மேலைத்தேசத்தில் வாழ்ந்த ஓவியர்களாகும். இவர்களது ஓவியங்கள் உலகப்புகழ் வாய்ந்தவை. இவர்கள் ஓவியர்களாகத் திகழ்ந்ததுமன்றி சிலர் ஆக்கவேலைகளிலும், புதிய கண்டு பிடிப்புகளிலும் ஈடுபாடுள்ளனர். ஓவியர்கள் வருங்காலத்தையும் உணர்ந்த வர்கள். ஞானிகள், சிருஷ்டிகள் என்றும் கூறினும் மிகையாகாது. சித்திரம்

கற்பிக்கும் ஆசிரியன் தாம் கற்பிக்கும்போது மாணவரிடம் நல்ல ஓவியங்களைக் காட்டுவதும் அவை பற்றிய கலை விமர்சனத்தை மாணவரிடம் பெறுவதையும், மேலும் தமது விமர்சன வெளிப்படை மாணவரிடம் கொடுப்பதையும். யாவரும் விரும்பாமலில்லை.

எனவே ஆரும் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் இவர்களைத் தெரிந்துகொள்வதால் உயர் வகுப்புக்களில் கற்பதற்கு இவை பலனளிக்கும்.

சித்திரம் கற்பிப்போருட் சிலர் கீழ் வகுப்புகளில் சித்திரத் சரித்திரம் கற்பிக்கவேண்டுமா? என வினு எழுப்புகின்றனர். மாணவர்கள் ஓவியர்களின் வாழ்க்கை வரலாற்றினை படிக்காவிட்டாலும் அவர்களின் ஓவியத் தன்மைகளையும், திறமைகளையும் ஒவ்வொருவரின் சொந்த மூறையையும் தெரிந்திருப்பதை எவரும் விரும்பாமலிருப்பதற்கில்லை. இதற்கு கற்பிக்கும் ஆசிரியர் வழிகாட்டியாக அமைவேண்டும். இவ்விதம் கற்பதால் மாணவர் உயர் வகுப்புகளில் படிக்கும் போது இதன் பயன் தெரியவரும்.

### பரீட்சை மாதிரி வினுக்கள்

## அழகியற்கலை (சித்திரம்)

### வினுத்தாள் 1

வகுப்பு: 6 ஆம் தரம் — நேரம்: 1 மணி

1. சிவப்பையும் மஞ்சளையும் சமமாகக் கலக்கும் போது உண்டாவது எவ் வர்ணம்?
2. ஒரு நிறத்தைக் கடின நிறமாக்குவதற்கு அதில் எந்த நிறத்தைக் கலந்து கொள்வீர்?
3. பச்சை நிறத்திலிருந்து நீலநிறத்தை அகற்றியபின்னர் மிகுதியாகும் நிறம் எது?
4. மூலவர்ணங்கள் மூன்றில் நீலத்துடன் மற்ற இரு வர்ணங்கள் எவை?
5. செங்குத்து இரேகை நேர் ரேகை, வளை இரேகை, கோண இரேகை இவற்றுள் நீர் விரும்பும் ஒரு இரேகையை வரைந்து தருக.
6. நீரின் சலனத்தை (அசைவைக்) காட்டும் இரேகையின்பெயரைக் குறிப்பிடுக.
7. ஒரே வரிசையில் சம அளவுக்கு ஒன்ருக நாட்டப்பட்ட கம்பங்களின் அருகில் நின்று பார்க்கும் போது தூரத்திலிருக்கும் கம்பம் பெரிதாகவா, சிறிதாகவாதோன்றும்?
8. சித்திரத்தில் ஈரளவைக்கும் மூவளவைக்கும் உள்ளபேதம் என்ன?
9. மூவளவுப் படங்களில் காணப்படும் அளவுகள் யாவை?
10. சித்திரக்காரன் தனது கருத்துக்களை எவைகளைக் கொண்டு வெளிப்படுத்துகிருன்?

11. அச்சுப்பதித்தலுக்குத் தேவையான சில ஊடகங்கள் எவை?

12. அச்சுருப்பத்தலில் லினோ அட்டையை மாணவர் உபயோகிப்பதேன்

13. கலப்புச் சாதனச் சித்திரம் என்றால் நீர் என்ன விளக்கம் கொண்டிருக்கிறீர்?

14. ஒரு சித்திரம் மதிப்புப் பெறுவதற்கு அங்கு சித்தி பெறவேண்டியது எது?

15 நாம் அணியும் உடுப்புக்களில் அலங்கார உருக்களை ஏன் உபயோகிக்கின்றோம்?

16. அலங்கார அலகுகளை ஏதேனும் ஒழுங்கு முறையில் மீட்டும் மீட்டும் அமைப்பதில் அங்கு காணப்படுவது என்ன?

17. கிரமமுறை அலங்கார ரூபம் என்பது எதனை?

18. சித்திரத்தில் காணப்படும் சமநிலை என்பது பற்றி உமது கருத்தென்ன?

19. சமநிலை சமச்சீரற்ற சித்திரமென்பதை எதைக்கொண்டு தீர்மானிப்பீர்?

20. மொனோக்கிறபிக் முறை எவ்வித பதிப்பு முறையைக் குறிக்கிறது?

21. அன்னாசிப்பழம் பலாப்பழம், றம்புட்டான் பழம், தோடம்பழம் இவற்றுள் அலங்காரரூபத்தை சுயமாகக் கொண்ட பழம் எது?

22. சித்திரக்காரர் சமநிலை, சமநிலையற்ற சித்திரங்களுள் எந்தச் சித்திரத்துக்கு மதிப்பளிக்கின்றனர்?

23. துரித வரைதல் என்றால் என்ன?

24. நீர் ஒரு துரிதவரைதற் சித்திரத்தை எவ்வாறு பூரணமாக்குவீர்?

25. நிறக்கடதாசிகளையோ அன்று சஞ்சிகையிலுள்ள நிறப்படக் கடதாசிகளையோ கிழித்தொட்டி ஆக்கப்படும் சித்திரத்தின் பெயர் என்ன?

26. களிமண்ணில் உருவம் அமைக்கும் போது நீர் அமைத்த ஒரு உருவத்தில் எத்தனை அளவுகளிருக்கும்?

27. பாலர் உருவங்களை மிக இலகுவாகச் செய்வதற்கும் உதவும் சாதனம் எது?

28. ஒரு சித்திரத்தை நீர் பார்த்தவுடன் அது எவ்வகைச் சாதனச் சித்திரமென்பதை எவ்வாறு உணருவீர்?

29. பல வகைச் சாதனச் சித்திரங்களும் எவை?

30. அதிகமாகத் தேவைப்படும் வாழ்த்திதழ் பிரதிகளை அமைக்கும் போது அதிக பிரதிகளைப் பெறக்கூடியதாக எந்தப் பதிப்பு முறையை நீர் கையாளுவீர்?

31. சரித்திரம், விஞ்ஞானம், மொழி, சங்கீதம் இப்பாடங்களுள் சித்திர பாடத்துடன் அதிக தொடர்புடைய பாடம் எது?

32. சித்திர வரைதலுக்கு உபயோகிக்கும் கடதாசி எத்தனை அளவுகள் கொண்டவை?

33. களிமண்ணிற் செய்யப்பட்ட பறவையொன்றின் உருவைக் காட்டும் பொருளில் காணப்படும் அளவுகள் எத்தனை?

34. "சிறுர் உயர் சித்திரங்களை வரைதல் கூடும்" இக்கூற்றின் உண்மையை உணர்ந்து. சரியா? பிழையா? என்பதை எழுதுக?

35. நீவிர் காணுத செயலொன்றை மனதால் படைத்து வரையலாம் இதன் உன்மையென்ன?

36. கொடிய ஒரு மனிதனை வரையும் போது அங்கு முச்கியமாகக் காட்ட வேண்டிய கருத்து யாது?

37. அச்சுப்பதிப்பு வேலைக்குரிய சாதனங்கள் எவை?

38. களியால் செய்யப்பட்ட உருவம் அதிக நாட்கள் பாவிக்கப்படுவதற்கு அதை யாது செய்வீர்?

39. நீர் ஒரு சித்திரத்தைப் பார்த்து அது எவ்வகை அமைப்புச் சித்திரமென சொல்ல முடியுமா? எவ்வாறு?

40. சுவரோவியங்களுக்குப் பிரசித்தி பெற்ற இடம் எது?

41. புராதான காலத்தில் சுவரோவியங்களின் பின்னணி நிறம் எது?

# அழகியற்கலை (சித்திரம்)

## விஞத்தாள் 2

வகுப்பு: 7 ஆம் தரம் — நேரம்: 1 மணி

1. நீர் சித்திரம் வரைவதில் எதற்கு அதிக மதிப்பளிப்பீர்?
2. கறுப்பு வர்ண்ம் தயாரிப்பதற்கு விளக்குப் புகையினுற் சேரும் ஒட்டறையை மூலப்பொருளாக உபயோகிக்கலாமா?
3. மூலவர்ணங்களை உணர்த்தும் மறுபெயர்கள் எவை?
4. மூலவர்ணங்கள் எவை?
5; புராதன காலத்தில் சிவப்பு நிறத்தை பின்தளமாக எந்தச் சுவர் ஓவியங் களுக்குப் பாவித்தனர்?
6. இலங்கையின் புராதன காலச் சுவரோவியங்களில் பாவிக்கப்பட்ட நிறங்களை இலங்கையிலா? வெளிநாடுகளிலா? தயாரித்தனர்?
7. சிங்கள புதுவருடத் தினத்தன்று "றபாஞ அடித்தல்" என்ற விடயத்தை வரையும் போது அதில் காணப்படும் கருத்து யாது?
8. பெருக்கெடுக்கும் ஆற்றங்கரையில் வாழும் "ஒரு கிராம வாழ்க்கைத் சித் திரத்தில்" நீர் காணும் கருத்து நிலைமை யாது?
9. வெளிர்ந்த பச்சை நிறத்தை ஆக்குவதற்கு உதவும் நிறங்கள் எவை?
10. மூங்கிற்புதிர் அல்லது கரும்புக்கூட்டம் இதனை இரேகைச் சித்திரமாய் வரையும் போது, இரேகைகளையா? அல்லது வர்ணங்களையா? முக்கியமாய்க் கொள்வீர்?

11. கோடுகளுள் மென்கோட்டுக்கும் தடித்த கோட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை எந்த வரைதலில் காணமுடியும்?

12. இரேகைச் சித்திரவரைதலின்போது அச்சித்திரப் பண்பை எழுப்பக்கூடிய இரேகைகள் எவை?

13. இரேகை வரைதற் சித்திரங்களை ஆக்கக்கூடிய சிறந்த சாதனங்கள் என்பதில் உமது பூரணகருத்து யாது?

14. துரித சித்திர வரைதலினல் எதிர்பார்க்கப்படுவது எதை?

15. இலங்கையில் அலங்கார அமைப்பு வேலைகளில் பிரத்சிதிபெற்ற இடம் எது?

16. ஏதேனும் ஓர் அலங்கார அலகு கிரமமுறையாக இடத்துக்கிடம் அமைப்தால் அங்கு தோன்றுவது யாது?

17. உருளைக் கிழங்கில் அச்சுரு அலங்காரம் செதுக்கும் போது பின்வருவனவற்றுள் மிக இலகுவானது எது?

    (i) வளை இரேகை வடிவம் (ii) நேர் இரேகை வடிவம்
    (iii) கோண இரேகை வடிவம் (iv) அலைரேகை வடிவம்

18. சீத்தை அலங்காரரூபம் அமைப்பதில் பின்வருவனவற்றுள் எது சிறந்ததெனக் கொள்வீர்?

    (i) தனி இதழ வடிவம் (ii) கோட்டுவடிவம்
    (iii) இலையும் பூவும் காணும் வடிவம் (vi) வெண்டிக்காய் வெட்டுமுகவடிவம்.

19. பற்றிக் வேலைக்கு உபயோகிக்கும் சாதனங்களுள் பின்வருவனவற்றுள் ஒன்றை எழுதுக?

    (i) தூள்வர்ணம் (ii) நீர் வர்ணம்
    (iii) மெழுகு (iv) போஸ்ரல் வர்ணம்.

20. வேசாக்கூடு, அலலது வெளிச்சக்கூடு அமைப்பதற்கு வேண்டிய பிரதான சாதனம் எது?

    (i) ஈர்க்கில் (ii) குருத்தோலை
    (iii) சௌகடதாசி (iv) மூங்கில் குச்சிகள்.

21. உருவம் அமைத்தலினல் அல்லது சிற்பங்களில் நாம் பெறக்கூடியது ஈரளவுக்கைத் தேர்வா? அல்லது மூவளவுக் கைத்தேர்வா? என்பதை எழுதுக.

22. உருவம் அமைப்பதற்கு ஏற்ற சாதனம் எது?

23. அநுராதபுரிச் சமாதிச் சிலை என்பது, அலங்காரமரச் செதுக்கு வேலையா அல்லது பட ஆக்கமா? அல்லது சிலையா என்பதை எழுதுக?

24. ஆறும் தர உருவம் அமைத்தல் பாடங்களில் கற்பனைக்கருவியின் உருவம் அமைப்பதற்கு இலகுவான சாதனம் எது?

25. ஆருந்தரத்தில் புற உருவ அமைப்பில் 'நடிகன்'' உருவத்தை அமைக்க எவ்வுபகரணத்தை உபயோகிப்பீர்?

26. ஒரு சத நாணயத்தைக் கடதாசியின் கீழ்வைத்து ஈயலேகினியால் அழுத்தும் போது பெறப்படும் பிரதி எவ்வகை வேலையைச் சேர்ந்தது?

27. தனி அச்சுப்பிரதியைப் பெறும் முறையை எப்பிரின்ட் என அழைப்பீர்?

28. "கிறபிக்" முறையில பெறப்படும் பிரதிகட்கும் "மொனேப்பிரின்ட்" முறைக்கு முள்ள பேதம் என்ன?

29. காட்போட் (கடதாசி அட்டை) அட்டை அச்சுப்பிரதி வேலைக்கு மிகச் சிறந்தமைவகை எதுவாகும்?

30. இலகுவாக அதிக பிரதிகளைப் பெறக் கூடிய சித்திரச் சாதனம் எது?

31. தடித்த காட்போட் துண்டினுல் அச்சுப்பதிக்க ஏற்ற அச்சுரு ஒன்றை செதுக்க உதவும் உபகரணம் எது?

32. காற்றினுல் அசையும் சலன உருவமொன்றைக் காணும் போது மனதில் எழுவது என்ன?

33, அசைவுறும் சலன உருவில் காணப்படும் தன்மை யாது?

34. வீணுகும் பொருட்களைச் சேகரித்து அதனுல் அமைக்கப்படும் அசைவற்ற உருவம் அமைப்பதால் அங்கு காணப்படுவது எவ்வுருவம்?

35. அசையும் உருவமொன்றில் அதிகமாக இருக்க வேண்டியது எது?

36. கொலாஜ் சித்திர அமைப்புக்குத் தேவையாகும் ஊடகங்கள் எவை?

37. கடதாசி உருவம் கிழித்தொட்டல் முறைச் சித்திரங்களைப் பலரும் விரும்புவது ஏன்?

38. சிகிரியா எதற்காகப் பிரசித்தி வாய்ந்தது?

39. கிறுக்கற் சித்திரத்தை வரைந்து உலகப் புகழ் ஈட்டியவர் யார்?

40. மரக்கொத்து வேலைப்பாடுகளிற் சிறந்த தேவாலயத்தின் பெயர் என்ன? எங்குள்ளது?

41. சுவரலங்கார வேலைப்பாடுகளில் பிரசித்த பெற்ற விகாரை எது?

## அழகியற்கலை (சித்திரம்)

## வினுத்தாள் 3

வகுப்பு: 8 ஆந் தரம் நேரம்: 1 மணி

1. ஒரு நகரின் வீதிக்காட்சியை வரையும்போது அங்கு காணப்படுவது எவ் அழகென எழுதுக?

2. ஒரு மரத்தின் படத்தை வரைந்து அதற்குத் தட்டையாக நிறம் பூசப் பட்டிருந்தால் அங்கு காணப்படுவது மென்பரப்புத் தோற்றமா? உருட்சித் தோற்றமா?

3. மூவகை அளவு காணப்படும் சித்திரங்களில் தோற்றப்படும் மூன்று அளவுகளும் எவை?

4. இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள புத்தரின் உருவச்சிலை அமைப்புக்கள் வெளிநாட்டுக் கலை இலட்சணம் கொண்டதா? அல்லது தேசியக்கலை இலட்சணம் கொண்டதா என்பதை எழுதுக?

5. கிறுக்கல் சித்திரத்தில் இரேகையின் தெளிவுற்ற தன்மையா? இரேகை நிறுத்தமற்றுப் பரவுதலையா? காணக்கூடியதாயிருக்கும்?

6. பின்வரும் அலங்கார உருக்களை வரைந்து காட்டுக.
   (அ) பலாப்பொத்தி (தாமரை இதழ் வடிவம்)
   (ஆ) கற்கட்டுக்கரை
   (இ) சீப்புரு
   (ஈ) கர்ணிகா (பூமத்திய அலங்காரம்)
   (உ) சப்புமலர்.

7. புராதன சிங்கள சித்திர ஆசிரியன், தனது சீடருக்கு முதன் முதலாகக் கற்பித்த சித்திர அப்பியாசம் எவ்வித அலங்காரமாகும்?

8. கருங்கல்லினுற் செய்யப்பட்ட புத்தர் சிலை எங்குள்ளது?

9. வழிந்தோடும் புத்தர்மத உணர்வுகள் காணக்கூடிய புத்தர் சிலையை எங்கு காணலாம்?

10. கண்டிக் காலத்தில் வரையப்பட்ட பிறவிக் கதைகள் (ஜாதக்க்கதை) பற்றிய சித்திரத்தில், சித்திரக்காரன் முக்கியமாகக் கொண்டுள்ள கருத்துக்கள் எவை?

11. மரக்கொத்து வேலைகளில் பிரசித்திபெற்ற புராதன தேவாலயம் எது?

12. "மொனேப்பிரின்ட்" என்பது எப்பிரதி பெறும் அச்சுருப்பதிப்பு முறை யாகும்.

13. தனிப்பிரதி பெறும் அச்சுரு முறையை எழுதுக.

14. மிகக்குறைந்த செலவில் நீவிர் அமைக்கக்கூடிய சித்திரம் எது?

15. நிறம் பூசப்பட்டுச் செய்யப்படும் சித்திரங்களில் அச்சித்திரம் செய்யப்படும் கடதாசியில் இடை இடையே அதன் சுய தன்மையைக் காணவேண்டு மானுல் அவ்விடங்களில் எதைப் பூசிக்கொள்வீர்?

16. காட்போட்டில் உரு வெட்டிப் பதிக்கப்படும் சித்திரத்தின் பெயர் என்ன? இதற்கு எந்த மை சிறந்தது?

17. ஒரு குரோட்டன் கிளையை இரேகைச் சித்திரமாய் வரையும்போது அங்கு கண்டுகளிப்பது எதை?

18. களிமண்ணினுல் வேலை செய்யும் மாணவன் எதைச் செய்வதற்கு அங்கு தொழிற்படுவான்?

19. அசைவுறும் உருவம் செய்யும் மாணவன் ஒருவன் தான் செய்யும் உருவில் எத்தன்மையைக் காணவிரும்புவான்.

20. ஒருகடதாசியின் மேற்பரப்பு எவ்வளவுகளைக் கொண்டது?

21. சித்திரக்காரர் வர்ணபலமெனக் கொள்ளும் நிறப்பூச்சுத் தன்மை யாது?

22. சித்திரங்களில் உயர்தரம் என, எதைக்கொண்டு கணிக்கின்றனர்?

23. தோற்றம் தூரப்பரவுதலை எச்சித்திரத்தில் காண்பீர்?

24 ஒரு பரவுரூப அலங்கார அமைப்புச் சித்திரத்தை அவதானித்து அது குறுக்குமுக அலங்காரமா? நீளப்பக்க அலங்காரமா? சாய்வலங்காரமா? எனமதிப்பது எதைக்கொண்டு அறிவீர்?

25. எச்சித்திரத்தில் அலகுகளை மீண்டும் மீண்டும் காணமுடியும்?
26. நீளம் அகலம் கனதி அல்லது திரட்சி காணக்கூடிய ஒருபொருள் கூறுக?
27. சமச்சீர் என்பது என்ன?
28. சுயதன்மை அழகு என்பதென்ன?
29. கற்பனை ஆக்கச்சித்திரங்கள் நான்கு எழுதுக?
30. மானசீக ஆக்க அலங்காரமாவது யாது?
31. பச்சை நிறத்தில் சேர்ந்துள்ள மூலவர்ணங்கள் எவை?
32. மூலவர்ணங்களை உணர்த்தும் மறு பெயர்கள் எவை?
33. கலப்பு வர்ணங்கள் எவை?
34. எந்நிறங்களை கலப்பதால் செம்மஞ்சள் நிறத்தைப் பெறலாம்?
35. அசைவுச் சித்திரங்கள் செய்வதால் ஏற்படும் அசைவழகை எத்தன்மையைக் கொண்டு பெறுவீர்?
36. அசைவுச் சித்திரங்கள் மூன்றின் பெயர்தருக?
37. அசைவற்ற உருவம் அமைப்பதில் இலகுவாகச் செய்யக்கூடிய சாதனம் எது?
38. கேத்திரத் தன்மை காணப்படுவது எச்சித்திரத்திலதிகமுண்டு?
39. சித்திரத்தில் எவ் உபயோகத்தின்போது இயைவு காணமுடியும்?
40. புராதன தமிழ் அலங்கார வடிவங்களை நாம் எங்கே காண்கிறோம்?
41. இலங்கையில் சிற்பவேலைப்பாடுடைய புராதன இந்து ஆலயம் எது?

## தேசிய கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை

### மாதிரி வினாக்கள்

### வினாத்தாள் 4

1. காற்றில் அசையக்கூடிய கலைப்பொருட்களைச் செய்வதற்கு வேண்டிய சாதனங்கள் சில கூறுக?
2. ஒளிபுகும் தன்மையுடைய சில பொருட்கள் எழுதுக?
3. வடிவங்களமைந்த ஒரு மேற்பரப்பில் நாம் காணுவதென்ன?
4. தூய மூலவர்ணம் ஒன்றின் பெயர் தருக?
5. ஊதா வர்ணம் பெறுவதற்கு எவ் வர்ணங்களைச் சேர்க்க வேண்டும்?
6. கபில நிறம் பெறுவதற்குத் தேவையான நிறங்கள் எவை?
7. இயற்கைத் தரைக்காட்சி ஓவியமொன்றில் பொதுவாகக் காணக் கூடிய வடிவ அமைப்புகள் எவை?

8. ஒட்டுப்படம் (கொலாஜ்) அமைத்தல் மூலம் இலகுவாக வெளிப்படுத்தக் கூடிய வடிவங்கள் எவை?

9. விரைவுச் சித்திர வரைதலில் எவ்வகைக் கோடுகள் பயன் படுத்தப்பட வேண்டும்?

10. இயக்கர் போன்ற தோற்றமுள்ள முகமூடியில் காணப்படும் இயல்பு யாது?

11. தூள் வர்ணங்கள் பாவிக்கும் போது பிரகாச ஒளி பொருந்திய இளவர் ணங்களைத் தயாரிப்பதற்கு யாது செய்வீர்?

12. கடதாசியில் ''பற்றிக்', சித்திரத் தாக்கத்தைப் பெறுவதற்கு தீர் பாவிகக வேண்டிய சாதனங்கள் எவை?

13. தூரப் பொருட்கள் சிறிதாகத் தோற்றுவதற்குக் காரணம் யாது?

14. அலங்காரச் சித்திரம் ஆக்கும்போது முக்கியமாய் வேண்டப்படும் சாதனம் வர்ணங்களா? அலங்கார அலகுகளா?

15. பரவுருபச் சித்திரம் அமைப்பதில் இலகுவானமுறை பின்வருவனவற்றுள் எது? 1. தூரிகையால் வரைதல் 2. கடதாசி வடிவங்களை ஒட்டுதல் 3. திசுச் கடதாசியால் பிரதி பண்ணல் 4. அச்சடித்தல்

16. பாய் பின்னுவதற்கு மிகப்பொருத்தமான அடிப்படைப் பொருள் யாது?
1. வட்டவடிவான பொருள் 2. நீள்சதுர அடிப்படைப் பொருள்
3. கோண வடிவினதான அடிப்படைப் பொருள்

17. உருவம் அமைப்பதற்கு ஏற்றதாகக் கருதப்படுவது?
1. காய்ந்த களிமண் 2. நீர்த் தன்மையான களிமண்
3. ஓரளவு ஈரக்களிமன் 4. நன்கு பதப்படுத்தப்பட்ட களிமண்

18. அசைவுறும் உருவங்களமைத்தலில் முக்கியமாக எதிர்பார்க்கப்படுவது
1. வட்டமாகச் சுழல்வது 2. மீள மீள வட்டமாகச் சுழல்வது
3. முன்னும் பின்னும் அசைவது 4. அசைவினால் காணும் அழகு

19. செதுக்கு வேலைச் சிற்பமுறையில் முக்கியமான செயல் யாது?
1. வெட்டியெடுத்தல் 2. மினுக்குதல்
3. பொருத்துதல் 4. அழகு பார்த்தல்

20. ஓவியம் ஒன்று புகைப்படத்திலிருந்து வேறுபடக் காரணம் யாது?

21. புராதன தாமரை அலங்கார மாதிரியின் பரவல்முறை எத்தன்மை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

22. சிகிரியாச் சுவர் ஓவியம் தீட்டப்பெற்ற காலம் எப்போ?

23. பூக்கொண்டு செல்லும் இரு பெண்களின் சுவர் ஓவியம் சிகிரியாவில் எதன் மீது வரையப்பட்டுள்ளது?

24. புராதன சுவரோவியங்களில் பாவிக்கப்பட்ட ஊடகம் (வர்ணம்) யாது?

25. அச்சுருப்பதிவுச் சித்திரம் அமைப்பதற்குச் சிறந்த ஊடகம் யாது?

26. செதுக்கு வேலைகளுக்குச் சிறந்த பொருள் எது?

27. செதுக்கப்பட்ட கலைப் பொருள்களுக்குச் சிறந்த தேவாலயம் எது? எங்குள்ளது?

28. புடைப்புச்சிற்பம் செய்யக் கூடியதான ஊடகங்கள் எவை?

29. பின்வரும் உருக்களை வரைந்து காட்டுக?
1. ஹெவடியா 2. அரும்புஉரு 3. அன்னசிப்பூ 4. கல்பிந்து

30. அரும்புவ என்ற சிச்கள அலங்கார மூலகத்தை (உருவை) பற்றி உமது சித்திர மதிப்பீட்டை எழுதுக.

31. ஓவிய மதிப்பீட்டுக் கலந்துரையாடலில் மாணவரின் ஓவியங்களோடு வேறு எந்த ஓவியங்களை ஒப்பிட்டு மதிப்பதற்கு எடுத்துக் கொள்வீர்?

32. சித்திர மதிப்பீட்டுக்குரிய சாதனங்கள் எவை?

33. ஜாதகக் கதையை உணர்த்தும் சுவர்ச் சித்திரங்களுக்கும் வேறு சுவர்ச் சித்திரங்களுக்குமுள்ள வேறுபாடுகளை விளக்குக.

34. இந்து ஆலயம், சிறிஸ்தவ ஆலயம், முஸ்லிம் பள்ளிவாசல் ஆகிய ஒவ்வொன்றினதும் கட்டிடக் கலைச் சிறப்புக் கூற்றுக்கள் யாவை?

35. சிங்கள அலங்கார மூலகங்கள் புராதன காலந் தொடக்கமாக எவற்றில் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன.

36. கற்பனை ஆக்கவண்ண ஓவியம் தீட்டும்போது நீர் வெளிக்காட்டக்கூடிய தான மனிதரிடையே நாளாந்த வாழ்க்கையில் எழும் பல்வேறு வகையான மன நிலைகள் எவை?

37. கிறுக்கற் சித்திரத்தில் காணப்படும் தன்மை யாது?

38. குளிர்வர்ணங்களை ஆக்கக்கூடிய தூயவர்ணங்கள் எவை?

39. முன்செல்லும் வர்ணத்துக்கும் பின்செல்லுல் வர்ணத்துக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

40. காட்சிப்படம் வரைவதில் தூரநோக்கு ஈருகக் காணப்படும் எடுத்துக்காட்டுக்களை எத்தன்மை தோன்ற வரைவீர்?

•

# கல்வித் திணைக்களம் - வடமாநிலம்

அரையாண்டுப் பொதுப் பரீட்சை - யூன் 1977

**சித்திரம்** **6 ம் தரம்**

## பகுதி I

சரியானவிடையின் கீழ் கீறிடுக:

1. தூய வர்ணங்கள் எனப்படுவன
   1. வெள்ளை, கறுப்பு, ஊதா 2. சிவப்பு, மஞ்சள், நீலம்
   3. பச்சை, மஞ்சள், வெள்ளை 4. செம்மஞ்சள், நீலம், பச்சை

2. சிவப்பு வண்ணத்துடன் நீல வண்ணத்தைக் கலந்தால் வருவது
   1. பச்சை 2. கபிலம் 3. ஊதா 4. செம்மஞ்சள்

3. வர்ணப் பெட்டியுள் பச்சை நிறம் இல்லாது விட்டால் அவ்வர்ணத்தை ஆக்கிக் கொள்ள உதவும் இரண்டு வர்ணங்கள் எவை? .
   1. சிவப்பு மஞ்சள் 2. கறுப்பு வெள்ளை 3 ஊதா மஞ்சள் 4. மஞ்சள் நீலம்

4. மஞ்சள் வர்ணத்துடன் சிவப்பு வர்ணத்தை கலந்தால் உண்டாவது
   1. செம்மஞ்சள்  2. பச்சை  3. ஊதா  4. கபிலம்

5. ஒருசத நாணயத்தைக் கடதாசியின் கீழ் வைத்து அதன்மீது காரியத்தைத் தேய்க்கும்போது பெறப்படுவது
   1. கொலாச் சித்திரம்  2. அச்சுப்பிரதியாகும்
   3. வர்ணச் சித்மாகும்  4. இரேகை வரைதலாகும்

6. இலகுவாக அதிக பிரதிகளைப் பெறக்கூடிய சித்திர சாதனம்
   1. பற்றிக்  2. கொலாச்
   3. கிருபிக் (அச்சுப்பதிவு)  4. கடதாசி வெட்டுச் சித்திரம்

7. உருவமைத்தலுக்கு இலகுவானது
   1. கல்  2. மரம்  3. மென்களி  4. சவர்க்காரம்

8. கனதியான காட்போட் துண்டில் அச்சுப்பதிப்பதக்கேற்ற அச்சுரு ஒன்றைச் செதுக்க உதவும் உபகரணம்.
   1. கத்தரிக்கோல்  2. சிறு கத்தி  3. சிறு அரிவாள்  4. கூரிய ஊசி

9. கொலாச் சித்திரத்திற்கு தேவையான பொருட்கள் எவை?
   1. தூள் வர்ணம்  2. களி
   3. வண்ணக் கடதாசியும் பசையும்  4 நெய் வண்ணக் கட்டிகள்

10. சித்திரக்காரன் கருத்துக்களை வெளிப்படுத்துவது
   1. உருவங்களால்  2. தூரிகையால்
   3. வண்ணக்கட்டிகளால்  4. கோடுகளால்

11. 'கிராம வாழ்க்கை' என்னும் தலைப்பையுடைய சித்திரத்தால் விளங்கப்படுவது
   1. உருவங்களால்  2. தூரிகையால்
   3. வண்ணக்கட்டிகளால்  4. கோடுகளால்

12. நீர் வர்ணத்தின் இயல்பு
   1. மென்மைத் தன்மை  2. ஒளி புகுந்தன்மை
   3. ஒளி புகாத்தன்மை  4. தடிப்புத்தன்மை

13. ஈரளவை கொண்ட பொருள்
   1. பந்து  2. பெட்டி  3. மரக்குத்தி  4. கடதாசி

14. பரவுருப அலங்காரத்திற்கு ஏற்ற சித்திர அமைவு
   1. வட்டத்தட்டம்  2. சாடி அலங்காரம்
   3. சீத்தைத்துணி  4 வாழ்த்துப்பத்திரம்

15. பரவுருபம் கிரமமுறை அலங்காரமாக அமைவதற்கு
   1. ஓர் அலங்கார அலகு ஓரிடத்தில் அமைதல்
   2. ஓர் அலங்கார அலகு பல இடங்களில் அமைதல்
   3. ஓர் அலங்கார அலகு கிரமமுறையாக இடத்துக்கிடம் அமைதல்
   4. இரண்டு அலங்கார அலகுகள் ஓரிடத்தில் மாத்திரம் அமைதல்

16. ஒட்டுச் சித்திர முறையில் அமைக்கப்படும் உருவமைவுகள்
   1. திரண்டு தெரியும்  2. குறுகித் தெரியும்
   3. தட்டையாகத் தெரியும்  4. உயர்ந்து தெரியும்

17. மனிதவுருவங்களின் உடுபுடவைகட்கு கூடிய அவதானம் செலுத்தி ஒரு சித்திரல் வரைவதற்கு ஏற்ற விடயமாக நீர் கீழ் வரும் விடயங்களுள் எதைத் தெரிவு செய்வீர்

1. உதைபந்தாட்டம் 2. பஸ் விபத்து
3. திருமண வைபவம் 4. வயலில் வேலை செய்தல்

18. களி மண்ணினுற் செய்யப்பட்ட உருவமொன்றை நீண்டகாலம் உபயோகிக்க என்ன வழிகளைக் கையாள்வீர்

1. அதன்மீது வர்ணம் பூசுதல்
2. அதைச் செய்யும்போது மத்தியிற் கம்பிக்கூர் ஒன்றை உட்செலுத்துதல்
3. ஒருவரும் காணுத இடத்தில் வைத்தல்
4. சூளையில் இட்டுப் பதப்படுத்துதல் (சுடல்)

19. ஒரு வர்ணத்தைக் கடின வர்ணம் ஆக்குவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய வர்ணம் எது

1. சிவப்பு 2. கபிலம் 3. கறுப்பு 4. வெள்ளை

20. சிகிரியா மிகப் பிரசித்தி பெற்றுள்ளது

1. கற்செதுக்கு வேலைகட்கே 2. மரச் செதுக்கு வேலைகட்கே
3. சிற்ப வேலைகட்கே 4. சுவரோவியங்கட்கே

21. கிட்ட உள்ள தந்திக் கம்பமும் தூரவுள்ள தந்திக் கம்பமும்

1. சம அளவுடையதாகத் தோன்றும்
2. தூரவுள்ள கம்பம் உயர்ந்து தெரியும்
3. தூரவுள்ள கம்பம் மறைந்து விடும்
4. கிட்டவுள்ள கம்பத்திலும் தூரவுள்ள கம்பம் சிறுத்துத் தெரியும்

22. பூவரசம் இலையின் உருவ அமைப்பிற் காணப்படுவது

1. தோற்ற வேறுபாடு 2. சமச்சீர்
3. இரேகையின் ஓட்டம் 4. நேரிய தன்மை

23. பின்வரும் காய்களில் அழகிய அலங்கார ரூபத்தைச் சுயமாகக் கொண்டுள்ள காய் எது

1. அன்னுசிக்காய் 2. பலாக்காய் 3. பாகற்காய் 4. றம்புட்டான்

24. துரித இரேகை வரைதல் பூரணமாவது எவ்வாறு

1. நிறம் தீட்டப்படும் பொழுது 2. இரேகைகள் கூடும்பொழுது
3. துரிதமாக வரைந்து முடிக்கும் பொழுது
4. குறைவான தொகை இரேகைகளால் பூரண கருத்து வெளிப்பாடு ஆக்கப்படும் பொழுது

25. கொடிய சிங்கம் ஒன்றை வரையும் பொழுது மிகவும் பிரதானமாகக் கவனிக்க வேண்டியது

1. அதன் நிறத்தை அதே போலத் தீட்டுவது
2. கொடுந்தன்மை நன்கு விளங்க வரைவது
3. சிங்கத்தின் உருவம் உள்ளவாறு வரைவது
4. அது வசிக்கும் காட்டை வரைவது

# கல்வித் திணைக்களம் – வடமாநிலம்

அரையாண்டுப் பொதுப் பரீட்சை - யூன் 1977

## அழகியற் கல்வி (சித்திரம்) 7 ஆந் தரம்

### சரியான விடையின் கீழ் கீறிடுக

1. மூலவர்ணங்கள் எனக் கொள்ளப்படுவன
   1. நீலம், மஞ்சல், பச்சை 2. சிவப்பு, கபிலம், கறுப்பு
   3. சிவப்பு, நீலம், மஞ்சள் 4. நீலம், பச்சை, ஊதா

2. கறுப்பு வர்ணத்தைப் பின்வரும் முறையிற் தயாரிக்கலாம்
   1. சுண்ணக்கல் எரிக்கப்படுவதனல்
   2. விளக்குப் புகை சேரித்தலினல்
   3. நீலத்துடன் சிவப்பு நிறம் சேர்க்கப்படுவதனல்
   4. வெண்களி அரைத்தலினல்

3. செவ்விளநீர்க் குலை ஒன்றுக்கு நிறம் தீட்ட நீங்கள் எந்த வண்ணங்களைக் கலப்பீர்கள்
   1. சிவப்பு மஞ்சல் 2. மஞ்சள் நீலம்
   3. சிவப்பு நீலம் 4. கறுப்புவெள்ளை

4, தந்திக் கம்பங்களை வரைவதற்கு நீங்கள் உபயோகிக்கும் இரேகை
   1. மென் இரேகை 2. கோணகார ரேகை
   3. அலை ரேகை 4. நேர் இரேகை

5. வெசாக் கூடு அமைப்பதில் நீவிர் உபயோகிக்கும் பிரதான சாதனம் யாது
   1. ஈக்கில் 2. குருத்தோலை 3. திசுக்கடதாசி 4. மூங்கிற்கோல்

6. ஒரு கற்பனைக் குருவியின் உருவத்தை அமைப்பதற்கு இலகுவான சாதனம் எது
   1. பலகை 2. சவர்க்காரம் 3. மென்களி 4. சீமெந்து

7. உருவம் அமைத்தலால் அல்லது சிற்பத்தால் பெறப்படுவது
   1. ஈரளவைக் கைத்தேர்வு 2. மூவளவைக் கைத்தேர்வு
   3. வர்ணங்களைப்பற்றிய அறிவு 3. இரேகைபற்றிய கைதேர்வு

8. புறவுருவ அமைப்பில் 'நடிகன்' உருவத்தை ஆறும் தரத்தில் அமைக்கும் பொழுது எத்த உபகரணத்தை உபயோகித்தீர்
   1. உலோகத்தகடு 2. பலகைக்குச்சிகள்
   3. ஈர்க்கில் 4. மாட்டுத்தாள் அட்டை

9. தனி அச்சுப் பிரதியைப் பெறும் முறையை
   1. கிறபிக் முறை எனலாம் 2. மொனோ பிரின்ட் எனலாம்
   3. காட்போட் பிரதி எனலாம் 4. லிதோ பிரிண்ட் எனலாம்

10. உருளைக்கிழங்கு அச்சுரு அலங்காரம் வெட்டுவதற்கு பின்வருவனவற்றில் எது இலகுவானது
    1. வளைகோட்டு வடிவம் 2. கோணக்கோட்டு வடிவம்
    3. நேர்க்கோட்டு வடிவம் 4. சுருட்கோட்டு வடிவம்

11. அழகிய வானவில்லைக் காட்டுவதற்கு ஏற்ற இரேகை
1. வட்டக்கோடு 2. அலைகோடு 3. கோணக்கேடே 4. முறிகோடு

12. ஒரு பொருளின் சில பகுதிகள் முன்னுள்ள பொருளினால் மறைக்கப்பட்டிருப்பதைக் காட்டும் சித்திரத்தில் காணப்படுவது
1. தட்டைத்தன்மை 2, ஆழம் 3. தூரம் 4. அண்மை

13. கடதாசி உருவம் கிழித்து ஒட்டுதல் முறை சித்திரங்களை நீவிர் அதிகம் விரும்புவது ஏன்?
1. உருவங்களின் சுயதன்மை கருதி
2. கையினாற் கிழிக்கப்படும் முறை இலகு கருதி
3. வீணாகும் கடதாசி தேடுதல் இலகு ஆதலினால்
4. விளையாட்டு வழி சுயரூபம் அமைவதனால்

14. பிசின்சேரா வண்ணத்தூளை நீருடன் கலந்து கடதாசி ஒன்றிற் பூசினால் யாது நிகழும்
1. வண்ணம் விரைவாக உலரும்
2. வண்ணம் சுத்தமுடையதாகத் தோன்றும்
3. வண்ணம் கடதாசியில் இறுக்கமாகப்பற்றிக் கொள்ளும்
4. வண்ணம் காய்ந்தவுடன் கையுடன் வந்துவிடும்

15. கடதாசியில் உருவங்களைக் கிழித்து ஒட்டும் சித்திரத்தை என்னவென்று கூறுவர்
1. கிருபிக் சித்திரம் 2. கொலாச் சித்திரம்
3. கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் 4. இரேகைச் சித்திரம்

16. பின்வருவனவற்றில் இருந்து ஓவியர் ஒருவரைத் தெரிவு செய்க
1. ஆனந்த குமாரசாமி 2. வில்லியம் சேக்ஸ்பியர்
3. லியோனாடோ டாவின்சி 4. வின்சன்ற் சேர்ச்சில்

17. அசைவுறு சலன உருவம் அதிகம் இருக்கவேண்டியது
1. வண்ணம் 2. மேற்குவித்தன்மை
3. நேரிய தன்மை 4. அசையுந் தன்மை

18. இரேகை வரைதலின்போது இரேகைச் சித்திரப் பண்பை எழுப்பக்கூடிய விதம்.
1. ஒரே இன இரேகைகளினால் 2. பலவித இரேகைகளினால்
3. நேர் இரேகைகளினால் 4. மென் இரேகைகளினால்

19. துரித இரேகை வரைதலினால் எதிர்பார்க்கப்படுது
1. மெல்ல மெல்ல வரைதல் 2. பகுதிபகுதியாக வரைதல்
3. விளக்கமுடையதாக வரைதல் 4. சுதந்திர வரைப் பயிற்சி

20. ஒரு கலைப்படைப்பில் பிரதானமாக இருக்க வேண்டியது
1. வண்ணம் 2 பிரகாசம் 3. சமநிலை 4. சமச்சீர்

21. அவுகண புத்த சிற்பம்
1. அலங்கார மரச் செதுக்கு வேலையாகும் 2. உருவம் அமைத்தலாகும்
3. வர்ணப்பட வாக்கமாகும் 4. சிலையாகும்

22. சிகிரியாவிற் காணப்பெறுவன
   1. சிற்பவேலைப்பாடுகள்   2. அலங்காரக் காட்டுருக்கள்
   3. சுவரோவியங்கள்   4. பற்றிக் அலங்காரங்கள்

23. மென்மையான மரப்பலகையில் சிற்ப உருவை ஆக்கும்பொழுது
   1. உருவம் அமைத்தல்   2. உருவம் செதுக்குதல்
   3. உருவம் வார்த்தல்   4. உருவம் தீட்டுதல்

24. வகுப்பிற்கு வெளியே இரேகைச் சித்திரங்களை வரைவதற்கு மிகவும் வேண்டியது
   1. ஈயலேகினி   2. பேஸ்ரல் வர்ணம்   3. வரைபலகை   4. நிறக்கடதாசி

25. இலங்கையின் மரச் செதுக்கு வேலைக்குச் சிறந்த இடம்
   1. பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்   2. எம்பக்கே தேவாலயம்
   3. களனி விகாரை   4. மகியங்களை

26. சீத்தைத்துணி அலங்காரத்துக்கு மிகச்சிறந்ததென நீர் எதனைத் தெரிவு செய்வீர்
   1. பலாப் பொத்தி   2. கோட்டு வடிவம்
   3. இலை பூவடிவம்   4. தனியிழை

27. கொலாஜ் சித்திரம் அமைப்பதற்கு வேண்டிய ஊடகம் எது?
   1. நீர்வர்ணமும் கடதாசியும்
   2. கடதாசி, பிசின், பழையசஞ்சிகைகள்
   3. போஸ்ரல் வர்ணமும் கடதாசியும்   4. பென்சிலும் கடதாசியும்

28. (1) அரும்பு, (2) தனியிழை, (3) குந்திரிக்கம், (4) பலாபொத்தி இவற்றுள் குந்திரிக்க வடிவத்தை வரைந்து காட்டுக.

29. இருபத்தெட்டாவது வினாவிற் தரப்பட்ட நான்கு அலங்காரவடிவங்களுள்ளும் நெசவு செய்தலுக்குரிய வடிவம் எது?

30. ''தனியிழை'' வடிவத்தை வரைந்து காட்டுக?

## கல்வித் திணைக்களம் – வடமாநிலம்

அரையாண்டுப் பொதுப் பரீட்சை - யூன் 1977

**சித்திரம்**   **8 ஆந் தரம்**

### பகுதி I

சரியான விடையின் கீழ் கீறிடுக:

1. பச்சை நிறத்திலிருந்து மஞ்சள் நிறத்தை நீக்கிவிட்டால் எஞ்சியுள்ள நிறம் எது: 1) வெள்ளை 2) ஊதா 3) நீலம் 4) கறுப்பு

2. துரித இரேகை வரைதலில் உபயோகிக்கப் பெறவேண்டியது:
   1) மெல்லிய கோடுகள்   2) தடித்தகோடுகள்
   3) முறிகோடுகள்   4) சுயாதீனமான கோடுகள்

3. காட்போட் அட்டை அச்சுப்பிரதிக்கு மிகச் சிறந்த மை வகை எது:
   1) நீர் வர்ணம்   2) போஸ்டர் வர்ணம்
   அச்சுமை   4) தூள்வர்ணம்

4. வெள்ளைப் போத்தலிற் காணப்பெறுவது:
   1) பளபளப்பு   2) ஒளிபுகுந்தன்மை   3) திண்மம்   4) மென்மை

5. அலங்கார மாதிரியுரு ஒன்றினை ஆக்குவதிலுள்ள பிரதான படி எதுவாகும்:
   1) வர்ணத்தைப் பயன்படுத்தல்
   2) இலைகளையும் பூக்களையும் பயன்படுத்தல்
   3) பண்டைய அலங்கார நோக்குருக்களைப் பயன்படுத்தல்
   4) அலங்கரிப்பு அலகுகளை மீளவும் பயன்படுத்துதல்

6. மஞ்சள் வர்ணத்தின் எதிர் வர்ணம் எது:
   1) பச்சை   2) நீலம்   3) ஊதா   4) செம்மஞ்சள்

7. கடதாசியிற் பற்றிக் தன்மையை வெளிப்படுத்தலுக்கு வேண்டிய ஊடகம்:
   1) தூள்வர்ணம்   2) மெழுகு   3) போஸ்டர்வர்ணம்   4) இலேகினி

8. மொனுகிகிறபி மூலம் பெறப்படுவது:
   1) பல பிரதிகள்   2) வர்ணப்பிரதிகள்
   3) தனிப்பிரதிகள்   4) அச்சுருக்கள்

9. அசைவுன்று உருவமைவு ஒன்றைத் தயார்செய்யும் பொழுது கவனிக்க வேண்டியது: 1) நிலையானதன்மை   2) அழகு   3) வர்ண ஒத்திசைவு
   4) அசையுந்தன்மை

10. இரேகைப்பலம் என்பது:   1) தடித்த இரேகை   2) கரிய இரேகை
   3) வளை இரேகையையும் கோணகார இரேகையும்
   4) மென் இரேகையும் தடித்த இரேகையும்

11. முப்பரிமாணம் என்பது:   1) நீளம் அகலம் கொண்டது
   2) மூன்று பக்கங்கள் கொண்டது
   3) நீளம் அகலம் தடிப்புடையதென்பது
   4) மூன்று உருவங்கள் உள்ளதென்பது

12. பண்டைய வரைதற்கலை வல்லுனர்கள் அவர்களது மாணுக்கர்களுக்கு முதன் முதற் கற்பிக்கப்பட்ட சித்திரப் பயிற்சி எதுவாகும்:
   1) பலாபெத்தி   2) லியவெல   3) அன்னுசி மால   4) வகதெக்க

13. கலப்புச் சாதனம் என்பது:   1) கழிவுப் பொருட்களை உபயோகித்தல்
   2) நீர்வர்ணமும் மெழுகுச் சுண்ணமும் கலந்து உபயோகித்தல்
   3) எண்ணெய் வர்ணமும் போஸ்டர் வர்ணமும் கலந்து உபயோகித்தல்
   4) அச்சுமையும் தூள் வர்ணமும் கலந்து உபயோகித்தல்

14. கல்லின் சிற்பம்ஒன்றை ஆக்கும் பொழுது நிகழ்வது:
   1) வெட்டி எடுத்தல்   2) அப்புதல்   3) வார்த்தல்   4) தீட்டுதல்

15. லியவெல என்பது:   1) தாமரை அலங்காரம்   2) கொடி அலங்காரம்
   3) திருங்குதலை அலங்காரம்   4) சதுர அலங்காரம்

16. இரு கோடுகளின் நடுவே வட்டங்களைக் கொண்டு ஆக்கும் கரை அலங்காரத்தை அழைப்பது:   1) சீப்புரு   2) பலாப்பேத்தி
   3) அருப்பு   4) அன்னுசிமாலா

17. வண்ண ஓவியமென்றில் சோகமான இயல்பினைக் கொண்டு வருவதற்கு எதை முக்கியமானதென்று கொள்ளுவீர்?
    1) கண்ணீருடன் கூடிய முகங்களை வரைதல்
    2) படத்தில் துன்பம் பொதிந்த வார்த்தைகளை எழுதுதல்
    3) தொடர்ச்சியற்ற வரிகளைப் பயன்படுத்துதல்
    4) சோகமான வண்ண அமைப்புக்களைப் பயன்படுத்துதல்

18. பாம்பினது அசைவைக் குறிப்பதற்கு உபயோகிக்கும் இரேகை:
    1) அலை ரேகை 2) கோணாகார இரேகை 3) சமாந்தர இரேகை
    4) வளை இரேகை

19. கிட்ட உள்ள பொருட்களின் நிறம் பிரகாசமாகவும் தூர உள்ள பொருட்களின் நிறம் மங்கலாகவும் தெரிவதன் காரணம்:
    1) கண்ணின் இயல்பு 2) தரைமட்ட வேறுபாடு
    3) ஒளியின் தாக்கம்
    4) உண்மையில் அவை அப்படியான இயல்புடையனவே

20. பரவுரூப அலங்காரச் சித்திரம் அமைக்கும் போது அலங்கரிப்பு அலகுகளை மீட்டலில் இலகுவான முறை:
    1) தூரிகையால் வரைதல் 2) கடதாசியில் வடிவங்களை வெட்டி ஒட்டுதல்
    3) திசுக்கடதாசியில் பிரதி பண்ணல் 4) அச்சடித்தல்

21 கண்டிய காலச் சித்திரங்களில் காணப்பெறும் அழகு:
    1) ஈரளவை அழகு 2) பரவுரூபஅழகு
    3) பரிவுரூபஅழகு 4) கிடைத்தோற்றம்

22. சமச்சீர் எனப்படுவது: 1) இருபக்கமும் சமமாகவும், ஒரே அமைப்பிலும் இருப்பது 2) எங்கும் செறிந்திருப்பது
    3) ஒருபக்க அளவு கொண்டது 4) சமநிலையை

23. நெற்குவியல் வடிவான தாது கோபத்தின் பெயர் என்ன:
    1) சூடாமணியகம் 2) தானியாகாரம்
    3) ஈசுரமுனி 4) சதுரகோட்டம்

24. ஒருசைவக் கோயிலைக் கண்டறியக்கூடியதாயிருப்பதற்கு முக்கிய காரணம்:
    1) பல செதுக்குருக்களுடன் கோபுரம் இருத்தல்
    2) சூரிய சந்திரருடைய நோக்குரு இருத்தல்
    3) கூர்முடி (கொத்செரல்ல) இருத்தல்
    4) மகர தோரணம் இருத்தல்

25. இலங்கையின் சிற்பவளர்ச்சி எந்தநாட்டுடன் தொடர்புடையது:
    1) யாவா 2) இந்தியா 3) யப்பான் 4) இங்கிலாந்து

26. பின்வரும் தரைத் தோற்றங்களில் எதனில் ஒன்றுடனொன்று மாறுன வண்ண பேதங்களை அதிகமாகக் காணலாம்: 1) மலைத்தொடர்
    2) பட்டினம் 3) கடல் தோற்றம் 4) தேயிலைத்தோட்டம்

27. ஒட்டுச்சித்திர (கொலாச்) ஊடகம் குறிப்பிட்ட வகையிலே எதனைப் புலப்படுத்தும்: 1) தட்டை உருவங்கள் 2) மினுங்கும் உருவங்கள்
    3) விவரண உருவங்கள் 4) இருண்ட உருவங்கள்

28. சைத ஆலயங்களின் மரச்செதுக்க வேலையின் நிலைக்களமாக உள்ளது:
    1) கோபுரம் 2) கர்ப்பக்கிரகம் 3) தேர் 4) வசந்தமண்டபம்

29. இலங்கையின் ஓவியக் களஞ்சியமாக விளங்குவது:
    1) யப்பகூவா 2) தூபராமா 3) சிகிரியா 4) கலாபவனம்

30. கூரைச் சித்திரங்கள் காணப்பெறும் இடம்:
1) களனி 2) சிகிரியா 3) தம்புல்ல 4) அவுகண

31. தெகல்தெறுவ ஓவியங்கள்:
1) கற்பனைச் சித்திரங்கள் 2) ஜாதகக் கதைகளை விளக்குவன
3) அலங்கார ஆக்கங்கள் 4) கூரைச் சித்திரங்கள்

32. சித்திரக்கல்வி பெறுவதனுல் நாம் பெறுவது:
1) பணம் 2) பரீட்சையிற் சித்தி 3) புகழ் 4) இரசஞான விருத்தி

33. ஆலயத்திற்குக் காவடி எடுத்தல் என்ற விடயம் பற்றி வரையப்படும் சித்திரத்தால் விளங்கப்படுவது: 1) வைராக்கியமாகும் 2) பக்தி ஆகும்
3) மகிழ்ச்சி ஆகும் 4) பொழுதுபோக்காகும்

34. 'மத்தியகாலச் சிங்களக்கலை' என்னும் நூலை எழுதியவர்:
1) விபுலானந்த அடிகளார் 2) டாக்டர் பாரணவிதான
3) டாக்டர் ஆனந்தா கே. குமாரசுவாமி 4) சேர் பொன் இராமநாதன்

35. ஓவியப் படைப்புக்கு வேண்டுவன:
1) இராகம் தாளம் பல்லவி 2) அசைவு, பாட்டு பதம்
3) எதுகை, மோனை, நயம் 3) இரேகை, ரூபம், வண்ணம்

## கல்வித் திணைக்களம் — வடமாநிலம்

அரையாண்டுப் பொதுப் பரீட்சை – யூன், 1977

**அழகியற் கல்வி (சித்திரம்) 9-ம் தரம்**

சரியான விடையின் கீழ் கீறிடுக

1. புத்த இந்துக் கட்டடக்கலை மரபுகளின் கலப்புக் காணப்படும் நகரம்
1. அனுராதபுரம் 2. பொல்லநறுவ 3. கோட்டை 4. கண்டி

2. மூன்று நிலைகளிகளிலும் உள்ள புத்த சிலைகள் ஒருங்கே காணப்படுவது
1. தொலுவில 2. களனி 3. தம்புள்ள 4. கல்விகாரை

3. சந்திரப் படிமக்கல் ஒரு
1. சிலை 2. உயர்புடைச்சிற்பம் 3. தாள்புடைச்சிற்பம் 4. உருவமைவு

4. அஜந்தாக் குகை ஓவியங்களை ஒப்ப உள்ள ஓவியங்களை இலங்கையிற் காணக்கூடிய இடம்
1. தொகல்தொறுவா 2. அலுவிகாரை 3. மகியங்கனை
4. சிகிரியா

5. மாலைக்காட்சியின் அழகினைத் தருவதற்கு மிகப் பொருத்தமான ஊடகம்
1. ஒட்டுச் சித்திரம் 2. வரையுருக்கலை (கிருபித்)
2. நீர்வடிவம் 4. பேஸ்ரல்

6. வட்டதாகே என்பது
1. ஒரு படிமச்சிலை வீடு 2. தாதுகோபம் ஒன்றைப் பாதுகாக்க கட்டப்பட்ட ஒரு வீடு
3. தேவாலயம் 4. பூக்கள் தூவி வழிபடும் இடம்

7. கண்டிய காலச் சித்திரங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது
   1. தாமரைகளுக்கு  2. ஆடையணிகளுக்கு
   3. கோட்டின் சந்தத்திற்கு  4. வண்ணங்களுக்கு

8. கண்டியகாலச் சித்திரங்களை வரைந்தமைக்கான பிரதான நோக்கம்
   1. சித்திரக்கலைஞன் தான் விரும்பியதை வரைவதற்காகும்
   2. கோயிற் சுவர்களை அலங்கரிப்பதற்காகும்
   3. பண்டைய கலைப்பாணியை பேணுவதற்கு
   4. ஜதாகக் கதைகளைச் சித்தரிப்பதற்கு

9. கொழும்பிலுள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் சிறப்புடையது
   1. மரச் செதுக்கு வேலைக்கு  2. சுதைச் சிற்பங்களுக்கு
   3. கருங்கற் செதுக்கு வேலைக்கு  4. சுவர்ச் சித்திரங்களுக்கு

10. சைவ ஆலயங்களிற் சுவாமி ஸ்தாபிக்கப் பெற்றிருப்பது
   1. மகா மண்டபத்தில்  2. கர்ப்பக் கிருகத்தில்
   2. இராசகோபுரத்தில்  4. வசந்த மண்டபத்தில்

11. சில்க் ஸ்கிறீன் அச்சுமுறைத் தன்மையைக் கடதாசியில் எந்த முறையில் செய்யலாம்
   1. மொனோ கிறபி  2. ஸ்ரென்சில் வெட்டுமுறை
   3. கொலாச்  4. பற்றிக்மூலம்

12. திருங்குத்தலை என்பது
   1. தட்டையான ஓர் உலோகத் துண்டு  2. வட்டமான ஒரு மேற்புரப்பு
   3. கோடுகளால் அலங்கரிச்கப்பட்ட ஒரு மேற்பரப்பு
   4. ஒரு பூட்டுத்தகடு

13. சிகிரிய ஓவியங்கள் தீட்டப்பெற்ற மரபு
   1. உலர் சுதை மரபு  2. ஈரச்சுதை மரபு  3. நீர் வர்ண மரபு
   4. எண்ணெய் வர்ண மரபு

14. மகியங்கனையிற் காணப்படுவன
   1. மரச்செதுக்கு வேலைகள்  2. சுவர் ஓவியங்கள்
   3. கற்செதுக்கு வேலைகள்  4. வெண்கலச் சிற்பங்கள்

15. அதிகப் பிரதிகளைப் பெறக்கூடிய ஊடகம் எதுவாகும்
   1. செதுக்கல்  2. சிற்பம்  3. கொலாச்  4. லைனோகிராபிக்

16. முப்பரிமாணத் தனமையைக் காட்டுவதற்கு இதுவும் ஒரு வழியாகும்
   1. வர்ணத்தைத் தட்டையாகத் தீட்டுவது
   2. இரேகைகளைத் தடிப்பாக வரைவது
   3. ஒளி நிழல் காட்டுவது
   4. கடதாசிகளைக் கிழித்து ஒட்டுதல்

17. ஊதா நிறத்திலிருந்து நீலநிறத்தை நீக்கிவிட்டால் எஞ்சியுள்ள நிறம்
   1. பச்சை  2. சிவப்பு  3. வெள்ளை  4. கறுப்பு

18. கிட்ட உள்ள பொருட்கள் பெரிதாகவும், தூர உள்ள பொருட்கள் சிறிதாகவும் தெரிவது
   1. ஒளியின் தாக்கத்தினால்  2. கண்ணின் அமைப்பினால்
   3. தரைத்தோற்ற வேறுபட்டால்  4. வர்ண வேறுபட்டால்

19. அலங்காரச் சித்திரத்தில் லயச்சிறப்பை ஏற்படுத்துவதற்கு வேண்டுவது
1. பல வர்ணங்களைப் பூசுதல் வேண்டும்
2. அலங்கரிப்பு அலகுகளை மீட்டல் வேண்டும்
3. கேத்திரகணிதக் கருவிகளை உபயோகித்தல் 4. பிரதி பண்ணல்

20. அரும்புச் சித்திரமாவது
1. சீலைக்கரை மாதிரி உரு 2. ஆரைபோற் பரவும் மாதிரியுரு
3. சமச்சீர் மாதிரியுரு 4 அடங்கல் மாதிரியுரு

21. கற்பனை வரைதலென எது விவரிக்கப்படுகின்றது?
1. கோட்டு வரைதல் 2. படைப்பு முறையான படம் ஒன்று வரைதல்
3. உண்மை உயிரினங்களிலிருந்து வரைவது 4. விவரண வரைதல்

22. புகையைக் காட்டுவதற்கு உபயோகிக்கக் கூடிய இரேகை
1. அலைஇரேகை 2. கோணுகர இரேகை 3. சுருள் இரேகை
4. கிடைஇரேகை

23. எவர்சில்வர்ப் பாத்திரத்திற் காணப்படுவது
1. ஒளிபுகுந் தன்மை 2. திரட்சித் தன்மை
3. பிரகாசத் தன்மை 4. பளபளப்புத் தன்மை

24. வெண்கலச் சிற்பங்களைச் செய்வதற்கு இன்றியமையாத செய்முறை
1. உருவமைத்தல் 2. செதுக்குதல் 3. வார்த்தல்
4. வர்ணம் தீட்டுதல்

25. வர்ணம் தீட்டப்பெருத ஓவியத்தை இப்படியும் அமைப்பர்
1. இரேகை ஓவியம் 2. ஒளி நிழற்காட்சி
3. புனையா ஓவியம் 4. அலங்கார அலகு

26. ஒட்டுச் சித்திர ஊடகம் குறிப்பிட்ட வகையில் எதனைப் புலப்படுத்தும்
1. தட்டை உருவங்கள் 2. மினுங்கும் உருவங்கள்
3. விவரண உருவங்கள் 4. இருண்ட உருவங்கள்

27. அனுராதபுர காலத்துச் சந்திரவட்டக்கற்களிற் காணப்பெறும் மிருகங்களில் ஒன்று பொலநறுவ காலத்துச் சந்திரவட்டக் கற்களிற் காணப்படவில்லை, அது 1. சிங்கம் 2. யானை 3. எருது 4. குதிரை

28. கலப்புச் சாதனை ஊடகம் மூலம் கடதாசியிற் காணப்படும் தன்மை
1. கொலாச் 2. பற்றிக் 3. ஒளிபுகுதல் 4. தடிப்பம்

29. வர்ணப் பலம் என்பது
1. பல நிறங்களைச் சேர்த்தல் 2. வர்ணங்களைத் தடிப்பாக தீட்டுதல்
3. ஒரே வர்ணத்தின் மென்மைத் தன்மையும் கருமைத் தன்மையையும் காட்டுதல்
4. கருமையான வர்ணங்களைத் தீட்டுதல்


30. இப்படியும் வர்ண ஒத்திசையை ஏற்படுத்தலாம்
1. மென்மையான வர்ணங்களைத் தீட்டுதல்
2. அயல்வர்ணங்களில் 3. குளிர் வர்ணங்களினுல்
4. வெப்பு வர்ணங்களினுல்

31. பாய் பின்னலுக்கேற்ற பாரம்பரிய அலங்கார மாதியுரு
1. தனியிழை 2. ஈரிழை 3. தனிச்சுழி 4. அரும்பு

32. திராவிடச் சிற்ப முறையிலான சைவக் கோவிற் தூண்களிற் காணப் பெறுவது
1. யானை 2. தாமரை 3. போதிகை 4. அன்னம்

33. லிலனோ அச்சு முறையின் பிரதிகளின் இரேகைகள் தென்படுவது
   1. தாளின் நிறத்தில் தென்படும் 2. அச்சுமையின் நிறத்தில்தென்படும்
   3. கருநிறத்தில் தென்படும் 4. வெள்ளை நிறத்தில் தென்படும்

34. இச்சிற்பம் காணப்பெறுவது
   1. தலதா மாளிகையில் 2. எம்பக்க தேவாலயத்தில்
   3. அநுராதபுரத்து இராணி மாளிகையில் 4. யப்பா கூவாவில்



35. இது செதுக்கப்பட்ட மரபு
   1. பல்லவ மரபு 2. சோழ மரபு 3. பாண்டிய மரபு
   2. குப்த மரபு

36. இச்சிற்பம் உருவாக்கப்பட்ட முறை
   1. தாழ்புடைப்பு 2. உயர்புடைப்பு 3. சிலை 4. உருவமைவு

37. இச்சிற்பத்திற் காணும் சிறப்பு அம்சம்
   1. வர்ணமும் அழகும் 2. உருவமும் இரேகையும்
   3. ஒட்டமும் அசைவும் 4. துன்பமும் ஏமாற்றமும்

38. இச்சிற்பம் செய்யப்பட்ட காலம்
   1. 12-ம் நூற்றுண்டு 2. 18-ம் நூற்றுண்டு 3. 4-ம் நூற்றுண்டு
   4. 5- ம் நூற்றுண்டு

39. இது எவ்வாறு நிர்மாணிக்கப் பெற்றுள்ளது
   செங்கட்டிகளும் சுண்ணும்பும் பயன்படுத்தி
   3. தட்டையான மேற்றரப்பில் வர்ணம் தீட்டி 2. களிமண் பயன்படுத்தி
   4. தட்டையான கற்பாறை மேற்பரப்பைச் செதுக்கி

40. பின்வரும் சித்திரப் பொருட்களுள் ஒட்டுச்சித்திர (கொலாச்) ஊடகப்படம் ஒன்றினை ஆக்குவதற்கு மிகவும் பொருத்தமானது
   1. கொடி அலங்காரம் 2. தாவரங்களும் கட்டடங்களும்
   3. புயல் 4. களியாட்டவிழா

# பரீட்சை மாதிரி வினாக்கள்

## அழகியற்கலை (சித்திரம்)

### தேசிய பொதுக்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை

1. இந்துமத கோயில் அமைப்பில் கலசம் எங்குள்ளது?
2. தூபியின் அங்கங்கள் எவை?
3. தூபி செய்யப்பட்ட ஊடகம் யாது?
4. சிகரம் அல்லது விமான அமைப்பில் கொண்டுள்ள அங்கங்கள் எவை?
5. பிரஸ்தளம் என்னும் பகுதியில் அமைக்கப்படும் அங்கங்கள் எவை?
6. பாதவர்க்கம் கொண்டுள்ள அங்கங்கள் எவை?
7. அதிர்ஷ்டானம் கொண்டுள்ள அங்கங்கள் எவை?
8. உபபீடம் கொண்டுள்ள அங்கங்கள் எவை?
9. நாசிக்கூடு எப்பகுதியில் அமைக்கப்படுகிறது?
10. நாகபந்தம் எப்பகுதிகளில் அமைக்கப்படுகின்றன?
11. மதலை, நாணுதல், பூமுனை இவைகள் எங்கு அமைக்கின்றனர்?
12. பரந்து அமையுமிடம் எது?
13. கற்பக்கிரக கட்டடங்களின் மூன்றுவகை வேலைப்பாடுகளும் எவை?
14. முகபத்திரவேலைப்பாட்டுக் கட்டட அமைப்பில் குமுதம், அல்லிக்கால் எப் பகுதிகளில் அமைக்கின்றனர்?
15. பாதவர்க்கத்தில் கும்பபஞ்சரம் அமைக்கும் இடம் எது?
16. முகபத்திர வேலையின் பாதவர்க்கக் காலில் அமையும் அங்கங்கள் எவை?
17. இரட்டைப் பஞ்சாங்க வேலைப்பாட்டுக்கும் முகபத்திர வேலைப்பாட்டுக்கு முள்ள பேதம் என்ன?
18. தேவகோட்டம் எங்கு அமைக்கப்படுகிறது?
19. விமான அமைப்பு எவ்வடிவுகளைக் கொண்டவை? அவற்றின் பெயர்கள் எவை?

20.(அ) காமசூத்திரம் என்னும் நூலிற் கூறப்படும் சட அங்கங்களெனக் கொள்ளப்படுவன எவை? அவற்றின் விளக்கம் தருக?

20.(ஆ) 1. உருவ பேதமாவது யாது?
2. பிரமாணமாவது யாது?
3. பாவமாவது யாது?
4. லவன்ய யோசனமாவது யாது?
5. சாதிருசியமாவது யாது?
6. வர்ணபங்கமாவது யாது?

21. சிற்பங்கள்செய்வதில் கையாளும் முறைகள் எவை? அவற்றுக்கான ஊட கங்கள் தொழிற்பாடுகள் எவை?
22. கண்டியகால ஓவியங்கள் தீட்டப் பெற்ற இடங்களுள் சிறந்த இடங்கள் எவை?
23. இலங்கையிற் சுவர்ச்சித்திரங்கள் காணப்படுமிடங்களைத் தருக?
24. குகைச்சித்திரம் குகைக்கூரை ஓவியம் காணும் இடம் எது?
25. தொகல்தொறுவா (கண்டி) வில் தீட்டப்பெற்ற சித்திரங்கள் எத்தனை வரி சைகளையுடையன?
26. பௌத்த மக்கள் வணங்கிவரும் சைவத்திருவுருவங்கள் எவை?
27. பௌத்தமக்களின் பரிபாலனத்திலிருந்து வரும் சைவசமயக் கோவில் எது?
28. கிறபிக் (Graphic) என எவற்றைக் கொள்ளுகின்றனர்?
29. அச்சுருப்பதித்தலில் உராய்வுமுறைச் செயற்பாடு யாது?

30. மொனோக்கிறபிக் (MonoGraphic) என்பது எதனை?
31. லைனோக் கிறபிக் பதிப்பு முறை யென்பதெதனை?
32. லிதோபிபிரின்ற் என்பது எதனை?
33. பொல்லநறுவைக் காலத்து சந்திரவட்டக்கற்களில் எருதுவடிவம் செதுக்கப்படாததேன்?
34. "பிலிமகே" என்பதெதனை?
35. (இ) பின்வருவனவற்றிற்கு விமரிசன வெளிப்பாடு தருக:-
1. தெலுவில - அநுராதபுர புத்த வடிவம்
2. அவுகண—அநுராதபுரப் புத்தரின் சமாதிநிலை.
3. பொலநறுவைக் கல்விகாரையின் புத்தரின் நிலைஉருவம்
4. அநுராதபுரம் இரத்தின பிரஜாத காவற்சிலை
5. புத்தரின் சிலை - இலங்காதிலக கம்பளை
6. பொல்லநறுவை, கல்விகாரைப் புத்தரின் துயில்நிலை வடிவம்
7. தூபராம தாதுகோபம் அநுராதபுரம்
8. வட்டதாகே மதிரிகிரிய பொல்லநறுவை
9. மிகுந்தலை கந்தகதாகபவின் சிகரம்
10. சந்திரவட்டக்கல் - அநுராதபுரம்
11. கலசம் - அநுராதபுரம்
12. காதலர் இசுருமுனிய அநுராதபுரம்
13. பொல்லநறுவைச் சிவன் கோயில்
14. சிகிரிச் சுவர்ச் சித்திரங்கள் - அநுராதபுரம்
15. கூரைச்சித்திரம் - தம்புல்ல
16. சரித்திரச் சுவர் ஓவியம் - தொகல்தொடுவா, கண்டி
17. செதுக்கிய மரச்சிலை - கம்பளை, நடனமாது
18. செதுக்கிய மரச்சிலை - கம்பளை, கின்னரப் பெண்

## அழகியற்கலை (சித்திரம்)

### விடைத்தாள் 1

வகுப்பு 6 ஆந் தரம்

1. செம்மஞ்சள் 2. கறுப்பு 3. மஞ்சள் 4 மஞ்சள் சிவப்பு
5. —— 6. அலை இரேகை 7. சிறிதாகத்தோற்றும்
8. ஈரளவை நீளமும் அகலம் கொண்டவை. மூவளவை நீளம் அகலம் உயரம் கொண்டவை.
9. நீளம், அகலம், திரட்சி அல்லது உயரம்
10 இரேகை உருக்களினாலும் வர்ணங்களாலும்
11. உருளைக்கிழங்கு, தூள்வர்ணம், கடதாசி, சிறியகத்தி
12. லினோ அட்டையில் இலகுவாக வடிவங்களை வெட்டலாம்
13. நிர்வாணத்துடன் பேஸ்ரல் கிறேயோன் வர்ணங்களை உபயோகிக்கும் படமாகும்.
14. கருத்து வெளிபாடு சித்தி பெறவேண்டும்.
15. அவற்றை அலங்காரம் செய்வதற்கு

ஒன்பதாந்தரம் (விடைத்தாள்)

(1) 2 (2) 4 (3) 2 (4) 4 (5) 3 (6) 2 (7) 3 (8) 4 (9) 3 (10) 2 (11) 2
(12) 3 (13) 2 (14) 2 (15) 4 (16) 3 (17) 2 (18) 2 (19) 2 (20) 1 (21) 2
(22) 3 (23) 4 (24) 3 (25) 3 (26) 1 (27) 3 (28) 2 (29) 3 (30) 2 (31) 2
(32) 3 (33) 1 (34) 3 (35) 4 (36) 2 (37) 3 (38) 3 (39) 4 (40) 2

## விடைத்தாள்

1. கலசம் தூபியினிடத்தமைந்துள்ளது
2. மகாபத்மம் 2. கண்டம் 3. அரடா 4. குடம் 5. அலர் 6. கதலிப்பூ
3. தூபி செய்யப்பட்ட உலோகம் செம்பு
4. கண்டவரி 2. இடைக்கட்டு நாகபந்தவரி 3. பண்டிகை அல்லது யாளிவரிமானம் 4. மாலைக்கட்டு 5. கண்ணுடிக்கட்டம் 6. மகாபத்மம்
5. உத்திரவரி 3. கம்புவரி 3. எழுதகவரி 4. கபோதவரி 5. யாளவரி 6. கூண்டு என்பன.
6. வேதிகைவரி 2. கால்வரி 3. போதிகைவரி 4. தேவகோட்டம் என்பன
8. பிரதமவரி 2. உபானவரி 3. கண்டவரி 4. பண்டிகைவரி முதலியன.
9. பிரஸ்தளப்பகுதியில் அமைக்கப்படுகிறது
10. சிகரத்தில் அமைக்கப்படுகிறது
11. பாத வர்க்கத்தின் போதிகைகளில் அமைக்கப்படுகின்றன
12. மைய கோட்டத்தினருகில் அமைக்கப்படும்
13. உத்திரமட்டவேலை 2. இரட்டைப்பஞ்சாங்க வேலை 3. முகபத்திர வேலை
14. அதிஷ்டானத்தில் குமுதமும், பாதவர்க்கத்தில் அல்லிக்காலும் அமையும்
15. பாதவர்க்கத்தின் நடுவே அமையும்
16. நாகபத்தம், கால், தாடி, அல்லிக்கால், கழுத்து, பலகை வீரகண்டம் போதிகை.
17. அதிஷ்டானம் உப பீடமாகிய பகுதிகள் அதேவடிவில் நடுப்பெற முன் தள்ளி அமைந்திருக்கும்.
18. பாதவர்க்கத்தின் நடுவே தேவ கோட்டம் அமைக்கப்படுகிறது
19. சதுரம் 2. எண்கோணம் 3. வட்டம் ஆகிய வடிவுகளிலமைக்கப்படுகின்றன அவை முறையே நாகரம், திராவிடம், வேஸரம் என்னும் பெயருடையன.
20. (அ) 1. உருவபேதம் 2. பிரமாணம் 3. பாவம் (Phava) 4. லவண்ணியபோசனம் 5. சாதிருசியம் 6. வர்ணபங்கம் என்பன சட அங்கங்களாகும்

    (ஆ) 1. உருவபேதமாவது:- பலமாறுபாடுகளைக் கொண்ட உருவங்களை அமைத்தலில் அறிவு தெய்வங்களின் வேறுபாடுகள், மனிதரின் வேறுபாடுகள், மனிதரின் வேறுபாடுகளைக் காட்டி உருவங்களை அமைத்தல்

    2. பிரமாணமாவது 1. தகவுப்பொருத்தம் 2. உடற்கூறு 3. தூரநோக்கு 4. முற்குறுக்கம் என்பன

    3. பாவமாவது (Phava) உளநெகிழ்ச்சியின் வெளிப்பாடு (மெய்ப்பாடு) அவையாவன:- கோபம், துக்கம், பயம், இன்பம், மகிழ்ச்சி, வீரம், கர்வம் முதலியன

4. லவண்ய யோசனமாவது:- அழகு, கவர்ச்சி, லயம் (லளிதம்) முதலியன
5. சாதிருசியம் என்பது:- (ஒப்புவமை) உருவ ஒற்றுமையாகும்.
6. வர்ணபங்கம் என்பது:- வர்ணம், ஊடகம் தூரிகை என்பன

21. சிற்பங்கள் செய்வதில் 1. அமைத்தல் 2. செதுக்குதல் 3. வார்த்தல்
அமைத்தலுக்கான ஊடகம் களிமண், தொழிற்பாடு — அப்புதல்
செதுக்குதல் ஊடகம் மரம், கல், தொழிற்பாடு — வெட்டியெடுத்தல்
வார்த்தல் ஊடகம் உலோகம், தொழிற்பாடு — வார்த்தல்

22. 1 தொகல் தொறுவா 2. தம்புல்ல 3. றிதிவிகாரை 4. அலுவிகாரை 5. களனி

23. 1. தொகல் தொறுவா (கண்டி) 2. சிகிரியா

24. தம்புல்ல 25. நான்குவரிசைகளைக் கொண்டவை

26. கணேசர், விஷ்ணு, கதிர்காமவேலர் 27. கதிர்காம வேலோன் ஆலயம்

28. அச்சுப்பதித்தல், அச்சுருப்பதித்தல், அச்சுப்பிரதியெடுத்தல் இவையாவை யும் கிறபிக் என வழங்கி வருகின்றனர்.

29. ஒரு சத நாணயத்தின் உருவத்தையோ. வடிவங்களமைந்த பூக்கண்ணுடித் துண்டையோ, வடிவங்களமைந்த றபர்த் தகட்டையோ போன்றவற்றின்மேல் கடதாசியைவைத்து ஈயலேகினியையோ அல்லது மெழுகுச் சுண்ணத்தையோ உராய்வதால் கீழுள்ள வடிவம் அவ்வாறு கடதாசியில் பதிந்து கொள்ளுகிறது இந்த வகைச் சித்திரப் பதிப்பை உராய்வுமுறைச் செயற்பாடென்பர்.

30. ஒரு கண்ணுடித்துண்டின்மேல் நீர்வர்ணத்தாற் தீட்டப்பெற்ற படத்தை ஈரமான கடதாசியை அப்படத்தின் மேலே வைத்து அமர்த்தி எடுக்கப்படும் பதிப்பு முறையை மொனோக்கிற்பிக் என அழைப்பர், இம் முறையில் ஒரு தனிப் பிரதிமட்டுமே எடுக்கப்படுவதால் இதனைத் தனிப்பிரதி எடுக்கும் பதிப்பு முறை யென்பர்.

31. லினோ அட்டைகளில் வடிவங்களை வெட்டி அச்சடிக்கும் மையைப் பூசி அவ் வடிவங்களைப் பிரதி எடுக்கும் முறையாகும். இந்த வகையில் பல பிரதிகளைப் பெறும் பதிப்பு முறையாகும். இதேபோல, மரம், உலோகத்தகடு, கிழங்கு, றபர் இவற்றிலும் வடிவங்களை வெட்டி அச்சுப்பதித்துப் பல பிரதிகளைப் பெற முடியும் இவையாவும் லேனோக்கிறபிக் பதிப்பு முறையைச் சார்ந்ததாகும்.

32. லிதோப் பிரின்ற் என்பது வர்ணப்படங்களை அச்சுப்பதிவு செய்யும் போது ஒரே நேரத்தில் மூன்று நிறங்களும் பதிக்கப் பெற்றுப் பெறும் அச்சுப் பிரதிகளை லிதோப் பிரின்ற் என அழைப்பர்.

33. இந்துக்களின் தெய்வமாகிய நந்தி என்ற காரணத்தால் கால் மிதிக்குமிடத்தில் அமைக்கப்படவில்லை.

34. புத்தரதும் அவரின் சீடர்களதும் திருவடிவங்கள் வைக்கப்படுமிடம்

35. இவ்வினுவுக்குரிய விடைகளை 36-ம் பாடம் தொடக்கமுள்ள பாடங்களிலிருந்து பெறுக.

Sivanathan 1/4/99



# கவின் கலை, அழகியற் கல்வி
## புதுமுறைச் சித்திரம்

இந்நூலில் 6-ம் வகுப்புத் தொடக்கம் 8-ம் வகுப்பு வரைக்கும் கற்பிக்கப்படவேண்டிய சித்திரப் பாடத்திட்டங்களும், சித்திரப் படங்களும், சித்திரப் பாடத்துக்கான விளக்கங்களும், சித்திரக் கோட்பாடுகளும், சித்திர விதிகளும், சித்திரக் கைத்தொழில்களும், சித்திர பாட வினு விடைகளும், சிற்ப சித்திர விமர்சன வெளிப்பாடும், சிற்ப வடிவங்களும், அலங்கார வடிவங்களும், மதிப்பீடுகளும், பௌத்த சிங்கள ஓவிய சிற்பக் கலைகளும், இந்து மத தமிழ்ச் சிற்பங்களும், பௌத்த இந்து மத ஆலய அமைப்புக்களும் சுருக்கமாகவும் தெளிவாகவும் அமையப்பெற்றுளது.

இந்நூலைப் பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் மனுச் செய்யவும்.

திரு. நா. கதிர்காமத்தம்பி
கழகச் செயலாளர்
தங்கமாணிக்க மாளிகை,
மகாத்மா வீதி, கரவெட்டி